බලශක්ති අමාත්‍යාංශය
வலுசக்தி அமைச்சு
MINISTRY OF ENERGY

# ප්‍රගති වාර්තාව
# முன்னேற்ற அறிக்கை
# Progress Report

# 2024

# வலுசக்தி அமைச்சு

## முன்னேற்ற அறிக்கை – 2024
## (2024 ஆம் ஆண்டின் முன்னேற்றம் மற்றும் 2025 ஆம் ஆண்டின் எதிர்காலத் திட்டங்கள்)


**மின்சக்தி பிரிவு**

இல. 437 காலி வீதி,
கொழும்பு 03.
தொலைபேசி: 011 2574922
தொலைநகல்: 011 2574741
இணையத்தளம்: www.powermin.gov.lk

**வலுசக்தி பிரிவு**

இல. 80, சேர் ஏர்னஸ்ட் டி சில்வா
மாவத்தை
கொழும்பு 07
தொலைபேசி: 011 2370033
தொலைநகல்: 011 2372115
இணையத்தளம்: www.energymin.gov.lk

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | கௌரவ. அமைச்சரின் ஆசிச் செய்தி | VII |
| | செயலாளரின் செய்தி | IX |
| | அறிமுகம் | X |
| அத்தியாயம் 01 | **வலுசக்தி அமைச்சு** | |
| | நிறுவனத்தின் தொலைநோக்கு மற்றும் பணிக்கூற்று | 1 |
| | 1.1 வலுசக்தி அமைச்சின் விடயங்கள் மற்றும் செயற்பாடுகள் | 2 |
| | 1.2 வலுசக்தி அமைச்சின் பிரதான பிரிவுகள் | 3 |
| | 1.3 வலுசக்தி அமைச்சின் கீழ் வரும் நிறுவனங்கள் | 3 |
| | 1.4 2024 ஆம் ஆண்டில் மின்சக்தி பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் | 3 |
| | 1.5 2024 ஆம் ஆண்டில் வலுசக்தி பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் | 23 |
| | 1.6 2024 ஆம் ஆண்டின் நிதியியல் முன்னேற்றம் | 36 |
| அத்தியாயம் 02 | **இலங்கை மின்சார சபை** | **38** |
| அத்தியாயம் 03 | **வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்** | **50** |
| அத்தியாயம் 04 | **இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபை** | **55** |
| அத்தியாயம் 05 | **இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை** | **70** |
| அத்தியாயம் 06 | **இலங்கை அணுசக்தி சபை** | **75** |
| அத்தியாயம் 07 | **வரையஞக்கப்பட்ட இலங்கை நிலக்கரி (தனியார்) நிறுவனம்** | **86** |
| அத்தியாயம் 08 | **ஸ்ரீ லங்கா எனர்ஜிஸ் (பிரைவேட்) லிமிடெட்** | **89** |
| அத்தியாயம் 09 | **எல்.ரி.எல் ஹோல்டிங் (பிரைவேட்) லிமிடெட்** | **95** |
| அத்தியாயம் 10 | **இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்** | **113** |
| அத்தியாயம் 11 | **வரையறுக்கப்பட்ட பெற்றோலிய களஞ்சிய முனையம்** | **122** |
| அத்தியாயம் 12 | **இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபை** | **128** |

# அட்டவணைகள்


| | | பக்கம் |
|---|---|---|
| அட்டவணை 1.1 | 2024 ஒக்ரோபரின் இறுதியில் உள்ளவாறு பாவனையாளர்களின் என்ணிக்கை | 04 |
| அட்டவணை 1.2 | 2024 நவம்பர் இறுதியில் உள்ளவாறான நிறுவப்பட்ட திறன் | 05 |
| அட்டவணை 1.3 | மசகு எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பொருட்கள் தொடர்பாக ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் வெளியிடப்பட்ட விலைகள் - 2024 | 24 |
| அட்டவணை 1.4 | 2024 ஆம் ஆண்டிற்கான எரிபொருள் இறக்குமதிக்கான சராசரி மாதாந்த செலவினம் (இ.பெ.கூ) | 26 |
| அட்டவணை 1.5 | இறக்குமதி செய்யப்பட்ட பெற்றோலியப் பொருட்கள் - 2024 | 26 |
| அட்டவணை 1.6 | பெற்றோலியப் பொருட்களின் விற்பனைகள் - 2024 | 27 |
| அட்டவணை 1.7 | 2024.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு வாடிக்கையாளர் சேவை நிலையங்களின் எணிக்கை | 29 |
| அட்டவணை 1.8 | 2024 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ஆகக் கூடிய மற்றும ஆகக் குறைந்த சந்தை விலைகள் | 30 |
| அட்டவணை 1.9 | முன்மொழியப்பட்ட களஞ்சியத் தாங்கி அபிவிருத்தி திட்டம் | 35 |
| அட்டவணை 1.10 | முன்மொழியப்பட்ட குழாய்த்தொகுதி அபிவிருத்தி திட்டம் | 36 |
| அட்டவணை 1.11 | வலுசக்தி அமைச்சின் 2024 மூலதன வரவுசெலவுத்திட்டத்தின் நிதி முன்னேற்றம் - தலைப்பு 119 | 41 |
| அட்டவணை 2.1 | நடைபெற்றுக்கொண்டிருக்கும் மின் உற்பத்தி செயற்றிட்டங்களின் முன்னேற்றம் | 41 |
| அட்டவணை 2.2 | நடைபெற்றுக்கொண்டிருக்கும் மரபுசாரா மீள புதுப்பிக்கத்தக்க சக்தி (NCRE) அபிவிருத்திகளின் முன்னேற்றம் | 42 |
| அட்டவணை 2.3 | விலைமனு கோரப்பட்ட செயற்றிட்டங்கள் | 43 |
| அட்டவணை 2.4 | ஊட்டத்தில் உள்ள விதிப்பனவின் (Feed In- Tariff) கீழான செயற்றிட்டங்கள் | 43 |
| அட்டவணை 2.5 | நடைபெற்றுக் கொண்டிருக்கும் மின்சார பரிமாற்ற அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் | 46 |
| அட்டவணை 2.6 | மின்சார விநியோக அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான நிகழ்ச்சித்திட்டங்களும் முன்னேற்றமும் | 48 |
| அட்டவணை 2.7 | மின்சார உற்பத்தி மற்றும் விநியோகத் திட்டங்கள் | 48 |
| அட்டவணை 2.8 | மின்பரிமாற்றல் திட்டங்கள் | |
| அட்டவணை 3.1 | 2019 முதல் 2024 வரையிலான நுகர்வோர், பணியாளர் மற்றும் நிதியியல் தரவுகள் | 52 |
| அட்டவணை 4.1 | 2024 ஆகஸ்டில் உள்ளவாறான பிரதான திட்டங்களின் விபரங்கள் | 56 |
| அட்டவணை 5.1 | ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகள் | 71 |
| அட்டவணை 5.2 | தேசிய பயிற்சிப் பாடநெறிகள் | 72 |
| அட்டவணை 5.3 | ஒழுங்குவிதிமுறைகள், விதிறைகள், நடைமுறைகள் மற்றும் வழிகாட்டல்களைத் தயாரித்தல் | 72 |
| அட்டவணை 5.4 | ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகள் | 73 |

# அட்டவணைகள்


| | | பக்கம் |
|---|---|---|
| அட்டவணை 7.1 | 2024-2025 ஆம் ஆண்டிற்கான நிலக்கரி வழங்கள் அட்டவணை | 87 |
| அட்டவணை 7.2 | 2024-2025 ஆண்டிற்கான நிதி தேவைகளின் சராம்சம் | 88 |
| அட்டவணை 7.3 | 2024-2025 வருடத்திற்கான கொடுப்பனவு முறை சாராம்சம் | 88 |
| அட்டவணை 8.1 | சூரியசக்தி EPC கருத்திட்டம் | 92 |
| அட்டவணை 9.1 | பாரிய செயற்பாடுகளின் நிதியியல் முன்னேற்றங்கள் | 111 |
| அட்டவணை 10.1 | இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் இறக்குமதி செய்யப்பட்ட பெற்றோலியப் பொருட்கள் (2021-2024) | 114 |
| அட்டவணை 10.2 | சுத்திகரிப்பு நிலையத்தின் எரிபொருள் உற்பத்திகள் (மெற்றிக் தொன்) (2021-2024) | 115 |
| அட்டவணை 10.3 | 2024 ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்கள் மற்றும் உள்நாட்டில் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்கள் | 116 |
| அட்டவணை 10.4 | மொத்த எரிபொருள் விற்பனை (2022 - 2024) | 117 |
| அட்டவணை 10.5 | மின்சார உற்பத்திக்காக விற்பனை செய்யப்பட்ட எரிபொருட்கள் (2021 - 2024) | 118 |
| அட்டவணை 10.6 | ஜெட் A-1 விற்பனைகள் - (2021 - 2024) | 118 |
| அட்டவணை 10.7 | உராய்வு நீக்கி எண்ணெய் விற்பனைகள் - (2021 - 2024) | 119 |
| அட்டவணை 11.1 | மொத்த எரிபொருள் களஞ்சியத் திறன் | 123 |
| அட்டவணை 11.2 | 2024 ஆம் ஆண்டின் எரிபொருள் விநியோக முன்னேற்றங்கள் | 124 |


# வரைபு/வரைபடம்


| | | பக்கம் |
|---|---|---|
| வரைபு 1.1 | 2024 ஆம் அண்டின் மின்சார நிகர உற்பத்தி | 05 |
| வரைபு 1.2 | 2024 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட சந்தை விலைகள்(இ.பெ.கூ) | 30 |
| வரைபு 4.1 | புதிய மீள புதுப்பிக்கத்தக்க சக்திக்கான (NRE) மேலதிக திரட்டப்பட்ட திறன் | 55 |
| வரைபு 10.1 | இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் இறக்குமதி செய்யப்பட்ட சுத்திகரித்த பெற்றோலியப் பொருட்கள் (2021-2024) | 115 |
| வரைபு 10.2 | ஜெட் A-1 விற்பனை - (2021 - 2024) | 119 |
| வரைபு 11.1 | எரிபொருள் விநியோக முன்னேற்றங்கள் - 2024 | 124 |
| வரைபடம் 1.1 | திருகோணமலை எரிபொருள் தாங்கிப் பண்ணை | 34 |
| வரைபடம் 12.1 | இலங்கையின் பெற்றோலிய வளங்கள் ஆய்வு மற்றும் அபிவிருத்தி துண்ட வரைபடம் | 131 |



# கௌரவ. அமைச்சரின் ஆசிச் செய்தி

வலுசக்தி அமைச்சர் என்ற முறையில், 2024 ஆம் ஆண்டின் முன்னேற்றம் மற்றும் 2025 ஆம் ஆண்டிற்கான எதிர்காலத் திட்டங்களை உள்ளடக்கிய இவ் அறிக்கைக்கு ஆசிச் செய்தியை சமர்ப்பிப்பதில் நான் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

பல தசாப்தங்களாக எதிர்பார்க்கப்பட்ட அரசியல் மாற்றம் கடந்த ஆண்டு நிஜமானது. இவ் அரசியல் மாற்றத்திற்கு பங்களித்த கட்சிகளுக்கிடையே விவாதிக்கப்பட்ட பிரதான விடயங்களில் ஒன்று நாட்டின் வலுசக்தித் தொழிற்துறை புரட்சி குறித்த விவாதம் ஆகும். இவ் கட்சிகள் அரசாங்கத்திற்குச் உரித்தான வலுசக்தித் தொழிற்துறையின் உரிமை மற்றும் அதிகாரத்தை ஆதரிக்கின்றன, மேலும் அது தேசிய பாதுகாப்பு மற்றும் நாட்டின் இறையாண்மையின் மறுக்க முடியாத முக்கியத்துவத்திற்கு வழிவகுக்கும் என்று அவர்கள் நம்புகிறார்கள். முன்னைய ஆளும் கட்சிகள் முறையற்ற கொள்கைகள் மற்றும் நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கும் ஊழலை அனுமதிப்பதற்கும் காட்டிய தரநிலை, தனியார்மயமாக்கலுக்கு வழிவகுத்தது மற்றும் தேசிய பாதுகாப்பு மற்றும் நாட்டின் இறையாண்மைக்கு ஆபத்தை விளைவிப்பதன் மூலம் வலுசக்தித் தொழிற்துறையில் அதன் நன்மைகளைப் பெற முயன்றது. தேசிய மக்கள் படையின் தலைமையில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க 2024 ஆம் ஆண்டு அந்த சக்திகளையும் சித்தாந்தங்களையும் தோற்கடித்து ஆளும் கட்சியாக மாறியது நாட்டின் வலுசக்தித் தொழிற்துறைக்கு கிடைத்த தீர்க்கமான வெற்றியாகும்.

இவ் சிறப்பு வாய்ந்த சாதனைகள், காலாவதியான முறைகள் மற்றும் நிறுவன கட்டமைப்புகளுக்குப் பதிலாக, புதிய நிறுவன கட்டமைப்புகள் மற்றும் குறிப்பாக புதிய வெளிப்படையான மேம்பட்ட திட்டங்களைக் கொண்ட உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட புதிய வழிமுறைகளுடன் வலுசக்தித் தொழிற்துறையின் உரிமையை உறுதிப்படுத்தியுள்ளது. மேலும், இது நாட்டின் தேசிய பாதுகாப்பையும் இறையாண்மையையும் உறுதிப்படுத்தியுள்ளது.

இவ் வரலாற்றுப் பொறுப்பை நிறைவேற்றுவது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் வலுசக்தி அமைச்சராகிய எனக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. மின்சக்தி மற்றும் இலத்திரனியல பொறியாளராக 30 ஆண்டுகளுக்கும் மேலாக எனது அனுபவங்களையும், முற்போக்கான அரசியலில் ஈடுபட்டதன் மூலம் பெற்ற அனுபவங்களையும், புதிய அரசாங்கத்தின் வலுசக்தி கொள்கையை தயாரிப்பதன் மூலம் ஒப்புக் கொள்ளப்பட்ட அனுபவங்களையும் பயன்படுத்தி, தேசியப் பணிக்கு பங்களிக்க உண்மையான விருப்பமும் உற்சாகமும் கொண்ட உண்மையான மற்றும் அனுபவம் வாய்ந்த உத்தியோகத்தர்களைக் கொண்ட உயர் நிலை பதவிகளை அமைச்சின் கீழ் வரும் நிறுவனங்களில் நியமிப்பதற்கான முதல் படி எடுக்கப்பட்டுள்ளது. அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு மட்டுமல்ல, எதிர்காலத்தின் பல தசாப்தங்களையும் கருத்தில் கொண்டு இவ் முயற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வலுசக்தித் தொழிற்துறையில் சமீப காலங்களில் புத்திஜீவிகள் மற்றும் பொறியாளர்கள் போன்றோரின் மூளைசாலிகளின் வெளியேற்றத்தினால் ஏற்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கு விரைவான ஆட்சேர்ப்பு முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பல்வேறு துறைகளில் நிபுணர்களைத் தக்கவைத்துக்கொள்ளவும், அவர்களுக்கு உரிய அங்கீகாரத்தையும் மரியாதையையும் வழங்கவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

நிலக்கரி மற்றும் அனல் மின்சார மின் உற்பத்திக்கு மாற்றாக, அடையாளம் காணப்பட்ட குறுகிய கால, நடுத்தர கால மற்றும் நீண்ட கால திட்டங்கள் மூலம் சூரிய சக்தி மின் உற்பத்தி, காற்று மற்றும் கடல்அலை சக்திகளைப் பயன்படுத்தி மீள புதுப்பிக்கத்தக்க சக்தி உற்பத்தியை அதிகரிக்கப்பட உள்ளது. இதற்கிணங்க, அடையாளம் காணப்பட்ட அவ்அவ் பகுதிகளில் அந்நிய நேரடி முதலீடு மூலம் புதிய தொழில்நுட்பத்தையும் போதுமான முதலீடுகளையும் பெறுவதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட வெளிப்படையான பொறிமுறைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இறுதியாக, நாட்டின் வலுசக்தித் தொழிற்துறையின் தேசிய திட்டத்தை மேல்நோக்கி கொண்டுசெல்வதற்கு பங்களிப்பு செய்வதற்காக இரு கரம் நீட்டி உங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கிறோம்.

**பொறியியலாளர். குமார ஜெயகொடி**
வலுசக்தி அமைச்சர்



# செயலாளரின் செய்தி

2024 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சி நடவடிக்கைகளை எடுத்துக்காட்டும் மற்றும் வலுசக்தி அமைச்சிற்குள் 2025 ஆம் ஆண்டிற்கான திட்டங்களை கோடிட்டுக் காட்டும் "முன்னேற்ற அறிக்கை 2024" க்காக இந்தச் செய்தியை வழங்குவதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். இது 2025 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டு சட்டம் நிறைவேற்றப்படும் நேரத்தில் இணைந்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

தற்போதைய அரசாங்கம் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து, மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு வலுசக்தி அமைச்சாக மறுசீரமைக்கப்பட்டது. இப் புதிய கட்டமைப்பின் கீழ், தேசிய மறுமலர்ச்சியை உற்சாகப்படுத்துதல் - மக்களை மையமாகக் கொண்ட சக்தி வள மாற்றம் என்ற தலைப்பிலான அரசாங்கத்தின் அறிக்கையில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள ஐம்பது முக்கிய இலக்குகளை அடைவதற்கு நாங்கள் அர்ப்பணிப்புடன் உள்ளோம். அடுத்த ஐந்து ஆண்டுகளில் சக்தி வளத்தின் தன்மையை மாற்றுவதே எங்களின் இலக்காக உள்ளதுடன், சக்தி வளத்திற்கான செலவினங்களை பிராந்தியத்திலேயே மிகக் குறைந்த அளவிற்குக் குறைப்பதே எமது இறுதி நோக்காக உள்ள அதேவேளை, இவ் இலக்கை அடைவதில் நாங்கள் மிகவும் உறுதியாக இருக்கிறோம்.

இதற்கு இணங்க, இவ் இலக்குகளை அடைவதற்கான எங்கள் திறனுக்கு இடையூறாக ஏதேனும் தடைகள் எழுந்தால், சமீபத்தில் இயற்றப்பட்ட 36/2024 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டதை திருத்த வேண்டியதன் அவசியத்தை நாங்கள் எதிர்பார்க்கிறோம். மேலும், தற்போதைய சட்டத்தை ஆய்வு செய்யும் மற்றும் தேவையான திருத்தங்களை மேற்கொண்டும் சிறந் வழிகாட்டுதலுடன் இலங்கை மின்சார சபையின் (CEB) மறுசீரமைப்பு தொடரும்.

மின்சார உற்பத்திக்கான மீள புதுப்பிக்கத்தக்க சக்தி முலங்களை விரிவுபடுத்துவதில் அரசாங்கத்தின் முதன்மை கவனம் தொடர்ந்து உள்ளது. தற்போது, எங்களது மீள புதுப்பிக்கத்தக்க சக்தி திறன் 3,815 மெகாவாட்டாக உள்ளதுடன், மேலும் 2030 ஆம் ஆண்டுக்குள் இதை 6,790 மெகாவாட்டாக உயர்த்துவதே எமது இலக்காகும். 2025 ஆம் ஆண்டில், மொத்த மின்சாரத் தேவை 17.5 பில்லியன் அலகுகளை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, இதில் 14.5 பில்லியன் அலகுகள் மீள புதுப்பிக்கத்தக்க சக்தியிலிருந்து (பிரதான நீர்மின் நிலையங்கள் உள்ளடங்கலாக) பெறப்படும், மீதித் தேவைகள் நிலக்கரி மற்றும் அனல் மின் நிலையங்கள் மூலம் பூர்த்தி செய்யப்படும்.

பெற்றோலியத் தொழிற்துறைக்கு நெறிப்படுத்தப்பட்ட ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பை நிறுவுவதற்கும், நாட்டிற்குள் எரிபொருள் பாதுகாப்பை உறுதி செய்வதற்குத் தேவையான உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும் ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும், எரிபொருளுக்கான செலவினத்தை-பிரதிபலிக்கும் விலை நிர்ணய சூத்திரம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது, இது நியாயமான விலையை வழங்குவதையும் பொதுமக்களுக்கு அதிகபட்ச நன்மைகளை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

2024 ஆம் ஆண்டில் மின்சக்தி மற்றும் வலுசக்தி தொழிற்துறைகள் இரண்டிலும் சாதனைகள் கணிசமாக இடம்பெற்றுள்ளது. இவ் வெற்றிக்கு பெரும்பாலும் ஆண்டு முழுவதும் பாதுகாப்பான மற்றும் நம்பகமான எரிபொருள் விநியோகத்தையும் தடையற்ற மின்சாரத்தையும் உறுதி செய்வதற்கான தொடர்ச்சியான முயற்சிகளே காரணமாகும்.

இவ் சாதனைகளில் மதிப்புமிக்க வழிகாட்டுதல் மற்றும் ஆதரவை வழங்கிய கௌரவ அமைச்சர், அமைச்சின் அனைத்து மட்டங்களிலும் உள்ள அர்ப்பணிப்புள்ள அதிகாரிகள் மற்றும் எங்கள் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பல்வேறு நிறுவனங்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர்காலத்தைப் பொறுத்தவரை, எங்கள் பங்குதாரர்களின் தொடர்ச்சியான ஆதரவுடன், 2025 மற்றும் அதற்குப் பின்னரும் முன்மொழியப்பட்ட முயற்சிகளை வெற்றிகரமாக செயல்படுத்துவதோடு, நாட்டின் நலனுக்காக வலுசக்தித் தொழிற்துறையில் முன்னேற்றத்தையும் ஏற்படுத்துவோம் என நான் நம்புகிறேன்.

**பேராசிரியர்.கே.ரி.எம். உதயங்க ஹேமபால**
செயலாளர்
வலுசக்தி அமைச்சு

# அறிமுகம்

மின்சக்தி மற்றும் வலுசக்தி தொடர்பான தேசிய கொள்கைகள், நிகழ்ச்சிகள் மற்றும் திட்டங்களை உருவாக்குதல், செயற்படுத்துதல், கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகியவற்றை பிரதான நோக்கமாகக் கொண்டு 2022 யூலை 22 ஆம் திகதியிடப்பட்ட 2289/43 ஆம் இலக்கமிடப்பட்ட வர்த்தமானியின்படி மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு நிறுவப்பட்டது இதற்கிணங்க, அனைத்து செயற்பாடுகளையும் ஒரே கட்டமைப்பின் கீழ் கொண்டு வரும் நோக்கில் 2024. நவம்பர் 25 ஆம் திகதியிடப்பட்ட 2412/08 ஆம் இலக்கமிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் படி “வலுசக்தி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சு” உருவாக்கப்பட்டுள்ளது. இந்த மாற்றம் புதிய அரசாங்கத்தின் தொலைநோக்குப் பார்வையுடன் ஒத்துப்போவதுடன், மின்சக்தி மற்றும் வலுசக்தி தொழிற்துறைகளின் மாற்றத்தை நோக்கமாகக் கொண்ட முயற்சிகளின் தொடர்ச்சியையும் விரிவாக்கத்தையும் உறுதி செய்வதாகவும் அமைகிறது.

இலங்கை மின்சார சபை (இமிச), இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம் (லெகோ), இலங்கை நிலைபெறு தகு வலு அதிகார சபை (இநிவஅச), இலங்கை அணு சக்தி சபை (இஅசச), இலங்கை அணு சக்தி ஒழுங்குறுத்துகை சபை (இஅசஒச), எல். ரீ.எல். ஹோல்டிங்ஸ் (தனியார்) கம்பனி, இலங்கை நிலக்கரி (தனியார்) கம்பனி மற்றும் சிறீ லங்கா எனெர்ஜீஸ் (தனியார்) கம்பனி ஆகிய எட்டு நிறுவனங்கள் மின்சக்தி பிரிவின் கீழ் செயற்படுகின்றது. மேலும், வலுசக்தி பிரிவின் கீழ் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத் தாபனம் (இபெகூ),வரையறுக்கப்பட்ட இலங்கைப் பெற்றோலிய களஞ்சிய முனையம் இபெகமு)', இலங்கைப் பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபை (இபெஅஅச) மற்றும் வரையறுக்கப்பட்ட திருகோணமலை பெற்றோலிய (தனியார்) முனையம் (வதிபெமு) ஆகிய நிறுவனங்களும் செயற்படுகின்றன. இவ் நிறுவனங்கள் பெற்றோலிய தொழிற்துறையை முகாமைத்துவம் செய்வதுடன், இலங்கைப் பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபை மேல்நிலை பெற்றோலியச் செயற்பாடுகளையும் மற்றும் ஏனைய நிறுவனங்கள் கீழ் நிலை செயற்பாடுகளிலும் கவனம் செலுத்துகின்றன.

2024 ஆம் ஆண்டில், வலுசக்தித் தொழிற்துறையில் நீண்டகாலமாக நிலவும் பிரச்சினைகளைத் தீர்க்க பல மூலோபாய தீர்மாங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளதுடன், மேலும் இவ் முயற்சிகள் 2024 ஆம் ஆண்டில் துரிதப்படுத்தப்பட்டன. அமைச்சின் நோக்கத்திற்கு ஏற்ப, மின்சாரம் பெற்றுக்கொள்வதை அதிகரிக்கும் அதேவேளை சுற்றாடலை பாதுகாத்தல், நம்பகமான, நிலையான மற்றும் மலிவு விலையில் மின்சாரம் வழங்குவதை உறுதி செய்வதிலும் கவனம் செலுத்தப்படுகிறது. 2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க மின்சார சீர்திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டமை முக்கியமானதொரு சாதனையாகும், இது நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட மின்சாரத் தொழிற்துறையின் மறுசீரமைப்பில் இதுவொரு பிரதான மைல்கல்லாகும். முன்னர் கொள்கைத் தலைமை இல்லாததால் தடைபட்ட இவ் சீர்திருத்தம், மொத்தவிற்பனை சந்தைகள் மற்றும் திறந்த அணுகல் போன்ற நவீன செயற்பாட்டுக் கருத்துக்களை அறிமுகப்படுத்துகிறது. மின்சாரத் தொழிற்துறை, ஒழுங்குபடுத்தப்பட்ட மற்றும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட கட்டமைப்பால் ஒன்றிணைக்கப்பட்ட நிபுணத்துவ நிறுவனங்களின் தொகுப்பாகச் செயற்பட உள்ளது.

மின்சார உற்பத்திக்கு மீள புதுப்பிக்கத்தக்க சக்தி வளத்தை பயன்படுத்துவதே அரசாங்கத்தின் முதன்மையான இலக்காகும். தற்போதுள்ள மீள புதுப்பிக்கத்தக்க சக்தியின் திறன் 3,815 மெவாவாட்டாக உள்ளதுடன், இத் திறனை 2030 ஆம் ஆண்டளவில் 6,780 மெவாவாட்டாக அதிகரிப்பதே அமைச்சின் இலக்காகும். இவ் மாற்றத்திற்கான விரிவான கட்டமைப்பை உருவாக்குவதன் மூலம், 2030 ஆம் ஆண்டுக்குள் நாட்டின் மின்சாரத் தேவையில் 70% மீள புதுப்பிக்கத்தக்க சக்தி மூலம் மின்சாரத்தை பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன. இதன் பிரதான விடயங்கள் பின்வருமாறு:

- மீள புதுப்பிக்கத்தக்க சக்தி அபிவிருத்தயை நெறிப்படுத்த, நிலை பெறுதகு வலு அதிகாரசபை மற்றும் இலங்கை மின்சார சபை (CEB) ஆகியவற்றின் அனுசரணையுடன் தரப்படுத்தப்பட்ட மின்சார பெறுகை ஒப்பந்த மாதிரியை நிறுவுதல்.

- குறைந்த விலை சக்தி வளத்திற்கான தீர்வாக, முதலீட்டாளர்களுக்கு சினேகபூர்வமான feed-in tariffs மற்றும் கூரையின் பொருத்தும் சூரிய தகடுகளுக்கான கட்டணத்தை உருவாக்குதல்.

- உறுதி செய்வதற்கும் போட்டியை வளர்ப்பதற்கும் மாறும் (dynamic) மீள புதுப்பிக்கத்தக்க சக்தி கேள்விமனு மாதிரியை உருவாக்குதல்.

- உலக வங்கி, USAID மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற சர்வதேச அபிவிருத்தி நிறுவனங்களால் உதவியளிக்கப்படு, நன்கு கட்டமைக்கப்பட்ட முதலீட்டு மாதிரி மூலம் மீள புதுப்பிக்கத்தக்க சக்தி முதலீடுகளில் அபாயங்களைக் குறைத்தல்.

- புதிய மின்சாரச் சட்டத்தால் கட்டளையிடப்பட்ட உயர் தர நேர்மையை செயற்படுத்துவதை உறுதி செய்வதற்காக, உலக வங்கியின் நிபுணரகளின் பங்களிப்புகளுடன், மீள புதுப்பிக்கத்தக்க சக்தியை கொள்வனவு செய்வதற்காக போட்டித்தன்மை வாய்ந்த மற்றும் வெளிப்படையான பெறுகை மாதிரியை உருவாக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுதல்

தென்னிந்தியாவில் உள்ள ஒரே கிடைக்கக்கூடிய முனை வழியாக நாட்டின் மின்சார வலையமைப்பை வளர்ந்து வரும் பிராந்திய மினசார கட்டமைப்புடன் இணைப்பதற்கு உறுதியான மற்றும் செயற்படுத்தக்கூடிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இவ் இடைத்தொடர்பு இலங்கை போட்டி அடிப்படையிலான பிராந்திய விலைகளில் எரிசக்தி, மின்சாரம் மற்றும் மின் கட்டமைப்பு சேவைகளை பெற்றுக்கொள்வதற்கு அனுமதிப்பதாக அமையும்.

உலக வங்கியால் நிதியளிக்கப்பட்ட ஆய்வின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட கடல் காற்று சக்தி வளத்தின் சமீபத்திய முன்னேற்றங்கள், ஆசியாவில் பிரதான சக்தி வள ஏற்றுமதியாளராக இலங்கை உருவெடுப்பதற்கான மகத்தான ஆற்றலை எடுத்துக்காட்டுகின்றன. இதற்கு இணையாக, சர்வதேச ஏற்றுமதி வாய்ப்புகளுக்காக இலங்கையின் மீள புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்களைப் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு பசுமை ஹைட்ரஜன் தூரநோக்கு வரைபடத்தை உருவாக்கும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. அம்பாந்தோட்டை பகுதியில் நாளொன்றுக்கு குறைந்தபட்சம் 100,000 பரல் (bpd) கொள்ளளவு கொண்ட ஏற்றுமதி சார்ந்த பெற்றோலிய சுத்திகரிப்பு நிலையத்தை நிறுவுவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. திட்ட ஒப்பந்தத்திற்கான கலந்துரையாடல்கள் சுமூகமாக நடந்து வருவதுடன், இரு தரப்பினரும் முன்மொழியப்பட்ட பெரும்பாலான விதிமுறைகளில் பரஸ்பர ஒருமித்த கருத்தை எட்டியுள்ளனர்.

பவர் வீலிங் (power wheeling) விடயத்தினை அறிமுகப்படுத்துவதற்கான வேலைகள் நடந்துவரும் இதேவேளை, தற்போது இதற்கான ஒழுங்குவிதிமுறைகளும் உருவாக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக, வெவ்வேறான மீள புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்களிலிருந்து அதிகரித்த ஒருங்கிணைப்புடன், அமைப்பின் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் நம்பகத்தன்மையை அதிகரித்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட உலர்மின்கல சக்தியை களஞ்சியப்படுத்தும் முறைகளை செயற்படுத்துவதற்கான முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன. 2024 ஆம் ஆண்டில், தேசிய மின்சார கட்டமைப்பில் 630 MW மீள புதுப்பிக்கத்தக்க சக்தி திறன் சேர்க்கப்படடுள்ளது.

120 MW உமா ஓயா திட்டத்தை 2024 ஏப்ரல் மாதத்தில் பூர்த்திசெய்தல், 350 MW கெரவலப்பிட்டி திறந்த சுழற்சி LNG மின்சார உற்பத்தி நிலையத்தை 2024 ஆகஸ்ட் மாதத்தில் ஆரம்பித்தல் மற்றும் ஒருங்கிணைந்த சுழற்சி மின்சார உற்பத்தி நிலையத்தை 2025 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளவை ஆகியவை இவ் பிரதான உட்கட்டமைப்பு அபிவிருத்திகளில் உள்ளடங்கும். மேலும், இந்திய அரசாங்கத்துடன் இணைந்து மீள புதுப்பிக்கத்தக்க சக்தி அபிவிருத்திக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) கைச்சாத்திடப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில், நாட்டின் சக்திவள பாதுகாப்பை வலுப்படுத்த அமைச்சு குறிப்பிடத்தக்க

நடவடிக்கைகளை எடுத்துள்ளதுடன், இவ் முயற்சிகள் இவ் அறிக்கையின் தொடர்புடைய அத்தியாயங்களில் விரிவாக தரப்பட்டுள்ளது.

மின்சார உற்பத்தி, போக்குவரத்து மற்றும் கைத்தொழிற்துறை போன்ற பிரதான தொழிற்துறைகளுக்கு உறுதுணையாகஇருப்பதை உறுதிப்படுதும் வகையில் நம்பகமான எரிபொருள் விநியோகத்தை உறுதி செய்வதில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தனது பிரதான பங்கை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளது. 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட இவ் கூட்டுத்தாபனம், நாடு முழுவதும் பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதி, ஏற்றுமதி, சுத்திகரிப்பு, களஞ்சியப்படுத்தல், வழங்கல், விநியோகம் மற்றும் விற்பனை உளளடங்கலாக அனைத்து பெற்றோலிய செயற்பாடுகளுக்கும் பொறுப்பாக உள்ளது. மேலும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC), 99 தாங்கிகளைக் கொண்ட திருகோணமலை எண்ணெய் தாங்கி வளாகத்தில் 12 தாங்கிகளை பழுதுபார்க்கும் திட்டத்தைத் ஆரம்பித்துள்ளதுடன், இப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதேபோல், வரையறுக்கப்பட்ட திருகோணமலை பெற்றோலியம் முனையம் (TPTL) அதே வளாகத்தில் 61 எண்ணெய் புனரமைக்கும் முதலாம் கட்டத்தைத் ஆரம்பித்துள்ளது.

பெற்றோலிய விநியோகத்தை விரிவுபடுத்தும் முயற்சிகளில், சினோபெக், ஆர்.எம். பார்க் மற்றும் யுனைடெட் பெற்றோலியம் ஆகிய மூன்று வெளிநாட்டு நிறுவனங்கள் இலங்கை சந்தையில் உள்நுழைந்து, எரிபொருள் இறக்குமதி மற்றும் விநியோகத்தில் பங்களிப்பு செய்து வருகின்றன. மேலும், பெற்றோலியத் தொழிற்துறைக்கு ஒழுங்குபடுத்தல் அமைப்பொன்றை நிறுவுவதற்கான நகல் சட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், வரும் ஆண்டில் இதற்கான ஒப்புதலைப் பெற்று செயற்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

2003 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனைய நிறுவனம், லங்கா இந்தியன் ஒயில் கம்பனியுடன் இணைந்து, இலங்கை முழுவதும் பெற்றோலியப் பொருட்களை களஞ்சியப்படுத்தி விநியோகிப்பதில் பிரதான பங்கு வகிக்கிறது. கடந்த ஆண்டில், எரிபொருள் களஞ்சியம் மற்றும் விநியோகத்தை மேற்கொள்ளும் குழாய் அமைப்புகள் மற்றும் எரிபொருள் களஞ்சிய தாங்கி உள்ளடங்கலான அத்தியாவசிய உட்கட்டமைப்பை மேம்படுத்துவதில் நிறுவனம் கவனம் செலுத்தியுள்ளது. இவ் உட்கட்டமைப்பு அபிவிருத்தி பணிகளை வரும் ஆண்டிலும் தொடருவதற்கு திட்டங்கள் உள்ளன.
2021 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபை (PDASL), இலங்கையில் அனைத்து எண்ணெய் மற்றும் வாயு ஆய்வு, அபிவிருத்தி மற்றும் உற்பத்தி நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்கும் மேற்பார்வையிடுவதற்கும் பொறுப்பான சட்டப்பூர்வ நிறுவனமாக செயற்பட்டு வருகிறது. மேலும், புதிய பெற்றோலிய வள ஆய்வு மற்றும் அபிவிருத்தி துண்ட வரைபடம் 2024 மார்ச் 14ஆம் தகதி வர்த்தமானி அறிவிப்பின் மூலம் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கிய காலத்தில் வழங்கப்பட்ட மானியம், மின்சாரம் மற்றும் எரிசக்தியை தொடர்ச்சியாக வழங்குவதில் அமைச்சின் சாதனைகள் மற்றும் 2024 டிசம்பர் வரை ஏற்பட்ட முன்னேற்றங்கள் தொடர்பாக், பின்வரும் பிரிவுகளில் விவரிக்கப்படும்.

# அத்தியாயம் 01
# வலுசக்தி அமைச்சு

## தொலைநோக்கு

"இலங்கையை தெற்காசியாவின் சக்திவலு கேந்திரமாக மாற்றுதல்"

## பணிக்கூற்று

### மின்சக்தி பிரிவு

தேசிய பொருளாதார சுபீட்சத்திற்காக தரமான, நம்பகமான, நிலைபேறான விலையைத் தாங்கக் கூடியவாறான மின்சார வழங்கலொன்றை உறுதி செய்தல்.

## பணிக்கூற்று

### வலுசக்தி பிரிவு

"பொருத்தமான சட்டங்கள் மற்றும் விதிமுறைகளை அமுல்படுத்துவதன் ஊடாக சக்தி வளம் தொடர்பான கொள்கைகளை ஒழுங்கமைத்து சுற்றாடலுக்கு தீங்கு விளைவிக்காத நிலைபேறான சக்தி வழங்கலை உறுதிப்படுத்துதல் மற்றும் புதிய உள்நாட்டு சக்தி வளங்களை முன்பிருந்த சக்தி வளத்துடன் ஒருங்கிணைத்தல் மற்றும் இறக்குமதிகளை சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்தல் போன்றவற்றின் மூலம் குறைந்த விலையில் சக்தி வளங்களை கிடைக்கக்கூடிய வழிகளை ஏற்படுத்துவதன் மூலம் நாட்டின் சக்தி வளத் தேவையினை பூர்த்திசெய்தல"

## 1.1 வலுசக்தி அமைச்சின் விடயங்கள் மற்றும் செயற்பாடுகள்

2412/08 ஆம் இலக்கமிடப்பட்ட 2024.11.25 ஆம் திகதியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்ட வலுசக்தி அமைச்சின் விடயங்கள் மற்றும் செயற்பாடுகள் பின்வருமாறு

01. சூரிய, நீர், அனல், நிலக்கரி, கழிவுப்பொருட்கள் மற்றும் காற்று ஆகிய மூலவளங்களின் மூலம் மின்சக்தியையும், ஏனைய எரிசக்தியையும் உற்பத்தி செய்தல் தொடர்பான செயற்பாடுகளை நுண்ணாய்வு செய்தல், திட்டமிடுதல், விருத்திசெய்தல் மற்றும் மேற்பார்வையிடுதல்.

02. இலங்கையின் மின்சாரத் தேவையை நிவர்த்திசெய்தல் மற்றும் வலுசக்தியின் பாதுகாப்பு

03. வலுசக்தியை வினைத்திறனாக்கும் வகையில் ஏற்படும் கேள்விகளை முகாமைத்துவம் செய்தல்

04. நீண்டகாலத் தேவையினை அடிப்படையாகக்கொண்ட புதுப்பிக்க-த்தக்க மின்உற்பத்தித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்

05. மின் சேகரிப்பு மற்றும் விநியோகிக்கும் செயற்பாட்டினை வினைத்திறனாக்குதல்

06. உற்பத்தி செய்யப்பட்ட மின்சக்தியை உச்சளவிலான வினைத்திறனுடனான பயன்பாட்டினை உறுதிப்படுத்துவதற்காக நேர்த்தியான வலையமைப்பொன்றை நிருமாணித்தல்

07. மின் உற்பத்திக்காக செலவிடப்படும் செலவினைக் குறைத்தல் மற்றும் உற்பத்தியின்போது ஏற்படும் நிச்சயமற்ற தன்மையை அகற்றுதல்

08. தற்போதுள்ள செலவு கூடிய மின் உற்பத்தி மூலங்களை குறைந்த செலவு, சூழலுக்கு அனுசரணையான மீள்புதுப்பிக்கத்தக்க மூலங்களுடன் பதிலிடுவதற்கு பொருத்தமான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

09. தேசிய மீள்புதுப்பிக்கத்தக்க வலுசக்தி திட்டங்களில் முதலீடு செய்வதற்காக உள்நாட்டு கம்பனிகளுக்கு சமவாய்புக்கள் கிடைப்பதை உறுதிசெய்தல்.

10. கைத்தொழில் கழிவுகளைப் பயன்படுத்தி வலுசக்தி உற்பத்தியை அதிகரித்தல்.

11. கூட்டுறவு தத்துவங்களின் அடிப்படையில் வலுசக்தி அலகுகளாக நுண்வலையமைப்பு களை தாபித்தல்.

12. வலுசக்தி துறையின் உபாயவழிமுறை கூட்டாண்மை மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை ஏற்படுத்தல்.

13. விசேடமாக காணப்படும் ஒப்பந்தங்களைப் புதுப்பிப்பதன் மூலம் சிறிய அளவு நீர்மின் உற்பத்திக்கான மீள் முதலீட்டை ஊக்குவித்தல்

14. மின்சாரக் கட்டணத்தை இற்றைப்படுத்து வதற்காக நியாயமான வெளிப்படைத் தன்மையான முறையினை அறிமுகம் செய்தல், மற்றும் பெற்றோலியம், எரிவாயு தொடர்பில் விலை சூத்திரத்தை பிரயோகித்தல்

15. நீண்டகாலத் தேவையினை அடிப்படையாகக்கொண்ட புதுப்பிக்-கத்தக்க மின் உற்பத்தித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல்.

16. நிறுவனம் சார் முகாமைத்துவ மட்டத்தில் ஏற்படும் நட்டங்கள் மற்றும் மின்பிறப்பாக்கி, விநியோக முறைமைக்கு ஏற்படும் தொழில்நுட்ப ரீதியான பாதிப்புகளை குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல்

17. மின்சார வாகனப் பாவனைக்கான வசதிகளை வழங்குதல் மற்றும் ஊக்குவித்தல்.

18. இலங்கையை வலுசக்தி மத்திய நிலையமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல்

19. பச்சைவீட்டு வாயு வெளியேற்றுதலைக் கட்டுப்படுத்தல்.

20. கிராமிய மின்வலுப்படுத்துகை

21. பெற்றோலியம்சார்ந்த உற்பத்திகள், இயற்கை வாயு என்பனவற்றின்

இறக்குமதி, சுத்திகரிப்பு, களஞ்சியப்படுத்தல், விநியோகம் மற்றும் விற்பனை

22. பெற்றோலிய உற்பத்தியும் சுத்திகரிப்புத் தொடர்பான பணிகளும்
23. பெற்றோலிய வளம் மற்றும் இயற்கைவாயு ஆய்வும் அதுசார்ந்த விடயங்களும்
24. பெற்றோலிய உற்பத்திகள் முதலிய வளமூலங்களிலிருந்து எரிவாயு மற்றும் இடை உற்பத்தி நடவடிக்கைகள், மொத்த வைப்பு, உற்பத்தி மற்றும் விநியோகம்
25. எரிபொருள் வழங்கல் மற்றும் விநியோகம் சார்ந்த உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி
26. வலுசக்தி வளமூலங்களின் கட்டுப்பாடு, ஒழுங்குறுத்துகை, பயன்பாடு ஆகியவற்றுக்குத் தகுந்த மின்வலுக் கொள்கையொன்றை வகுத்தமைத்தல்
27. எண்ணெய் சுத்திகரிக்கும் இயலளவை செம்மைப்படுத்தல் மற்றும் பெற்றோலியம் சார்ந்த உற்பத்திக் கைத்தொழிலை ஊக்கவித்தல்.
28. எரிபொருள் விநியோகத்தின் நம்பகத் தன்மை மற்றும் செயற்திறனை செம்மைப்படுத்தல்

## 1.2 அமைச்சின் பிரதான பிரிவுகள

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு பின்வரும் பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவ் பிரிவுகளின் விபரங்கள் பின்வருமாறு

- நிர்வாகப் பிரிவு
- அபிவிருத்திப் பிரிவு
- கொள்கை, தொழிநுட்பம் மற்றும் ஆராய்ச்சி பிரிவு
- உற்பத்தி, பரிமாற்றல் மற்றும் விநியோக பிரிவு
- திட்டமிடல் பிரிவு
- பெறுகைப் பிரிவு
- நிதிப் பிரிவு
- உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

## 1.3 அமைச்சின் கீழ் வரும் நிறுவனங்கள்

- இலங்கை மின்சார சபை
- வரையறுக்கப்பட்ட லங்கா மின்சார தனியார் கம்பனி (LECO)
- எல் ரி எல் ஹோல்டிங் (பிரைவேட்) லிமிட்டெட்
- இலங்கை நிலைபெறுதகு வலுசக்தி அதிகார சபை (SLSEA)
- இலங்கை அணுசக்தி சபை
- இலங்கை அணுசக்தி ஒழுங்கமைப்புப் பேரவை
- வரையறுக்கப்பட்ட(தனியார்) இலங்கை நிலக்கரி கம்பனி
- வரையறுக்கப்பட்ட(தனியார்) ஸ்ரீ லங்கா எனர்ஜீஸ் கம்பனி
- இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
- வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம்
- இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபை
- வரையறுக்கப்பட்ட திருகோணமலை பெற்றோலிய (தனியார்) முனையம்

## 1.4 2024 ஆம் ஆண்டில் மின்சக்தி பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

நுகர்வோரின் அனைத்து வகையான தேவைகளையும் பூர்த்தி செயவதற்கு தொடர்ச்சியான மின்சாரம் மற்றும் எரிபொருளை வழங்குவதற்காக நாட்டில் சக்தி வள பாதுகாப்பை உறுதிப்படுத்துவதே 2024 ஆம் ஆண்டின் இலக்காகும். வலுசக்தி தொழிற்துறை நிர்வாகத்தை மேம்படுத்துவதற்குத் தேவையான மாற்றங்கள் அடையாளம் காணப்பட்டு, மறுசீரமைப்பு செயல்முறையை செயல்படுத்துவதற்கான விதிகள் மற்றும் ஒழுங்குவிதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அதே நேரத்தில், நடைபெற்று வரும் திட்டங்களை விரைவுபடுத்துதல் மற்றும் எதிர்கால சக்தி வள நெருக்கடியைத் தவிர்க்க மின்சார உற்பத்தியின் நிறுவப்பட்ட திறனை அதிகரிப்பதற்கு புதிய திட்டங்களை குறிப்பாக ஹைட்ரஜன் மற்றும் அணுசக்தியை

அடையாளம் காணுதல். ஸ்மார்ட் தீர்வுகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் பரிமாற்ற விரிவாக்கங்கள், விநியோக வலையமைப்பு மேம்பாடுகள் அகியவற்றை தொடருதல்.

2024 ஆம் ஆண்டில், மீள புதுப்பிக்கத்தக்க சக்தி (RE) மூலம் மின்சார உற்பத்தியை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது, அதே நேரத்தில் பெரிய ஹைட்ரோ, மினி ஹைட்ரோ, தரையில் பொருத்தப்பட்ட-மிதக்கும்-கூரையின் பொருத்தக் கூடிய சூரிய சக்தி முறையை அவ் சக்தி வளத்துடன் இணைப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. LNG மின் உற்பத்தி நிலையத்தையும் இதனுடன் இணைப்பதற் மூலம் சக்தி வளக் கலவையை மேலும் பன்முகத்தன்மை கொண்டதாக மாறறுவதுடன் தேசிய மின்சார அமைப்பையும் வலுப்படுத்துவதாக உள்ளது. 2030 ஆம் ஆண்டுக்குள் 70% மீள புதுப்பிக்கத்தக்க சக்தி மற்றும் 2050 ஆம் ஆண்டுக்குள் நிகர பூஜ்ஜியத்தை அடையும் இலக்குகளை அடைவதற்காக, தேசிய மற்றும் உலகளாவிய தேவையாக மீள புதுப்பிக்கத்தக்க சக்தித் தொழிற்துறையை மேலும் விரிவுபடுத்துவதில் அமைச்சு தலையிடடுள்ளது. குறிப்பாக இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் தனியார் துறை முதலீடுகளுடன் சூரிய தகடுகளை கூரையின் பொருத்துதல் மற்றும் சூரிய பூங்காக்களை நிறுவுதல். காற்றாலைப் பூங்காக்களும் இத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், இதற்கான ஆரம்பகட்ட ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன.

ஒருங்கிணைந்த அணுகுமுறை மூலம் வலுசக்தித் தொழிற்துறையில் முன்னேற்றத்தை நோக்கிய பயணத்தில், இதுவரையிலான சாதனைகள் மற்றும் எதிர்கால அபிவிருத்தித் தேவைகளை அடையாளம் காணும் நோக்கத்துடன், நிறுவனங்களுக்கு இடையேயான குழுவின் உதவியுடன் தற்போதுள்ள தேசிய எரிசக்திக் கொள்கை மற்றும் மூலோபாயங்கள் மதிப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. மக்களை மையமாகக் கொண்ட அரசாங்கத்தின் நோக்கங்களை நிறைவேற்றும் வகையில், 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி கோரப்பட்ட அனைத்து தகவல்களும், பொதுமக்களின் கோரிக்கைகளின் பேரில், 2024 ஆம் ஆண்டு முழுவதும் தாமதமின்றி பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அணுசக்தியைப் பயன்படுத்தி சுகாதாரத் துறையின் முன்னேற்றத்திற்காக புற்றுநோய் தடுப்பூசிகளுக்கான இரசாயன மருந்துகளை (Fluorodeoxyglucose) (FDG) தயாரிப்பதற்கு சைக்ளோட்ரான் (cyclotron) வசதியைப் பயன்படுத்துவதற்கு, IAEA இன் வழிகாட்டுதலின் கீழ், முதலீட்டாளர் மற்றும் சுகாதார அமைச்சுடன் 2024 செப்ரெம்பரில் இலங்கை அணுசக்தி அதிகார சபை உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளது. இதேபோல், அணுசக்தியைப் பயன்படுத்தி 300-400 மெகாவாட் வரை மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டத்தை முன்னிலைப்படுத்தி, ஆர்வங்களிற்கான வெளிப்பாட்டு ஆவணங்கள் (EOI) தயாரித்தல் மற்றும் தொடர்புடைய ஒழுங்குவிதிமுறைகளைத் தயாரித்தல் ஆகியன ஆண்டு முழுவதும் மேற்கொள்ளப்படடுள்ளன.

### 1.4.1 மின்சக்தி தொழிற்துறை ஒரு பார்வை

- 2024 ஆம் ஆண்டின் மொத்த மின்சார பாவனையாளர்களின் என்ணிக்கை - இ.மி.ச= 7,717,673

**அட்டவணை 1.1**
**2024 ஒக்ரோபரின் இறுதியில் உள்ளவாறு பாவனையாளர்களின் என்ணிக்கை**

| | பிரிவுகள் | இ.மி.ச (CEB) | ல.மி.க (LECO) | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | வீட்டுப் பாவனை | 6,080,699 | 515,975 | 6,596,674 |
| 2 | சமய வழிபாட்டு ஸ்தலங்கள் | 44,215 | 2,731 | 46,946 |
| 3 | கைத்தொழில் | 71,945 | 3,522 | 75,467 |
| 4 | பொதுத் தேவைகள் | 877,776 | 104,139 | 981,915 |
| 5 | ஹோட்டல்கள் | 776 | 88 | 864 |
| 6 | அரசாங்க நிறுவனங்கள் | 9,285 | 420 | 9,705 |
| 7 | விவசாய நடவடிக்கைகள் | 4,061 | | 4,061 |
| 8 | வீதி விளக்குகள் | - | 2,041 | 2,041 |
| | மொத்தம் | **7,088,757** | **628,916** | **7,717,673** |

- 2024 ஆம் ஆண்டின் நிகர மின்சார உற்பத்தி- 15,322.814 GWh
- கலவை மின்சார உற்பத்தி (2024 நவம்பர் இறுதியில் உள்ளவாறான தரவுகள்) (அலகுகள் GWh இல்)

| | | |
|---|---|---|
| நிலக் கரி | - | 5,148.526 |
| நீர் வலு | - | 6,021.523 |
| அனல் சக்தி | - | 2,246.760 |
| காற்று சக்தி | - | 779.125 |
| சூரிய சக்தி | - | 985.927 |
| ஏனையவை | - | 140.953 |

**வரைபு 1.1**
**2024 ஆம் அண்டின் மின்சார நிகர உற்பத்தி**




**அட்டவணை 1.2**
**2024 நவம்பர் இறுதியில் உள்ளவாறான நிறுவப்பட்ட திறன்**

| மின்சார உற்பத்தி மூலவளங்கள் | இலங்கை மின்சார சபை | தனியார் முதலீட்டாளர்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| **மீள புதுப்பிக்கத்தக்க சக்தி** | | | |
| 01. நீர் வலு | 1,413.38 | 423.08 | 1,846.46 |
| 02. காற்று சக்தி | 103.50 | 163.45 | 266.95 |
| 03. சூரிய சக்தி- தரையில் பொருத்தப்பட்டவை | - | 153.36 | 153.36 |
| 04. சூரிய சக்தி- கூரையின் மேல் பொருத்தப்பட்டவை | - | 1,346.94 | 1,346.94 |
| 05. விறகின் (Dendro) மூலமான மின்சாரம் | - | 26.99 | 26.99 |
| 06. உயிரியல் வாயு | - | 17.08 | 17.08 |
| 07. மாநகர கழிவு | - | 10.00 | 10.00 |
| மொத்தம் | 1,516.88 | 2,140.90 | 3,657.78 |
| **புதைபடிவ எரிபொருள** | | | |
| 08. உலை எண்ணெய் | 801.00 | 482.00 | 1,283.00 |
| 09. நிலக் கரி | 900.00 | - | 900.00 |
| மொத்தம் | 1,701.00 | 482.00 | 2,183.00 |
| **முழு மொத்தம்** | | | **5,840.78** |

### 1.4.2 மின்சார உற்பத்தி விரிவாக்கம்

**அ.மீள புதுப்பிக்கத்தக்க சக்தி மூலமான மின்சார உற்பத்தி**

**i. பாரியளவான நீர்மின்சாரத் திட்டம்**

- **உமா ஓயா நீர்மின்சாரத் திட்டம் (120 MW)**

உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டம் நீர்ப்பாசனம் மற்றும் நீர்வளங்கல் முகாமைத்துவ அமைச்சினால் செயற்படுத்தப்படுகிறது. இத் திட்டத்தில் இரண்டு சுரங்கப்பாதைகள் மற்றும் வெலிமடா ஆற்றின் துணை நதி, ஒரு திருப்புமுனையுடன் கூடிய குறுக்கு பாதை, 120 மெகாவாட் நிறுவப்பட்ட திறன் கொண்ட நிலத்தடி நீர்மின்சார நிலையம் மற்றும் பாசன நோக்கங்களுக்காக சுமார் 5,000 ஹெக்டேர் பரப்பளவில் தண்ணீரை வழங்குவதற்கான நீர் திசைதிருப்பல் அமைப்பு ஆகியவை உள்ளடங்கும். இந்த திட்டத்திற்கு ஈரானிய மற்றும் உள்நாட்டு மூலங்களிலிருந்து USD 530 மில்லியன் முதலீடு கிடைத்துள்ளது. இத் திட்டம் 2024 ஏப்ரல் 4 ஆம் திகதி ஈரான் ஜனாதிபதி முன்னிலையில் அதிகாரப்பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

- **மொரகொல்ல நீர்வலு மின் உற்பத்திக் கருத் திட்டம் (30.5 MW)**

மொரகொல்ல திட்டம் கண்டி மாவட்டத்தின் உலப்பனை பகுதியில் அமைந்துள்ளதுடன், இது மகாவலி நதியின் நீரைப் பயன்படுத்துகிறது. இவ் கருத்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் வருடாந்த மின் உற்பத்தி 100.5 GWh ஆகும். இவ் கருத்திட்டம் அதன் இறுதி கட்டத்தை நெருங்கி வருவதுடன், 2024 ஆம் ஆண்டின் இறுதியில் இவ் கருத்திட்டம் 84% பௌதீக முன்னேற்றத்தையும் 84.3% நிதி முன்னேற்றத்தையும் அடைந்துள்ளது. இந்த திட்டம்2025 டிசம்பர் மாதத்திற்குள் பூர்த்தியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. இவ் கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் ரூ. 19,288 மில்லியன் ஆகும். இவ் கருத்திட்டத்தை செயற்படுத்துவதற்கு ADBயின் நிதி உதவி பெறப்பட்டுள்ளது.







(மின்சார நிலையம் மற்றும் அணைக்கட்டு நிர்மாணம்)

**ii. சிறிய நீர்மின்சார கருத்திட்டங்கள்**

- **சீதாவாக்க நீர்வலு மின் உற்பத்தி நிலையம்**

இவ் சிறிய நீர்மின் நிலையம் 7 மெகாவாட் (மொத்தம் 14 மெகாவாட்) ஒருங்கிணைந்த திறன் கொண்ட இரண்டு மின் நிலையங்களைக் கொண்டுள்ளது, இது வருடாந்தம் 40 கிவொம மின்சாரத்தை உற்பத்தி செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை (IEE) அறிக்கை மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டின் இறுதிக்குள்,

மின் உபகரணங்களுக்கான பெறுகை செயற்பாடுகள் பூர்த்தியடைந்துள்ளதுடன், நீர்ப்பாசனத் திணைக்களத்தின் ஒப்புதலைப் பெற்று, CEB உடன் மின்சார பெறுகை உடன்படிக்கையில் (PPA) கைச்சாத்திட்டதன் பின்னர் தளத்தை தயார்பண்ணுதல் மற்றும் நிர்மாணப் பணிகளை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

**iii. சிறிய நீர்மின்சார கருத்திட்டத்தின் நிலைகள்**

2024 டிசம்பர் மாதத்திற்குள் தேசிய மின்கட்டமைப்பில் சேர்க்கப்பட்ட திரட்டியமொத்த சிறிய நீர்மினசாரத் திறன் 422.4 மெகாவாட்டாக உயர்ந்துள்ளதுடன், NDC நிபந்தனையற்ற நடவடிக்கைகளுக்கான நிர்ணயிக்கப்பட்ட இலக்கில் 10% ஐ எட்டுகிறது. 2024 ஆம் ஆண்டில் 3.027 மெகாவாட் மொத்த கொள்ளளவு கொண்ட இரண்டு சிறிய நீர்மின் கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அவையாவன, பன்விலாவில் கலபோடவத்த கருத்திட்டம் (3 மெகாவாட்) மற்றும் கொல்லோனாவில் கிருலகருத் திட்டம் (0.027 மெகாவாட்) என்பனவாகும்.

**iv. சூரிய சக்தி மின் உற்பத்திக் கருத் திட்டங்கள்**

- **சியம்பலாண்டுவ நிலஅடிப்படையிலான சூரிய சக்தி பூங்கா - 100 MW**

இவ் சூரியசக்தி மின் நிலையத்தின் மூலம் 100 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்காக தற்போது நிலங்களை கையகப்படுத்தும் பணிகள் மற்றும் போக்குவரத்திற்கான வீதிகளை செப்பனிடும் பணிகள் மற்றும் வேலிகளை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கான கேள்விமனு வழங்கப்பட்டுள்ளதுடன். மின்சார உற்பத்திக்கான அனுமதிப்பத்திரமும் வழங்கப்பட்டுள்ளது. மேலும், மினசார பெறுகை உடன்படிக்கையும் 2024.08.02 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டுள்ளது. இவ் கருத்திட்டம் Wind Force PLC, Lakdhanavi Limited மற்றும் The Blue Circle Pvt. Ltd, Singapore நிறுவனங்களின் பங்குடமையின் கீழ் செயற்படுத்தப்படும்.

- **அம்பாந்தோட்டை 150 மெ. வொ சூரிய சக்தி மின் உற்பத்திக் கருத் திட்டம்**

நிலையான மின்சார பெறுகை உடன்படிக்கை 2024.03.13 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டுள்ளது. மகாவலி அதிகாரசபையுடன் காணி குத்தகை ஒப்பந்தம் இன்னும் கைச்சாத்திடப்படவில்லை. இத் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட எதிர்பார்க்கப்பட்ட மின்மாற்றல் பாதை மற்றும் உப மின்நிலையத்தின் நிர்மாணப் பணிகள் 13 முதலீட்டாளர்களால் உருவாக்கப்பட்ட ஒரு கூட்டமைப்பு நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகின்றன.

- **சாம்பூர் சூரிய சக்தி மின் உற்பத்திக் கருத் திட்டம் (135 MW) – கட்டம் I (50 MW)**

இவ் இரண்டு கட்டத் திட்டமானது 135 மெகாவாட் வரை விரிவுபடுத்தும் திறனுடன் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன், 50 மெகாவாட்க்கான முதல் கட்டத்தின் பணிகளை இலங்கை மின்சார சபை (CEB) மற்றும் இந்தியாவின் National Thermal Power Corporation (NTPC) ஆகியவற்றின் கூட்டு முயற்சியுடன் Trincomalee Power Company Limited (TPCL நிறுவனம் முன்னெடுத்து வருகிறது. செயற்படுத்தல் உடன்படிக்கை தொடர்பான கலந்துரையாடல்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன, மேலும் மின்சாரத்தை உற்பத்திசெய்வதற்கான அனுமதிப்பத்திரம் 2023யூலை 18 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ளது.

இத் திட்டம் சம்பூர் நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்தை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்ட நிலத்தைப் பயன்படுத்தும். மகாவலி அதிகாரசபையுடன் நில குத்தகை ஒப்பந்தம் இன்னும் கையெழுத்தாகவில்லை. மினசாரபரிமாற்றல் பாதையை நிர்மாணிப்பதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன.

- **ஓட்டமாவடி 100 MW சூரிய சக்தி மின் உற்பத்திக் கருத் திட்டம்**

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஓட்டமாவடி பகுதியில் இந்த திட்டம் மேற்கொள்ளப்படுகிறது. இத் திட்டம் வாழைச்சேனைக்கான 15 கி.மீ. மின்சார பரிமாற்றல் பாதையுடன் இணைந்து முன்னெடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் இத் திட்டம் வெளிநாட்டு நேரடி முதலீட்டில் செயற்படுத்தப்படுகிறது. சுற்றாடல் அனுமதி மற்றும் தற்காலிக ஒப்புதல் பெறப்பட்டுள்ளன. நிலையான மின்சார பெறுகை உடன்படிக்கை இன்னும் கைச்சாத்திடப்படவில்லை. கருத்திட்ட அமுல்படுத்தல் உடனபடிக்கைக்கான சட்டமா அதிபரின் அவதானிப்புகள் இன்னும் பெறப்படவில்லை.

- **பூநகரி குள சூரிய சக்தி மின் உற்பத்திக் கருத் திட்டம் - 700 MW**

உலர்மின்கல சேமிப்பு முறையுடன் கூடிய பூநகரி குளத்தில் அமைந்துள்ள இத் திட்டம் வெளிநாட்டு நேரடி முதலீட்டுடன் வழங்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகிறது. சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை மத்திய சுற்றாடால் அதிகார சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், 700 ஆறு திறன்கொண்ட சூரிய சக்தி மின் உற்பத்தியை மேற்கொள்வதற்கான தற்காலிக ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது.

- **சந்திரிகா வெவா மற்றும் கிரிபன் வெவாவில் மிதக்கும் சூரிய மின்சக்தி திட்டம் (2 MW)**

சந்திரிகா வெவா மற்றும் கிரிப்பன் வெவாவின் மேற்பரப்பில் நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மிதக்கும் சூரியசக்தி மின் உற்பத்தி முன்னோடித் திட்டங்கள், ஒவ்வொன்றும் 1 MW திறன் கொண்டமைந்ததோடு, இது இலங்கையில் முதல் மிதக்கும் வகை சூரிய மின் உற்பத்தி நிலையமாகும். இத் திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக கொரியாவின் வர்த்தகம், கைத்தொழில் மற்றும் எரிசக்தி அமைசசு அண்ணளவாக ரூ.1,000 மில்லியன் மானிய அடிப்படையிலான நிதியை வழங்கியுள்ளது. இத் திட்டம் 2024 நவம்பர் 27 ஆம் திகதி பூர்த்திசெய்யப்பட்டு செயற்பாட்டுக்கு நிலைக்கு வந்துள்ளது.

இத் திட்டத்தின் முதன்மை நோக்கம், இலங்கையின் மின் உற்பத்தித் தேவைகளுக்கு செலவு குறைந்த தீர்வாக மிதக்கும் சூரிய சக்தி தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதும், இத் தொழில்நுட்பத்தின் தாக்கங்களை அடையாளம் காண்பதும் ஆகும். இந்த அணுகுமுறை பாரம்பரிய சூரிய மின் உற்பத்தி நிலையங்களுக்கான நிலத் தேவைகளுடன் தொடர்புடைய சவால்களை நிவர்த்தி செய்கிறது. இத் திட்டத்தின் மூலம் வருடாந்தம் 3 GWh மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. மேலும், இது ஒவ்வொரு ஆண்டும் மின்சார உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் சுமார் 1 மில்லியன் லீற்றர் புதைபடிவ எரிபொருளை சேமிக்கும், இதன் விளைவாக சுமார் ரூ. 0.3 பில்லியன் செலவினம் சேமிக்கப்படும். மேலும், இவ் சூரிய சக்தி திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம் காபன் வெளியேற்றத்தை 2,100 தொன்னாக குறைப்பதற்கு பங்களிப்பு செய்வதாகவும் உள்ளது.

- **இந்திய கடன் உதவித் திட்டத்தின் கீழ் கூரையின் மேல் பொருத்தும் சூரிய சக்தி திட்டத்தை அமுல்படுத்துதல்**

இத் திட்டம் 5,000 மதத் தலங்களுக்கு சூரிய சக்தி தகடுகளை கூரையின் மேல் நிறுவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. சூரிய சக்தி அமைப்பு கருவிகளின் இறக்குமதி மற்றும் விநியோகம் பூர்த்தியடைந்துள்ளதுடன் நாடு முழுவதும் இதனை பொருத்துவதற்கான செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இத் திட்டம் 2025 மார்ச் மாதத்திற்குள் பூர்த்தியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**v. காற்றாலைத் திட்டங்கள்**

- **மன்னார் "தம்பபன்னி" காற்றாலை மின் உற்பத்தித் திட்டம் (50 MW) - கட்டம் II**

100 MW திறன் கொண்ட தம்பபவன்னி கட்டம் I வெற்றிகரமாக செயற்பட்டு வருகிறது. கட்டம் II க்கு EOI கோரப்பட்டுள்ளதுடன், இதற்கு பதிலளிக்குமுகமாக பெறப்பட்ட முன்மொழவுள் PC / CANC ஆல் மதிப்பீடு செய்யப்படுகின்றன.

- **வேராவில் காற்றாலை மின் உற்பத்தி திட்டம் (210 MW)**

கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள இத் திட்டம், சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க நிறுவனத்திடமிருந்து (USAID) சுற்றாடல் தாக்க மதிப்பீட்டை (EIA) மேற்கொள்வதற்கான ஆதரவினை பெற்றுள்ளது. சுற்றாடல் தாக்க மதிப்பீடு மற்றும் பறவைகள் தொடர்பான ஆய்வுகள் பூாத்திசெய்யப்பட்டு, மத்திய சுற்றாடல் அதிகாரசபையிடம் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. தேவையான ஒப்புதல்களைப் பெற்றதன் பின்னர், இத் திட்டத்தில் முதலீடுகளை மேற்கொள்வதற்காக முன்மொழிவுகள் கோரப்படும்.

- **முள்ளிகுளத்தில் (50 MWx2) காற்றாலைப் பண்ணையை நிறுவுதல்**

திட்டத்தின் ஆரம்ப கட்ட பணிகள், தளப் பாதைகளை உருவாக்குதல், விசையாழி தடங்களை (turbine footprints) அகற்றுதல் மற்றும் எல்லை நிர்ணயம் செய்தல் மற்றும் தள தங்குமிடம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக உள்ளது. இலங்கை மின்சார சபை (CEB) இத் திட்டத்தை உருவாக்கி, திட்ட முயற்சியாளர்களுக்கு இதனை செயற்படுத்துவதற்கான வாய்பபுக்களை வழங்கியுள்ளது. இத் திட்டத்தின் மொத்த மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் ரூ. 284.00 மில்லியன் மற்றும் திட்டத்தை 2025 டிசம்பரில் பூாத்திசெய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், காற்றாலை பண்ணையை செயற்படுத்துவதற்கான RFP கோரப்படும்.

- **மன்னார் காற்றாலை மின் உற்பத்திதத் திட்டம் (250 MW)**

250 MW நிறுவப்பட்ட திறனுடன், வெளிநாட்டு நேரடி முதலீட்டின் உதவியுடன் இத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. சாத்தியக்கூறு ஆய்வுகள் நிறைவடைந்துள்ளன, மேலும் நிலதகைத் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது. சுற்றாடல் தாக்க மதிப்பீட்டிற்கான இறுதி தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நடத்தப்பட்டுள்ளதுடன் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ஒப்புதல் நிலுவையில் உள்ளது. இலங்கை நில அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் மன்னார் தீவுக்கான மழைநீர் சேகரிப்பு அமைப்பை உருவாக்கி வருகிறது, இது அப்பகுதியின் அபிவிருத்திக்கு சிறந்த பங்களிப்பு செய்வதாக அமைந்துள்ளது.

- **பூநகரி காற்றாலை மின் உற்பத்தி திட்டம் (234 MW, கட்டம் I மற்றும் II)**

பூநகரி தீபகற்பத்தில் 234 MW மின்சாரத்தை உற்பத்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்ட இத் திட்டம், முறையே 100 MW மற்றும் 134 MW ஆகிய இரண்டு கட்டங்களாக அமுல்படுத்தப்படுவதோடு இதனை தனியார் முதலீட்டில் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. நில மதிப்பீட்டு பணிகள் பூர்த்தியடைந்துள்ளதுடன், நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது. முன்-சாத்தியக்கூறு ஆய்வுகளும் பூாத்தியடைந்துள்ளன, மேலும் எரிசக்தி அனுமதிப்பத்திரமும் வழங்கப்பட்டுள்ளது.

**vi. வடக்கு தீபகற்பத்தில் உள்ள மூன்று தீவுகளிலும் கலப்பின மீள புதுப்பிக்கத்தக்க சக்தி அமைப்புகளை நிறுவுதல்**

இத் திட்டம் வடக்குத் தீவுகளான நெடுந்தீவு, அனலைதீவு மற்றும் நயினாதீவு ஆகியவற்றிற்கு சூரியசக்தி, காற்றுவலு, டீசல் மின்பிறப்பாக்கி மற்றும் லித்தியம்-அயன் உலர்மின்கல சேமிப்பு முறைகளை உள்ளடக்கியதான கலப்பினத் திட்டமாக மின்சாரத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மினசார் வரைபடங்களுக்கு

ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது, மேலும் சிவில் வரைபடங்கள் மதிப்பாய்வில் உள்ளன. அனலைதீவில் சங்கிலி இணைப்பு வேலி அமைக்கும் பணி பூரத்தியடைந்துள்ளது, அதே நேரத்தில் நயினாதீவு மற்றும் நெடுந்தீவில் நிர்மாணப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்து தீவுகளிலும் தளங்களை சுத்தம் செய்தல், ஆய்வு செய்தல் மற்றும் மண் பரிசோதனை ஆகியவை பூரத்திசெய்யப்பட்டுள்ளன, மேலும் ஒப்பந்ததாரர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். உபகரண வழங்குனர்களுடன் பொருளுக்கான கட்டளைகளை பிறப்பிக்கும் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இந்த திட்டத்திற்கு இந்தியா இந்திய மானிய திட்டத்தின் கீழ் நிதியளித்துள்ளது. இத் திட்டம் 2025 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் பூர்த்திசெய்யப்படும்.

2023 டிசம்பர் 11 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின் படி, இத் திட்டத்திற்கான ஒப்பந்தம் இந்தியாவின் M/S U-Solar Clean Energy Solutions (Pvt) Ltd நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தை SLSEA செயல்படுத்துகிறது, மேலும் திட்டத்தின் மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு உள்ளடங்கலாக ஆலோசனை சேவைகளை இலங்கை மின்சார சபையிடமிருந்து (CEB) பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

**vii. அம்பாந்தோட்டையில் உலர்மின்கல சக்திவள சேமிப்பு அமைப்பை (BESS) நிறுவுதல்.**

இத் திட்டம் இலங்கையில் முதல் உலர்மின்கல சக்திவள சேமிப்பு அமைப்பாகும், மேலும் இது அம்பாந்தோட்டைவலைப்பின்னல் உப மின்நிலையத்தில் நிறுவப்படும். இது 5MW/10.7MWh திறன் கொண்ட ஒரு முன்னோடித் திட்டமாகும். முன்மொழியப்பட்ட BESS இன் மொத்த மதிப்பீடுசெய்யப்பட்ட செலவினம் அண்ணளவாக USD 11.9 மில்லியன் ஆகும், இது கொரியாவின் வர்த்தகம், கைத்தொழில் மற்றும் எரிசக்தி அமைச்சின் மானியத்தாலும், கொரியா தொழில்நுட்ப முன்னேற்ற நிறுவனத்தின் (KIAT) தொழில்நுட்ப உதவியுடனும் செயற்படுத்தப்படுகிறது.

வடிவமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன, மேலும் ஒப்பந்ததாரரின் பிரதிநிதிகள் மற்றும் CEB உடன் இணைந்து வடிவமைப்பு மதிப்பாய்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன. நிர்மாணப் பணிகள் நடைபெற்று வருவதுடன், இவை 2025 பெப்ரவரி மாத இறுதிக்குள் பூர்த்திசெய்யப்படும். 2025 மார்ச்/ஏப்ரல் க்குள் பொருட்கள் தளத்திற்கு வழங்கப்படும், மேலும் திட்டம் 2025 இல் பூர்த்திசெய்யப்படும்.







(உலர்மின்கல சக்தி சேமிப்பு முறை நிர்மாணத் தளம்- அம்பாந்தோட்டை)

### i. திரவ இயற்கை வாயு (LNG) திட்டங்கள்

பாரிஸ் ஒப்பந்தத்தின்படி, இலங்கை தனது தேசிய அளவில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புகளை சமர்ப்பித்து, 2030 ஆம் ஆண்டுக்குள் மீள புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களிலிருந்து 70% மின்சார உற்பத்தியை அடையவும், 2050 ஆம் ஆண்டுக்குள் மின்சார உற்பத்தியில் காபன் நடுநிலைமையை அடையவதற்கும் உறுதிபூண்டுள்ளது. இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு 2023-2042 ஆம் ஆண்டுக்கான நீண்டகால உற்பத்தி விரிவாக்கத் திட்டத்தை அங்கீகரித்துள்ளது. சர்வதேச உறுதிமொழிகளை அடைவதற்கு கணிசமாக பங்களிக்கும் மாறும் மீள புதுப்பிக்கத்தக்க சக்தி சேர்க்கைகளை நிறைவு செய்வதற்கு இரட்டை எரிபொருள் திறன் கொண்ட 200 MW இயற்கை வாயு மூலம் இயங்கும் உளளக் எரிப்பு இயந்திர மின் நிலையத் (internal combustion engine power plant) திட்டம் அவசியமானது என்று அடையாளம் கண்டுள்ளது.

- **கெரவலப்பிட்டியில் 350MW RLNG/டீசல் ஒருங்கிணைந்த சுழற்சி மின் உற்பத்தி நிலையத்திதை நிர்மாணித்தல்**

சோபாதனவி 350 MW LNG இல் செயற்படக்கூடிய ஒருங்கிணைந்த சுழற்சி மின்சார நிலையத்தின் முதல் கட்டம் லக்தனவியால் (Lakdhanavi) கெரவலப்பிட்டியில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் திறந்த சுழற்சி எரிவாயு விசையாழி (Open cycle Gas turbine) 2024 ஆகஸ்ட் இல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நீராவி விசையாழி (Steam turbine) 2025 இல் ஆரம்பிக்கப்படும்.

- **கெரவலப்பிட்டியில் இரண்டாவது 300 MW LNG அடிப்படையிலான ஒருங்கிணைந்த சுழற்சி மின் உற்பத்தி நிலையத்தை நிர்மாணித்தல்**

கெரவலப்பிட்டியில் உள்ள 350 MW சஹஸ்தனவி NG ஒருங்கிணைந்த சுழற்சி மின்சார நிலையத்தின் திறந்த சுழற்சியை 2026 ஆம் ஆண்டிலும் ஒருங்கிணைந்த சுழற்சியை 2027 ஆம் ஆண்டிலும் பூர்த்திசெய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. லக்தனவியுடன் PPA தொடர்பான கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன.

- **மின்சார உற்பத்திக்கான தேவையான திரவ இயற்கை வாயுவை (LNG) கொள்வனவு செய்வதற்கு இந்தியாவின் M/s Petronet முன்மொழிவை அமுல்படுத்துதல்**

மின்சார உற்பத்தி நிலையங்களை செயற்படுத்துவதற்கான LNGயை கொள்வனவு செய்வதற்காக M/s Petronet India மற்றும் M/s Lakdhanavi Ltd நிறுவனங்கள் சமர்ப்பித்த கூட்டு முன்மொழிவைத் செயற்படுத்துவதற்கு 2024.07.15 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. LNG விநியோகம் உள்ளடங்கலாக LNG உட்கட்டமைப்பிற்காக பரஸ்பர ஒத்துழைப்புடன் இந்தியாவின் M/s Petronet LNG Ltd மற்றும் M/s LTL Holdings (Pvt) Ltd நிறுவனங்களுக்கிடையே 2024.08.20 ஆம் திகதி புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) கைச்சாத்திடப்பட்டுள்ளது. M/s LTL Holdings (Pvt) Ltd மற்றும் M/s Petronet LNG Ltd, இந்தியா நிறுவனங்களுக்கிடையே ஏற்கனவே செயற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு தழுவல் ஒப்புதலை வழங்குவதற்காக 2024.09.05 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் கூறப்பட்ட முன்மொழிவுகளைக் கருத்தில் கொண்டு, 2024.09.09 ஆம் திகதி அமைச்சரவை அமைச்சர்கள் ஒப்புதலை வழங்கியுள்ளனர்.

### ii. கெரவலப்பிட்டியில் இரட்டை எரிபொருள் திறன் கொண்ட 200 MW இயற்கை வாயுவை உபயோகப்படுத்தும் உள்ளக எரிப்பு (IC) இயந்திர மின்சார உற்பத்தி நிலையத்தை நிறுவுதல்

கெரவலப்பிட்டியில் இரட்டை எரிபொருள் திறன் கொண்ட 200 MW இயற்கை வாயுவை உபயோகிக்கும் உளளக எரிப்பு இயந்திர மின்சார நிலையத்திற்கான போட்டி

அடிப்படையிலான பெறுகை செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு, 20 ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்ட நிர்மாணித்தல்-உரிமைப்படுத்துதல்-செயற்படுத்ததல்-பரிமாற்றுதல(BOOT) வசதியாக IPP அடிப்படையில் முன்னெடுப்பதற்கு, 2024.06.11 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் கூறப்பட்ட முன்மொழிவுகளைக் கவனத்திலெடுத்து, 2024.06.24 ஆம் திகதி அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. இத் திட்டத்தைச் அமுல்படுத்துவதற்காக கருத்திட்டக் குழு (PC) மற்றும் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பேரம்பேசும் குழு (CANC) என்பன நியமிக்கப்பட்டுள்ளன, மேலும் இவ் கருத்திட்டம் 2028 ஆம் ஆண்டில் பூர்த்தியடையும்.

**iii. அணுசக்தி திட்டம்**

இத் திட்டத்தின் பிரதான நோக்கம், நிலைபேறான, நம்பகமான, நிலையான மற்றும் சுற்றுச்சூழலுக்கு சிநேகபூர்வமான சக்திவளத்தை உருவாக்குவதற்கு, குறிப்பாக அணுசக்தி மூலம் மின்சார உற்பத்திக்கு, அணுசக்தி தொழில்நுட்பத்தை ஏற்றுக்கொள்வதற்கு தேவையான கொள்கை தீர்மானங்களை எடுப்பதில் அரசாங்கத்திற்கு உதவிபுரிவதாகும். எதிர்பார்க்கப்படும் பிரதிபலன் என்னவெனில், ஆரம்பத்தில் 30-400 MW திறனுடன் கூடிய அணு மின் நிலையம் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும். இத் திட்டத்திற்கான மொத்த நிதி ஒதுக்கீடு ரூ. 603 மில்லியன் ஆகும்.

இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ள அமைப்புகளில் சர்வதேச அணுசக்தி நிறுவனம் (IAEA) மற்றும் இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் சபை ஆகியவை உள்ளடங்குவதோடு, இவை மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் நேரடி மேற்பார்வையின் கீழ் செயற்படுகிறது. இவ் விடயத்தன் முன்னேற்றத்தில் அணுசக்தி பொறுப்பு தொடர்பான இரண்டு சர்வதேச மாநாடுகளின் ஒப்புதல், ஒருங்கிணைந்த பணித் திட்டத்தை (IWP) தயாரிப்பது மற்றும் அணு மின் நிலைய (NPP) ஆய்வுக்கான வழிகாட்டுதல் குழுவை நியமிப்பது ஆகியவை உள்ளடங்கும்.

### 1.4.3. மின்சார பரிமாற்றல் மற்றும் விநியோக விரிவாகக்கங்கள்

**i. பசுமை மினசார அபிவிருத்தி மற்றும் சக்திவளத்திற்கான செயற்திறனை அதிகரிப்பதற்கான முதலீட்டுத் திட்டம் (பிரிவு 1)**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள மூன்று திட்டங்களை அமுல்படுத்துவதற்காக CEB முழுமையாக சேமிப்பை வழங்கவும் மற்றும் பயன்படுத்துவதற்கும் சக்தியளிக்கும் வகையில் 3585 SRI ஆம் இலக்க ADB கடனின் (மன்னாரில் 100 MW காற்றாலை மின்சார நிலையத்தை நிறுவுவதற்காக 3585 SRI ஆம் இலக்க கடன் வசதியின் கீழ் USD 200 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது) செல்லுபடியாகும் காலம் 2026.06.30 ஆம் திகதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது;

- வலையமைப்பு முகாமைத்துவ சேவைகளை நிரூபிப்பதற்கான 3MW சூரியசக்தி PV திட்டம்.
- விநியோக வலையமைப்புக்களை மேம்படுத்துவதற்கான பொருட்கள்/ உபகரணங்களை கொள்வனவு செய்தல்.
- CEBயின் மத்திய மாகாணத்திற்கான உயர் விநியோக கட்டுப்பாட்டு நிலையம் (ADCC) முறைக்கு பொருந்துவதாக உள்ள உயர் விநியோக முகாமைத்துவ முறை (ADMS) மேற்பார்வை கட்டுப்பாடு தரவு கையகப்படுத்தல் (SCADA)

**ii. பசுமை மின்சார அபிவிருத்தி மற்றும் சக்திவளத்திற்கான செயற்திறனை அதிகரிப்பதற்கான முதலீட்டுத் திட்டம் (பிரிவு 2)**

- ஹொரணை-பதுக்கை 132 kV மின்மாற்றல் பாதைத் திட்டத்தின் (பொதி 2 தொகுதி B2 - A), மொத்த மதிப்பீடுசெய்யப்பட்ட செலவினம் ரூ. 599.71 மில்லியன் ஆவதோடு இத் திட்டம் 2020 ஏப்ரல் 30 ஆம் திகதியில் ஆரம்பித்து 2024 மார்ச் 31ஆம் திகதியில் பூர்த்திசெய்வதற்கு

திட்டமிடப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கு AFD நிதியளித்து ADB ஆல் நிர்வகிக்கப்படுகிறது. வரையறுக்கப்பட்ட பணிகள் முழுமையாக பூர்த்திசெய்யப்பட்டு, 100% நிறைவடைந்துள்ளது.

- அம்பலாங்கொடை 132/33 kV வலையமைப்பு உப மின்நிலையம், பன்னல 132/33 kV வலையமைப்பு உப மின்நிலையத்தை விரிவுபடுத்துதல் மற்றும் 132/33 kV 31.5 MVA (பொதி 8: தொகுதி B) கொண்ட இரண்டு உதிரி மின்மாற்றிகளை வழங்குதல், இதற்கான மொத்த செலவினம் ரூ. 1739.59 மில்லியன் ஆவதோடு இத் திட்டம் 2022 ஜூலை 11 ஆம் திகதியில் ஆரம்பித்து 2024 ஜூன் 30 ஆம் திகதி பூர்த்திசெய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதற் பௌதீக முன்னேற்றம் 100% ஆகும். இத் திட்டத்திற்கு ADB நிதியீட்டம் செய்கின்றது.
- கெரவலப்பிட்டியில் உள்ள 220kV ஸ்விட்சிங் ஸ்டேஷனுக்கான (பொதி 9), மொத்த செலவினம் ரூ. 2918.7 மில்லியன் ஆவதோடு இத் திட்டம் 2020 ஆகஸ்ட் மாதத்தில் ஆரம்பித்து 2024 மே 21 ஆம் திகதி பூர்த்திசெய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இத் திட்டமும் ADB ஆல் நிதியீட்டம் செய்யப்பட்டு பூர்த்தியடையும் நிலையில் உள்ளது.

### iii. திருகோணமலை நிலக்கரி மின்சார திட்டத்திற்கான மின் பரிமாற்ற உட்கட்டமைப்பு

- திட்ட தொகுதி A – உப மின்நிலைய திட்டத்திற்கான ஹபரண - வியாங்கொடை 220kV மின்சார பரிமாற்றல் பாதை நிர்மாணம்

வியாங்கொடை, புதிய ஹபரனை, வாழைச்சேனை, கொத்மலை மற்றும் அனுராதபுரம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள இவ் திட்டங்களின் மொத்த செலவினம் ரூ. 5,847 மில்லியன் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இது 2018 பெப்ரவரியில் ஆரம்பிக்கப்பட்டதுடன் இதற்கு ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (JICA) நிதி வசதிகள் அளித்துள்ளது. இத் திட்டம் வெற்றிகரமாக பூர்த்திசெய்யப்பட்டு செயற்படுத்தப்பட்டுள்ளது.

- திட்ட தொகுதி B – உப மின்நிலைய திட்டத்திற்கான ஹபரண - வியாங்கொடை 220kV மின்சார பரிமாற்றல் பாதை நிர்மாணம்

வியாங்கொடை முதல் ஹபரனை வரை நீட்டிக்கப்படும் இத் திட்டத்தின் மொத்த செலவினம் ரூ. 10,155 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2017 மே இல் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் (JICA) நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்பட்டது. ஹபரனையிலிருந்து தம்புள்ளை வரையிலான 220kV பாதை பூர்த்திசெய்யப்பட்டு, இலங்கை மின்சார சபையால் மின்சாரம் வழங்குவதற்கு தயாராக உள்ளது.

### iv. மின்சார விநியோக நம்பகத்தன்மை விருத்திசெய்யும் திட்டத்திற்கு உதவிபுரிதல்

- இத் திட்டத்தில், நாடு முழுவதும் அமைந்துள்ள 300 கி.மீ நீளமுள்ள 33kV கோபுரக் பாதைகள் மற்றும் 13 33kV சுவிட்சிங் கேன்ட்ரிகள் (switching gantries) (பொதி 4) ஆகியவை இவ் நிர்மாணப் பணிகளில் உள்ளடங்கும். இத் திட்டத்திற்கான மொத்த மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் ரூ. 7,314.052 மில்லியன் ஆவதோடு இது 2019.10.28 ஆம் திகதியிலிருந்து செயற்படும் வகையில் நடைமுறைக்கு வருகிறது. இத் திட்டத்திற்கு ADB மற்றும் GOSL நிதிவசதிகள் அளிக்கின்றன.
- முன்னேற்றத்தைப் பொறுத்தவரை, சுயவிவர வடிவமைப்பு, கோபுர வடிவமைப்பு மற்றும் பாதை ஆய்வுகள் அனைத்தும் 100% பூர்த்தியடைந்துள்ளன. அடித்தள வடிவமைப்பு 99.5% ஆகவும், கேன்ட்ரி வடிவமைப்பு 99% ஆகவும் உள்ளது. பாதை பொருட்களின் கொள்வனவு 81.65% ஆகவும், கேன்ட்ரி

பொருட்கள் கொள்வனவு 82.7% ஆகவும் உள்ளது. கோபுர ஸ்பாட்டிங் மற்றும் மண் ஆய்வு இரண்டும் 100% ஆகவும், கோபுர அடித்தளங்கள் 73% ஆகவும், கோபுர நிறுவல் 47% ஆகவும் உள்ளது. ஸ்ட்ரிங்கிங் 30% ஆகவும், கேன்ட்ரி அடித்தள வேலை 76% ஆகவும், கேன்ட்ரி நிறுவல் 43% ஆகவும் உள்ளது. ஒட்டுமொத்தமாக, திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 73.82% ஆகும். பொதி 4 இற்கு திட்ட நீடிப்புடன் வழங்கப்பட்ட கடன் செல்லுபடியாகும் காலம் தவிர்க்க முடியாத சூழ்நிலைகளால் கடன் காலத்திற்குள் பூர்த்திசெய்யமுடியாமல் போய்விட்டது. எவ்வாறெனினும், திட்ட பணிகளில் 80% த்தை 2025 மார்ச் 31 ஆம் திகதியில் பூர்த்திசெய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டள்ளது.

- இத் திட்டம் பன்னிபிட்டியவில் அமைந்துள்ள பன்னிபிட்டிய வரைப்பின்னல் உப மின்நிலையத்தில் (பொதி 7: தொகுதி A) 100 Mvar BSC நிறுவுதலை உள்ளடக்கியதுடன், இதன் மொத்த மதிப்பீடுசெய்யப்பட்ட செலவினம் ரூ. 1,103.5 மில்லியன் ஆகும். இத் திட்டம் 2019 ஆகஸ்ட் 1ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2024 டிசம்பர் 21 ஆம் திகதிக்குள் பூர்த்திசெய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இது ADB ஆல் நிதியளிக்கப்படுகிறது, மேலும் சோதனை நடவடிக்கைகள் மற்றும் செயற்படுத்தல் செயற்பாடுகள் 100% பூர்த்திசெய்யப்பட்டுள்ளன.

- மேலும், பியகமாவில் அமைந்துள்ள பியகம வரைப்பின்னல் உப மின்நிலையத்தில் (பொதி 7: தொகுதி A2) Static Var Systems (SVS) நிறுவுவதற்கான மொத்த மதிப்பீடுசெய்யப்பட்ட செலவினம் ரூ. 1,756.34 மில்லியன் ஆகும். இந்தத் திட்டம் , 2020 ஒக்டோபர் 7 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2024 மே 31ஆம் திகதிக்குள் பூர்த்திசெய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது, மேலும் இதற்கு ADB நிதியுதவியளித்ததுடன், 100% பூர்த்தியடைந்துள்ளது. மேலும், மேற்கு மாகாண தெற்கு 1 (பொதி 10) க்கான SCADA-பங்களிப்புடன் உயர் விநியோகக் கட்டுப்பாட்டு மையத்தை நிறுவுதல், இவற்றுக்கான மொத்த மதிப்பீடுசெய்யப்பட்ட செலவினம் ரூ. 2,003.208 மில்லியன் ஆகும். இத் திட்டம் 2023 செப்ரெம்பரில் ஆரம்பிக்கப்பட்டு 2025 மார்சில் பூர்த்திசெய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கு ADB நிதியுதவி அளிப்பதோடு, இதன் மொத்த பௌதீக முன்னேற்றம் 77% ஆக உள்ளது.

**v.** மின்சார அமைப்பின் நம்பகத்தன்மையை வலுப்படுத்தும் திட்டம் கட்டம் **II** பொதி 2 செயற்பாட்டு அலகு 2 **(PSRSP PII P2 OU2).**

- ஏக்கல கைத்தொழில் வலயத்தில் 2x45MVA, 132/33kV வலையமைப்பு உப மின்நிலையம் மற்றும் பிரதேச கட்டுப்பாட்டு மையத்தை நிர்மாணிப்பதற்கான நிலத்தை கையகப்படுத்துதல்

  - "முன்மொழியப்பட்ட நம்பகமான எரிசக்தி அதிகாரமளித்தல்" திட்டத்தின் கீழ் ஏக்கல கைத்தொழில் வலயத்தில் முன்மொழியப்பட்ட 132/33 ஆம் இலக்க வலையமைப்பு உப மின்நிலையத்தை நிர்மாணிப்பதற்கான நிலத்தை கையகப்படுத்துவது தொடர்பான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

**vi.** **பாரிய கொழும்பு மின் பரிமாற்றம் மற்றும் இழப்பை குறைப்பதற்கான திட்டம்**

இத் திட்டம் இரண்டு பிரதான திட்டங்களைக் கொண்டுள்ளது. முதலாவது திட்டத்தில் கெரவலப்பிட்டி உப மின்நிலையத்திலிருந்து கொழும்பு L வரையும் இரண்டாவது 220kV நிலத்தின் கீழ் கேபிளை நிர்மாணிப்பதும் அடங்கும். இதற்கான மொத்த மதிப்பீடுசெய்யப்பட்ட செலவினம் ரூ. 9,119 மில்லியன் ஆகும். இத் திட்டம் 2020 ஜனவரியில் ஆரம்பிக்கப்பட்டு 2026 செப்ரெம்பருக்குள் பூர்த்தியடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த திட்டத்திற்கான

நிதியை ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (AIIB) வழங்குகிறது. தற்போதைய நிலவரப்படி, அமைச்சரவை ஒப்புதல் பெறப்பட்டுள்ளது, பெறுகை செயற்பாடுகள் பூர்த்தியடைந்துள்ளது, மேலும் கேள்விமனு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன, அத்தடன் திட்டத்தின் 11.5% பூர்த்தியடைந்துள்ளது,

கொழும்பு நகர மின்மாற்ற வலையமைப்பு அபிவிருத்தி திட்டம் - கட்டம் 2 இற்கான செலவினம் ரூ. 30,295 மில்லியன் என மதிப்பீடு செய்ப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் ஆசிய அபிவிருத்தி வங்கியின; (ADB) நிதியுதவியுடன் 2022 ஜனவரியில் ஆரம்பிக்கப்பட்டு 2027 டிசம்பரில் பூர்த்தியடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது, இந்தத் திட்டம் ADB-யிடமிருந்து நிதி உறுதிப்பாட்டிற்காகக் காத்திருக்கிறது. இத் திட்டத்தின் மூலம் கொழும்பு G (கிருலப்பனை) 220/132kV வலையமைப்பு உப மின்நிலையம், கொழும்பு K (வெள்ளவத்தை) 132/11kV வலையமைப்பு உப மின்நிலையம், கொழும்பு P (நாரஹேன்பிட்ட) 132/11kV வலையமைப்பு உப மின்நிலையம் மற்றும் கொழும்பு Q (மருத்துவமனை சதுக்கம்) 132/11kV வலையமைப்பு உப மின்நிலையம் ஆகியவற்றின் நிர்மாணப்பணிகளை முன்னெடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. மேலும், தற்போதுள்ள வலையமைப்பு உப மின்நிலையங்களில் தேவையான விரிவாக்கங்கள் செய்யப்படும், மேலும் புதிய வலையமைப்பு உப மின்நிலையங்களுக்கு உறுதுணையாக 220kV மற்றும் 132kV பரிமாற்றல் கேபிள் வலையமைப்பு நிர்மாணிக்கப்படும்.

### vii.தேசிய மின்பரிமாற்றம் மற்றும் விநியோக வலையமைப்பு அபிவிருத்தி (NTDND & EIP)

**பொதி 01** கம்பஹா, கொழும்பு மற்றும் குருநாகல் பகுதிகளில் (400 kV, 220 kV, மற்றும் 132 kV) மின்பரிமாற்றல் இணைப்புகளை நிர்மாணிப்பதை உள்ளடக்கியுள்ளது. இதற்கான மொத்த மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் ரூ. 14,623 மில்லியன் ஆவதோடு, இத் திட்டம் 2020 ஜனவரியில் ஆரம்பிக்கப்பட்டு 2025 டிசம்பரில் பூர்த்தியடையும். இத் திட்டத்திற்கு JICA மற்றும் இலங்கை அரசாங்கத்தால் (GoSL) நிதியளிக்கப்படுகிறது. 132 kV கிரிந்திவெல-கொஸ்கம TL, 220/132 மற்றும் 132/33 FC TL, பியகம – கொத்மலை உள்ளக-வெளியக இணைப்புகள் மற்றும் பிற மின்பரிமாற்றல் இணைப்புக்கள் ஆகியவற்றின் முன்னேற்றத்துடன் இத் திட்டம் பௌதீக ரீதியாக 60% பூர்த்தியடைந்துள்ளது,

**பொதி 02** கம்பஹா, கொழும்பு, கண்டி மற்றும் கேகாலையில் மின்பரிமாற்றல் இணைப்புகளை (400 kV, 220 kV, மற்றும் 132 kV) நிர்மாணிப்பதில் கவனம் செலுத்துகிறது. இதற்கான மொத்த செலவினம் ரூ. 8,531 மில்லியன் ஆகும், இத் திட்டம் 2019 மார்சசில் ஆரம்பிக்கப்பட்டு 2025 டிசம்பரில் பூர்த்தியடையும். இது JICA மற்றும் GoSL ஆகியவற்றாலும் நிதியளிக்கப்படுகிறது. கிரிந்திவெல 220 SS, புதிய கிரிந்திவெல 132 kV GSS, கொத்மலை GSS இன் விரிவாக்கம் மற்றும் கொஸ்கம GSS இல் புதிய இணைப்புக்கள் ஆகியவற்றிற்கான செயற்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத் திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 71% ஆக உள்ளது.
**பொதி 03** அநுராதபுரம், மாத்தளை, கண்டி, கேகாலை மற்றும் நுவரேலியா ஆகிய இடங்களில் மின்பரிமாற்றல் இணைப்புகளை (220 kV, 132 kV) நிர்மாணிப்பதை உள்ளடக்கியதாகும். இதற்கான மொத்த செலவினம் ரூ. 11,253 மில்லியன் ஆகும், இத் திட்டம் 2019 ஆகஸ்ட்டில் ஆரம்பிக்கப்பட்டு 2026 டிசம்பரில் பூர்த்தியடையும். இதற்கு JICA மற்றும் GoSL நிதியளிக்கின்றன. இதற்கான கேள்விமனுவை மீள கோருவதற்கான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இத் திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 53% ஆக உள்ளது.

**பொதி 04** கொழும்பில் விநியோக கேபிள்கள் (33 மஏ, 11 மஏ, மற்றும் 0.4 மஏ) நிர்மாணிப்பதை உள்ளடக்கியதாகும். இதற்கான மொத்த செலவினம் ரூ.

7,183 மில்லியன் ஆகும், இத் திட்டம் 2020 செப்ரெம்பரில் ஆரம்பிக்கப்பட்டு 2026 டிசம்பரில் திட்டமிட்டதன் படி பூர்த்தியடையும். இதற்கு JICA மற்றும் GoSL நிதியளிக்கின்றன. இதற்கான கேள்விமனுவை மீள கோருவதற்கான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இத் திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 42% ஆக உள்ளது.

**viii. மின்சார அமைப்பை வலுப்படுத்துதல் மற்றும் மீள புதுப்பிக்கத்தக்க சக்தி ஒருங்கிணைப்பு திட்டம்**

இத் திட்டத்திற்கான கடன் உதவியாக ADB, USD 150 மில்லியனை ஒதுக்கியுள்ளது.

**பொதி 1A**, மீரிகம 220/33 kV GSS (2×63 MVA) மற்றும் பேலியகோடை 132/33 kV GSS (2×45 MVA) நிர்மாணப் பணிகள் உள்ளடங்கலாக, புதியூ ஹபரணை, வியாங்கொடை, களனி மற்றும் கொட்டுகொடை GSs களில் மாற்றங்களுடன், உட்புற GIS வலையமைப்பு உப மின்நிலையங்களை turn key அடிப்படையில் கொள்வனவு செய்வதை உள்ளடக்கியதாகும். இதற்கான மொத்த மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் ரூ. 16,408 மில்லியன் ஆகும், இத் திட்டத்தை 2025 செப்ரெம்பர் முதல் 2027 ஆகஸ்ட் வரை செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் இதற்கான TEC நியமிக்கப்பட்டுள்ளது.

**பொதி 1B**, ஹோமகம 132/33 kV GSS (2×45 MVA) மற்றும் நீர்கொழும்பு 132/33 kV GSS (2×63 MVA) நிர்மாணம், ஹொரணை, பாதுக்க, போலவத்த, புதிய சிலாபம் மற்றும் கட்டுநாயக்க GSs நிலையங்களில் மாற்றங்கள் உள்ளடங்கலாக, 132 kV வெளிப்புற AIS வலையமைப்பு உப மின்நிலையங்களை turn key அடிப்படையில் கொள்வனவு செய்வதை உள்ளடக்கியதாகும். இதற்கான மொத்த மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் ரூ. 10,021 மில்லியன் ஆகும், இத் திட்டத்தை 2025 செப்ரெம்பர் முதல் 2027 ஆகஸ்ட் வரை செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் இதற்கான TEC நியமிக்கப்பட்டுள்ளது.

**பொதி 2**, மேல்நிலை மின் இணைப்புகளை turn key அடிப்படையில் கொள்வனவுல் செய்வதை உள்ளடக்கியது, இதில் அம்பாந்தோட்டை-மாத்தறை 132 kV DC மின் இணைப்பு (78 கி.மீ), பல்வேறு உப மின்நிலையங்களுக்கான 132 kV SC LILOக்கள் மற்றும் மீரிகம GSSக்கான 220 kV DC LILO உள்ளடங்கலான பல இணைப்புகளின் நிர்மாண பணிகளும் உள்ளடங்கும். இதற்கான மொத்த மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் ரூ. 10,025 மில்லியன் ஆகும், இத் திட்டத்தை 2025 செப்ரெம்பர் முதல் 2027 ஆகஸ்ட் வரை செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் கேள்விமனு ஆவணம் ADB இன் ஒப்புதலுக்காக TEC ஆல் மதிப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

**பொதி 3**, 132 kV வலையமைப்பு உப மின்நிலையங்களை turn key அடிப்படையில் கொள்முதல் செய்வதில் கவனம் செலுத்துகிறது, இதில் பத்தேகம 132/33 kV GSS (2×45 MVA) மற்றும் கலவானா 132/33 kV GSS (2×31.5 MVA) நிர்மாணம் மற்றும் பலஉப மின்நிலையங்களின் விரிவாக்கம் ஆகியவை உள்ளடங்கும். இதற்கான மொத்த மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் ரூ. 10,060 மில்லியன் ஆகும், இத் திட்டத்தை 2025 டிசம்பர் முதல் 2027 நவம்பர் வரை செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

**பொதி 4**, களனி-கொட்டுகொடை DC மின் பரிமாற்றல் பாதையில் (2 கி.மீ) இருந்து பேலியகொட GSS வரை SC நிலகீழ் கேபிள் LILO நிர்மாணம் உள்ளடங்கலாக, 132 kV நிலகீழ் கேபிள் பரிமாற்றல் பாதைகளை turn key அடிப்படையில் கொள்வனவு செய்வதை உள்ளடக்கியது ஆகும். இதற்கான மொத்த மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் ரூ. 3,567 மில்லியன் ஆகும், இத் திட்டத்தை 2025 டிசம்பர் முதல் 2027 நவம்பர் வரை செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது

**பொதி 4A**, புதிய ஹபரணை-புதிய

அனுராதபுரம் 220 kV மின்சார பரிமாற்றக் பாதையின் நிர்மாணப் பணிகள் உள்ளடங்கலாக ADB இன் கடன்கள் 3483-SRI மற்றும் 3585-SRI இன் கீழ் "பரிமாற்றல் வலையமைப்பு தேவைகளுக்கான உதிரிபாகங்கள் மற்றும் கருவிகளுககான" பொருட்களை கொளவனவு செய்வதை இத் திட்டம் உள்ளடக்கியதாகும். இத் திட்டம் 2023 ஒக்டோபரில் ஆரம்பிப்பதுடன் இதற்கான மொத்த மதிப்பீட செய்யப்பட்ட செலவினம் ரூ. 2,140 மில்லியன் ஆகும். இதன் பௌதீக முன்னேற்றம் 97% ஆகும். புதிய ஹபரணை-புதிய அனுராதபுரம் 220 kV மின்பரிமாற்றக் கோபுரத்திற்கான நிர்மாணப் பணிகள், கோபுர நிர்மாணம் மற்றும் stringing பொருத்துதல் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன, இதற்கான மொத்த மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் ரூ. 1,695 மில்லியன் மற்றும் இத் திட்டத்தின் காலம் 2024 நவம்பர் முதல் 2026 மே வரையானதோடு, இதற்கு CEB நிதியீட்டம் அளிக்கின்றது. திட்டத்திற்கான பொருட்களான கோபுரங்கள், கடத்திகள், மின்கடத்திகள் மற்றும் வன்பொருள் பாகங்கள் ஆகியவை கொள்வனவு செய்யப்பட்டு தளத்திற்கு வழங்கப்படுகின்றன, தள தயாரிப்பு, வழி விடுப்பு மற்றும் IEE அனுமதிகள் நடந்து வருகின்றன. பாதை நிர்மாணப் பணிகளுக்கான கேள்விமனு 2024 ஆகஸ்ட் 21 ஆம் திகதி கோரப்பட்டுள்ளது.

### 1.4.4. கொள்கை தலையீடுகள்

**i. 2030 ஆம் ஆண்டுக்குள் நாட்டின் நிறுவப்பட்ட திறனில் 70% தத்தை மீள புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களிலிருந்து பெற்றுக்கொள்வதற்கான தேசியக் கொள்கையை செயற்படுத்துவதை விரைவுபடுத்துதல்**

மீள புதுப்பிக்கத்தக்க சக்தி திட்டங்களின் அபிவிருத்தியில் ஏற்படும் தாமதங்களைத் தடுக்கவும், அவற்றின் செயற்பாடுகளை விரைவுபடுத்தவும், மின்சாரத் தொழிற்துறையைப் பொறுத்தவரை அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட தேசிய கொள்கை இலக்கை அடைவதற்கு அவ் நிறுவனங்களுக்குத் தேவையான அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டுதல்களை வழங்க அமைச்சு நடவடிக்கைகள் எடுத்துள்ளது. மேலும், நிலையான மின்சார பெறுகை உடன்படிக்கைகளின் (SPPA) கீழ் செயற்படுத்தப்படும், 10 MW அல்லது அதற்கும் குறைவான திறன் கொண்ட ஒவ்வொரு மீள புதுப்பிக்கத்தக்க சக்தி திட்டத்தையும் மதிப்பீடு செய்வதற்கு மற்றும் வலையமைப்பு இணைப்பை வழங்குவதை நெறிப்படுத்துவதற்கான பொறிமுறையொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இவ் பொறிமுறை 2024.04.20 ஆம் திகதியில் இருந்து செயற்படும் வகையில் அமலுக்கு வருகிறது. இதற்காக, மீள புதுப்பிக்கத்தக்க சக்தி திட்ட முயற்சியாளர்கள், அவர்களின் செயற்திறனின் அடிப்படையில் தரப்படுத்த, இணைய அடிப்படையிலான சுய மதிப்பீட்டு முறையை இலங்கை மின்சார சபை செயற்படுத்தியுள்ளது.

**ii. நிலையான மின்சார பெறுகை உடன்படிக்கை (SPPA)**

1999 ஆம் ஆண்டு அரசாங்கம் எடுத்த தீர்மானத்தின் படி, நிலையான மின்சார பெறுகை உடன்படிக்கையின் (SPPA) கீழ் மீள புதுப்பிக்கத்தக்க சக்தி திட்டங்களை செயற்படுத்துவது 10 MW மின் உற்பத்தி நிலைய திறனுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கிணங்க, 1996 ஆம் ஆண்டு முதல் அமலுக்கு வந்த நிலையான மின்சார பெறுகை உடன்படிக்கை, 2024.03.11 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின் படி திருத்தப்பட்டுள்ளது. சட்டமா அதிபரிடமிருந்து அனுமதியை பெற்றதன் பின்னர், உடன்படிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள பிரிவுகள் மதிப்பாய்வு செய்யப்பட்டு, திட்ட முயற்சியாளர் மற்றும் மின்பரிமாற்றல் அனுமதிப்பத்திரதாரர் ஆகிய இருவருக்குமே உடன்படும் வகையில் திருத்தப்பட்டுள்ளது.

மேலும், திட்ட முதலீட்டாளர்களின் ஆர்வத்தை ஈர்ப்பதற்காகவும், திட்ட வங்கித்திறன் அம்சங்கள் குறித்த கடன் வழங்குநர்களின் மதிப்பீடுகள் விரைவாக மாற்றப்பட்டதாலும்,

தற்போதுள்ள நிலையான மின்சார பெறுகை உடன்படிக்கையில் சேர்க்கப்பட வேண்டிய திருத்தங்கள் குறித்து ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) சமர்ப்பித்த கருத்துகள் மற்றும் பரிந்துரைகள் மதிப்பாய்வு செய்யப்பட்டு, திருத்தங்கள் நிலையான மின்சார பெறுகை உடன்படிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன.

### iii. மீள புதுப்பிக்கத்தக்க சக்தி கட்டணங்களின் திருத்தம்

2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் பிரிவு 43(4) B இன் விதிமுறைகள் மற்றும் அதன் பின்னரான திருத்தங்களின்படி, 10 MW அல்லது அதற்கும் குறைவான திறன் கொண்ட மீள புதுப்பிக்கத்தக்க சக்தி திட்டங்கள் தொழில்நுட்பம் சார்ந்த, செலவு-பிரதிபலிப்பு ஊட்ட கட்டண (feed-in tariff) முறையின் அடிப்படையில் நிலையான மின்சார பெறுகை உடன்படிக்கையில் ஈடுபடுதல் வேண்டும். இதற்கிணங்க, தற்போதைய பொருளாதாரம் மீளெழுச்சி பெறுவதைக் கருத்தில் கொண்டு, 2022 ஆம் ஆண்டில் நாட்டில் நிலவிய பொருளாதார மந்தநிலையின் அடிப்படையில் மீள புதுப்பிக்கத்தக்க சக்தி முயற்சியாளர்களுக்கு வழங்கப்பட்ட மின்சார கொள்வனவு விலைகள், 2024.07.01 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் படி, நிபுணர் குழுவின் மதிப்பாய்வுக்குப் பின்னர் திருத்தப்பட்டுள்ளன.

மேலும், சந்தையில் நிலவும் பொருளாதார நிலைமையைக் கருத்தில் கொண்டு, கூரையின் மேல் பொருத்தப்படும் சூரிய மின்சக்தி அமைப்புகளால் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்கான நிலையான கட்டண தெரிவை அறிமுகப்படுத்துவதன் மூலம் தற்போதுள்ள கட்டணங்கள் திருத்தப்பட்டுள்ளன, மேலும் இவ் கட்டண திருத்தங்கள் 2024.07.01

மேலும், தவிர்க்கப்பட்ட செலவு என்ற கொள்கையின் அடிப்படையில், சிறிய நீர்மின் நிலையங்களை உருவாக்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட நிலையான மின்சார பெறுகை உடன்படிக்கைகளை காலாவதி திகதியிலிருந்து மேலும் 20 ஆண்டுகளுக்கு நீடிக்கும் கொள்கை தீர்மானத்திற்கு, 2018.08.28 ஆம் திகதி அமைச்சரவை அமைச்சர்களால் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. சிறிய நீர்மின் நிலையம், தேவையான நிறுவல்கள் மற்றும் பழுதுபார்ப்புகளுக்கு பின்னர் செயற்பாட்டுக்கு வந்ததன் பின்னர் 40 ஆண்டுகள் வரை இதனை செயற்படுத்த முடியும்

இவ் வரிசை தீர்மானங்களின் படி, 2011 முதல் 15 ஆண்டு காலத்தை நிறைவு செய்யும் நிலையான மின்சார பெறுகை உடன்படிக்கைகளைக் கொண்ட சிறிய நீர்மின் நிலையங்களுக்கு, 2024.03.04 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவை அமைச்சர்களின ஒப்புதலின் கீழ், மின் உற்பத்தி நிலைய காரணியின் அடிப்படையில் கட்டணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

### iv. மின்சார விலை திருத்தம்

2023.01.09 ஆம் திகதியிடப்பட்ட மற்றும் 2023.02.06 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின் படி, அரச கொள்கை வழிகாட்டுதல்களின் படி, செலவு-பிரதிபலிப்பு கட்டண முறையின் மூலம் அரை ஆண்டு அடிப்படையில் (ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 01 மற்றும் ஜூலை 01) மின்சார கட்டணங்களை மறுஆய்வு செய்வதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

மின்சார உற்பத்தியின் அதிகரித்த செலவினம் காரணமாக இலங்கை மின்சார சபையின் நிதியியல் நவீனத்துவத்தை உறுதி செய்வதற்காக தானியங்கி கட்டண தூண்டுதல் பொறிமுறையை செயற்படுத்தும் கட்டண முறையின் மிக முக்கியமான கருவியான மொத்த விநியோக பரிவர்த்தனை கணக்கு (BSTA) உள்ளடங்கலான கட்டண முறையை முழுமையாக செயற்படுதுவதற்கு அவசர கட்டண திருத்தத்தை மேற்கொள்ளுதல்.
உற்பத்தி, பரிமாற்றம் மற்றும் விநியோகச் செலவினங்களை கவனத்திலெடுத்து, கட்டணத் திருத்தக் காலத்தைத்

திருத்துவதற்கு சக்தியளிக்கும் வகையில், கட்டணத் திருத்தக் காலத்தை 6 மாதங்களிலிருந்து 3 மாதங்களாக (அரையாண்டு முதல் காலாண்டு வரை) அதாவது ஜனவரி, ஏப்ரல், ஜூலை மற்றும் ஒக்டோபர் மாதங்களில் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி, ஏப்ரல், ஜூலை மற்றும் ஒக்டோபர் மாதங்களில் 01 ஆம் திகதியில் கட்டணத் திருத்தத்தை மேற்கொள்ளுதல். கொள்கை வழிகாட்டுதல்களைத் திருத்துவதற்கு, 2023.10.30 ஆம் திகதி அமைச்சரவை அமைச்சர்களால் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. மேலும், காலாண்டு அடிப்படையில் மின்சாரக் கட்டணத்தை திருத்துவது தொடர்பாக அமைச்சு 2023.12.12 ஆம் திகதி பொதுமக்கள் ஆலோசனையை முன்னெடுத்துள்ளது.

இலங்கை மின்சார சபையால் சமர்ப்பிக்கப்பட்ட செலவுத் தரவுகளின் மதிப்பாய்வு மற்றும் பொதுமக்கள் ஆலோசனையின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட முன்மொழிவுகளைக் கவனத்திலெடுத்து, 2024.03.05 ஆம் திகதி முதல் மொத்த கட்டணத்தை 21.93% தத்தால் குறைப்பதற்கு இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு ஒப்புதல் அளித்துள்ளது. இது தொடர்பாக அமைச்சரவைக்குத் அறிவிப்பதற்காக, கௌரவ. மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் 2024.02.18 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவைக் குறிப்பை சமர்ப்பித்தார், மேலும் இது 2024.02.19 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

நீர் மின் உற்பத்தி அதிகரிப்பால் செலவினத்தில் ஏற்பட்ட குறைவு மற்றும் பராமரிப்பு மற்றும் புனருத்தாபன செயற்பாடுகள் காரணமாக ஏற்படும் செலவினக் குறைவு ஆகியவற்றின் பலனை மின்சார நுகர்வோருக்கு வழங்குவது தொடர்பான ஆய்வின் பின்னர் இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணையம் இவற்றை வழங்குவதற்கு முன்மொழிந்துள்ளது. இவ் விடயம் 2024.06.19 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, 2024 ஆம் ஆண்டிற்கான இரண்டாவது மின்சாரக் கட்டணத் திருத்தம் 2024.07.16 ஆம் திகதியிலிருந்து செயற்படும் வகையில் மின் கட்டணத்தைத் 22.5% மாக குறைந்துள்ளது.

## V. மின்சாரத் தொழிற்துறையின் நிறுவன ரீதியான சீர்திருத்தங்கள்

24/0692/621/037-II ஆம் இலக்கமிடப்பட்ட 2024.04.04 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தை பரிசீலித்த அமைச்சரவை, இலங்கை மின்சார சட்டத்தை அரசாங்க வர்த்தமானியில் வெளியிடவும், சட்டத்தை வர்த்தமானியில் வெளியிட்டதன் பின்னர் ஒப்புதலுக்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பப்பதற்கும் ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கிணங்க, இலங்கை மின்சார சட்டம் 2024.04.17 ஆம் திகதி அரசாங்க வர்த்தமானியில் உப விடயமாக (supplement) வெளியிடப்பட்டது, மேலும் 2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்கம் கொண்ட இலங்கை மின்சாரச் சட்டம் 2024.06.06 ஆம் திகதி பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டு, 2024 ஜூன் 27 ஆம் திகதி பாராளுமன்றச் சட்டமாக மாறியது. 24/1421/621/071 ஆம் இலக்கமிடப்பட்ட 2024.07.15 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தை பரிசீலித்த அமைச்சரவை, 2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் உப பிரிவு 3 (4) இன் படி தேசிய மின்சார ஆலோசனைக் குழுவை (NEAC) நியமப்பதற்கும், இலங்கை மின்சாரச் சட்டத்தின் உபபிரிவு 10 (1) (ஆ) இன் படி தேசிய அமைப்பு செயற்பாட்டாளருக்கு பணிப்பாளர் சபையை நியமப்பதற்கும் ஒப்புதல் அளித்துள்ளது. NEAC இன் தலைவர்/உறுப்பினர்கள் மற்றும் தேசிய அமைப்பு செயற்பாட்டாளருக்கு பணிப்பாளர் சபை 01.08.2024ஆம் திகதி நியமிக்கப்பட்டுள்ளது.

24/1421/621/071 ஆம் இலக்கமிடப்பட்ட 2024.07.22 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தை பரிசீலித்த அமைச்சரவை, 2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் விதிகளின்படி மின்சாரத் தொழிற்துறையில் முன்மொழியப்பட்ட சீர்திருத்தங்களை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்குத் தேவையான பூர்வாங்க பரிமாற்றத்

திட்டத்தைத் தயாரிப்பதில் அவசியமான ஒரு படியான, இலங்கை மின்சார சபையின் சொத்துக்களின் முதற்கட்ட மதிப்பீட்டை மதிப்பீட்டுத் திணைக்களம் பூர்த்தி செய்வதற்கான தேவையை பரிசீலிப்பதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

**vi. இலங்கை மின்சார சபையால் உரிமையாக்கப்பட்ட நிலங்களின் உரிமையை உறுதிப்படுத்துதல்**

“இலங்கை மின்சார சபையால் உரிமையாக்கப்பட்ட நிலங்களின் உரிமையை உறுதிப்படுத்துதல்” எனத் தலையங்கமிடப்பட்டு 2023.01.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மீது 23/0080/621/003 ஆம் இலக்கமிடப்பட்டு 2023.01.23 ஆம் திகதியிடப்பட்டு அமைச்சரவை அமைச்சர்களால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி, இரு அமைச்சுக்களின் செயலாளர்களையும், நிலத் துண்டுகளை இலங்கை மின்சார சபைக்கு (CEB) முறையாக மாற்றுவதற்கான வழிமுறைகள் தொடர்பான கூட்டு அமைச்சரவை விஞ்ஞாபனத்தை சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதற்கிணங்க, 2024.05.28 ஆம் திகதி கௌரவ. மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் மற்றும் கௌரவ. சுற்றுலா மற்றும் காணி அமைச்சர் ஆகியோரால் சமர்ப்பிக்கப்பட்ட கூட்டு அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மீது, 24/1050/621/052 ஆம் இலக்கமிடப்பட்டு 2024.06.11 ஆம் திகதியிடப்பட்டு அமைச்சரவை அமைச்சர்களால் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதில் குறிப்பிடப்பட்டுள்ளதன் படி, நிலங்களின் உரிமையை மாற்றுவதற்கு ஒரு பொருத்தமான வழிமுறை உருவாக்கப்பட்டு, மீண்டும் ஒரு கூட்டு அமைச்சரவை விஞ்ஞாபனம் இவ் விடயம் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### 1.4.5. 2024 ஆம் ஆண்டில் அமைச்சின் ஏனைய சாதனைகள்

**i.** இந்திய - இலங்கை மின்சார கட்டமைப்புகளின் இணைப்பை செயற்படுத்துவதற்கான சட்டப்பூர்வ ஒழுங்குபடுத்தல் இணக்கம் மற்றும் அனுமதிகளை ஏற்பாடு செய்வதற்காக, இந்திய Power Grid Cooperation of India Limited மற்றும் இலங்கை மின்சார சபைக்கு இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு செயற்படுத்துவதற்கு, சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் பிற தொடர்புடைய அரசு நிறுவனங்களிடமிருந்து ஒப்புதல் மற்றும் ஒப்புதலைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதன் பின்னர், இதற்கான அமைச்சரவை ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

ii. 2024 ஆம் ஆண்டில் (மேற்கூறிய காலகட்டத்தில்) வெளிநாட்டு அமைச்சின் அறிவுறுத்தல்களின் படி, வங்காள விரிகுடா பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான முன்முயற்சி (BIMSTEC) மேற்கொண்ட திட்டங்களின் கீழ் இலங்கையின் உறுப்பினர் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

iii. வெளிநாட்டு அமைச்சின் அறிவுறுத்தல்களின் படி, மின்சக்தி மற்றும் வலுசக்தி தொழிற்துறையில் தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு சங்கம் (SAARC) முன்னெடுக்கும் விவகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கூட்டங்களில் பங்கேற்கவும், ஒப்புதல் தெரிவிக்கவும் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், குறிப்பாக SAARC எரிசக்தி மையத்துடன் இலங்கையின் உறுப்புரிமை தொடர்பான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

iv. மின்சக்தி தொழிற்துறையின் தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகளைக் கண்காணித்தல்-

மின்சாரம் (மின்சக்தி) தொழிற்துறைக்கான NDC செயற்படுத்தல் திட்டத்தில் 5 பிரதான பகுதிகள் உள்ளன. அவையாவன;

- சூரிய சக்தி, காற்றாலை, நீர் மின் உற்பத்தி மற்றும் நிலையான உயிரியல் எரிசக்தி அடிப்படையிலான மின்சார உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் தேசிய மின்சார உற்பத்தி கலவையில் மீள புதுப்பிக்கத்தக்க சக்தி பங்களிப்பை மேம்படுத்துதல் (இலக்கு: வணிக, வழக்கமான சூழ்நிலையில் கருதப்படும் மீள புதுப்பிக்கத்தக்க சக்தி திறனுக்கு மேல் 3,867 MW மீள புதுப்பிக்கத்தக்க சக்தியில் மேலதிக திறனை உருவாக்குதல், இதில் அண்ணளவாக 950 MW நிபந்தனையற்ற அடிப்படையிலும் 2,917 MW நிபந்தனைக்குட்பட்ட அடிப்படையிலும் உள்ளன) - 2024.11.30 ஆம் திகதிக்குள் காற்றாலை மின் உற்பத்தி நிலையங்களின் மொத்த திறன் 267 மெகாவாட், கூரை மற்றும் தரையில் பொருத்தப்பட்ட சூரிய சக்தி 1,460 மெகாவாட், நிலையான உயிரியல் எரிபொருள் வளங்கள் மூலம் 59 மெகாவாட் மற்றும் பெரிய நீர் மின் மற்றும் மினி நீர் மின் நிலையங்களுக்கு முறையே 1535 மெகாவாட், 430 மெகாவாட் ஆகும்.

- தேசிய சக்தி செயற்திறன் மேம்பாடு மற்றும் பாதுகாப்பு (EEI&C) திட்டத்தில் சக்தி வள செயற்திறன் கொண்ட உபகரணங்கள், தொழில்நுட்பங்கள் மற்றும் அமைப்புக்களின் மேம்பாடுகளை ஊக்குவிப்பதன் மூலம் கேள்வி பக்க முகாமைத்துவ (DSM) நடவடிக்கைகளை செயற்படுத்துதல்- 250 குளிர்சாதன பெட்டிகள் சோதனை செய்யப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டு வருகின்றன, CFLs, கூரை காற்றாடிகள் (celing fans) மற்றும் LED விளக்குகளுக்கான கட்டாய லேபிளிங் திட்டங்கள் செயற்பாட்டில் உள்ளன மற்றும் நீர் பம்பிகளுக்கான தரப்படுத்தல் ஜா-எலவில் உள்ள தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தில் நடத்தப்படுகின்றன.

- தற்போதுள்ள எரிபொருள் எண்ணெய் அடிப்படையிலான ஒருங்கிணைந்த சுழற்சி மின் உற்பத்தி நிலையங்களை இயற்கை வாயுவாக (NG) மாற்றுதல் மற்றும் நிபந்தனை நடவடிக்கைகளாக புதிய NG மின்சார நிலையங்களை நிறுவுதல் (தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் கிடைத்தவுடன்) - 350 மெகாவாட் சோபாதனவி ஒருங்கிணைந்த சுழற்சி மின் நிலையத்தில் 235 மெகாவாட் GT மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது, எனினும் தற்போது 115 மெகாவாட் ST மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

- நிபந்தனையற்ற நடவடிக்கைகளாக (இலக்கு - 2021 - 2030 க்கு இடையில் அண்ணளவாக 1,848 GWh சக்தி சேமிப்பு) பரிமாற்றல் மற்றும் விநியோக வலையமைப்பு செயற்திறன் மேம்பாடுகள் (2030 ஆம் ஆண்டளவில் BAU உடன் ஒப்பிடும்போது 0.5% இழப்பு குறைவடைந்துள்ளது) – செயற்பாட்டில் உள்ளது.

- வணிக முதிர்ச்சியை எட்டாத NCRE மூலங்களுக்கான முன்னோடி அளவிலான திட்டங்களை செயற்படுத்துவதற்கு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வது மற்றும் நிபந்தனை நடவடிக்கைகளாக பிற வலையமைப்பை இணைக்கும் உட்கட்டமைப்புகளை உருவாக்குதல் - பம்பிகளின் சாத்தியக்கூறு ஆய்வு கட்டம் 1 மற்றும் கட்டம் 2 மற்றும் முதல் 100 மெகாவாட்/ 100 MWħ வலையமைப்பு அளவிலான உலர்மின்கல சக்தி சேமிப்பு முறை திட்டத்திற்கு இந்த நேரத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- மேலே கூறப்பட்டுள்ள 5 நடவடிக்கைகளும், SLSEA மற்றும் CEB ஆல் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளின் தொகுப்பையும், அமைச்சினால் முன்னெடுக்கப்படும் தொடர்ச்சியான கண்காணிப்பையும் உள்ளடக்கியதாக உள்ளது.

### 1.4.6. 2025 ஆம் ஆண்டின் எதிர்காலத் திட்டங்கள்

**I. இலங்கை மின்சார சபையின் (CEB) கெரெவலப்பிட்டி GSS முதல் கொழும்பு துறைமுக GSS வரை 220kV இரண்டாவது நிலகீழ் மின்பரிமாற்றல் கேபிள் நிர்மாணப் பணிகளுக்கு ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (AIIB) நிதியுதவியளிக்கின்றது**

கெரவலப்பிட்டி வலையமைப்பு உப மின்நிலையத்திலிருந்து கொழும்பு துறைமுக வலையமைப்பு உப மின்நிலையம் வரை 220kV இரண்டாவது நிலகீழ் மின்பரிமாற்றல் அமைப்பை நிர்மாணிப்பதற்காக, AIIB யிடமிருந்து இலங்கை மின்சார சபைக்கு (CEB) USD 52 மில்லியன் கடனைப் பெறுவதற்கான அமைச்சரவைப் விஞ்ஞாபனம் 2021.08.31 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுடன் இதற்கான அமைச்சரவை ஒப்புதல் 2021.09.13 ஆம் திகதி வழங்கப்பட்டது.

எவ்வாறாயினும், நாட்டில் நிலவும் பொருளாதார சூழ்நிலை காரணமாக, 2021.09.13 ஆம் திகதி அமைச்சரவையால் முதலில் திட்டமிடப்பட்டு அங்கீகரிக்கப்பட்டதன் படி, CEB-க்கு கடன் வழங்குவதற்காக, AIIB-ஆல் முன்மொழியப்பட்ட கடனை GOSL மற்றும் GOSL-க்கு வழங்க முன்மொழியப்பட்டுள்ளது. ERD வழங்கிய அறிவுறுத்தல்களின் படி, AIIB-யிடமிருந்து GOSL-க்கு கடனைப் பெறுவதற்கும் CEB-க்கு கடன் வழங்குவதற்கும் 2024.11.20 ஆம் திகதி அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டது.

**II. ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியிடமிருந்து (AIIB) இறையாண்மை ஆதரவுடன் கூடிய நிதியுதவியுடன் புதிய ஹபரணை கப்பல்துறை 220 kV மின்மாற்றக் பாதையை செயற்படுத்தல். துய சக்தியை பெற்றுக்கொள்வதற்கான மின்பரிமாற்றல் திட்டம் - I (CEATP - I)**

முன்மொழியப்பட்ட 120 MW சம்பூர் சூரிய மின் நிலையத்தின் வணிக செயல்பாடுகளைத் ஆரம்பிப்பதற்கு இணையாக, புதிய ஹபரணாவில் இருந்து கப்பல்துறை வரை 220kV மின்பரிமாற்றல் பாதையை அமைப்பதற்கு இத் திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. புதிய ஹபரானை கப்பல்துறை மின்பரிமாற்றல் பாதை திட்டத்தை செயற்படுத்துவதற்கு சர்வதேச போட்டி கேள்விமனு நடைமுறையைப் பின்பற்றி EPC ஒப்பந்தக்காரரைத் தேர்ந்தெடுப்பதற்கும், பெறுகையை நிர்வகிப்பதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு (TEC) மற்றும் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழுவை (CAPC) நியமிப்பதற்கும் 2024.07.29 ஆம் திகதி அமைச்சரவை அமைச்சர்கள் ஒப்புதல் அளித்துள்ளனர்.

**III. ஆசிய அபிவிருத்தி வங்கியால் (ADB) நிதியளிக்கப்பட்ட "மின்சார அமைப்பு நம்பகத்தன்மையை வலுப்படுத்தும் திட்டத்தின்" கீழ் மின்சார பரிமாற்ற வலையமைப்பை வலுப்படுத்துதல் மற்றும் நவீனமயப்படுத்தல்**

இலங்கை மின்சார சபையால் (CEB) பராமரிக்கப்படும் தேசிய மின்சார பரிமாற்ற வலையமைப்பையும், மீள புதுப்பிக்கத்தக்க சக்தி ஒருங்கிணைப்பிற்காக Lanka Electricity Company (LECO) நிறுவனத்தால் பராமரிக்கப்படும் விநியோக வலையமைப்பையும் வலுப்படுத்துவதற்கும் நவீனமயமாக்குவதற்கும் பல மின்சார பரிமாற்ற மற்றும் விநியோக அபிவிருத்தி திட்டங்களை செயற்படுத்துவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) USD 200 மில்லியன் கடன் வசதியை வழங்குவதற்கான ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

இதற்கிணங்க, ஆசிய அபிவிருத்தி வங்கியின் பொது மூலதன வளங்களிலிருந்து (பொது) USD 150 மில்லியன் கடனை CEBக்கும், இலங்கை மின்சார கம்பனிக்கு USD 50 மில்லியன் கடனையும் வழங்கும்.

**IV. ஆசிய அபிவிருத்தி வங்கியால் சிறு செலவின நிதி வசதிகள் (SEFF) மூலம் நிதியளிக்கப்படும் பெரிய அளவிலான திட்டங்களுக்கு ஆதரவு அளித்தல் மற்றும் அவற்றை பூர்த்திசெய்தல்.**

ADB ஆல் நிதியளிக்கப்படும் பாரியளவிவான திட்டங்களுக்கு ஆதரவளிக்கும் வகையில், தொடர்ச்சியான சிறிய மதிப்பு செயற்பாடுகளுக்கான நிதியினை வழங்குவதற்கு SEFF எதிர்பார்க்கிறது. முன்மொழியப்பட்ட நிதி வசதியின் நோக்கம் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவையாவன,

**செயற்பாடு** 1: இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியின் பின்னணியில், மொரகொல்ல நீர்மினசாரத் திட்டத்தை (USD 15 மில்லியன்) மையமாகக் கொண்ட, ADB-ஆல் நிதியளிக்கப்பட்ட திட்டங்களின் நிலையான தன்மையைப் பாதுகாப்பதற்கான அவசர திட்ட பூர்த்திக்கு பின்னரான நடவடிக்கைகள்.

**செயற்பாடு** 2: நாட்டின் மீள புதுப்பிக்கத்தக்க சக்தி செயற்பாட்டை பூர்த்தி செய்யும் திட்டங்கள் - குழாய் திட்டங்களுக்கான பரிமாற்றல் மற்றும் விநியோக உட்கட்டமைப்பை உருவாக்குவதற்கான திட்ட ஆயத்த ஆதரவு, மீள புதுப்பிக்கத்தக்க சக்தி ஒருங்கிணைப்பை எளிதாக்கும் வகையில் கட்டம்-இணைக்கப்பட்ட எரிசக்தி சேமிப்பு, டிஜிட்டல் தீர்வுகள் மற்றும் மீள புதுப்பிக்கத்தக்க சக்தி முன்னறிவிப்பு போன்ற புதிய தொழில்நுட்பங்களை நிரூபிப்பதற்கான முன்னோடி திட்டங்கள், நீர் உப்புநீக்கும் ஆலைகளை ஆதரிக்க சூரிய சக்தி மின்னழுத்த அமைப்புகள் போன்ற குறுக்குவெட்டு தலையீடுகள் குறித்த முன்னோடி திட்டங்கள், செயல்பாடு மற்றும் பராமரிப்பு (O&M), மற்றும் சொத்து முகாமைத்துவம் ஆகியவற்றில் பூர்த்திசெய்யப்பட்ட ADB திட்டங்களுக்கான திறன் அபிவிருத்தி மற்றும் துணை ஆதரவு, மற்றும் பிரதானமான தேவைகளைப் பூர்த்தி செய்யும் வசதிகளை மேம்படுத்தல் (USD 15 மில்லியன்).

ஆசிய அபிவிருத்தி வங்கியின் சாதாரண மூலதன வளங்களிலிருந்து (வழக்கமான) சிறு செலவு நிதி வசதியின் கீழ் இரண்டு தவணைகளில் திறைசேரியின் உத்தரவாதங்களின் கீழ் நேரடியாக USD 30 மில்லியன் கடனைப் பெற்றுக்கொள்வதற்கு இலங்கை மின்சார சபைக்கு அதிகாரம் அளிப்பதற்கு தீர்மானம் செய்யப்பட்டது.

## 1.5 2024 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வலுசக்தி பிரிவின் செயற்பாடுகள்

மக்களின் தேவைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதனால். அத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பெற்றோலியம் பிரதான பங்கு வகிப்பதால், நாட்டின் பெற்றோலியத் தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் நுகர்வோர் உள்ளடங்கலான பங்குதாரர்களுக்கு செயற்திறன்மிக்க சேவையை வழங்கும் நோக்கில் தேவையான கொள்கை வழிகாட்டுதலை இவ் அமைச்சு வழங்கியுள்ளது. இவ் அத்தியாயம், 2024 ஆம் ஆண்டில் இலங்கையில் எரிபொருள் விலையில் உலகளாவிய எரிபொருள் விலை போக்குகளின் தாக்கம், உள்நாட்டு எரிபொருள் தேவையைப் பூர்த்தி செய்வதில் அளிக்கப்பட்ட பங்களிப்பு, பெற்றோலியத் தொழிற்துறையை ஒழுங்குபடுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் பெற்றோலியத் தொழிற்துறையில் உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்வதற்காக அமைச்சால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் 2025 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட வேண்டிய திட்டங்கள் தொடர்பான தகவல்களை வழங்குகிறது.

### 1.5.1 2024 ஆம் அண்டின் வலுசக்திப் (பெற்றோலியம்) பிரிவு ஒரு பார்வை

| | |
|---|---|
| மொத்த இறக்குமதிசெய்யப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய பொருட்கள் | - 3,229,095 மெ.தொ |
| மொத்த இறக்குமதிசெய்யப்பட்ட மசகு எண்ணெய் | - 1,518,726 மெ.தொ |
| சப்புகஸ்கந்தை சுத்திகரிப்பு | - 1,445,529 மெ.தொ |

நிலையத்தின் உற்பத்தி

| | |
|---|---|
| இறக்குமதிசெய்யப்பட்ட பெற்றோலிய பொருட்களின் மொத்த செலவினம் | - USD 3,265,151 மில்லியன் |
| பெற்றோலிய பொருட்களின் மொத்த விற்பனை | - 4,470,060 மெ.தொ |
| செயற்பாட்டு நிலையிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களின் எண்ணிக்கை | - 1,434 |
| இ.பெ.க.மு த்தின் பெற்றோலிய களஞ்சியத் திறன் | - 440,147 மெ.தொ |

### 1.5.2 உலகளாவிய பெற்றோலியப் போக்குகள் இலங்கையின் எரிபொருள் விலையில் ஏற்படுத்தும் தாக்கம்

### i. சர்வதேச பெற்றோலிய விலைகளின் போக்குகள்

சர்வதேச எரிபொருள் விலைகள் உள்நாட்டு எரிபொருள் விலைகளில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. 2024 ஆம் ஆண்டில், ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் மசகு எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள் விலைகளில் பின்வரும் போக்குகள் காணப்பட்டன.

அட்டவணை 1.3
மசகு எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பொருட்கள் தொடர்பாக ஆசிய-பசிபிக் பிராந்தியத்தல் வெளியிடப்பட்ட விலைகள் – 2024

| மாதம் | பரல் ஒன்றிற்கான விலை (USD) | | | | |
|---|---|---|---|---|---|
| | பெற்றோல் 92 ஒக்டேன் | பெற்றோல் 95 ஒக்டேன | சுப்பர் டீசல் | ஓடோ டீசல் | மசகு எண்ணெய் |
| ஜனவரி | 91.195 | 95.978 | 102.832 | 101.162 | 83.32 |
| பெப்ரவரி | 95.591 | 100.161 | 106.523 | 104.983 | 77.68 |
| மார்ச் | 97.142 | 101.440 | 103.859 | 102.875 | 79.06 |
| ஏப்ரல் | 102.126 | 106.472 | 104.705 | 103.522 | 80.99 |
| மே | 91.130 | 95.498 | 97.318 | 95.753 | 84.52 |
| யூன் | 87.935 | 93.078 | 98.085 | 97.642 | 89.14 |
| யூலை | 92.134 | 96.541 | 99.303 | 98.994 | 83.93 |
| ஆகஸ்ட் | 84.702 | 88.938 | 92.214 | 90.692 | 82.52 |
| செப்ரெம்பர் | 78.448 | 82.858 | 84.329 | 83.358 | 83.80 |
| ஒக்ரோபர் | 79.755 | 85.932 | 87.915 | 87.426 | 77.94 |
| நவம்பர் | 79.088 | 84.509 | 89.230 | 89.098 | 73.41 |
| டிசம்பர் | 81.352 | 84.640 | 88.473 | 88.905 | 74.87 |

மூலம் : *S&P global commodity insights*

## ii. 2024 ஆம் ஆண்டில் சிங்கப்பூர் பிளாட் விலைகளைக் கவனத்தில் எடுத்து,

- யூன் மாதத்தில் பரல் ஒன்றிற்கான மசகு எண்ணெயின் அதிகபட்ச விலை ருளுனு 89.14 ஆகவும், நவம்பரில் குறைந்தபட்ச விலை USD 73.41 ஆகவும் பதிவாகியுள்ளது. அதே நேரத்தில் பரல் ஒன்றிற்கான மசகு எண்ணெயின் பொதுவான விலை USD 80.93 ஆக அடையாளம் காணப்பட்டுள்ளது.
- ஏப்ரல் மாதத்தில் ஒரு பெற்றோல் ஒக்டேன் 92 பரல் ஒன்றிற்கான அதிகபட்ச விலை USD 102.23 ஆகவும், குறைந்தபட்ச விலை செப்ரெம்பரில் ருளுனு 78.45 ஆகவும் பதிவாகியுள்ளது. அதே நேரத்தில், பெற்றோல் ஒக்டேன் 92 பரல் ஒன்றிற்கான பொதுவான விலை USD 88.38 ஆக அடையாளம் காணப்பட்டுள்ளது.
- ஏப்ரல் மாதத்தில் பெற்றோல் ஒக்டேன் 95 பரல் ஒன்றிற்கான அதிகபட்ச விலை USD 106.47 ஆகவும், குறைந்தபட்ச விலை செப்ரெம்பரில் USD 8 ஆகவும் பதிவாகியுள்ள அதேநேரத்தில், பெற்றோல் ஒக்டேன் 95 பரல் ஒன்றிற்கான பொதுவான விலை USD 93 ஆகவும் பதிவாகியுள்ளது.
- பெப்ரவரி மாதத்தில் ஓட்டோ டீசல் பரல் ஒன்றிற்கான அதிகபட்ச விலை USD 106.52 ஆகவும், குறைந்தபட்ச விலை செபரெம்பரில் ருளுனு 84.33 ஆகவும் பதிவாகியுள்ளது. அதேநேரத்தில், ஓட்டோ டீசல பரல் ஒன்றிற்கான பொதுவான விலை USD 96.23 ஆக அடையாளம் காணப்பட்டுள்ளது.
- பெப்ரவரி மாதத்தில் சுப்பர் டீசல் பரல் ஒன்றிற்கான அதிகபட்ச விலை USD 104.98 ஆகவும், குறைந்தபட்ச விலை செப்ரெம்பரில் USD 83.36 ஆகவும் பதிவாகியுள்ளது. அதே நேரத்தில் சுப்பர் டீசல் பரல் ஒன்றிற்கான பொதுவான விலை USD 95.36 ஆக அடையாளம் காணப்பட்டுள்ளது.

**இலங்கையில் எரிபொருள் விலையில் உலகளாவிய விலைகளின் தாக்கம்**

இலங்கை முழுமையாக இறக்குமதி செய்யப்படும் பெற்றோலியப் பொருட்களைச் சார்ந்து இருப்பதால், சர்வதேச எரிபொருள் விலைகள் உள்நாட்டு எரிபொருள் விலைகளில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. பெற்றோல் ஒக்டேன் 92 மற்றும் ஓட்டோ டீசல் ஆகியவற்றின் நாளாந்த விற்பனை அதிகமாக காணப்படுவதால், உலகளாவிய எரிபொருள் விலையில் ஏற்படும் ஏற்ற இறக்கங்கள் உள்நாட்டு எரிபொருள் விலைகளில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. எவ்வாறாயினும், பெற்றோல் ஒக்டேன் 95 மற்றும் சுப்பர் டீசலின் நாளாந்த விற்பனை மிகக் குறைவாக காணப்படுவதால், சர்வதேச விலையில் ஏற்படும் மாற்றம் உள்நாட்டு விலையையில் எதுவித தாக்கத்தையும் ஏற்படுத்தாது. 2024 ஆம் ஆண்டில், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருளை இறக்குமதி செய்வதில் செலுத்திய சராசரி மாதாந்த தரையிறக்கும் செலவைக் (டயனெநன உழளவ) கணக்கில் எடுத்துக் கொண்டால், பெற்றோல் 92 ஒக்டேனின் அதிகபட்ச தரையிறக்கும் செலவு ஏப்ரல் மாதத்தில் பரல் ஒன்றிற்கு ருளுனு 108.34 ஆகவும், குறைந்தபட்ச தரையிறக்கும் செலவு செப்ரெம்பரில் ருளுனு 83.66 ஆகவும் பதிவாகியுள்ளது. மேலும், மார்ச் மாதத்தில் ஓட்டோ டீசலுக்கான அதிகபட்ச தரையிறக்கும செலவு பரல் ஒன்றிற்கு ருளுனு 109.51 ஆகவும், செப்ரெம்பரில் ஓட்டோ டீசலுக்கான குறைந்தபட்ச தரையிறக்கும் செலவு ருளுனு 86.82 ஆகவும் பதிவு செய்யப்படடுள்ளது.

**2024 ஆம் ஆண்டில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் இறக்கமதி செய்யப்பட்ட எரிபொருளுக்கானமாதாந்த சராசரி தரையிறக்கும் செலவினம்**

அட்டவணை 1.4
2024 ஆம் ஆண்டிற்கான எரிபொருள் இறக்குமதிக்கான சராசரி மாதாந்த செலவினம் (இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்)

| மாதம் | எரிபொருள் இறக்குமதிக்கான பரல் ஒன்றிற்கான சராசரி செலவினம் (USD) | |
|---|---|---|
| | பெற்றோல் 92 ஒக்டேன் | லங்கா ஓடோ டீசல் |
| ஜனவரி | 94.73 | 106.95 |
| பெப்ரவரி | 100.28 | 106.95 |
| மார்ச் | 105.44 | 109.51 |
| ஏப்ரல் | 108.34 | 109.32 |
| மே | 102.29 | 101.34 |
| யூன் | 93.17 | 103.23 |
| யூலை | - | - |
| ஆகஸ்ட் | 89.93 | 94.99 |
| செப்ரெம்பர் | 83.66 | 86.82 |
| ஒக்ரோபர் | 84.97 | 86.82 |
| நவம்பர் | 84.30 | 91.85 |
| டிசம்பர் | 87.27 | 92.30 |

மூலம்: இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

### 1.5.3 2024 ஆம் ஆண்டில் உள்நாட்டு பெற்றோலிய விநியோகத்திற்கான பங்களிப்பு

#### i. பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதி மற்றும் விற்பனைகள்

பொருளாதார நெருக்கடிகளுக்கு பின்னர் பொருளாதார செயற்பாடுகள் மீளெழுச்சி பெறத் தொடங்கியதிலிருந்து, அந்நியச் செலாவணி நெருக்கடிகள் சற்று தளர்வடைந்ததனால், 2024 ஆம் ஆண்டில் பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதிகள் முனபு போல் இடம்பெறத் தொடங்கியுள்ளது. இதற்கிணங்க, 2024 ஆம் ஆண்டில் உள்நாட்டு பெற்றோலியத் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உள்ளடங்கலாக ஐந்து (05) பிரதான வழங்குனர்களால் 4,747,821 மெற்றிக் தொன் மசகு எண்ணெய் உள்ளடங்கலாக 08 பெற்றோலியப் பொருட்கள் USD 3,265.151 மில்லியன் செலவின் இறக்குமதி செய்யப்பட்டதோடு இதற்காக பெருந்தொகை பணம் செலவிடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

அட்டவணை 1.5
இறக்குமதி செய்யப்பட்ட பெற்றோலியப் பொருட்கள் – 2024

| உற்பத்திகள் | CPC | | LIOC | | SINOPEC | | R.M.PARKS | | UNITED PETROLEUM | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகை (மெ.தொ) | இறக்குமதி செலவினம் (USD/ மில்லின்) | தொகை (மெ.தொ) | இறக்குமதி செலவினம் (USD/ மில்லின்) | தொகை (மெ. தொ) | இறக்குமதி செலவினம் (USD/ மில்லின்) | தொகை (மெ. தொ) | இறக்குமதி செலவினம் (USD/ மில்லின்) | தொகை (மெ. தொ) | இறக்குமதி செலவினம் (USD/ மில்லின்) |
| மசகு எண்ணெய் | 1,518,726 | 982.729 | - | - | - | - | - | - | - | - |
| லங்கா ஓடோ டீசல் | 547,378 | 381.099 | 286,197 | 213.325 | 151,884 | 114.96 | 104,270 | 75.577 | 15,137 | 11.334 |
| லங்கா சுப்பர் டீசல் | 26,945 | 19.805 | 11,140 | 8.366 | 6,067 | 4.75 | 6,283 | 4.839 | 2,958 | 2.227 |
| பெற்றோல் 92 ஒக்டேன் | 585,708 | 470.652 | 269,701 | 216.917 | 149,277 | 124.484 | 100,070 | 77.981 | 15,059 | 12.322 |
| பெற்றோல் 95 ஒக்டேன் | 19,540 | 16.706 | 12,570 | 10.538 | 5,133 | 4.311 | 5,926 | 5.136 | 2,937 | 2.518 |
| ஜெட் A 1 | 315,811 | 245.417 | - | - | - | - | - | - | - | - |
| குறை சல்பர் உலை எண்ணெய் (180 CST) | 35,468 | 21.293 | 332,900 | 211.892 | 186,199 | - | - | - | - | - |
| கப்பல்களுக்கான எரிபொருள் | - | - | 34,537 | 25.973 | - | - | - | - | - | - |
| மொத்தம் | **3,049,576** | **2,137.701** | **947,045** | **687.011** | **498,560** | **248.505** | **216,549** | **163.533** | **36,091** | **28.401** |

மூலம்: *CPC, LIOC, SINOPEC, R.M.PARK, UNITED PETROLEUM*

## ii. பெற்றோலியப் பொருட்களின் விற்பனைகள்

போக்குவரத்து, மின்சாரம், கைத்தொழில், விவசாயம், மீன்பிடி போன்ற தேசிய பொருளாதாரத்தின் அனைத்துத் தொழிற்துறைகளின் செயற்பாடுகளும் பெற்றோலியப் பொருட்களின் விநியோகத்தைச் சார்ந்து இருப்பதால், அத் தொழிற்துறைகளின் சீரான செயற்பாட்டின் தேவைக்கு ஏற்ற எரிபொருள் விநியோகத்தைப் பராமரிப்பது அவசியமானதாகும். இதற்கிணங்க, 2024 ஆம் ஆண்டில் பெற்றோலியப் பொருட்களின் விற்பனையில் ஒவ்வொரு எரிபொருள் வழங்குனரின் பங்களிப்பையும் பின்வரும் அட்டவணை காட்டுகிறது. 2024 ஆம் ஆண்டில் மொத்த பெற்றோலிய பொருட்களின் விற்பனை 4,470,063 மெற்றிக் தொன் ஆகும்.

**அட்டவணை 1.6**
**பெற்றோலியப் பொருட்களின் விற்பனைகள் – 2024**

| உற்பத்தி வகைகள் | விற்பனை தொகை (மெ.தொ) | | | | | மொத்தம் (மெ.தொ) |
|---|---|---|---|---|---|---|
| | CPC | LIOC | SINOPEC | R.M.PARKS | UNITED PETROLEUM | |
| பெற்றோல் 92 ஒக்டேன் | 804,419 | 253,821 | 157,631 | 81,710 | 17,064 | 1,314,645 |
| பெற்றோல் 95 ஒக்டேன் | 20,893 | 14,583 | 4,355 | 2,974 | 632 | 43,437 |
| லங்கா ஓடோ டீசல் | 1,025,160 | 279,474 | 170,385 | 82,395 | 14,760 | 1,572,174 |
| லங்கா சுப்பர் டீசல் | 23,531 | 9,621 | 5,482 | 3,880 | 707 | 43,221 |
| லங்கா மண்ணெண்ணெய் | 134,580 | - | - | - | - | 134,580 |
| லங்கா கைத்தொழில் மண்ணெண்ணெய் | 4,134 | - | - | - | - | 4,134 |
| லங்கா இரசாயன நெப்தா | 101,541 | - | - | - | - | 101,541 |
| லங்கா உலை எண்ணெய் 800 செக் | 6 | - | - | - | - | 6 |
| லங்கா உலை எண்ணெய் 1500 செக் (உயர் சல்பர்) | 116,652 | - | - | - | - | 116,652 |
| லங்கா உலை எண்ணெய் 1500 செக் (குறை சல்பர்) | 155,816 | 306,262 | - | - | - | 462,078 |
| லங்கா சுப்பர் உலை எண்ணெய் | 155,857 | - | - | - | - | 155,857 |
| ஜெட் A-1 | 468,158 | - | - | - | - | 468,158 |
| லங்கா சோல்வன்ட (SBP) | 1,161 | - | - | - | - | 1,161 |
| லங்கா பெற்றோலிய எரிவாயு (LP Gas) | 19,676 | - | - | - | - | 19,676 |
| லங்கா யுஏ வாயு | 132 | - | - | - | - | 132 |
| கப்பலுக்கான உலை எண்ணெய் | - | 32,608 | - | - | - | 32,608 |
| **மொத்தம்** | **3,031,716** | **896,372** | **337,853** | **170,959** | **33,163** | **4,470,063** |

மூலம்: *CPC, LIOC, SINOPEC, R.M.PARK, UNITED PETROLEUM*

### 1.5.4 2024 ஆம் அண்டில் முன்னெடுக்கப்பட்ட ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகள்

- **பெற்றோலியத் தொழிற்துறைக்கான புதிய ஒழுங்குபடுத்துனரை அறிமுகம் செய்தல்**

பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய், விமான எரிபொருள், உலை எண்ணெய், திரவப் பெற்றோலிய வாயு (LPG) மற்றும் உராய்வுநீக்கி எண்ணெய் உள்ளடங்கலான பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதி, சுத்திகரிப்பு, விநியோகம் மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய இலங்கையின் கீழ்நிலை பெற்றோலியத் தொழிற்துறையானது, தற்போதுள்ள சட்ட கட்டமைப்பிற்குள்ளேயே செயற்படுகின்றது. புதிய போட்டியாளர்கள் சந்தைக்குள் பிரவேசித்துள்ளமையினால், தற்போதுள்ள பெற்றோலியச் சந்தைச் செயற்பாடுகள் வரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக, உற்பத்தி தரத்தை அதிகரிக்கவும், நுகர்வோர், முதலீட்டாளர்கள் மற்றும் பிற பங்குதாரர்களின் நலன்களைப் பாதுகாக்கும் வகையான சுயாதீனமான ஒழுங்குபடுத்தல் மற்றும் வலுவான ஒழுங்குமுறை கட்டமைப்பின் அவசியத்தை இவ் விடயப்பரப்பு அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

இதற்கிணங்க, 24/0691/621/038 ஆம் இலக்கமிடப்பட்ட 2024.04.25 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அமைச்சரவை அமைச்சர்களால் வழங்கப்பட்ட ஒப்புதலின் படி, கீழ்நிலை பெற்றோலியத் தொழிற்துறைக்கு செயற்திறன் மற்றும் வினைத்திறன் மிக்கதுமான ஒழுங்குபடுத்தல் பொறிமுறையை அறிமுகம் செய்வதற்கு நிபுணர் குழு சிபார்சு செய்துள்ளதுடன் இக் குழுவின் சிபார்சுகள் பின்வருமாறு;

- கீழ்நிலை பெற்றோலிய தொழிற்துறையை ஒழுங்குபடுத்துவதற்கும் மற்றும் மேற்பார்வை செய்வதற்கும் “இலங்கை பெற்றோலிய தொழிற்துறை ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு” ஒன்றை நிறுவுதல்.
- பெற்றோலியத் தொழிற்துறைக்கான ஒழுங்குபடுத்தல் சட்டத்தை நிறைவேற்றுதல்

மேற்குறிப்பிட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான சட்டங்கள் அமைச்சரவை அமைச்சர்களின் ஒப்புதலுடன் சட்ட வரைஞ்ஞருக்கு அனுப்பப்பட்டுள்ளன. பெற்றோலியத் தொழிற்துறையை ஒழுங்குபடுத்துவது தொடர்பான புதிய அரசாங்கத்தின் கொள்கை அனுமதியைப் பெற்றதன் பின்னர், பெற்றோலியத் தொழிற்துறைக்கான நிரந்தர ஒழுங்குபடுத்துனர் நியமிக்கப்படுவார்.

- **எரிபொருள் நிரப்பும் நிலையத்தை நிறுவுதல் மற்றும் செயற்படுத்துவதற்கான வழிகாட்டுதலை அறிமுகப்படுத்துதல்**

1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC) மட்டுமே பெற்றோலியம் மற்றும் அது தொடர்பான அனைத்து பொருட்களையும் இறக்குமதி செய்து விநியோகித்திருந்தது. எவ்வாறாயினும், சந்தை தாராளமயமாக்கப்பட்டதனால், தற்போது இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் (CPC) நீங்கலாக லங்கா இந்தியன் ஒயில் கம்பனி (LIOC), சினோபெக் எனர்ஜி லங்கா (பிரைவேட்) லிமிடெட் (Sinopec), R.M. Park (Pvt) Ltd மற்றும் United Petroleum Lanka (Pvt) Ltd ஆகிய நிறுவனங்களும் எரிபொருளை இறக்குமதி செய்து விநியோகிக்கின்றன.

தற்போது, புதிய போட்டி நிறுவனங்கள் சந்தையில் உள் நுழைந்துள்ளதனால், மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு எரிபொருள் நிரப்பு நிலையங்களை நிறுவுதல் மற்றும் பராமரித்தல் தொடர்பாக குறைந்தபட்சதகுதிநிலைகளை உள்ளடக்கிய வழிகாட்டுதலை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் விபரங்கள் பின்வருமாறு.

- எரிபொருள் நிரப்பு நிலைய அமைவிடம் தொடர்பான பிரமாணங்கள்
- எரிபொருள் நிரப்பு நிலையத்தை நிர்மாணிப்பதற்கான குறைந்தபட்ச தகுதிநிலைகள்
- எரிபொருள் நிரப்பு நிலையத்தின் செயற்பாட்டு செயற்பாடுகளை பராமரிப்பதற்கான பிரமாணங்கள்

இவ் வழிகாட்டுதல்களைப் பின்பற்றுமாறு எரிபொருள் விநியோக நிறுவனங்களுக்குத் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், பொதுமக்களின் தகவல்களுக்காக அமைச்சின் இணையதளத்தில் வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும், இவ் வழிகாட்டுதல்களுக்கிணங்க புதிய எரிபொருள் விநியோக நிறுவனங்கள் செயல்படுகின்றனவா என்பதையும் அமைச்சு கண்காணிக்கும்.

- **பெற்றோலியப் பொருட்களை நேரடியாக நுகர்வோர் நிறுவனங்களுக்கு வழங்கும் செயல்முறையை நெறிப்படுத்துதல்**

எரிபொருள் விநியோக நிறுவனங்கள், நுகர்வோர் நிறுவனங்களுக்கு நேரடியாகவும், நாடு முழுவதும் நிறுவப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூலமாகவும் எரிபொருளை விநியோகிக்கின்றன. எரிபொருள் நிரப்பு நிலையங்களை நிறுவுவதற்கு முறையான ஒப்புதல் பெற்றுக்கொள்ளப்பட்டாலும், நுகர்வோர் நிறுவனங்களுக்கு எரிபொருள் இருப்புக்களை நேரடியாக வழங்குவதற்கு அமைச்சிடமிருந்து எந்த ஒப்புதலும் பெறப்படுவதில்லை. 2023 ஒக்ரோபர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரிபொருள் வழங்கும் நிறுவனங்கள் சுமார் 3385 வாடிக்கையாளர் சேவை மையங்களைக் கொண்டிருப்பதை அமைச்சு அவதானித்துள்ளது.

வாடிக்கையாளர் சேவை மையங்கள் மூலம் தினமும் கணிசமான அளவு எரிபொருள் விநியோகிக்கப்படுவதால், வாடிக்கையாளர் சேவை நிலையங்களை நிறுவுவதற்கான செயற்பாடுகளை நெறிப்படுத்த வேண்டிய அவசியத் தன்மை அடையாளம் காணப்பட்டது. இதற்கிணங்க, தற்போது பதிவுசெய்யப்பட்ட வாடிக்கையாளர் சேவை நிலையங்களிலிருந்து சில நிலையங்களை மேலும் பராமரிப்பதற்கும் மற்றும் புதிய நிறுவனங்களைப் பதிவு செய்வதற்குமான குறைந்தபட்ச அளவுகோல்களை அறிமுகப்படுத்துவதற்கு அமைச்சு நடவடிக்கைகள் எடுத்துள்ளது. எரிபொருள் வழங்கும் நிறுவனங்கள் மூலம் குறைந்தபட்ச அளவுகோல்களை பூர்த்தி செய்யும் வாடிக்கையாளர் சேவை நிலையங்களிற்கு ஒப்புதல் வழங்குவதற்கு அமைச்சு நடவடிக்கைகள் எடுத்துள்ளது, மேலும், 2024.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு அமைச்சால் அங்கீகரிக்கப்பட்ட வாடிக்கையாளர் சேவை நிலையங்களின் விபரங்கள் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 1.7**
**2024.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு வாடிக்கையாளர் சேவை நிலையங்களின் எண்ணிக்கை**

| எரிபொருள் வழங்குனரின் பெயர் | வாடிக்கையாளர் சேவை நிலையங்களின் எண்ணிக்கை |
|---|---|
| இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC) | 1042 |
| லங்கா இந்தியன் ஒயில் கம்பனி (LIOC) | 170 |
| சினோபக் (Sinopec) | 13 |
| மொத்தம் | **1,225** |

மூலம்: *CPC, LIOC, Sinopec*

- **எரிபொருள் விலைச் சூத்திரத்தை அமுல்படுத்துதல்**

நீண்ட காலமாக நிலவி வந்த முறைசாரா எரிபொருள் விலை நிர்ணய பொறிமுறையின் மூலம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பாரிய நிதி நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதுடன், எரிபொருள் விலை திருத்தங்கள் மூலம் எரிபொருள் விலையில் பாரிய ஏற்ற இறக்கங்கள் இருப்பது தெளிவாகத் கண்டறியப்பட்டுள்ளது. இதனை இல்லாதொழிக்கும் நோக்கத்துடன், 2022 மே மாதத்திலிருந்து அமலுக்கு வரும் வகையில்,

செலவினங்களை உள்ளடக்கியதாக விலைச் சூத்திரத்தின் மூலம் எரிபொருள் விலையை நிர்ணயிக்கும் ஆரம்பகட்ட நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துள்ளது.

2024 ஆம் ஆண்டில், பதினொரு (11) முறை எரிபொருள் விலையில் திருத்தங்களை மேற்கொண்டுள்ளன. டிசம்பர் 2023 இல் இருந்த எரிபொருள் விலைகளுடன் ஒப்பிடும்போது டிசம்பர் 2024 இல் உள்ள எரிபொருள் விலைகளைக் கருத்தில் கொண்டால், பெற்றோல் (ஒக்டேன் 92) விலை 11% தத்தாலும், பெற்றோல் (ஒக்டேன் 95) விலை 17% தத்தாலும், ஓட்டோ டீசல் விலை 17% தத்தாலும், சூப்பர் டீசல் விலை 31% தத்தாலும் மற்றும் மண்ணெண்ணெய் விலை 20% தத்தாலும் குறைந்துள்ளது.

**அட்டவணை 1.8**
**2024 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ஆகக் கூடிய மற்றும் ஆகக் குறைந்த சந்தை விலைகள்**

| உற்பத்தி | ஆகக் கூடிய விலை | ஆகக் குறைந்த விலை |
|---|---|---|
| பெற்றோல் (ஒக்டேன் 92) | ரூ .371.00<br>(பெப்ரவரி/ மார்ச்/ ஏப்ரல்) | ரூ. 309.00<br>(டிசம்பர்) |
| பெற்றோல் (ஒக்டேன் 95) | ரூ. 464.00<br>(ஜனவரி) | ரூ. 371.00<br>(நவம்பர்/ டிசம்பர்) |
| ஓடோ டீசல் | ரூ. 363.00<br>(பெப்ரவரி/ மார்ச்/ ஏப்ரல்) | ரூ. 283.00<br>(நவம்பர்) |
| சுப்பர் டீசல் | ரூ. 475.00<br>(ஜனவரி) | ரூ. 313.00<br>(நவம்பர்/ டிசம்பர்) |
| மண்ணெண்ணெய் | ரூ. 262.00<br>(பெப்ரவரி) | ரூ. 183.00<br>(ஒக்டோபர்/ நவம்பர்) |

**மூலம்:** இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

**வரைபு 1.2**
**2024 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட சந்தை விலைகள்**
**இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**




**மூலம்:** இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்


பெற்றோல் 95 ஒக்டேனின் விலை
ரு(லீற்றர் ஒன்றிற்கு)
600
400
200
0
ஜனவரி
பெப்ரவரி
மார்ச்
ஏப்ரல்
மே
யூன்
யூலை
ஆகஸ்ட்
செப்ரெம்பர்
ஒக்ரோபர்
நவம்பர்
டிசம்பர்
மாதம்
பெற்றோலுக்கான விலை (லீற்றர் ஒன்றிற்கு)-2023
பெற்றோலுக்கான விலை (லீற்றர் ஒன்றிற்கு)-2024
மூலம்: இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்


ஓடோ டீசலின் விலை
ரு(லீற்றர் ஒன்றிற்கான விலை)
500
400
300
200
100
0
ஜனவரி
பெப்ரவரி
மார்ச்
ஏப்ரல்
மே
யூன்
யூலை
ஆகஸ்ட்
செப்ரெம்பர்
ஒக்ரோபர்
நவம்பர்
டிசம்பர்
மாதம்
டீசலுக்கான விலை (லீற்றர் ஒன்றிற்கு)-2023
டீசலுக்கான விலை (லீற்றர் ஒன்றிற்கு)-2024
மூலம்: இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்


சுப்பர் டீசலுக்கான விலை
ரு(லீற்றர் ஒன்றிற்கான விலை)
600
400
200
0
ஜனவரி
பெப்ரவரி
மார்ச்
ஏப்ரல்
மே
யூன்
யூலை
ஆகஸ்ட்
செப்ரெம்பர்
ஒக்ரோபர்
நவம்பர்
டிசம்பர்
மாதம்
டீசலுக்கான விலை (லீற்றர் ஒன்றிற்கு)-2023
டீசலுக்கான விலை (லீற்றர் ஒன்றிற்கு)-2024
மூலம்: இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்


மண்ணெண் ணெய்க்கான விலை
ரு(லீற்றர் ஒன்றிற்கான விலை)
400
300
200
100
0
ஜனவரி
பெப்ரவரி
மார்ச்
ஏப்ரல்
மே
யூன்
யூலை
ஆகஸ்ட்
செப்ரெம்பர்
ஒக்ரோபர்
நவம்பர்
டிசம்பர்
மாதம்
மண்ணெண்ணெய்க்கான விலை (லீற்றர் ஒன்றிற்கு)-2023
மண்ணெண்ணெய்க்கான விலை (லீற்றர் ஒன்றிற்கு)-2024
மூலம்: இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

### 1.55 பெற்றோலியம் சார்ந்த உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி திட்டங்கள்

- **ஏற்றுமதி சார்ந்த பெற்றோலிய சுத்திகரிப்பு நிலையம் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்களை உற்பத்தி செய்யும் நிலையத்தை நிறுவுதல்.**

அம்பாந்தோட்டையில் ஏற்றுமதி சார்ந்த பெற்றோலிய சுத்திகரிப்பு நிலையம் மற்றும் அதனுடன் தொடர்புடைய உற்பத்தியை மேற்கொள்வதற்கான நிலையத்தை நிறுவுவதற்கு தகுதிவாய்ந்த முதலீட்டாளர்களிடமிருந்து 2023.02.24 ஆம் திகதி மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு ஆர்வங்களிற்கான வெளிப்பாடுகளை (EOI) கோரியிருந்ததுடன், இதற்கு பதிலளிக்குமுகமாக ஏழு (07) முதலீட்டாளர்கள் தங்கள் ஆர்வங்களை வெளிப்படுத்தியிருந்தனர். இவ் முன்மொழிவுகளை மதிப்பீடு செய்ததன் பின்னர், வேண்டுகோள்களுக்கான முன்மொழிவுகளை (RFPs) சமர்ப்பிப்பதற்கு இரு (02) நிறுவனங்கள் தகுதிவாய்ந்தனவாகக் காணப்பட்டன. இவற்றில், M/s China Petroleum and Chemical Corporation நிறுவனம் மட்டுமே விரிவான முன்மொழிவை சமர்ப்பித்திருந்தது. இவ் விரிவான முன்மொழிவானது திட்டக் குழு (PC) மற்றும் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பேரம்பேசும் குழுவால் (CANC) கவனத்தில் எடுக்கப்பட்டதன் பின்னர், இதன்படி அமைச்சரவை அமைச்சர்கள் சுத்திகரிப்பு நிலையத்தை நிறுவுவதற்கும் மற்றும் பராமரிப்பதற்கு M/s China Petroleum and Chemical Corporation நிறுவனத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளனர். இதற்கிணங்க, இது தொடர்பான உடன்பாடுகளை எட்டுவதற்கு M/s China Petroleum and Chemical Corporation நிறுவனத்துடன் நான்கு சுற்று பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுள்ளதுடன் இவை தற்போது இறுதிநிலையில் உள்ளன.

**கருத்திட்டத்திட்டத்தின் பிரதான விடயங்கள்**

- சுத்திகரிப்பு நிலையத்தின் திறன் - நாளொன்றுக்கு குறைந்த பட்சம் 10,000 பரல்
- எதிர்பார்க்கப்பட்ட முதலீடு – USD 1.5 பில்லியன் - USD 2 பில்லியன்
- எதிர்பார்க்கப்பட்ட கருத்திட்ட காலம் - 2024 - 2028

இவ் கருத்திட்டத்தின் மூலம் நாட்டில் எரிபொருள் பாதுகாப்பை உறுதி செய்தல், புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குதல், பெற்றோலியத் தொழிற்துறையுடன் தொடர்புடைய புதிய தொழிற்துறை வாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் நாட்டிற்கு அந்நியச் செலாவணி நன்மைகளைப் பெற்றுக்கொள்ளுதல் ஆகியவை எதிர்பார்க்கப்படுகின்றன.

- **திருகோணமலை தாங்கிப் பண்ணை அபிவிருத்தி**

திருகோணமலை சீனக்குடாவில் உள்ள மேல் நிலைத் தாங்கிப் பண்ணை பிரித்தானிய காலணித்துவ ஆட்சிக் காலத்தில் கப்பல்களுக்கு எரிபொருளை வழங்குவதற்காக பிரித்தானிய அரசால் நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் இவை தொன்னூற்றொன்பது (99) களஞ்சியத் தாங்கிகளைக் கொண்டுள்ளதாகும். இவ் களஞ்சியத் தாங்கிகள் ஒவ்வொன்றும் 10,000 MT திறன் கொண்டதாக உள்ளது. மேலும், 21/2285/325/050 ஆம் இலக்கமிடப்பட்ட 2022.01.11 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் இவ் களஞ்சியத் தாங்கிகளை 50 வருடத்திற்கு குத்தகைக்கு விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. இதன் விபரங்கள் பின்வருமாறு;

- இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு 24 எண்ணெய் தாங்கிகள்

- லங்கா இந்தியன் ஒயில் கம்பனிக்கு (LIOC) 14 எண்ணெய் தாங்கிகள்
- வரையறுக்கப்பட்ட தனியார் திருகோணமலை பெற்றோலிய முனையத்திற்கு (TPTL) 61 எண்ணெய் தாங்கிகள்

- **இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் உரித்தான 24 தாங்கிகளை அபிவிருத்தி செய்யும் பணிகளின் முன்னேற்றம்**

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் உரித்தான 24 தாங்கிகளை அபிவிருத்தி செய்வதற்கான மொத்த செலவின் US$ 20 மில்லியன் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன், ,வ் கருத்திட்டத்திற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் நிதியீட்டம் செய்யப்பட்டுள்ளதுடன், இவ் கருத்திட்டம் இரு கட்டங்களாக அமுல்படுத்தப்படும்.

2024.12.31 ஆம் திகதியில் பின்வரும் பணிகள் பூர்த்திசெய்யப்படும்

- கட்டம் -1 தாங்கிகளை பொறியியல் ரீதியாக சுத்தம் செய்தல (12 தாங்கிகள்)
- கட்டம் -2 தாங்கிகளை பொறியியல் ரீதியாக சுத்தம் செய்தல (9 தாங்கிகள்)
- தாங்கிகளின் சுகாதாரத்தை பரிசோதனையிடல்
- தளத்தை புகைப்பட வரைபடவியல் ரீதியாக ஆய்வு செய்தல் உள்ளடங்கலாக கட்டடத்தை புவியியல் ரீதியாக ஆய்வு செய்தல்
- நீர் குழாய்களை நிர்மாணித்தல்

**வரையறுக்கப்பட்ட தனியார் திருகோணமலை பெற்றோலிய முனையத்திற்கு (TPTL) உரித்தான தாங்கிகளை அபிவிருத்தி செய்யும் பணிகளின் முன்னேற்றம்**

வரையறுக்கப்பட்ட தனியார் திருகோணமலை பெற்றோலிய முனையத்திற்கு (TPTL வழங்கப்பட்ட 61 எரிபொருள் தாங்கிகளின் அபிவிருத்திக்கான முதல் படியாக பின்வரும் செயற்பாடுகள் ஏற்கனவே பூாத்திசெய்யப்பட்டுள்ளன.

- பத்து (10) எரிபொருள் தாங்கிகளுக்கான பாதையினை துப்பரவு செய்தல்
- Bureau Veritas Lanka (Pvt) Ltd நிறுவனத்திடமிருந்து இவ் பத்து (10) எரிபொருள் தாங்கிகளுக்கான தர மேற்பார்வை அறிக்கையை பெற்றுக்கொள்ளல்
- நீண்ட கால மற்றும் குறுங்கால அபிவிருத்தி மூலோபாயங்களை அடையாளம் காண்பதற்கான சாத்தியவள ஆய்வுகளை முன்னெடுத்தல்

திட்டத்தை செயற்படுத்துவதற்கு பொருத்தமான முதலீட்டாளரைத் தேர்ந்தெடுப்பதற்காக, முன்மொழிவுக-ளுக்கானஆர்வங்கள் கோரப்பட்டதுடன் இதற்கு பதிலளிக்குமுகமாக 05 நிறுவனங்கள் தங்கள் முன்மொழிவுகளைச் சமர்ப்பித்துள்ளன. அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட திட்டக் குழு (CAPC) மற்றும் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பேரம்பேசும் குழு (CANC) ஆகியவை இவ் முன்மொழிவுகளை மதிப்பீடு செய்கின்றன.



(முன்மொழியப்பட்ட சுத்திகரிப்பு நிலையத்தின் மாதிரி - அம்பாந்தோட்டை)

வரைபடம் 1.1

திருகோணமலை எரிபொருள் தாங்கிப் பண்ணை




### 1.5.6 எதிர்காலத் திட்டங்கள்

உள்நாட்டு எரிசக்தி தேவையை பூர்த்தி செய்வதில் கனியவள எண்ணெய் குறிப்பிடத்தக்க பங்கை வகிப்பதால், உள்நாட்டு எரிசக்தி பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கத்துடனும், உலகளாவிய எரிசக்தி விநியோகத்தில் இலங்கையின் பங்களிப்பையும் கருத்தில் கொண்டு, 2025 ஆம் ஆண்டில் பின்வரும் திட்டங்களை செயற்படுததுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

- **கீழ்நிலை பெற்றோலியத் தொழிற்துறையை ஒழுங்குபடுத்து வதற்கான நிரந்தர ஒழுங்குபடுத்துனரை நியமித்தல்.**

பெற்றோலியச் சந்தை நடவடிக்கைகளின் விரிவாக்கம் மற்றும் சந்தையில் புதிய போட்டி நிறுவனங்கள் உள்நுழைவதால், பெற்றோலியப் பொருட்களின் தரத்தை பராமரிக்கவும் நுகர்வோர் பாதுகாப்பை உறுதி செய்யவும், சுயாதீனமான ஒழுங்குபடுததுனர் மற்றும் வலுவான ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பின் தேவை எழுந்துள்ளது. இதற்கிணங்க, கீழ்நிலை பெற்றோலியத் தொழிற்துறையை ஒழுங்குபடுத்துவதற்கு நிரந்தரமான ஒழுங்குபடுத்துனரை நியமிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

- **சப்புகஸ்கநந்தை சுத்திகரிப்பு நிலையத்தைப் புதுப்பித்தல் மற்றும் புதிய சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மாணித்தல்**

இலங்கையின் பெற்றோலியத் தேவைகளில் சுமார் 25% சப்புகஸ்கந்தை சுத்திகரிப்பு நிலையத்தின் மூலமும , மீதி 75% இறக்குமதி செய்யப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட பெற்றாலியப் பொருட்கள் மூலமும் பூர்த்திசெய்யப்படுகிறது. இதனால், பெற்றோலியப் பொருட்களை இறக்குமதிசெய்வதற்கு அதிகளவான அந்நியச் செலாவணி தேவைப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இதன் காரணமாக, உள்நாட்டு பெற்றோலியத் தேவைகளுக்கான எரிபொருளை உளநாட்டு சுத்திகரிப்பு நிலையங்கள் மூலம் உற்பத்தி செய்வதே எங்கள் பிரதானமான நோக்கமாகும், இதனால், சப்புகஸ்கநந்த சுத்திகரிப்பு நிலையத்தைப் புதுப்பிப்பதற்கும் மற்றும் புதிய சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மாணிப்பதற்கும் விரைவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

- **திருகோணமலை தாங்கிப்பண்ணையை அபிவிருத்தி செய்தல்**

திருகோணமலை எண்ணெய்த் தாங்கிப் பண்ணை தொடர்பாக எட்டப்பட்ட ஒப்பந்தங்களைக் கருத்தில் கொண்டு, இலங்கை பெற்றோலியக்

கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான இருபத்து நான்கு (24) தாங்கிகள் மற்றும் TPTL க்குச் உரித்தான அறுபத்தொரு (61) தாங்கிகள் ஆகியவற்றை தேசிய பொருளாதாரத்திற்கு நன்மை பயக்கும் வகையிலான வணிக மாதிரிகளின் கீழ் அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

2025 ஆம் ஆண்டில், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான இருபத்து நான்கு (24) தாங்கிகளை அபிவிருத்தி செய்வதற்கு ரூ.4010 மில்லியன் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

- **மின்சார வாகனங்களிற்கு மின்னேற்றுவதற்கு இலங்கை பூராகவும் மின்னேற்ற நிலையங்களை தாபித்தல்**

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் நடாததப்பட்ட ஆய்வில், எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மின்சார வாகனங்களுக்கான மின்னேற்றல் நிலையங்களை தாபிப்பதற்கு அதிக வாய்ப்புகள் இருப்பதாக தெரியவந்துள்ளது. இதற்கிணங்க, நாடு முழுவதும் உள்ள சாத்தியமான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மின்சார வாகனங்களுக்கான மின்னேற்றல் நிலையங்களை தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன், இதற்காக 2025 ஆம் ஆண்டில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ரூ. 100 மில்லியனை ஒதுக்கியுள்ளது.

- **எரிபொருள் களஞ்சியத் திறனை அதிகரித்தல்**

நாட்டில் சக்தி வள பாதுகாப்பை உறுதி செய்வதற்குத் தேவையான எரிபொருளை களஞ்சியப்படுத்தி பராமரிக்கப்படல் வேண்டும். தற்போது, வரையறுக்கப்பட்ட இலங்கைப் பெற்றோலிய களஞ்சிய முனையத்தின் மொத்த களஞ்சியத் திறன் 447,140 மெற்றிக் தொன் ஆகும். இத் திறனை மேலும் அதிகரிப்பதற்கு, பின்வருமாறு புதிய களஞ்சியத் தாங்கிகளை தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

- **எரிபொருள் பரிமாற்றல் குழாய் முறைமையை அபிவிருத்தி செய்தல்**

கொழும்பு துறைமுகத்திலிருந்து கொலன்னாவை முனையத்திற்கு எரிபொருளைக் கொண்டு செல்லும் குழாய் அமைப்பானது மிகவும் பழமையானதுடன் பழுதடைந்த நிலையிலும் உள்ளது. இதனால் எரிபொருள் கசிவு ஏற்படுவதோடு, எரிபொருளை இறக்குவதற்கு அதிக நேரமும் செலவினமும் ஏற்படுகிறது. எனவே, எரிபொருள் இறக்குதல் மற்றும் பரிமாற்றுதல் ஆகிய செயற்பாடுகளை வினைத்திறன்மிக்கதாக்கும் வகையில் குழாய்த் தொகுதியொன்ற அமைப்பதற்கு திட்டமிடப்படடுள்ளது.

**அட்டவணை 1.9**
**முன்மொழியப்பட்ட களஞ்சியத் தாங்கி அபிவிருத்தி திட்டம்**

| விபரம் | மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் | நிதியீட்ட நிறுவனம் |
|---|---|---|
| கொலன்னாவை முனையத்தில் மொத்த கொள்ளளவு 64,000 $m^2$ கொண்ட 06 தாங்கிகளை நிர்மாணித்தல் | ரூ.3,374 மில்லியன் | இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம் (CPSTL) |
| கொலன்னாவை முனையத்தில் மொத்த கொள்ளளவு 22,000 $m^2$ கொண்ட 02 தாங்கிகளை நிர்மாணித்தல் | ரூ.1,470.4 மில்லியன் | இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம் (CPSTL) |
| முத்துராஜவல முனையத்தில் மொத்த கொள்ளளவு 40,000 $m^2$ கொண்ட 03 தாங்கிகளை நிர்மாணித்தல் | ரூ.3,496 மில்லியன் | இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம் (CPSTL) |

அட்டவணை 1.10

முன்மொழியப்பட்ட குழாய்த்தொகுதி அபிவிருத்தி திட்டம்

| விபரம் | மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் | நிதியீட்ட நிறுவனம் |
|---|---|---|
| கொழும்பு துறைமுகத்திலிருந்து கொலன்னாவை முனையம் வரை 18 அங்குல விட்டம் கொண்ட குழாய் பாதையை நிர்மாணித்தல். | ரூ.2,852.5 மில்லியன் | இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம் (CPSTL) |
| கொலொனாவ முனையத்திலிருந்து களனிதிஸ்ஸ மின் உற்பத்தி நிலையத்திற்கு 12 அங்குல விட்டம் கொண்ட குழாய் பாதையை நிர்மாணித்தல். | ரூ.1,444 மில்லியன் | இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம் (CPSTL) |
| முத்துராஜவெலவிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு விமான எரிபொருளைக் கொண்டு செல்வதற்கான குழாயை நிர்மாணித்தல். | ரூ.18,000 மில்லியன் | இலங்கைப் பெற்றோலிய கூட்டுத்தாபனம் (CPC) |

## 1.6 2024 ஆம் ஆண்டின் நிதியியல் முன்னேற்றம்

அட்டவணை 1.11

வலுசக்தி அமைச்சின் 2024 மூலதன வரவுசெலவுத்திட்டத்தின் நிதி முன்னேற்றம் – தலைப்பு 119

| | செலவின விடயங்கள் | | ஒதுக்கீடு (ரூ.மில்லியன்) | செலவினம் | |
|---|---|---|---|---|---|
| | | | | 2024.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு (ரூ.மில்லியன்) | % தத்தில் |
| | செயற்பாட்டு செயற்பாடுகள் | | | | |
| | அமைச்சரின் அலுவலகம் | | | | |
| 1 | மூலதன சொத்துக்கள் புனர்நிர்மாணம் மற்றும் மேம்பாடு | கட்டிடங்கள் | 1.5 | - | - |
| | | இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் | 1.5 | - | - |
| | | வாகனங்கள் | 6 | 3.67 | 61 |
| 2 | மூலதனச் சொத்துக்கள் கொள்வனவு | தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 1.5 | 0.04 | 3 |
| | | இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் | 1.5 | 0.79 | 53 |
| | மொத்தம் | | **12** | **4.50** | **37** |
| | தாபனங்கள் மற்றும் நிருவாக சேவை | | | | |
| 1 | மூலதன சொத்துக்கள் புனர்நிர்மாணம் மற்றும் மேம்பாடு | கட்டிடங்கள் | 1 | 0.25 | 25 |
| | | இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் | 0.68 | 0.67 | 98 |
| | | வாகனங்கள் | 1 | 0.59 | 59 |
| 2 | மூலதனச் சொத்துக்கள் கொள்வனவு | தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 1.2 | 0.88 | 73 |
| | | இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் | 2 | 1.6 | 80 |
| | | மென்பொருள் மேம்படுத்தல் | 0.5 | - | - |
| | மொத்தம் | | **6.39** | **3.99** | **62** |

| | | | | |
|---|---|---|---|---|
| | **அபிவிருத்தி செயற்பாடுகள்** | | | |
| 1 | CEB கடனின் வெளிநாட்டு நிதியளிப்புக்கான கணக்கிடல்கள் (ADB/JICA) | 30000 | 15603 | 52 |
| 2 | மின்சார நிலையங்களிற்கான கொழும்பு கழிவுகள் | 2110 | 2110 | 100 |
| 3 | மின்சாரத் தொழிற்துறையில் திறன் அபிவிருத்தி திட்டம் (சீர்திருத்தம்) | 22 | 0.56 | 3 |
| 4 | கோரிய அரசாங்கத்தின் நன்கொடையின் கீழான உலர்மின்கல சக்தி சேமிப்பு முறை | 2379 | - | - |
| 5 | அரசு கட்டிடங்களின் மேற்கூரையில் சூரியச்சக்தி தகடுகளை நிறுவுதல் | 5840 | 5353 | 92 |
| 6 | சிறிய தீவுகளில் கலப்பின மீள புதுப்பிக்கத்தக்க சக்தி முறையை நிர்மாணித்தல் | 3600 | 328 | 9 |
| 7 | இலங்கை சக்தி வளத் திட்டம் - USAID | 1210 | 526 | 44 |
| 8 | சந்திரிகா வேவா மற்றும் கிரிபன் வேவாவில் (கொரியா) 1 மெகாவாட் மிதக்கும் சூரிய மின்சக்தி திட்டங்களை அமுல்படுத்துதல். | 1228 | 1143 | 93 |
| 9 | செயற்திறன் மிக்க வக்தி வளத்தை வழங்குவதற்கான மையப்படுத்தப்பட்ட குளிரூட்டி முறை - ADB | 122 | 92 | 75 |
| 10 | குளிரூட்டி பரிசோதனை ஆய்வுகூடத்திர் உபகரணங்களிற்கான சக்தி லேபிளிங் | 218 | 101 | 47 |
| 11 | SLAB இன் திறன்கள் மற்றும் திறமைகளை விரிவுபடுத்துதல் | 743 | 689 | 93 |
| 12 | சர்வதேச அணுசக்தி முகவரிடமிருந்து பெற்ற நன்கொடை | 113 | 99 | 87 |
| 13 | இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை | 50 | 50 | 100 |
| 14 | இலங்கை அணு சக்தி சபை, | 20 | 16 | 79 |
| 15 | இலங்கை அணு சக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை | 2 | 1.98 | 1 |
| | **மொத்தம்** | **47,658** | **26,114** | **55** |

# அத்தியாயம் 02
# இலங்கை மின்சார சபை (CEB)

## 1. அறிமுகம்

அரசாங்கத்திற்குச் சொந்தமான ஒரு நிறுவனமான இலங்கை மின்சார சபை (இ.மி.ச.) 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கச் சட்டத்தினால் தாபிக்கப்பட்டதுடன் அதன்பால் இலங்கையின் மின் பிறப்பாக்கம், மின் பரிமாற்றம் மற்றும் மின் விநியோகத்தில் பல தடவைகள் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டமானது 2013 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டு, இ.மி.ச. ஐ இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் (PUCSL) கீழ் கொண்டு வந்தது. ஆகப் பிந்தைய திருத்தமான 2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டமானது 2024 யூன் 27 இல் அங்கீகரிக்கப்பட்டது. இதன் நோக்கம் பிரதான துறைசார் மேம்படுத்தல்களை நடைமுறைப்படுத்துவது ஆகும். எனினும் அது நடைமுறைக்கு வருகின்ற நியமனத் திகதி நிலுவையில் உள்ளது.

கடந்த 15 வருடங்களுக்கும் மேலாக இலங்கையின் மின்சாரத் தேவையானது 3.6% என்ற வருடாந்த சராசரி வீதத்தில் வளர்ச்சியடைந்துள்ள அதே வேளை உச்சத் தேவையானது ஆண்டிற்கு 1.7% இனால் அதிகரித்திருந்தது. 2023 இல், நிகர மின் பிறப்பாக்கமாக 15,576 GWh காணப்பட்டது. இது 2022 உடன் ஒப்பிடுகையில் 2.3 % வீழ்ச்சி ஆகும். 2023 இல் உயர்ந்தபட்சத் தேவையானது 2,415 MW இனை அடைந்திருந்தது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 10.8 % வீழ்ச்சியைக் காட்டுகிறது. 2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில், நிகர மின் பிறப்பாக்கம் 13,915 GWh ஆகக் காணப்பட்டதுடன் உயர்ந்தபட்சத் தேவை 2,673 MW ஆகக் காணப்பட்டது. இவை இரண்டும் முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 11 % வீழ்ச்சியைக் காட்டுகின்றன.

## 2. எதிர்கொள்ளப்பட்ட சவால்களும் பின்பற்றப்பட்ட உபாயங்களும்

**மின்வலுச் செயற்பாடுகளிலுள்ள தொழிநுட்ப சவால்களும் மூலோபாயத் தலையீடுகளும்**

2024 ஆம் ஆண்டில், மின்சாரத் துறையில் உள்ள சிக்கலான செயற்பாடு மற்றும் உபாயத் தளத்தை முகாமை செய்வதில் பல்வேறு சவால்கள் எதிர்நோக்கப்பட்டன. எல்.வீ.பி.எஸ். அலகு 02 இன் செயலிழப்பானது மேற்குக் கரை மின்வலு ஆலையில் திட்டமிடப்பட்ட பராமரிப்பு காலப்பகுதியுடன் ஒத்துப்போனமையானது மட்டுப்படுத்தப்பட்ட அனல் மின் பிறப்பாக்கத்தின் தேவையை கவனமாக முகாமை செய்வதைத் தேவைப்படுத்தியது.

நீரேந்து பகுதிகளுக்கான துல்லியமான உட்பாய்வு எதிர்வுகூறலானது போதியளவு காலநிலைத் தரவுகள் இன்மையால் பாதிப்புக்கு உள்ளாகியது. இது ஏற்ற இறக்கங்களை நிவர்த்தி செய்ய விரைவான பிரதிபலிப்பைக் கொண்ட மின்கல சேமிப்பகத்தைப் நிலைநிறுத்துவதற்கான திட்டங்களைத் தூண்டியது.

இடைவிடாத மீள்புதுப்பிக்கத்தக்க சக்திப் பிறப்பாக்கமானது தேவை எதிர்வுகூறலுக்கு சிக்கலை ஏற்படுத்தியது. இது நிகழ் நேரத் தரவுச் சேகரிப்பு மற்றும் முறைமைக் கட்டுப்பாட்டு நிலையத்தில் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி மேசை ஒன்றை நிறுவுவதற்கு முன்மொழிதல் ஆகியவற்றின் ஊடாக கட்புல நிலையை மேம்படுத்துவதன் மூலம் குறைக்கப்பட்டது.

மின்வலு முறைமை தற்போது ஸ்திரத்தன்மைச் சிக்கலை எதிர்கொள்கிறது. குறிப்பாக, இது தெற்குப் பிராந்தியத்தில் காணப்படுகிறது. இந்தச் சவால்களை எதிர்கொள்ளும் வகையில், கொத்மலை- புதிய பொல்பிட்டிய

220 kV மின் பரிமாற்ற மார்க்கத்தை அடுத்த ஆண்டில் செயற்பட வைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் புதிய மார்க்கம் வலையமைப்பின் நம்பகத்தன்மையையும் ஸ்திரத்தன்மையையும் கணிசமானளவுக்கு மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.
மின்வலு ஆலைகள் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்திகள் ஆகியவற்றுக்கு நிதியிடுவது ஒரு பிரதான சவாலாகத் தொடர்ந்தும் காணப்படுகிறது. இது நன்கொடை அளிக்கும் முகவராண்மைகளுடன் இடம்பெறுகின்ற பேச்சுவார்த்தைகள் மற்றும் அரசின் நம்பகத்தன்மையைக் குறைக்க தனியார் துறை முதலீடுகளை ஊக்குவித்தல் ஆகியவற்றின் மூலம் எதிர்கொள்ளப்பட்டது. சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுடன் ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதன் மூலம் அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்கான நீண்ட அங்கீகாரச் செயன்முறைகள் நெறிப்படுத்தப்பட்டுள்ள அதே வேளை பொதுமக்களின் எதிர்ப்பு மற்றும் அக்கறையுடைய குழுவினரிடமிருந்தான எதிர்ப்பு ஆகியன செயலூக்கமான ஈடுபாடு மற்றும் விழிப்புணர்வுப் பிரச்சாரங்களை அவசியமாக்கியது.

அடிக்கடி மேற்கொள்ளப்படுகின்ற கொள்கை மாற்றங்கள் மற்றும் தொழில்சார் குடியகல்வு என்பன நிபுணத்துவத்தைத் தக்கவைத்துக் கொள்வதிலும் நிலையான தரத்தைப் பேணுவதிலும் சவால்களை எதிர்கொள்ள வழிவகுத்தது. இதனை நிவர்த்தி செய்வதற்காக, அறிக்கையானது நிறுவனத்தினுள் ஊழியர் ஊக்கம் மற்றும் ஈடுபாட்டுக் கலாசாரம் ஒன்றை உருவாக்குவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. இதில் திறமைகளை ஈர்ப்பதற்கும் தக்கவைத்துக் கொள்வதற்கும் போட்டி ஊதியம் வழங்குதல் மற்றும் புதிய தொழினுட்பங்களில் கவனம் செலுத்தும் வலுவான பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்துதல் ஆகியன அடங்குகின்றன. ஊழியர் அபிவிருத்தியில் முதலீடு செய்வதன் மூலமும் ஆதரவுப் பணிச் சூழலை வளர்ப்பதன் மூலமும் செயலாற்றுகையை மேம்படுத்துதல், தொடர்ச்சியை உறுதி செய்தல் மற்றும் ஊழியர் இயல்திறன்களை உபாய நோக்கங்களுடன் சீரமைத்தல் ஆகியவற்றை நிறுவனம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

LNG செயற்றிட்டங்களின் அபிவிருத்தியானது குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொண்டிருந்தது. முதன்மையாக சமீபத்திய VAT சட்டம் 2023 காரணமாக, மின் பிறப்பாக்கச் செயற்றிட்டங்களுக்கான VAT சலுகை நீக்கப்பட்டமையானது மின்வலுக் கொள்வனவு உடன்படிக்கையின் கீழான சட்டத்தின் மாற்றத்திற்கு வழிவகுத்தது. மேலும், நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி ஆனது இந்த முயற்சிக்கு வெளிநாட்டுக் கடன் நிதியைப் பெறுவதைக் கடினமாக்கியிருந்தது. இந்தச் சவால்களுக்குப் பதிலளிக்கும் வகையில், VAT செலவினங்களை மீளளிப்பதற்கு இ.மி.ச. இற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதை உள்ளடக்கிய ஓர் உபாயம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இது நிருமாண நடவடிக்கைகள் எவ்வித தடையுமின்றி முன்னெடுக்கப்படுவதை உறுதி செய்கிறது. மேலும், உள்நாட்டு வங்கிகளின் கூட்டமைப்பானது கடன் நிதியுதவியை ஏற்பாடு செய்யும் செயன்முறையில் ஈடுபட்டுள்ளதுடன் தற்போது அதில் உரிய கவனம் செலுத்தி வருகிறது.

### மின்வலுத் துறை காமைத்துவத்திலுள்ள நிதிச் சவால்களும் உபாயப் பிரதிபலிப்புகளும்

பொருளாதாரக் கட்டுப்பாடுகள், விதிப்பனவுக் கட்டமைப்புகள் மற்றும் செயற்பாட்டு வினைத்திறனின்மைகள் போன்ற வெளிப்புறக் காரணிகளால் உந்தப்பட்டு, சமீபத்திய ஆண்டுகளில் இ.மி.ச. எண்ணிறைந்த நிதிச் சவால்களை எதிர்கொண்டிருந்தது. உயர் நிதிக் கிரயங்கள் மற்றும் வங்கியியல் கட்டுப்பாடுகள் முதல் மரபார்ந்த கடன் தீர்ப்பனவுகள் மற்றும் அந்நியச் செலாவணிப் பற்றாக்குறைகள் வரையுள்ள இந்தச் சவால்கள் வினைத்திறனான மின்வலுப் பிறப்பாக்கம் மற்றும் வழங்கலைத் ஸ்திரப்படுத்தும் சபையின் ஆற்றலை கணிசமாகப் பாதித்துள்ளது.

இந்தத் தடைகளைத் தவிர்ப்பதற்கு, வளப் பயன்பாட்டை உகந்ததாக்குதல், நிதிச் சுமைகளைக் குறைத்தல் மற்றும் ஒழுங்குமுறை வழிப்படுத்தல்களுடன் இணங்குவதை உறுதி செய்தல் ஆகியவற்றை நோக்காகக் கொண்ட பல உபாய நடவடிக்கைகளை இ.மி.ச. பின்பற்றியது. கீழ்வரும் அட்டவணையானது இ.மி.ச. எதிர்கொண்ட பிரதான நிதிச் சவால்களையும் அவற்றின் தாக்கங்களைக் குறைப்பதற்கு செயற்படுத்தப்பட்ட உபாயங்களையும் கோடிட்டுக் காட்டுகிறது.

| எதிர்கொள்ளப்பட்ட சவால்கள் | பின்பற்றப்பட்ட மூலோபாயங்கள் |
|---|---|
| **விதிப்பனவு மூலமான வருமானங்களைப் பயன்படுத்துதல்:** PUCSL இன் வழிப்படுத்தலின்படி, விதிப்பனவுத் திருத்தத்தின் மூலமான வருமானத்தை உயர்ந்தபட்சமாகப் பயன்படுத்துவதை உறுதி செய்தல். | பூச்சிய அடிப்படையிலான பாதீட்டைப் பயன்படுத்தி PUCSL இன் அனுமதிக்கப்பட்ட வருமான வரம்பினுள் செலவழிக்கப்பட்டது ; காலாண்டுச் சீராக்கங்களுடன் CAPEX மற்றும் OPEX ஆகியவற்றின் தொடர்ச்சியான கண்காணிப்பு. |
| **உயர் நிதிக் கிரயங்கள்** : வழங்குநர்களுக்கான தீர்ப்பனவை மேற்கொள்ளாமைக்கான தாமதக் கட்டணங்கள் மற்றும் உயர் தொழிற்படு மூலதனக் கடன் கிரயங்கள். | நீர் மின் நிலைமைகளின் இலாபங்கள் பயன்படுத்தப்பட்டதுடன் மரபார்ந்த கடன்களைத் தீர்ப்பனவு செய்வதற்கு வட்டி வீதங்கள் குறைக்கப்பட்டன. வட்டி வீதங்களைக் குறைப்பதற்கு கடன் நிபந்தனைகள் தொடர்பில் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. |
| **தொகையளவு வழங்கல் பரிவர்த்தனைக் கணக்கு** (BSTA): தொடர்ச்சியான செயற்பாடும் PUCSL தேவைகளுடன் இணங்குதலும். | 2023 நவெம்பரினுள் வழக்கமான நிதித் தொழிற்பாடுகளில் இருந்து BSTA வேறாக்கப்பட்டது ; PUCSL இன் புதிய வழிப்படுத்தலின் அடிப்படையில் செயற்பாடுகள் நெறிப்படுத்தப்பட்டன. |
| OPEX/ CAPEX **முகாமைத்துவம்:** PUCSL இன் விதிப்பனவுத் தீர்மானத்தின்படியான OPEX/ CAPEX இன் கண்டிப்பான முகாமை. | அனுமதிக்கப்பட்ட வருமான வரம்புகள் கட்டாயமாகக் கடைப்பிடிக்கப்பட்டதுடன் அங்கீகரிக்கப்பட்ட செலவின வகைகளுக்கு பாதீட்டுப் பயன்பாடு கட்டுப்படுத்தப்பட்டது. இந்தப் பரமானங்களுக்கு வெளியேயான எந்தவொரு செலவும் இடைநிறுத்தப்பட்டது. |
| **வங்கியியல் தடைகள்**: அரச வங்கிகளுடன் கட்டுப்படுத்தப்பட்ட வங்கியியல் வசதிகள் காரணமாக வரையறுக்கப்பட்ட நிதிசார் நெகிழ்வுத்தன்மை. | மக்கள் வங்கி மற்றும் அரச வங்கிகள் மீதான நம்பிக்கையைக் குறைத்து, வேறு வர்த்தக வங்கிகளுடன் மாற்று நிதி வசதிகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. |
| **மரபார்ந்த கடன் தீர்ப்பனவு** : கடந்த ஒரு தசாப்தமாக செலவைப் பிரதிபலிக்கின்ற விதிப்பனவுகள் இல்லாத காரணத்தால் கடனை முகாமை செய்தல். | இலாபங்கள், துணை நிறுவனங்களின் விற்பனை மற்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் மறுசீரமைப்பு முயற்சிகள் போன்றவற்றின் ஊடாக மரபார்ந்த கடன்களின் ஒரு பகுதி தீர்க்கப்பட்டது. |
| **நிலக்கரி கடன் இல்லாமை** : மக்கள் வங்கியிடம் இருந்து குறுங்கால நிலக்கரிக் கடன்கள் இல்லாமையானது நிலக்கரிப் பெறுகையைப் பாதித்தது. | இலங்கை வங்கியின் நிதிக் கருவிகளைப் பயன்படுத்தி நிலக்கரிப் பெறுகைக்கான கொடுப்பனவுகள் முகாமை செய்யப்பட்டதுடன் கொடுப்பனவு செய்யத் தவறுவதைத் தவிர்ப்பதற்காக கப்பலேற்றலுக்கான நாளாந்த ஒதுக்கீடு செய்யப்பட்டது. |
| **கடன் மதிப்பீட்டின் தரம் குறைப்பு** : மின்வலுப் பிறப்பாக்க உட்கட்டமைப்புக்கு நிதியளிப்பது மீதான தாக்கம் மற்றும் நிதிக் கட்டணங்கள் மீதான உயர் தவணைக் கொடுப்பனவுகள். | நிதியின் வினைத்திறனான பயன்பாட்டிற்காக காசுச் சேகரிப்பு மற்றும் கொடுப்பனவுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது ; பெறுகைகளுக்கான உயர்ந்தபட்ச கடன் காலத்திற்காக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதுடன் காசுப் பாய்வுக் கட்டுப்பாடுகளை எளிதாக்குவதற்காக ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டன. |

## 3. அபிவிருத்தி நடவடிக்கைகளின் முன்னேற்றம்

### அ. நடைபெற்றுக்கொண்டிருக்கும் மின் உற்பத்தி செயற்றிட்டங்களின் முன்னேற்றம்

**அட்டவணை 2.1**
**நடைபெற்றுக்கொண்டிருக்கும் மின் உற்பத்தி செயற்றிட்டங்களின் முன்னேற்றம**

| இல. | செயற்றிட்டம்/ நிகழ்ச்சித்திட்டம் | முன்னேற்றம் | பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்படும் திகதி |
|---|---|---|---|
| 1 | 31 MW மொரகொல்ல நீர் மின்வலு ஆலை | நிருமாணம் நடைபெறுவதுடன் அனைத்தும் இறுதிக் கட்டத்தில் உள்ளன. | 2025 – 2 ஆம் காலாண்டு |
| 2 | 350 MW சோபதனவி NG இணைந்த சுற்று ஆலை – கெரவலப்பிட்டிய. | நிருமாணம் நடைபெறுவதுடன் அனைத்தும் இறுதிக் கட்டத்தில் உள்ளன. | எரிவாயு விசையாழி 2024 ஆகஸ்டில் செயற்பாட்டை ஆரம்பிக்க அதிகாரம் அளிக்கப்பட்டது.<br>நீராவி விசையாழியின் செயற்பாட்டை 2025 இல் ஆரம்பிக்க அதிகாரம் அளிக்கப்படவுள்ளது. |
| 3 | 100 MW /100 MWh மின்கல சேமிப்பு முறைமை – கொலன்னாவ. | நிதி உறுதி செய்யப்பட்டுள்ளது. RFP ஆவணத் தயாரிப்பு ஆரம்பிக்கப்படவுள்ளது. | 2026 |
| 4 | 350 MW சோபதனவி NG இணைந்த சுற்று ஆலை – கெரவலப்பிட்டிய. | PPA பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன. | திறந்த சுற்று –2026<br>இணைந்த சுற்று –2027 |
| 5 | 200 MW இயற்கை எரிவாயு IC என்ஜின் மின்வலு ஆலை. | CANC & PC நியமிக்கப்பட்டுள்ளது. | 2028 |
| 6 | 130 MW எரிவாயு விசையாழிகள் - களனிதிஸ்ஸ. | பெறுகை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. | 2030 |

**அட்டவணை 2.2**
**நடைபெற்றுக்கொண்டிருக்கும் மரபுசாரா மீள புதுப்பிக்கத்தக்க சக்தி (NCRE) அபிவிருத்திகளின் முன்னேற்றம்**

| இல. | செயற்றிட்டம்/ நிகழ்ச்சித்திட்டம் | முன்னேற்றம் | பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்படும் திகதி |
|---|---|---|---|
| 1 | சியம்பலாந்துவ 100MW சூரிய சக்தி மின்வலுச் செயற்றிட்டம் | PPA, மின் பரிமாற்ற உடன்படிக்கை மற்றும் நடைமுறைப்படுத்தல் உடன்படிக்கை ஆகியன கைச்சாத்திடப்பட்டன.<br>மின் பரிமாற்ற மார்க்க நிருமாணங்கள் நடைபெறுகின்றன. | 2025 இன் இறுதிக் காலாண்டு |
| 2 | மன்னார் 250MW காற்றாலை மின்வலுச் செயற்றிட்டம் | வழங்கப்பட்ட மின்வலு ஆலைக்கான அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. வழங்கப்படுவதற்கான PUCSL அங்கீகாரம் நிலுவையில் உள்ளது. AG தடைநீக்க இசைவு நிலுவையில் உள்ளது. | 2027 இன் இரண்டாம் காலாண்டு |
| 3 | பூநகரி 234MW காற்றாலை மின்வலுச் செயற்றிட்டம் | வழங்கப்பட்ட மின்வலு ஆலைக்கான அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. வழங்கப்படுவதற்கான PUCSL அங்கீகாரம் நிலுவையில் உள்ளது. AG தடைநீக்க இசைவு நிலுவையில் உள்ளது.<br>மின் பரிமாற்ற வசதிக்கான PPA பேச்சுவார்த்தைகளும் விலை தொடர்பான பேச்சுவார்த்தைகளும் நடைபெறுகின்றன. | 2027 இன் இரண்டாம் காலாண்டு |
| 4 | சம்பூர் 50MW சூரிய சக்தி மின்வலுச் செயற்றிட்டம் | விருத்தியாளரின் முன்மொழிவு PC / CANC இன் மதிப்பீட்டில் உள்ளது. | 2026 இன் இறுதிக் காலாண்டு |
| 5 | மன்னார் 50MW காற்றாலை மின்வலுச் செயற்றிட்டம் | பெறப்பட்ட முன்மொழிவு PC / CANC இன் மதிப்பீட்டில் உள்ளது. | 2026 இன் இரண்டாம் காலாண்டு |

**அட்டவணை 2.3**

**விலைமனு கோரப்பட்ட செயற்றிட்டங்கள்**

| | செயற்றிட்டம் / நிகழ்ச்சித்திட்டம் | ஆலை களின் எண்ணிக்கை | மொத்தக் கொள்ளளவு (MW) | முன்னேற்றம் | பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்படும் திகதி | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 2024 | 2025 | 2026 |
| 1 | 90X 1MW சூரிய PV மின்வலு ஆலைகளின் விலைமனு | 50 | 50 | இயக்குவதற்கான அதிகாரம் அளிக்கப்பட்டவை - 1 MW x 45 ஆலைகள் நிருமாணிக்கப்பட்டுக் கொண்டிருப்பவை – 1 MW x 5 ஆலைகள் | | 5 | |
| 2 | 10MW பொலநறுவை சூரிய PV மின்வலு ஆலையின் விலைமனு | 1 | 10 | இயக்குவதற்கான அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. | 10 | | |
| 3 | 30MW தரையில் பொருத்தப்பட்ட /மிதக்க விடப்பட்ட சூரிய PV மின்வலு ஆலைகளின் விலைமனு (1-5MW) | 2 | 5 | PPA கைச்சாத்திடப்பட்டுள்ளது, நிருமாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. | | 5 | |
| | 30MW தரையில் பொருத்தப்பட்ட /மிதக்க விடப்பட்ட சூரிய PV மின்வலு ஆலைகளின் விலைமனு (1-5MW) - மறுவிலைமனு | 9 | 27 | LOI கைச்சாத்திடப்பட்டுள்ளது, PPA கைச்சாத்திடுவது நிலுவையில் உள்ளது. | | | 27 |
| 4 | 40MW தரையில் பொருத்தப்பட்ட /மிதக்க விடப்பட்ட சூரிய PV மின்வலு ஆலைகளின் விலைமனு (5MW அளவில்) | 8 | 40 | LOI கைச்சாத்திடப்பட்டுள்ளது, PPA கைச்சாத்திடுவது நிலுவையில் உள்ளது. | | 30 | 10 |
| 5 | 20MW காற்றாலை மின்வலு ஆலைகளின் விலைமனு (2.5-10MW அளவில்) – மன்னாரில் | 4 | 20 | LOI கைச்சாத்திடப்பட்டுள்ளது, PPA கைச்சாத்திடுவது நிலுவையில் உள்ளது. | | 20 | |
| 6 | 70MW, AC தரையில் பொருத்தப்பட்ட சூரிய PV மின்வலு ஆலைகள் - (1-5) MW, AC இல் | 12 | 51 | LOI கைச்சாத்திடப்பட்டுள்ளது, 6 செயற்றிட்டங்களுக்கு PPA கைச்சாத்திடப்பட்டுள்ளது (26MW) மீதி 6 செயற்றிட்டங்களுக்கு PPA கைச்சாத்திடுவது நிலுவையில் உள்ளது. | | 51 | |
| | 70MW, AC தரையில் பொருத்தப்பட்ட சூரிய PV மின்வலு ஆலைகள் - (1-5) MW, AC - மறுவிலைமனு | 7 | 19 | 6 செயற்றிட்டங்களுக்கு LOI கைச்சாத்திடப்பட்டுள்ளது, 1 நிலுவையில் உள்ளது. | | | 19 |
| 7 | 165MW தரையில் பொருத்தப்பட்ட சூரிய PV மின்வலு ஆலைகள் - (1-5) MW,AC இல் | - | 165 | விலைமனு மதிப்பீடு நிறைவடைந்துள்ளது, வழங்குவதற்கான அமைச்சரவைத் தீர்மானம் நிலுவையில் உள்ளது. | | | 165 |

அட்டவணை 2.4
ஊட்டத்தில் உள்ள விதிப்பனவின் (Feed In- Tariff) கீழான செயற்றிட்டங்கள்

| செயற்றிட்டத் தொழினுட்பம் | 2024 ஆம் ஆண்டு | | 2025 ஆம் ஆண்டு | 2026 ஆம் ஆண்டு |
|---|---|---|---|---|
| | அதிகாரம் அளிக்கப்பட்டவை (MW) | அதிகாரம் அளிக்கப்பட வேண்டியவை (MW) | அதிகாரம் அளிக்கப்பட வேண்டியவை (MW) | அதிகாரம் அளிக்கப்பட வேண்டியவை (MW) |
| சூரிய PV | 10 | 15 | 150 | 150 |
| காற்றாலை | - | - | 10 | 10 |

### ஆ. மின் பரிமாற்ற அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்களும் முன்னேற்றமும்

நடைபெற்றுக் கொண்டிருக்கும் மின்சார பரிமாற்ற அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் முன்னேற்றம் அட்டவணை 2.5 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2.5
நடைபெற்றுக் கொண்டிருக்கும் மின்சார பரிமாற்ற அபிவிருத்திச் செயற்றிட்டங்கள்

| செயற்றிட்டம் / கிளை | பொதி | செலவு (ரூபா மில்லியன்) | 2024-10-31 இல் பௌதிக முன்னேற்றம் | பூர்த்தியடையும் திகதி |
|---|---|---|---|---|
| பாரிய கொழும்பு மின் பரிமாற்ற மற்றும் இழப்பைக் குறைக்கும் செயற்றிட்டம் | கெரவலப்பிட்டிய தொடக்கம் கொழும்பு L வரை இரண்டாவது 220 kV கம்பிவடத்தின் நிருமாணம் | 13,055 | 11.50% | 2026 செப்ரெம்பர் |
| | மின்கல சக்தி சேமிப்பக முறைமை | 4,419 | 35.00% | 2025 டிசெம்பர் |
| திருகோணமலை நிலக்கரி மின்வலுச் செயற்றிட்டம் | ஹபரணை - வெயாங்கொடை 220 kV மின் பரிமாற்ற மார்க்க நிருமாணச் செயற்றிட்டம் துண்டம் A - உபமின் நிலையம் | 6,958 | 100.00% | பூர்த்தி அடைந்துள்ளது. |
| | ஹபரணை - வெயாங்கொடை 220 kV மின் பரிமாற்ற மார்க்க நிருமாணச் செயற்றிட்டம் துண்டம் B - மின் பரிமாற்ற மார்க்கம் | 17,770 | 100.00% | பூர்த்தி அடைந்துள்ளது. |
| பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் சக்தி வினைத்திறன் மேம்பாட்டு முதலீட்டுச் செயற்றிட்டம் (கட்டம் 2) | பொதி 2/ துண்டம் B2 A - பாதுக்க - ஹொரண 132kV TL இன் நிருமாணம் | 600 | 100.00% | பூர்த்தி அடைந்துள்ளது. |
| | PMU 2- பொதி 8/ துண்டம் B -அம்பலாங்கொடை 132/33 kVமின்தொகுப்பு உபமின் நிலையத்தின் விருத்தியாக்கம், பன்னல 132/33 kV மின்தொகுப்பு உபமின் நிலையத்தின் விருத்தியாக்கம், 132/33 kV 31.5 MVA உடைய 2 உதிரி மின்மாற்றிகளின் வழங்கல் | 1,740 | 100.00% | பூர்த்தி அடைந்துள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் சக்தி வினைத்திறன் மேம்பாட்டு முதலீட்டுச் செயற்றிட்டம் (கட்டம் 2) | பொதி 9 : 220 kV கெரவலப்பிட்டியவில் ஆளியிடல் நிலையம் | 2,919 | 100.00% | பூர்த்தி அடைந்துள்ளது. |
| | SESRIP: பொதி 7- துண்டம் A1: பன்னிப்பிட்டிய மின்தொகுப்பு உபமின் நிலையங்களில் 100Mvar BSC இன் நிறுவல் | 1103.5 | 95.00% | 2024 டிசெம்பர் |
| | SESRIP: பொதி 7- துண்டம் A2: பியகம மின்தொகுப்பு உபமின் நிலையத்தில் நிலையான Var முறைமையின் (SVS) நிறுவல் | 1680.8 | 100.00% | 2024 மே |
| தேசிய மின் பரிமாற்ற, விநியோக வலையமைப்பு அபிவிருத்தி மற்றும் வினைத்திறன் முதலீட்டுச் செயற்றிட்டம் | பொதி 1: 400kV, 220kV மற்றும் 132kV மின் பரிமாற்ற மார்க்கங்களின் நிருமாணம் | 13,003 | 84.00% | 2025 டிசெம்பர் |
| | பொதி 2 : மின்தொகுப்பு உபமின் நிலையங்களின் நிருமாணமும் விருத்தியாக்கமும் | 7,418 | 91.00% | 2025 டிசெம்பர் |
| | பொதி 3: மின் பரிமாற்ற மார்க்கங்களின் (220kV, 132kV) நிருமாணம் | 12,000 | | ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டுள்ளது |
| | பொதி 4: மின் விநியோக உபமின் நிலையங்கள் மற்றும் கம்பிவடங்களின் (33kV, 11kV, 0.4kV) நிருமாணம் | 4,594 | | ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டுள்ளது |
| மின் பரிமாற்ற நிருமாணச் செயற்றிட்டங்கள் | மெதகம - அம்பாறை 132 kV மின் பரிமாற்ற மார்க்கத்தின் புனரமைப்பு | 3,206 | 45% | 2025 சனவரி |
| | விக்டோரியா - ரன்தம்பே 220 kV மின் பரிமாற்ற மார்க்கத்தின் நிருமாணம் | 1,400 | 6% | 2024 டிசெம்பர் |
| | அத்துருகிரிய - கொலன்னாவ 132kV மின் பரிமாற்ற மார்க்கத்தின் விருத்தியாக்கம் | 170 | 20% | 2024 யூன் |
| | கொலன்னாவ - பன்னிப்பிட்டிய 132kV மின் பரிமாற்ற மார்க்கத்தின் புனரமைப்பு | 960 | 10% | 2024 யூன் |
| | களனிதிஸ்ஸ - கொலன்னாவ 132kV மின் பரிமாற்ற மார்க்கத்தின் உயரத்தை அதிகரித்தல் | 702 | 9% | 2024 ஏப்ரல் |
| | புதிய அநுராதபுரம் GS இல் 2x50MVAr மின் உலையின் நிறுவலும் மன்னார் GS இல் 1x50MVAr மின் உலையின் நிறுவலும் | 1,463 | 100.00% | பூர்த்தி அடைந்துள்ளது. |
| | வேகவத்த மின்தொகுப்பு உபமின் நிலையத்தின் நிருமாணம் (2x45MVA T/F with DBB) | 1,898 | 99.00% | 2023 டிசெம்பர் |
| | களனிதிஸ்ஸ 132kV GIS இன் விரிவாக்கம் | 464 | 98.00% | 2024 மார்ச் |

| | | | | |
|---|---|---|---|---|
| | புதிய பொல்பிட்டிய ஆளியிடல் நிலையத்தில் இரண்டு 220 kV இரட்டை பஸ்பார்கள் கொண்ட மின் பரிமாற்ற மார்க்க நுழைவுவழியின் நிருமாணம் | 291 | 100.00% | பூர்த்தி அடைந்துள்ளது. |
| | கொட்டுகொட விருத்தியாக்க வேலை | 73 | 100.00% | பூர்த்தி அடைந்துள்ளது. |
| | பலாங்கொடை விருத்தியாக்க வேலை | 67 | 55.00% | 2025 பெப்ரவரி |
| | அத்துருகிரிய விருத்தியாக்க வேலை | 15 | 100.00% | பூர்த்தி அடைந்துள்ளது. |
| | ரத்மலானை மின்தொகுப்பு உபமின் நிலையத்தில் இரண்டு 33kV ஊட்டி நுழைவுவழிகளின் நிருமாணம் | 148 | 100.00% | பூர்த்தி அடைந்துள்ளது. |
| | ரன்தம்பே ஆளி முற்றத்தில் 220kV GIS இன் நிருமாணம் | 2,809 | 6.00% | 2026 டிசெம்பர் |
| | விக்டோரியா PP இல் ஒரு 220kV 1 1/2 பிரிகலன் முறைமையின் நிருமாணம் | 229 | 80.00% | 2025 ஏப்ரல் |
| | ரந்தெனியவில் (உமா ஓயா நீர் மின்வலுச் செயற்றிட்டம்) 132kV ஆளி முற்றத்தின் நிருமாணம் | 350 | 100.00% | பூர்த்தி அடைந்துள்ளது. |
| | அம்பாறை GS இல் 132kV ஒற்றை பஸ் பார் மின் பரிமாற்ற மார்க்க நுழைவு வழியின் நிருமாணம் | 85 | 8.00% | 2025 மார்ச் |
| | 14 GS களில் உள்ள பழைய நிலையான இடைமாற்றுகளின் மாற்றீடு | 212 | 28.00% | 2025 மார்ச் |
| | மத்துகம GS பகுதியில் உள்ள 33kV இன் புனர்நிர்மாணம் | 595 | 9.00% | 2025 டிசெம்பர் |
| | ஆனியகந்த GS இல் விருத்தியாக்கம் | 353 | 14.00% | 2025 டிசெம்பர் |
| | சுன்னாகம் GS இல் விருத்தியாக்கம் | 610 | 14.00% | 2025 டிசெம்பர் |
| | நடுக்குடா GS இல் விருத்தியாக்கம் | 1,526 | 5.00% | 2025 செப்ரெம்பர் |
| | குக்குளேகங்கை ஆளி முற்றத்தின் விருத்தியாக்கம் | 306 | 3.00% | 2025 ஆகஸ்ட் |
| | புதிய அநுராதபுரம் GS இன் விருத்தியாக்கம் | 600 | 3.00% | 2025 யூன் |
| மின் பரிமாற்றச் செயற்றிட்டங்கள் | **பொருள்களின் பெறுகை** மின் பரிமாற்ற வலையமைப்புத் தேவைகளுக்கான பாகங்கள் மற்றும் கருவிகளாக பொருள்கள் / உபகரணங்களின் பெறுகை - சம்பூர் கப்பல்துறை மின் பரிமாற்ற அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கீழான பொதி 4,5,6,10, 11 | 4,381 | 98.00% | 2025 மார்ச் |
| | பூநகரி - கிளிநொச்சி 220kV D/C மின் பரிமாற்ற மார்க்கத்தின் நிருமாணத்திற்கான ஆரம்ப வேலைகள் PSRSP-Ph-02-OU2 | 3,400 | 12% | 2025 டிசெம்பர் |

| | | | | |
|---|---|---|---|---|
| மின்வலு முறைமையை வலுப்படுத்தல் மற்றும் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி ஒருங்கிணைப்புச் செயற்றிட்டம் | பொதி 4A: ADB இன் கடன்கள் 3483-SRI மற்றும் 3585-SRI இன் பொதிகள் 4, 6, 10, 12 இன் கீழான "மின் பரிமாற்ற வலையமைப்புத் தேவைகளுக்கான பாகங்கள் மற்றும் கருவிகளாக" பொருள்களின் பெறுகை" | 3,633 | விலைமனு காலப் பகுதிக்குள் | 2025 |

## இ. மின்சார விநியோக அபிவிருத்திகளுக்கான நிகழ்ச்சித்திட்டங்களும் முன்னேற்றமும்

மின்சார விநியோக அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான நிகழ்ச்சித்திட்டங்களும் முன்னேற்றமும் அட்டவணை 2.6 இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.6**
**மின்சார விநியோக அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான நிகழ்ச்சித்திட்டங்களும் முன்னேற்றமும**

| தொடர்பு | நடவடிக்கை | அலகு | DD1 | | | DD2 | | | DD3 | | | DD4 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 2024 இலக்கு | 2024 இன் முன்னேற்றம் (சனவரி - ஆகஸ்ட்) | முன்கணிப்பு 2025 | 2024 இலக்கு | 2024 இன் முன்னேற்றம் (சனவரி - ஆகஸ்ட்) | முன்கணிப்பு 2025 | 2024 இலக்கு | 2024 இன் முன்னேற்றம் (சனவரி - ஆகஸ்ட்) | முன்கணிப்பு 2025 | 2024 இலக்கு | 2024 இன் முன்னேற்றம் (சனவரி - ஆகஸ்ட்) | முன்கணிப்பு 2025 |
| 1 | இடைநிலை மின்னழுத்த கோபுரம் | கி.மீ. | 11 | 1 | 12 | 60 | 26 | 66 | 19 | 6 | 26 | 11 | 4 | 7 |
| 2 | இடைநிலை மின்னழுத்த தூண் (Lynx, Racoon, Elm & UG) | கி.மீ. | 105 | 49 | 142 | 222 | 124 | 154 | 36 | 13 | 67 | 50 | 34 | 61 |
| 3 | இடைநிலை மின்னழுத்த தூண் (ABC) | கி.மீ. | 20 | 0 | 10 | 5 | 3 | 6 | 2 | 0 | 8 | 8 | 5 | 9 |
| 4 | தாழ்நிலை மின்னழுத்தம் (ABC) | கி.மீ. | 74 | 34 | 94 | 394 | 136 | 350 | 141 | 128 | 167 | 35 | 20 | 41 |
| 5 | நிறைவு செய்யப்பட வேண்டியுள்ள இடைநிலை மின்னழுத்த மீள்-கடத்தல் மற்றும் மாற்றல் (மின்கோபுரம்) | கி.மீ. | 4 | 0 | 12 | 10 | 0 | 3 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 6 | நிறைவு செய்யப்பட வேண்டியுள்ள இடைநிலை மின்னழுத்த மீள்-கடத்தல் மற்றும் மாற்றல் (தூண்) | கி.மீ. | 65 | 31 | 174 | 97 | 25 | 110 | 53 | 31 | 12 | 18 | 10 | 25 |
| 7 | நிறைவு செய்யப்பட வேண்டியுள்ள தாழ் மின்னழுத்த மாற்றல் (கடல் வழி ABC) | கி.மீ. | 310 | 28 | 275 | 650 | 274 | 555 | 606 | 67 | 134 | 410 | 218 | 408 |

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | நிருமாணிக்கப்பட வேண்டியுள்ள விநியோக உபமின் நிலையங்கள் (விநியோகம்/ வளையம்/ சுற்றளவு/மீள் விநியோகம்) | எ/ கை | 215 | 164 | 333 | 490 | 222 | 362 | 110 | 77 | 84 | 100 | 666 | 93 |
| 9 | நிருமாணிக்கப்பட வேண்டியுள்ள முதன்மை உபமின் நிலையம் | எ/ கை | 3 | 1 | 1 | 3 | 0 | 3 | 1 | 1 | 0 | 1 | 1 | 3 |
| 10 | விருத்தி செய்ய வேண்டியுள்ள முதன்மை உபமின் நிலையம் | எ/ கை | 5 | 3 | 2 | 3 | 2 | 1 | 0 | 0 | 0 | 1 | 0 | 0 |
| 11 | நிருமாணிக்க வேண்டியுள்ள தாங்குசட்டங்கள் | எ/ கை | 6 | 1 | 5 | 16 | 8 | 18 | 11 | 3 | 6 | 1 | 1 | 4 |
| 12 | விருத்தி செய்ய வேண்டிய / திருத்தப்பட வேண்டிய தாங்குசட்டங்கள் | எ/ கை | 2 | 0 | 1 | 11 | 1 | 6 | 0 | 0 | 0 | 1 | 0 | 0 |
| 13 | நிறுவப்பட வேண்டிய தன்னியக்க மீள்மூடுகைகள் (புதிய தாங்குசட்டங்கள் தவிர்ந்த) | எ/ கை | 22 | 8 | 14 | 37 | 31 | 40 | 15 | 7 | 20 | 14 | 5 | 13 |
| 14 | ஏனையவை (குறிப்பிடுக) | எ/ கை | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 6 | 2 | 10 |

## 4. நிறுவனத்தின் நிதி நிலைமை

2024 ஒக்டோபர் 31 இல் முடிவடைந்த பத்து மாத காலப்பகுதிக்கான ஒரு நிகர இலாபமாக ரூபா 113.3 பில்லியனை (துணை நிறுவனங்களின் விற்பனையில் இருந்தான ஆதாயங்கள் தவிர்ந்த) இ.மி.ச. அறிக்கையிட்டுள்ளது. கடந்த தசாப்தத்திற்கும் மேலாக வீழ்ச்சியடைந்திருந்த இ.மி.ச. இன் நிதிச் செயலாற்றுகையின் மேம்பாடானது திருத்தப்பட்ட மற்றும் காலாண்டிற்கு ஒரு முறை மீளாய்வு செய்யப்பட்ட செலவைப் பிரதிபலிக்கும் விதிப்பனவுக் கட்டமைப்பு ஒன்றின் நடைமுறைப்படுத்தலுக்கு பெருமளவில் காரணமாக அமைந்தது.

நீர்மின் வெளியீட்டை அதிகரித்து, நிலக்கரி மற்றும் எரிபொருள் விலைகளைக் குறைத்ததன் மூலம் உந்தப்பட்ட நேரடி மின் பிறப்பாக்கச் செலவுகளின் கணிசமான குறைப்பானது நிகர இலாபத்தை வலுப்படுத்துவதில் ஒரு முக்கிய வகிபாகத்தை ஆற்றியது. மேலும், வீழ்ச்சியடைந்திருந்த நாட்டின் பொருளாதாரம் படிப்படியாக மீண்டெழுவது சக்தித் தேவையில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தி, ஒட்டுமொத்த வருமான வளர்ச்சிக்கும் பங்களிப்புச் செய்தது.

கடந்த காலத்தில், செலவைப் பிரதிபலிக்கும் விதிப்பனவொன்று இல்லாமை மற்றும் நோய்த்தொற்று காரணமாக சேகரிப்புச் செயன்முறையில் காணப்பட்ட இடையூறுகள் என்பன இ.மி.ச. இன் காசுப் பாய்வைக் கடுமையாகப் பாதித்தது. இது இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC) உள்ளிட்ட பிரதான வழங்குநர்களுக்கான கொடுப்பனவுகளைத் தாமதப்படுத்தியது. இந்தத் தாமதங்கள், வட்டிக் கொடுப்பனவுகள் அதிகரிக்க காரணமாக அமைந்தன. எவ்வாறாயினும், செலவைப் பிரதிபலிக்கும் விதிப்பனவொன்றை

நடைமுறைப்படுத்தியதைத் தொடர்ந்து, இ.மி.ச. இன் காசுப் பாய்வு மேம்பாடு அடைந்தது. இது இ.மி.ச. இன் மரபார்ந்த கடன்களின் ஒரு பகுதியைத் தீர்ப்பதற்கு உதவியது. இது தாமதக் கட்டணங்களால் ஏற்படும் செலவுகளைக் கணிசமானளவு குறைத்தது. மேலும், வட்டி வீதங்களின் சரிவானது வட்டியைத் தாங்கும் கடன்கள் மற்றும் கடன் பெறுகைகள் மீதான நிதிச் செலவுகளை மேலும் குறைத்தது.

## 5. 2025 ஆம் ஆண்டின் எதிர்காலத் திட்டங்கள்

**அட்டவணை 2.7**

**மின்சார உற்பத்தி திட்டங்கள்**

| இல | செயற்றிட்டம் / நிகழ்ச்சித்திட்டம் | முன்னேற்றம் | பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்படும் திகதி |
|---|---|---|---|
| 1 | தேசிய முறைமை கட்டுப்பாட்டு நிலையத்தில் மீள்புதுப்பிக்கத்தக்க சக்திக் கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு மேசை | நிதி உறுதி செய்யப்பட்டுள்ளது. RFP ஆவணத் தயாரிப்பு தொடங்கப்பட வேண்டியுள்ளது. | 2026 |
| 2 | 600 MW உந்தும் சேமிப்பக மின்வலு ஆலை - மாகோ | சாத்தியவள ஆய்வு நிறைவு செய்யப்பட்டுள்ளது. செயற்றிட்டம் NPD அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | 2034 |

**அட்டவணை 2.8**

**மின்பரிமாற்றல் திட்டங்கள்**

| செயற்திட்டங்கள் | பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப் படும் ஆண்டு | மொத்தச் செலவு மதிப்பீடு (ரூபா மில்லியன்) | 2025 ஆம் ஆண்டிற்காக தேவைப்படும் நிதி (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|
| பிரதிப் பொது முகாமையாளர் (மின் பரிமாற்றச் செயற்றிட்டங்கள்) | 2027 | 12,863 | 1,950 |
| **CEATP -1**<br>துண்டம் – A<br>I. புதிய ஹபரணை SS தொடக்கம் கப்பல்துறை GS வரை 77 km நீளமான 220 kV இரட்டைச் சுற்று மின் பரிமாற்ற மார்க்கத்தின் நிருமாணம் | | | |
| துண்டம் – B<br>I. புதிய ஹபரணை 220/132 kV ஆளியிடல் நிலையத்தின் விருத்தியாக்கம் (2x220 kV மின் பரிமாற்ற மார்க்கத்தின் நுழைவுவழிகள்) | | | |
| II. கப்பல்துறை 220/33 kV மின்தொகுப்பு உபமின் நிலையத்தின் திருத்தம் | | | |
| **CEATP- II**<br>துண்டம் A - (i) 132/33 kV 2 X 31.5 MVA வெலிமட மின்தொகுப்பு உபமின் நிலையத்தின் நிருமாணம் | 2027 | 16,674 | 1,668 |
| (ii) 132/33 kV 2 X 31.5 MVA கீரியங்கல்லிய மின்தொகுப்பு உபமின் நிலையத்தின் நிருமாணம் | | | |
| (iii) புதிய சிலாபம் GS இன் விருத்தியாக்கம் | | | |
| (iv) புத்தளம் GS இன் விருத்தியாக்கம் | | | |
| (v) பதுளை மற்றும் லக்ஷபான GS இன் விருத்தியாக்கம் | | | |
| (vi) சமனலவெவ மற்றும் எம்பிலிப்பிட்டிய GS இன் விருத்தியாக்கம் | | | |
| துண்டம் B - (i) சமனலவெவ - எம்பிலிப்பிட்டிய 132kV TL இன் கொள்ளளவை மேம்படுத்தல் | | | |
| (ii) 74.5 km பதுளை - லக்ஷபான 132kV TrL இன் கொள்ளளவை மேம்படுத்தல் | | | |
| துண்டம் C - புத்தளம் - புதிய சிலாபம் 132kV TL இன் புனரமைப்பு | | | |

| | | | |
|---|---|---|---|
| **SKTDP**<br>சம்பூர் - கப்பல்துறை 220 kV இரட்டைச் சுற்று TL இன் நிருமாணம் மற்றும் சம்பூரில் 220/33kV சேகரிப்பானின் நிருமாணம் | 2026 | 7,896 | 7,106 |
| **PSRSP : கட்டம் II P 2 - OU 01**<br>வாரியப்பொல 220/132kV SS இன் நிருமாணம், வாரியப்பொல - குருநாகல் 132 kV இரட்டைச் சுற்று 22 km TL இன் நிருமாணம், ஹபரணை வெயாங்கொடை 220kV TL தொடக்கம் வாரியப்பொல SS (3 km) வரை இரட்டை உள் - வெளி இணைப்பு நிருமாணம், குருநாகல் 132 kV GS இன் விருத்தியாக்கம் | 2027 | 7,710 | 771 |
| **PSRSP : கட்டம் II P 2 - OU 02**<br>(i) ஏக்கல 132/ 33 kV GS, 4 km தூரமான கொட்டுகொட தொடக்கம் களனி வரை 132 kV TL இன் இரட்டை உள் மற்றும் வெளி இணைப்பு | 2027 | 3,897 | 556 |
| (ii) முன்மொழியப்பட்ட யக்கல GS இற்கு யக்கல 132/33 kV GS, 132 kV இரட்டைச் சுற்று TL அண்ணளவாக 10 km - கிரிந்திவெல GS | | 3,226 | 479 |
| **PSRSP : கட்டம் II P 2 - OU 03**<br>132/11 kV கண்டி நகர் GS இன் நிருமாணம், கண்டி நகர் GS இற்கான 6 km TL இன் நிருமாணம் மற்றும், கிரிபத்கும்புர மற்றும் உக்குவளை GS களின் விருத்தியாக்கம் | 2027 | 6,150 | 900 |
| 132/33kV, 31.5MVA வெலிகம GS இன் நிருமாணம் | 2027 | 3,824 | 520 |
| மன்னார் - வவுனியா 220 kV மின் பரிமாற்ற மார்க்க கடத்தியின் மேம்படுத்தல் | 2026 | 690 (with Taxes) | 460 |
| GCT மற்றும் DLRP கொழும்பு நகர் மின் பரிமாற்ற வலையமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டம் - கட்டம் 2 | 2027 | 30,295 | - |
| 2xZebra உடன் பன்னிப்பிட்டிய - பாணந்துறை 132 kV மின் பரிமாற்ற மார்க்கத்தின் நிருமாணம் | 2027 | 2,020 | 406 |
| 2xZebra உடன் பாணந்துறை T - மத்துகம 132kV மின் பரிமாற்ற மார்க்கத்தின் நிருமாணம் | 2027 | ,766 | 734 |
| Zebra உடன் லக்ஷபான - விமலசுரேந்திர 132 kV மின் பரிமாற்ற மார்க்கத்தின் நிருமாணம் | 2027 | 683 | 181 |
| Zebra உடன் பலாங்கொடை - தெனியாய - காலி 132 kV மின் பரிமாற்ற மார்க்கத்தின் நிருமாணம் | 2027 | 6,439 | 1,708 |
| பாதுக்க GSS இல் 300 Mvar STATCOM அலகின் நிறுவல் | 2027 | 11,290 | 2,994 |
| தெஹிவளை - இரத்மலானை 132 kV நிலத்தடி கம்பிவட நிருமாணம் | 2027 | 4,679 | 1,241 |
| 4xMoose உடன் புதிய ஹபரணை - வவுனியா - N - சேகரிப்பான் (220 kV செயற்பாட்டுக் கட்டம்) மின் பரிமாற்ற மார்க்கம் | 2027 | 36,067 | 9,565 |
| Zebra உடன் புதிய லக்ஷபான - பலாங்கொடை 132 kV மின் பரிமாற்ற மார்க்கத்தின் புனரமைப்பு | 2027 | 2,845 | 2,264 |
| Zebra - லக்ஷபான தொகுதிக்கான 132 kV Lynx மின் பரிமாற்ற மார்க்கங்களின் கொள்ளளவு மேம்பாடு | 2027 | 1,444 | 383 |
| வெலிகம 132/33 kV மின்தொகுப்பு உபமின் நிலையத்தின் நிருமாணம் | 2027 | 2,423 | 643 |
| புதிய ஹபரணை - PSPP - கிரிந்திவெல 400 kV மின் பரிமாற்ற வலையமைப்பின் அபிவிருத்தி | 2027 | 35,335 | 9,371 |
| துல்ஹிரிய கொள்ளளவி வைப்பகங்களின் மாற்றீடு | 2027 | 154 | 123 |

# அத்தியாயம் 03

# வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்

## 1. அறிமுகம்

வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம் (டுநுஊழு) ஆனது 1982 ஆம் ஆண்டின் கம்பனிகள் சட்ட இலக்கம் 17 மற்றும் 2007 ஆம் ஆண்டின் கம்பனிகள் சட்ட இலக்கம் 07 ஆகியவற்றின் கீழ் 1983 ஆம் ஆண்டில் இணைக்கபட்ட ஒரு வரையறுக்கப்பட்ட பொறுப்பு நிறுவனமாகும். இதன் முதன்மை நோக்கமானது நீர்கொழும்பிலிருந்து காலி வரையான இலங்கையின் மேற்கு கரையோரப் பகுதியில் பிரதான பொருளாதார வலயத்தை உள்ளடக்கிய அதன் உரிமையுடைய பகுதிக்குள் மின்சாரத்தை விநியோகிப்பதாகும். LECO ஆனது 600,000 இற்கும் மேற்பட்ட நுகர்வோருக்கு சேவை வழங்குகிறது. பின்னர், 2009 ஆம் ஆண்டின் மின்சாரச் சட்ட இலக்கம் 20 இன் மூலம், நிறுவனத்திற்கு விநியோக உரிமம் வழங்குவதன் மூலம் LECO பொதுப் பயன்பாடுகள் ஆணையத்தின் ஒழுங்குமுறை களத்தில் கொண்டுவரப்பட்டது.

## 2. எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அத்தகைய சவால்களை எதிர்கொள்வதில் ஏற்றுக் கொள்ளப்பட்ட மூலோபாயங்கள்

### I. பணியாளர்களின் கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் செயல்பாடுகளை மேம்படுத்துதல்

பணியாளர் வெற்றிடங்களை நிரப்புவதில் அரசாங்கத்தின் கட்டுப்பாடுகள் காரணமாக, LECO குறைந்த பணியாளர்களுடன் செயல்பாடுகளைப் பராமரிப்பதில் குறிப்பிடத்தக்க சவாலை எதிர்கொண்டது. பதிலுக்கு, LECO அதன் செயல்முறைகள் மற்றும் பணிப்பாய்வுகளை மறுபரிசீலனை செய்து தேவையான மாற்றங்களை அடையாளம் கண்டு, சிறிய குழுவுடன் நிறுவனத்தை திறம்பட செயற்படுத்துகிறது. இந்த அணுகுமுறையானது தொடர்ச்சியாக பணிகள் நடைபெறுவதை உறுதி செய்தது மட்டுமல்லாமல், வழக்கமான மேலதிக பணியாளர் ஆட்சேர்ப்பிற்கு அவசியமில்லாமல் ஒட்டுமொத்த செயல்திறனையும் மேம்படுத்தியது.

### II. குறுஞ்செய்தி முறையிலான கட்டணம் செலுத்துதல் மற்றும் காகிதமற்ற செயற்பாடுகளுக்கு மாறுதல்

அதிக பொருள் மற்றும் அச்சிடும் செலவு காரணமாக, நிறுவனம் ஆனது குறுஞ்செய்தி முறையிலான கட்டணம் செலுத்தும் முறைமைக்கு வெற்றிகரமாக மாறியது, அச்சிடப்பட்ட பில்களின் தேவையை நீக்கியது. இந்த மாற்றம் வாடிக்கையாளர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றது மட்டுமல்லாமல், 98% இற்கும் அதிகமான நுகர்வோர் குறுஞ்செய்தி முறையிலான கட்டணம் செலுத்துதலுக்குப் பதிவு செய்துள்ளனர், ஆனால் இது குறிப்பிடத்தக்க வெளிநாட்டு நாணய சேமிப்பு மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மைக்கு பங்களிக்கிறது. மேலதிகமாக, LECO ஒரு காகிதமில்லாத அலுவலகக் கருத்தை நோக்கி முன்னேறி வருகிறது, நிறுவனத்தின் பணிப்பாய்வு அமைப்பு வெற்றிகரமாக ஊழியர்களால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

### III. மேம்பட்ட விநியோக முகாமைத்துவ முறைமையை உருவாக்குதல்

மேம்பட்ட விநியோக முகாமைத்துவ முறைமையில் (ADMS) பல்வேறு தனியுரிம நெறிமுறைகளை ஒருங்கிணைக்கும் போது எதிர்கொள்ளும் குறிப்பிடத்தக்க சவால்களில் ஒன்று, பல்வேறு உற்பத்தியாளர்களிடமிருந்து பல்வேறுபட்ட முறைமைகள் மற்றும் சாதனங்களுக்கு இடையே தடையற்ற தொடர்பு மற்றும் இயங்குதன்மையை உறுதி செய்வதாகும். இந்த தனியுரிம

நெறிமுறைகள் பெரும்பாலும் தனித்துவமான விவரக்குறிப்புகளுடன் வருகின்றமையால் விநியோக வலையமைப்பில் உள்ள அனைத்துக் கூறுகளையும் திறமையாக நிர்வகிக்கவும் கட்டுப்படுத்தவும் ஒரு ஒருங்கிணைந்த தளத்தை உருவாக்குவது கடினமாகின்றது.

இந்தச் சவாலைச் சமாளிக்க, தனிப்பயன் மிடில்வேர் தீர்வுகளை உருவாக்க, இந்த தனியுரிம நெறிமுறைகளை ADMS இனால் புரிந்துகொள்ளக்கூடிய பொதுவான மொழியில் மொழிபெயர்த்து ஒத்திசைக்கக்கூடிய எங்கள் in-house development திறன்களைப் பயன்படுத்தினோம். இந்த அணுகுமுறையானது, ADMS இல் விரிவான மாற்றங்கள் தேவைப்படாமல் வலையமைப்பில் அறிமுகப்படுத்தப்படும்போது புதிய சாதனங்கள் மற்றும் அமைப்புகளை ஒருங்கிணைக்கும் திறன் கொண்ட, மேலும் அளவிடக்கூடிய மற்றும் பல்துறை தளத்தை உருவாக்க எங்களுக்கு அனுமதித்தது.

### IV. ஸ்மார்ட் டேட்டா முகாமைத்துவ மையத்தை நிறுவுதல்

ஸ்மார்ட் டேட்டா முகாமைத்துவ மையத்தை (SDMC) நிறுவியது, எங்கள் வலையமைப்பு கண்காணிப்பு சாதனங்கள் மற்றும் ஸ்மார்ட் மீட்டர்கள் மூலம் உருவாக்கப்பட்ட பரந்த தரவை நிர்வகிப்பதில் ஒரு முக்கியமான முன்னேற்றம் ஆகும். இந்தச் செயல்பாட்டில் மிக முக்கியமான சவால்களில் ஒன்று, இந்த உணரி(சென்சார்) வலையமைப்புகளால் உருவாக்கப்பட்ட தரவின் வரையறை அளவு மற்றும் வேகத்தைக் கையாள்வதாகும். செயல்பாட்டுத் திறனை மேம்படுத்துவதற்கும், கிரிட் நிர்வாகத்தை மேம்படுத்துவதற்கும், வாடிக்கையாளர் சேவையை மேம்படுத்துவதற்கும் இந்தத் தரவு மதிப்புமிக்கது. எவ்வாறாயினும், இந்தத் தரவை நிகழ்நேரத்தில் திறம்பட செயலாக்குதல், சேமித்தல் மற்றும் பகுப்பாய்வு செய்வதன் மூலம் செயல்படக்கூடிய நுண்ணறிவுகளை உருவாக்குவதே உண்மையான சவால் ஆகும்.

இதனைச் சமாளிக்க, SDMC இற்குள் ஒரு வலுவான தரவு கட்டமைப்பை உருவாக்குவதில் கவனம் செலுத்தினோம். அதன் வெற்றிகரமான செயற்படுத்துதலின் மூலம், SDMC இப்போது இந்தத் தரவைத் திறமையாக நிர்வகிக்கவும் பயன்படுத்தவும் உதவுகிறது, மேலும் எங்கள் செயல்பாட்டுத் திறன்களை கணிசமாக மேம்படுத்துகிறது. ஸ்மார்ட் மீட்டர் நிறுவல்கள், ரிமோட் துண்டிப்புகள் மற்றும் நிகழ்நேர நெட்வொர்க் கண்காணிப்பு போன்ற முக்கிய செயல்முறைகளை தானியக்கமாக்குவதில் மையம் முக்கிய பங்கு வகிக்கிறது, இதன் மூலம் கைமுறையான தலையீட்டின் தேவையை குறைக்கிறது மற்றும் எங்கள் கிரிட் செயல்பாடுகளின் வினைத்திறனை பெரிதும் மேம்படுத்துகிறது.

## 3. 2024 இல் அபிவிருத்தி செயற்திட்டங்கள் மற்றும் செயல்பாடுகளின் முன்னேற்றம்

நிறுவனத்தின் முன்னேற்ற நிலைகள் ஆனது எங்களின் செயல்திறன் மற்றும் பங்குதாரர்களுக்கு உயர்தர சேவையை வழங்குவதற்கான அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகிறது

**செயற்திட்டங்கள் மற்றும் முன்னேற்றம்**

**செயற்பாடுகள்:**

- 70,000 ஸ்மார்ட் மீட்டர்கள் நிறுவப்பட்டு, மொத்த மீட்டர் மக்கள்தொகையில் 10% இற்கும் அதிகமான மக்களை உள்ளடக்கியது, தொலைநிலை கண்காணிப்பு திறன்கள் மூலம் ஆற்றல் மற்றும் கடன் நிர்வாகத்தை மேம்படுத்துகிறது.
- முக்கிய செயல்முறைகளை தானியக்கமாக்குவதற்கும், கையேடு பிழைகளைக் குறைப்பதற்கும், நிர்வாகத் திறனை அதிகரிப்பதற்கும் மனித வள தகவல் அமைப்பு (HRIS) மேம்படுத்தப்பட்டது.
- விநியோக இழப்புகளைக் குறைப்பதன் மூலம் மின்சார விநியோக செயல்திறனை மேம்படுத்துவதற்கான தொடர்ச்சியான

முயற்சிகள், ஒழுங்குமுறை அளவுகோல்களுக்கு இணங்குவதை உறுதி செய்தல்.

- தொடர்பு முறிவுகளுக்கான (breakdowns) ஒருங்கிணைந்த செயல்பாடுகளை அறிமுகப்படுத்தி, அதன் மூலம் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்துவதன் மூலம் உகந்த பணியாளர்களை வரிசைப்படுத்துதல்.
- சேவை வழங்கலை மேம்படுத்த புதிய இணைப்புகள் உட்பட வாடிக்கையாளர் சேவை கோரிக்கைகளுக்கான செயலாக்க நேரம் குறைக்கப்பட்டது.

**அபிவிருத்திகள்:**

- இட-பில்லிங் வாடிக்கையாளர் எண்ணிக்கை ஆனது தொடர்ந்து அதிகரித்துக்கொண்டு வருகிறது, இப்போது 38,000 பதிவு செய்யப்பட்ட பயனர்களைத் தாண்டியுள்ளது.
- கிளை மற்றும் வாடிக்கையாளர் சேவை மையங்களில் உள்ள அனைத்து உள் செயல்முறைகளும் உற்பத்தித்திறனை அதிகரிக்க மறுவடிவமைக்கப்பட்டுள்ளன, மாற்றியமைக்கப்பட்ட பணிப்பாய்வுகள் அனைத்து இடங்களிலும் செயல்படுத்தப்படுகின்றன.
- வருவாய் சேகரிப்பை மேலும் மேம்படுத்த LECO Self Payment Kiosk வலையமைப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.
- ADB நிதியுதவியின் கீழ் நம்பகத்தன்மை அபிவிருத்திச் செயற்திட்டம் (Reliability Enhancement Project) ஆரம்பிக்கப்பட்டது, இது மின் அமைப்பின் நம்பகத்தன்மையை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது, இதில் 33kV விநியோக மின்னழுத்தம் மற்றும் புதிய 132/33 kV கிரிட் துணை மின்நிலையம் ஆகியவை அடங்கும்.

## 4. நிறுவனத்தின் நிதி நிலை:

**அட்டவணை 3.1**

**2019 முதல் 2024 வரையிலான நுகர்வோர், பணியாளர் மற்றும் நிதியியல் தரவுகள்**

| | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 பாதீடு | 2024 உண்மையானன YTD – ஜூலை |
|---|---|---|---|---|---|---|---|
| நுகர்வோர் (பட்டியலிடப்பட்ட) | 568,250 | 576,279 | 591,888 | 594,000 | 597,546 | 612,757 | 600,719 |
| விற்பனை GWh | 1,647 | 1,624 | 1,603 | 1,560 | 1,583 | 1,654 | 992 |
| பணியாளர்களின் எண்ணிக்கை | 1,535 | 1,527 | 1,505 | 1,443 | 1,427 | 1,450 | 1,408 |
| நுகர்வோர் / பணியாளர் விகிதம் | 370 | 377 | 393 | 412 | 419 | 423 | 427 |
| விநியோக இழப்புகள் (11 Kv) % | 1.61% | 1.34% | 1.94% | 1.49% | 4.01% | 3.99% | 3.43% |
| வருமானம் ரூ மில்லியன் | 32,461 | 30,709 | 32,201 | 38,587 | 72,510 | 93,994 | 68,363 |
| செயல்பாடுகளிலிருந்து இலாபம் ரூ மில்லியன் | 543 | 1,543 | 4,328 | 991 | 4,129 | 3,347 | 7,694 |
| ஆண்டுக்கான இலாபம் ரூ மில்லியன் | 2,687 | 1,792 | 3,248 | 1,954 | 4,195 | 3,360 | 4,185 |
| மொத்த பங்கு ரூ மில்லியன் | 33,537 | 34,792 | 38,419 | 40,687 | 45,435 | 48,795 | 47,693 |
| மொத்த கடன் பொறுப்புகள் ரூ மில்லியன் | 13,960 | 12,630 | 14,202 | 12,015 | 21,708 | 21,705 | 28,182 |
| மொத்த சொத்துகள் ரூ மில்லியன் | 47,497 | 47,422 | 52,621 | 52,702 | 67,143 | 70,500 | 75,875 |

## 5. 2025 இற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள்

- **வலையமைப்பு அபிவிருத்தி (Network Development):**

கிரிட் நம்பகத்தன்மையை மேம்படுத்த ADB நிதியுதவியின் கீழ் நம்பகத்தன்மை மேம்பாடு திட்டம், 33kV விநியோக மின்னழுத்தமாக அறிமுகப்படுத்துதல் மற்றும் புதிய 132/33 kV மின்சார கட்டமைப்பு

துணை மின்நிலையங்களை நிறுவுதல் உட்பட, மின்சார கட்டமைப்பு உட்கட்டமைப்பில் குறிப்பிடத்தக்க மேம்படுத்தல்களை மையமாகக் கொண்டு ஆரம்பிக்கப்படும். இந்த மேம்படுத்தல்கள், மின்சார கட்டமைப்பு நம்பகத்தன்மையை மேம்படுத்துதல், மின்வெட்டுகளின் அதிர்வெண் மற்றும் கால அளவைக் குறைத்தல், மேலும் நிலையான மற்றும் மீள்தன்மையுடைய மின்சார விநியோகத்தை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளன. ADB நிதியுதவியால் ஆதரிக்கப்படும் இந்தத் செயற்திட்டமானது, குறிப்பாக விரைவான வளர்ச்சியை அனுபவிக்கும் பகுதிகளில் நம்பகமான மின்சாரத்திற்கான அதிகரித்து வரும் தேவையைப் பூர்த்தி செய்வதில் முக்கியமானதாக இருக்கும். அதிக திறன் கொண்ட சுமைகளுக்கு, குறிப்பாக தொழில்துறை மற்றும் வணிகத் துறைகளில் மின்சாரத்தின் கிடைக்கும் தன்மை மற்றும் நம்பகத்தன்மையை மேம்படுத்த 33kV வலையமைப்பு மின்னழுத்தத்தை பயன்படுத்த LECO திட்டமிட்டுள்ளது. வலையமைப்பின் திறனை அதிகரிப்பதன் மூலம், அதிக ஆற்றல் கொண்ட பயனர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய LECO சிறப்பாகப் பொருத்தப்பட்டிருக்கும், அதன் சேவைப் பகுதிகள் முழுவதும் மிகவும் சீரான மற்றும் நம்பகமான மின்சார விநியோகத்தை உறுதி செய்யும். வலையமைப்பின் திறனை அதிகரிப்பதன் மூலம், அதிக ஆற்றல் கொண்ட பயனர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய LECO சிறப்பாகப் பொருத்தப்பட்டிருக்கும், அதன் சேவைப் பகுதிகள் முழுவதும் மிகவும் சீரான மற்றும் நம்பகமான மின்சார விநியோகத்தை உறுதி செய்யும்.

- **வலையமைப்பு இலத்திறனியல் மயமாக்கல் (Network Digitalization):**

மின்மாற்றி அடிப்படையிலான மைக்ரோகிரிட்டை மின் சந்தைகளுடன்(power markets) பரீட்சார்த்தம் செய்ய LECO எதிர்பார்க்கிறது. இந்த முயற்சியானது, மின்மாற்றி அடிப்படையிலான மைக்ரோகிரிட்களை உள்நாட்டு மின் சந்தைகளுடன் ஒருங்கிணைத்து, கிரிட்டின் மீள்தன்மை மற்றும் நம்பகத்தன்மையை மேம்படுத்துவதை உள்ளடக்கும். இந்த மைக்ரோகிரிட்கள் உள்ளூர்மயமாக்கப்பட்ட ஆற்றல் உற்பத்தி மற்றும் நுகர்வுக்கு அனுமதிக்கும், முக்கிய மின்சார கட்டமைப்பு அழுத்தத்தைக் குறைக்கும் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களின் சிறந்த நிர்வாகத்தை செயல்படுத்தும். ஆற்றல் சந்தைகளுடன் ஒருங்கிணைப்பதன் மூலம், மைக்ரோகிரிட்கள் ஆற்றல்(energy) வர்த்தகத்திற்கான வாய்ப்புகளை வழங்கும், நுகர்வோர் மற்றும் உற்பத்தியாளர்களுக்கு அதிக நெகிழ்வுத்தன்மையை வழங்கும் மற்றும் மிகவும் ஆற்றல்மிக்க மற்றும் திறமையான ஆற்றல் சுற்றுச்சூழல் (energy ecosystem) அமைப்புக்குப் பங்களிக்கும்.
வலையமைப்பு இலத்திரனியல் மயமாக்கல்(Network Digitalization), தேவை மேலாண்மை(Demand Management) மற்றும் மீள புதுப்பிக்கத்தக்க சக்தி உறிஞ்சுதல் (Renewable Energy Absorption) ஆகியவற்றை ஆதரிக்க LECO ஒரு Demand Response Pilot Project இனை பரிசோதிக்க எதிர்பார்க்கிறது. இந்தச் செயற்திட்டம் குறிப்பாக உச்ச காலங்களில், ஆற்றல் நுகர்வுகளை விநியோக நிலைமைகளுடன் சீரமைக்கும் மேம்பட்ட தேவை முகாமைத்துவ உத்திகளைச் செயல்படுத்துவதன் மூலம் வலையமைப்பு டிஜிட்டல் மயமாக்கலை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தச் செயற்திட்டம், மிகவும் நெகிழ்வான மற்றும் பதிலளிக்கக்கூடிய சுமை நிர்வாகத்தை அனுமதிப்பதன் மூலம் மீள புதுப்பிக்கத்தக்க

சக்தியின் ஒருங்கிணைப்பை ஆதரிக்கும், அதன் மூலம் கிரிட்டின் நிலைத்தன்மை மற்றும் செயல்திறனை மேம்படுத்துகிறது. தேவைக்குப் பதிலளிக்கும் நடவடிக்கைகளில் நுகர்வோரை ஈடுபடுத்துவதன் மூலம், விலையுயர்ந்த உள்கட்டமைப்பு முதலீடுகளின் தேவையைக் குறைக்கவும், மீள புதுப்பிக்கத்தக்க சக்தி ஆதாரங்களை ஏற்றுக்கொள்வதை ஊக்குவிக்கவும் இந்தச் செயற்திட்டம் உதவும்.

- **உட்கட்டமைப்பு அபிவிருத்தி:**

LECO ஆனது 2025 ஆம் ஆண்டில் செயல்பாட்டுத் தேவைகளுக்கான தலைமை அலுவலகக் கட்டிடம் மற்றும் பிற வளர்ச்சிகள் உள்ளிட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு முன்னுரிமை அளிக்கும். இந்த உள்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்திட்டங்களில் புதிய தலைமை அலுவலகக் கட்டிடம் கட்டி முடிக்கப்படுதல் மற்றும் வாடிக்கையாளர் சேவை மையங்கள் மற்றும் கிளை அலுவலகங்கள் போன்ற கூடுதல் வசதிகளை நிர்மாணித்தல் ஆகியவை அடங்கும். இந்த அபிவிருத்திகள் LECO இன் செயல்பாட்டுத் தேவைகளை ஆதரிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன, வாடிக்கையாளர் சேவை வழங்கலின் செயல்திறன் மற்றும் செயல்திறனை மேம்படுத்துகின்றன. வாடிக்கையாளர்களுக்கு மிகவும் திறம்பட சேவை செய்யும் திறனை LECO மேம்படுத்தும், இந்த உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்வதன் மூலம் விரைவான பதில் நேரங்கள் மற்றும் சேவைகளுக்கு மிகவும் வசதியான அணுகலை வழங்கும்.

- **வாடிக்கையாளர் சேவைகள்:**

இலத்திரனியல் தளங்கள் மற்றும் சட்பொட்களின் (Chat Bots) ஒருங்கிணைப்பு மூலம் வாடிக்கையாளர் சேவைகளை மேம்படுத்துவதன் மூலம் LECO தனது டிஜிட்டல் இருப்பை மெருகூட்டுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. சேவைகளை எளிதாக அணுகவும், சிக்கல்களைத் தீர்க்கவும், 24 மணி நேரமும் ஆதரவைப் பெறவும் வாடிக்கையாளர்களை அனுமதிக்கும் பயனர் நட்பு இலத்திறனியல் இடைமுகங்களை (user-friendly digital interfaces) வழங்குவதன் மூலம் இந்த முயற்சி வாடிக்கையாளர் ஈடுபாடு மற்றும் அணுகல்தன்மையை மேம்படுத்தும். இந்த டிஜிட்டல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதன் மூலம், நவீன எதிர்பார்ப்புகளுடன் சீரமைத்து, தனிநபர் தொடர்புகளின் தேவையைக் குறைத்து, மிகவும் பதிலளிக்கக்கூடிய, திறமையான மற்றும் வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட சேவை அனுபவத்தை வழங்க LECO விரும்புகிறது.

- **செயல்முறைச் செலவு (Process Costing)**

தனிப்பட்ட செயல்பாட்டின் அளவிற்கு வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதற்காக, செயல்முறை செலவு நிறுவனம் முழுவதும் செயல்படுத்தப்படும். நடப்புச் செலவு மையங்கள் அனைத்தும் செயல்முறை நிகழ்வுகளின் அடிப்படையில் கட்டணம் விதிக்கப்படும்.

- **செயற்திறன் முகாமைத்துவம் (Performance Management)**

செயல்திறன் முகாமைத்துவ முறைமை செயல்படுத்தப்படுவதுடன் LECO இல் செயல்திறனின் அளவை அதிகரிப்பதற்கு மேலும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்

# அத்தியாயம் 04

# இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபை (இநிசஅச)

## 1. அறிமுகம்

இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபை (இநிசஅச) மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அபிவிருத்தி, சக்தி முகாமைத்துவம், கொள்கை அபிவிருத்தி மற்றும் நிதிய முகாமைத்துவம் ஆகிய நான்கு முக்கிய பிராதான குறிக்கோள்களுடன் 2007 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 01 ஆம் திகதி நிலைபெறுதகு சக்தி அபிவிருத்தியின் நிமித்தம் முக்கிய தேசிய முகவர் நிலையமாக தாபிக்கப்பட்டுள்ளது. இந்த அதிகார சபை 2007 இன் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபை சட்டத்தினால் கூட்டிணைக்கப்பட்டுள்ளது. இலங்கை 70% மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி உற்பத்தி என்ற இந்த இலக்கை 2030 ஆம் ஆண்டுகாலப் பகுதியில் அடையும் நோக்கில் 2050 ஆம் ஆண்டளவில் காபன் சமநிலை என்ற இலக்கை அடைவதற்கான ஒரு முன்னெடுப்புத்திட்டத்தை ஆரம்பித்துள்ளது. 2020 ஆம் ஆண்டில், ஏற்கனவே 30% ஐ அடைந்தது போல் கணிசமான முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது.

## 2. முக்கியசெயலாற்றுகைக் குறிப்புகள் பற்றிய கண்ணோட்டம்

இஅசஅச 2,114 மெ.வொ. திரண்ட மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி உற்பத்திக் கொள்திறன் நிறுவுகைக்கு வசதி அளிக்கின்ற மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அபிவிருத்திற்கு தொடர்ந்தும் தனது அர்ப்பணிப்பை 2024 ஆம் ஆண்டிலும் செய்துள்ளது. இந்த அடைவு நாட்டின் மொத்த நிலையான சக்தி உற்பத்திக் கொள்திறனில் 50% குறிப்பிடத்தக்க பங்களிப்பைப் பிரதிபலிக்கின்றது. இது முன்னைய ஆண்டு மின் சக்தி உற்பத்தியில் பதிவாகிய 39% வீதத்தில் குறிப்பிடத்தக்கவொரு அதிகரிப்பை சுட்டிக்காட்டுகின்றது. மீளப்புதுப்பிக்கத்தகு சக்திப் பிரிவின் வளர்ச்சி பற்றிய விபரங்கள் உருப்படம் 01 இல் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

**வரைபு 4.1**
**மீளப்புதுப்பிக்கத்தகு சக்திற்கான (மீபுச) மேலதிக திரட்டப்பட்ட திறன் (MW)**



**அட்டவணை 4.1**
**2024 ஆகஸ்டில் உள்ளவாறான பிரதான திட்டங்களின் விபரங்கள்**

| மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி மூலம் | கருத்திட்டங்களுக்கு வழங்கிய தற்காலிக அங்கீகாரங்கள் | | கருத்திட்டங்களுக்கு வழங்கிய சக்தி அனுமதிப்பத்திரங்கள் | | கைச்சாத்திடப்பட்டுள்ள ீயு கருத்திட்டங்கள் | | உத்தியோகபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டுள்ள கருத்திட்டங்கள் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கருத் திட்டங்களின் எண்ணிக்கை | சக்தி உற்பத்திக் கொள்திறன் (மெ. வொ.) | கருத் திட்டங்களின் எண்ணிக்கை | சக்தி உற்பத்திக் கொள்திறன் (மெ. வொ.) | கருத் திட்டங்களின் எண்ணிக்கை | சக்தி உற்பத்திக் கொள்திறன் (மெ. வொ.) | கருத் திட்டங்களின் எண்ணிக்கை | சக்தி உற்பத்திக் கொள்திறன் (மெ. வொ.) |
| சிறிய நீர்வலு | 9 | 6.63 | 1 | 0.70 | 3 | 2.7 | 2 | 3.027 |
| காற்றுசக்தி | 15 | 512.50 | - | - | 1 | 10.0 | - | - |
| சூரியசக்தி (க்றிட் மின்சார முறைமைக்கு இணைக்கப்பட்டுள்ள) | 157 | 2,177.80 | 50 | 222.79 | 49 | 310.9 | 6 | 24.00 |
| சூரிய சக்தி பிவி முறைமை (கூரை மேல்) | 4 | 20.50 | 3 | 9.50 | 1 | 5.0 | - | - |
| உயிரணுத்திணிவு சக்தி (தாவரம்) | | | - | - | 1 | 1.5 | - | - |
| மாநகரத் திண்மக் கழிவு | | | - | - | - | - | - | - |
| **மொத்த மீபு சக்தி (மெ.வொ.)** | **185** | **2,717.43** | **54** | **232.99** | **55** | **330.1** | **8** | **27.027** |

330.1 மெ.வொ. சக்தி உற்பத்திக் கொள்திறனுக்கான SPPA ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டதை அடுத்து மொத்தம் 27.027 மெ.வொ. சக்தி உற்பத்திக் கொள்திறன் உத்தியோகபூர்வமாக சேர்க்கப் பட்டுள்ளது. இது தவிர, ஒரு 233 மெ.வொ. சக்தி உற்பத்திற்கான சக்தி அனுமதிப்பத்திரமும் வழங்கப் பட்டது. 01 ஆம் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளவாறு கருத் திட்டங்களில் 2,717.43 மெ.வொ. சக்தி உற்பத்திக் கொள்திறனின் நிமித்தம் தற்காலிக அங்கீகாரமும் வழங்கப்பட்டது.

## 3 முக்கிய சவால்களுக்கு முகம் கொடுப்பதற்கான மூலோபாயங்கள்

### 3.1 ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்தல்

ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்துவது மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அபிவிருத்தியிலும் மற்றும் சக்தி முகாமைத்துவத்திலும் இன்றையமையாத ஒரு விடயமாகும். சக்தி வினைத்திறன் வாய்ந்த கட்டிடங்கள் தொடர்பான விதிமுறைகளை அனுசரித்தல் மற்றும் நேரடியாக சக்திப் பாவனையை குறைக்கக்கூடிய சக்தித் தகவுதிறன்கள் என்பவற்றை உதாரணமாகக் குறிப்பிடலாம். எனினும், அத்தகைய சிறப்புப் பணிகளை செயற்படுத்தும் விடயம் பயனுள்ள பெறுபேறுகளின்நிமித்தம்ஒழுங்குவிதிகளினால் கட்டாயப் படுத்தப்படுதல் வேண்டும்.

குறிப்பாக இலங்கையில் ஒரு குளிரூட்டிசாதனப் பரிசோதனை ஆய்வு கூடத்தைத் தாபித்தல் போன்ற நன்கொடைத் தரப்பு நிதியிடும் கருத்திட்டங்களை செயற்படுத்துவதற்கான முறையியலில் பல சவால்கள் எதிர்நோக்கப்படுகின்றன. புரிந்துணர்வு ஒப்பந்தத்தை (புஒ) செய்துகொள்ளல் போன்ற நீண்ட நடைமுறை கணிசமானளவில் முன்னேற்றத்திற்கு தடையாகவிருக்கலாம். மேலும், போதிய நிதியிடுகை இல்லாமையும், அநேகமாக புதிய கருத்திட்டங்களை முன்னெடுப்பதிலும், உபகரணங்களுக்கு சக்தி முத்திரையிடுவதற்கு தேவையான உபகரணங்களைப் பெற்றுக்கொள்வதிலும் தாமதங்களுக்கு வழிவகுக்கும். இந்தப் பிரச்சினை விடயங்களை அடையாளப்படுத்தும் பொருட்டு, நெகிழ்தன்மையை மேம்படுத்துவதற்கும் மற்றும் ஒவ்வொரு கலெண்டர் ஆண்டிலும் போதிய வரவுசெலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டை உறுதிசெய்வதற்கும் அரசாங்கக்

கொள்கைகளை மீளாய்வு செய்வது அவசியமாகும். நடைமுறைகளையும் மற்றும் தொடர்ச்சியாக நிதி கிடைத்தலையும் நெறிமுறைப்படுத்தி, சக்தி வினைத்திறனுக்கும் சக்தி நிலைபெறுதகு தன்மைக்கும் உதவும் முக்கியமான கருத்திட்டங்களை வெற்றிகரமாக செயற்படுத்த எம்மால் வசதியளிக்கமுடியும்.

**3.2 மீளப்புதுப்பிக்கத்தக் சக்தி** அபிவிருத்தி

காணிகளை சுவீகரிப்பதில் காணப்படும் தாமதங்கள் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி முயற்சிகளுக்கான கருத் திட்டங்களின் செலவுகளை அதிகளவில் அதிகரிக்கின்றன. சமனற்ற கொள்கைகள் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி (மீச) அபிவிருத்திகளிலிருந்து முதலீட்டு தரப்புகளை தடுக்கலாம். அத்துடன் தற்பொழுதுள்ள க்றிட் மின்சாரக் கட்டமைப்பு எதிர்நோக்கும் சிக்கலான சவால்களினுள் குறிப்பாக சூரிய சக்தி மற்றும் காற்று சக்தி ஆகிய மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி மூலங்களை ஒன்றிணைக்கவும் கூடும். ஆத்துடன் மீளப் புதுப்பிக்கத்தகு சக்தி மற்றும் சக்திப் பாதுகாப்பு தொடர்பாக பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வும் புரிந்துணர்வும் குறைவாக இருக்கின்றமை இந்தத் துறையில் முன்னேற்றத்தைத் தடுக்கின்றது. இந்தப் பிரச்சினை விடயங்களை அடையாளப்படுத்த, பலவகை மூலோபாய நடவடிக்கைகளை செயற்படுத்த வேண்டும். முதலாவது, அங்கீகாரங்கள் செயல்முறையை நெறிப்படுத்த மீளப்புதுப்பிக்கத்தகு சக்திக் கருத்திட்டங்களின் நிமித்தம் காணிசுவீகரித்தல் செயல்முறைகள் பற்றிய முழுமையான ஒரு மீளாய்வு அவசியமாகும். ஒரு உயர் மட்ட அங்கீகாரக் குழுவைத் தாபிப்பது விரைவான தீர்மானமெடுத்தலையும் ஒருங்கிணைப்பையும் அக்கறையுடைய தரப்புகளுக்கு மத்தியில் இலகுபடுத்தலாம். மேலும், இந்தப் பிரச்சினைகளையும் மற்றும் தடைகளையும் மேற்பார்வை செய்ய ஒரு ஜனாதிபதி சிறப்புச் செயலணியை நியமிப்பதாலும் பொற்றுப்பு கூறுகையையும் முன்னேற்றத்தையும் உறுதிசெய்யலாம். மிகவும் அனுகூலமான ஒரு முதலீட்டு சூழலை ஊக்குவிக்கும் பொருட்டு சட்ட இடைவெளிகளைக் கண்டறிந்து திருத்துவதும் மற்றும் தற்பொழுதுள்ள வழிகாட்டிகளை மீளாய்வு செய்வதும் அவசியமாகும். மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி மூலங்களுக்கு வசதி அளிக்க க்றிட் மின்சாரக் கட்டமைப்பை மேம்படுத்துவது ஒருங்கிணைவு ஆற்றல்களை மேம்படுத்தும். அத்துடன் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி மற்றும் சக்திப் பாதுகாப்பு ஆகியன தொடர்பில் பொதுமக்கள் விழிப்புணர்வு பிரச்சார நடவடிக்கைகளை ஊக்குவிப்பதும் சமுதாயத்தினுள் பெரும் புரிந்துணர்வையும் மற்றும் ஆதரவையும் மேலும் வளர்க்கும். இந்த விரிவான முழுமையான மூலோபாயங்கள் தற்போதைய சவால்களை குறைக்கவும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி முயற்சிகளின் வளர்ச்சியை ஊக்குவிக்கவும் உதவும்.

**3.3 நிதி உதவி**

மட்டுப்பட்டளவான நிதியிடுகையும் மற்றும் நிலவி வருகின்ற பொருளாதார நெருக்கடிகளும் 70% வீதமான மீளப்புதுப்பிக்கத்தகு இலக்கை அடைவதற்கும் பயனள்ள சக்தி முகாமைத்துவ முன்முயற்சித்திட்டங்களை செயற்படுத்துவதற்கும் கணிசமான சவால்களாகக் காணப்படுகின்றன. செஸ் வரியும் அரச கட்டணமும் விதிக்கப்படும் போது அதனால் இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபைக்கு (இநிசஅச) சுயாதீன நிதியிடுகை வாய்ப்பு கிடைக்கின்றது. இந்த சவால்களை அடையாளப்படுத்தும் பொருட்டு ஊக்குவிப்புகள் மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்திக் கருத்திட்டங்களுக்கு குறிப்பாக வடிவமைக்கப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றை நிலைபெறச்செய்ய முழுமையான ஒரு கொள்கை அவசியமாகும்.

**3.4 வள முகாமைத்துவம்**

மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி மற்றும் சக்தி முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்களின் செயற்படுத்துகையில் கணிசமான சவால்களுக்கு முகம்கொடுக்க நேரிடுகின்றது. திறமை வாய்ந்த மனித வளங்களும் மற்றும் அத்தியாவசிய வசதிகளும் இல்லாமை இதற்கு முக்கிய காரணமாகும். இந்த பிரச்சினை விடயங்களை பயனள்ளதாக தீர்க்கும் பொருட்டு சூரிய சக்தி, காற்று சக்தி மற்றும் கூரையின் மேல் நிறுவி சூரிய சக்தி

மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய தொழில்நுட்பம் போன்ற பல வகையான வளங்களினுள் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தித் துறையை வியாபிப்பது இன்றியமையாததாகும். இது தவிர, இந்தத் துறையிலுள்ள நபர்களின் ஆற்றலையும் தகைமைகளையும் மேம்படுத்துவதும் அத்தியாவசியமானதாகும். முனித வளங்களையும் வசதிகளையும் அபிவிருத்தி செய்து எம்மால் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தித் துறையின் வளர்ச்சிக்கு நல்ல முறையில் உதவவும் சக்தி முகாமைத்துவ முன்முயற்சித்திட்டங்களின் வெற்றிகரமான செயற்படுத்துகையை உறுதிசெய்யவும் முடியும்.

## 4 அபிவிருத்திக் கருத்திட்டங்கள் பற்றிய முன்னேற்றகரமான இற்றைப்படுத்தல்கள்

இநிசஅச தனது நிகழ்ச்சித்திட்டங்களை இரண்டு பிரதான மூலோபாயங்களின் ஊடாக செயற்படுத்தி வருகின்றது. அவையாவன விநியோகசார் முகாமைத்துவம் (விமு) மற்றும் கேள்விசார் முகாமைத்துவம் (கேமு) என்பனவாகும். விமு செயற்பாடுகள் தேசிய மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி நிகழ்ச்சித்திட்டங்களை முன்னேற்றுவதற்காகவும் மற்றும் வளங்களை ஒதுக்குவதற்காகவும் பணிக்கப்படுகின்றன. மேலும் மாறாக, கேமு செயற்பாடுகள் சக்தி வினைத்திறன் ஊடான இறுதிப்-பயன் துறைகளை மேம்படுத்துவதில் ஒருமுகப் படுகின்றன.

### 4.1 விநியோகசார் முகாமைத்துவ செயற்பாடுகள்

#### 4.1.1 சூரியபள சங்கிராமய

இந்த நிகழ்ச்சித்திட்டம் வீடுகளினதும், வழிபாட்டு ஸ்தலக் கட்டிடங்களினதும், ஹோட்டல்களினதும், வர்த்த ஸ்தாபனக் கட்டிடங்களினதும் மற்றும் கைத்தொழில் கட்டிடங்களினதும் கூரைகளின் மேல் நிறுவி மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய சிறு சூரிய சக்தி மின் உற்பத்தி முறைமைகளின் நிறுவுகைளை ஊக்குவிப்பதில் இலக்குக்கொள்கின்றது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், வாடிக்கையாளர்களுக்கு தமது சொந்த வீட்டுக் கூரைகளிலிருந்து நேரடியாக மின்சாரத்தை உற்பத்தி செய்து பாவிப்பதற்கான வாய்ப்பு கிடைக்கின்றது. மின்சார உற்பத்திற்கு வருடாந்தம் பயன்படுத்தப்படும் கனிய எண்ணெய்களில் சுமார் 4.5 பில்லியன் லீற்றர் நுகர்வைக் குறைத்து அண்ணளவாக 184 பில்லியன் ரூபா நிதியை சேமிக்க இந்த நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த நிகழ்ச்சித்திட்டம் 75,000 இற்கும் அதிகமான வீட்டுக் கூரைகளைப் பயன்படுத்தி, நாட்டின் மொத்த வருடாந்த மின்சாரத் தேவையில் ஏறக்குறைய 12% ஐ பூர்த்தி செய்து 1,200 மெ.வொ. மேலதிக மொத்த சக்தி உற்பத்திக் கொள்திறனை அடைந்துள்ளது. 2024 ஆம் ஆண்டில், இந்த நிகழ்ச்சித்திட்டத்தினால் 180 மெ.வொ. என்ற இலக்கையும் தாண்டி 393 மெ.வொ. சக்தி உற்பத்திக் கொள்திறன் சேர்க்கப்பட்டது. 2025 ஆம் ஆண்டளவில் தேசிய மின்சாரக் கட்டமைப்புக்கு 1,000 மெ.வொ. மேலதிக மின்சாரம் சேரும் என எதிர்பார்க்கப்பட்டது. எனினும், இந்த இலக்கு 2024 ஆம் ஆண்டு ஜூன் மாதமளவில் அடையப்பட்டது. இன்று வரை, சூரிய சக்தி மின்சாரத்தை விநியோகிக்கும் 600 விநியோகத் தரப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கை சூரிய சக்தி மின் உற்பத்தித் துறையினுள் கணிசமான தொழில் உருவாக்கத்திற்கு வழிவகுக்கின்றது.

#### 4.1.2 பூநகரி காற்று–சூரிய சக்தி கலப்பு சக்தி உற்பத்திப் பேட்டை

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பூநகரிப் பிரதேசத்தில், வருடத்தின் அதிகமான மாதங்கள் முழுதிலும் வலிமையான காற்றுக்கு வழிவகுக்கின்ற இரண்டு தென்மேல் மற்றும் வடகீழ் பருவப் பெயர்ச்சி மழைகள் கிடைப்பதால் நன்மை அடைகின்றது. இது காற்று சக்தி மின் உற்பத்திற்கு தீவில் அமைந்துள்ள மிக இரம்மியமான இடங்களில் ஒரு இடமாகும். வருடாந்தம் எதிர்பார்த்த 807 கிவொம மின்சாரம் அடங்கலாக 234 மெ.வொ. சக்தி உற்பத்திக் கொள்திறனைக் கொண்டிருக்கும்

என பூநகரி காற்று சக்தி உற்பத்திக் கருத்திட்டம் எதிர்பார்க்கப்படுகின்றது. இது தவிர, இது சுமார் 60 மில்லியன் ரூபா செலவு சேமிப்புக்கு பயனாக அமைந்து ஒவ்வொரு ஆண்டும் மின்சார உற்பத்திற்கு பயன்படுத்தப்படும் 202 மில்லியன் லீற்றர் அளவான கனிய எண்ணெய்யை சேமிக்கவும் உதவும். மேலும், இந்தக் காற்று சக்தி மின் உற்பத்திக் கருத்திட்டத்தின் செயற்படுத்துகை 588,948 டொன் அளவான காபனை குறைக்கவும் பங்களிப்புச்செய்யும். 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இதனை உத்தியோகபூர்வமாகத் திறந்துவைப்பதற்கு உத்தேசிக்கப் பட்டுள்ளது.



(பூநகரி காற்று-சூரிய சக்திக் கலப்பு சக்தி உற்பத்திப் பேட்டை)

பூநகரி காற்று-சூரிய சக்தி மின் உற்பத்திக் கருத்திட்டம் தேவையான எல்லா கருத்திட்ட அங்கீகாரங்கள் மற்றும் சுற்றாடல் அனுமதிகள் ஆகியவற்றை பெற்று கணிமான முன்னேற்றத்தை அடைந்துள்ளது. 38ஏ இலக்க வர்த்தமானியில் விவரிக்கப்பட்டுள்ளவாறு, தனியார் நிலங்களின் ஆட்சியுரிமை மாற்றிக்கொடுக்கும் செயல்முறை வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளது. நஷ்டஈடுகளை வழங்கும் நடவடிக்கைகள் தற்பொழுது இடம்பெற்று வருகின்றன. குத்தகை அடிப்படையில் அரச காணிகளை சுவீகரிப்பதற்கான நகல் ஒப்பந்தம் அங்கீகாரத்தின் நிமித்தம் சட்டமா அதிபருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதேநேரம் அரச மற்றும் தனியார் நிலங்களுக்கான குத்தகை மதிப்பீட்டு விடயங்களும் முடிவு செய்யப்பட்டுள்ளன. இது தவிர, சக்தி அனுமதிப்பத்திரமும் வழங்கப்பட்டுள்ளது. இநிசஅச முன்-கூட்டிய கருத்திட்ட அபிவிருத்தி செயற்பாடுகளை ஆரம்பிக்கும் பொருட்டு கருத்திட்ட அபிவிருத்தித் தரப்புக்கு அதிகாரமளித்துள்ளது. காணி சுவீகரித்தல் பணி இன்னும் நிகழ்ந்து வருகின்றது.

### 4.1.3 மன்னார் காற்று சக்தி மின் உற்பத்திக் கருத்திட்டம்

கற்பிட்டி குடாப் பகுதியிலிருந்து மன்னார் தீவு வரை வடமேற்கு கடலோரமாக கணிசமான காற்று வள சாத்தியம் இருப்பதால், இந்தப் பிரதேசம் தீவில் காற்று சக்தி மின் உற்பத்திற்கு அதிக சாத்தியமுடைய இடங்களில் ஒரு இடமாக காணப்படுகின்றது. மன்னார் காற்று சக்தி மின் உற்பத்திக் கருத்திட்டம் - II ஒவ்வொன்றும் 5.2 மெ.வொ. சக்தி உற்பத்திக் கொள்திறனுடைய 52 டேர்பைன்கள் உள்ளடங்கலாக 250 மெ.வொ. சக்தி உற்பத்திக் கொள்திறனைக் கொண்டிருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் வருடாந்தம் 876 கிவொம மின்சார உற்பத்தியும் எதிர்பார்க்கப்படுகின்றது. இது தவிர, ஒவ்வொரு வருடமும் மின் உற்பத்திற்கு பயன்படுத்தப்படும் 219 மில்லியன் லீற்றர் அளவான கனிய எண்ணையை இந்தக் கருத்திட்டம் சேமிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இது 66 மில்லியன் ரூபா ஆகுசெலவை சேமிப்பதற்கும் உதவும். மேலும், இந்தக் காற்று சக்தி மின் உற்பத்திக் கருத்திட்டத்தின் செயற்படுத்துகை 639,305 டொன் அளவான காபனை குறைக்கவும் பங்களிப்புச்செய்யும். 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இதனை உத்தியோகபூர்வமாகத் திறந்துவைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்த மன்னார் காற்று சக்தி மின் உற்பத்திக் கருத்திட்டம் நன்கு முன்னேற்றமடைந்து வருகின்றது. 27 காணித் துண்டுகளினதும் அணுகுவீதிகளினதும் உடமை

பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு (சுதாம) அறிக்கை தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகார சபையிலிருந்து கிடைத்த 582 பொதுக் கருத்துரைகளை நாம் அடையாளப்படுத்தியுள்ளோம். தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் (தொமகு) இறுதி அறிக்கை சகல பொதுக் கருத்துரைகளையும் உள்ளடக்கிய பின்னர் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபையின் (இநிசஅச) வேண்டுகோளின் பேரில், இலங்கைக் காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் (இகாஅகூ) மன்னார் தீவுக்கான ஒரு வடிகாலமைப்பு ஆய்வை நடத்தத் திட்டமிட்டுள்ளது. இநிசஅச முன்-கூட்டிய கருத்திட்ட அபிவிருத்தி செயற்பாடுகளை தொடரும் பொருட்டு கருத்திட்ட அபிவிருத்தித் தரப்புக்கு அனுமதியை வழங்கியுள்ளது. சுற்றாடல் தாக்க மதிப்பீடும் மற்றும் கருத்திட்டமும் நீதிமன்றத்தில் பல தரப்பினதும் மனுக்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. பதில்கள் தற்பொழுது தயாரிக்கப்பட்டு வருகின்றன. காணி சுவீகரித்தல் பணி இன்னும் நிகழ்ந்து வருகின்றது. மத்திய சுற்றாடல் அதிகார சபையின் (மசுஅச) சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு (சுதாம) அங்கீகாரம் தற்பொழுது நிறைவுபெறாத நிலையிலுள்ளது.





(மன்னார் காற்று சக்தி மின் உற்பத்திக் கருத்திட்டம்)

### 4.1.4 சியம்பலாண்டுவ சூரிய சக்தி மின் உற்பத்திக் கருத்திட்டம்

இந்தக் கருத்திட்டத்திலிருந்து வருடாந்தம் 180 கிவொம தூய நிலைபெறுதகு மின்சாரத்தை உற்பத்தி செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தக் கருத்திட்டம் ஒவ்வொரு வருடமும் அண்ணளவாக 131,364 மெ.டொ. $CO_2$ புகையைக் குறைக்க பயனாக அமையும். இந்தக் குறைப்பு சாதகமான ஒரு சுற்றாடல் தாக்கத்தைக் கொண்டிருக்கும். மேலும், இந்தக் கருத்திட்டம் வருடாந்தம் சுமார் 45 மில்லியன் லீற்றர் அளவான கனிய எண்ணெய்களை சேமிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தப் புள்ளிவிபரங்கள் 0.7298 கிகி $CO_2$/கிவொம என்ற ஒரு க்றிட் புகைக் காரணியினதும் மற்றும் கிவொம ஒன்றுக்கு மதிப்பிடப்பட்டுள்ள 4 லீற்றர் டீசல் எண்ணெய் சேமிப்பினதும் அடிப்படையில் அமைந்திருக்கின்றன.






(சியம்பலாண்டுவ சூரிய சக்தி மின் உற்பத்திக் கருத்திட்டம்)

இந்த சியம்பலாண்டுவ கருத்திட்டம் ஸ்தல ஆயத்தப்படுத்தலையடுத்து தற்பொழு நிறைவடையும் கட்டத்திலுள்ளது. மாற்று அணுகுவீதிகளின் அபிவிருத்தி நிகழ்ந்து வருகின்றது. காணி குத்தகை தொடர்பான சிபாரிசு சட்டமா அதிபர்

திணைக்களத்திடமிருந்து கிடைத்துள்ளது. காணி சுவீகரித்தலுக்கு அனுமதியை வழங்குவது தொடர்பாக திறைசேரியுடனும் அமைச்சுடனும் நடத்திய கலந்துரையாடல்களின் அடிப்படையில், அமைச்சரவைப் பத்திரம் மேல் நடவடிக்கையின் நிமித்தம் முறையாக மின்வலு சக்தி அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### 4.1.5 பாரியளவான மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி உற்பத்திக் கருத்திட்டங்களின் அபிவிருத்தி

ஓட்டுச்சூடான் சூரிய சக்தி மின் உற்பத்திக் கருத்திட்டத்திற்கு *(100* மெ.வொ.) சக்தி அனுமதிப்பத்திரம் கிடைத்தது. எனினும், மின்சக்திக் கொள்வனவு ஒப்பந்தத்திற்கும் (PPA) மற்றும் மின்சார செலுத்துகை மார்க்க ஒப்பந்தத்திற்கும் இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடமிருந்து (இபொபஆ) அங்கீகாரம் கிடைக்கவுள்ளது. பூநகரி டாங்கி சூரிய சக்தி மின் உற்பத்திக் கருத்திட்டத்திற்கு *(700* மெ.வொ.*)* அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. இருந்தாலும் இபொபஆ இன் அங்கீகாரம் இன்னும் கிடைக்கவில்லை. நகல் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு (சுதாம) அறிக்கை மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு (மசுஅச) சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. குறித்த கருத்திட்டம் இநிசஅச இல் பதிவு செய்யப்பட்டுள்ளது. சாம்பூர் சூரிய சக்தி மின் உற்பத்திக் கருத்திட்டத்திற்கு *(50* மெ.வொ.*)* 2023 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18 ஆம் திகதி சக்தி அனுமதிப்பத்திரம் கிடைத்தது. கருத்திட்ட செயற்படுத்தல் ஒப்பந்தம் தொடர்பாக இடம்பெற்று வருகின்ற பேச்சுவார்த்தைகளையடுத்து இலங்கை மின்சார சபை (இமிச) பிரேரணைக்கான ஒரு வேண்டுகோளை (RfP) 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதத்தில் விடுத்தது. இறுதியாக, அம்பாந்தோட்டை சூரிய சக்தி மின் உற்பத்திக் கருத்திட்டம் *(150* மெ.வொ.*)* தனது நியம சக்திக் கொள்வனவு ஒப்பந்தத்தில் (SPPA) 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் கைச்சாதிட்டது. மின்சார செலுத்துகை மார்க்கத்திற்கான கோபுர ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதேநேரம் நிர்மாண ஒப்பந்தப் பேச்சுவார்த்தைகளும் இடம்பெற்று வருகின்றன. நிர்மாணித்து கையளிக்கும் ஒப்பந்தம் இன்னும் நிறைவுபெறாத நிலையிலுள்ளது. இநேரம் காணி குத்தகை தொடர்பான அங்கீகாரம் கிடைத்துள்ளது. காணிக் குத்தகை ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதமளவில் நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

### 4.1.6 வீரவில் காற்று சக்தி மின் உற்பத்திக் கருத்திட்டம்





(வீரவில் காற்று சக்தி மின் உற்பத்திக் கருத்திட்டம்)

34 டேர்பைன்களை உள்ளடக்குகின்ற 204 மெ.வொ. காற்று சக்தி மின் உற்பத்திப் பேட்டையை கிளிநொச்சி மாவட்டத்தின் வீரவில் எனும் இடத்தில் தாபிப்பதற்கு இநிசஅச திட்டமிட்டு வருகின்றது. வருடாந்தம் 735 கிவொம மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், இந்த கருத்திட்டம், ஒவ்வொரு ஆண்டும் மின்சார உற்பத்திற்கு பயன்படுத்தப்படும் 2,943 மில்லியன் லீற்றர் அளவான கனிய எண்ணெய்யை சேமிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இது சுமார் 30 பில்லியன் ரூபா ஆகுசெலவு சேமிப்புக்கு பயனாக அமையும். மேலும், இந்தக் காற்று சக்தி மின் உற்பத்திக் கருத்திட்டத்தின் செயற்படுத்துகை 520900 டொன் அளவான

காபனை குறைக்கவும் பங்களிப்பு செய்யும்.

வீரவில் காற்று சக்தி மின் உற்பத்திக் கருத்திட்டம் தொடர்பான பணி வெற்றிகரமாக நிகழ்ந்து வருகின்றது. பறவைகள் பற்றிய ஆய்வு அறிக்கையும் மற்றும் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு (சுதாம) இறுதி நகல் அறிக்கையும் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு (மசுஅச) சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

### 4.1.7 கிரிஇப்பன்வெவ மற்றும் சந்திரிக்காவெவ மிதக்கும் சூரிய சக்தி மின் உற்பத்திக் கருத்திட்டங்கள்

ஒவ்வொன்றும் 1 மெ.வொ. சக்தி உற்பத்திக் கொள்திறனுடைய இரண்டு மிதக்கும் சூரிய சக்தி மின் உற்பத்திக் கருத்திட்டங்கள் இலங்கைக்கான ஒரு பாரிய முன்னெடுப்பாக கொரிய அரசாங்கத்தினால் சந்திரிக்காவெவயினதும் (ஏரி) கிரிஇப்பன்வெவயினதும் (ஏரி) மேற்பரப்புகளில் நிர்மாணிக்கப்பட்டன. இந்த கருத்திட்டங்களை செயற்படுத்தும் நிமித்தம் வணிக கைததொழில் அமைச்சும் கொரிய அரசாங்கமும் சுமார் 1,000 மில்லியன் ரூபா நிதியைப் பெற்றுத்தந்துள்ளன. இலங்கையின் மின் உற்பத்தித் தேவைகளுக்கு ஆகுசெலவு-பயன் வாய்ந்த ஒரு தீர்வாக மிதக்கும் சூரிய சக்தி மின் உற்பத்தித் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதும் மற்றும் இந்தத் தொழில்நுட்பத்தின் தாக்கத்தை கண்டறிவதும் இந்தக் கருத்திட்டங்களின் ஆரம்பக் குறிக்கோளாகும். இந்த அணுகுமுறை பாரம்பரிய சூரிய சக்தி மின் உற்பத்திப் பொறித்தொகுதிகளுக்கான காணித் தேவைப்பாடுகளுடன் இணைந்த சவால்களை அடையாளப்படுத்துகின்றது. இந்தக் கருத்திட்டம் வருடாந்தம் 3 கிவொம மின்சாரத்தை உற்பத்தி செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், இது ஒவ்வொரு வருடமும் மின்சாரத்தை உற்பத்தி செய்ய பாவிக்கப்படும் 1 மில்லியன் லீற்றர் அளவான கனிய எண்ணெய்யையும் சேமிக்கும். இது சுமார் 0.3 பில்லியன் ரூபா ஆகுசெலவை சேமிக்கவும் பயனாக அமையும். இந்தக் காற்று சக்தி மின் உற்பத்திக் கருத்திட்டத்தின் செயற்படுத்துகை 2,100 தொன் அளவான காபனை குறைக்கவும் பங்களிப்பு செய்யும். பொறித்தொகுதியை நிர்மாணிக்கும் பணிகள் வெற்றிகரமாக நிறைவு செய்யப் பட்டுள்ளன. இவ் கருத்திட்டம் 2024.11.27 ஆம் திகதி பூர்த்திசெய்யப்பட்டு செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.





(கிரிஇப்பன்வெவ ஏரி மற்றும் சந்திரிக்காவெவ ஏரி மிதக்கும் சூரிய சக்தி மின் உற்பத்திக் கருத்திட்டங்கள்)

### 4.1.8 யாழ்ப்பாணத்திலுள்ள சிறு தீவுகளுக்கான ஒரு கலப்பு மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி உற்பத்தி முறைமையின் அபிவிருத்தி

பொட்டோவோல்டிக் (பிவி) முறைமைகள், காற்று சக்தி, டீசல் மின்பிறப்பாக்கிகள் மற்றும் லிதியம் உலோக-களஞ்சிய மின்கலங்கள் என்பன பயன்படுத்தப்படும் கலப்பு மின் உற்பத்திப் பொறித் தொகுதிகளின் செயற்படுத்துகையின் ஊடாக யாழ்ப்பாணத்தில் அனலைத்தீவு, டெல்ப் தீவு மற்றும் நைனா தீவு ஆகிய தீவுகளுக்கு மின்சாரத்தை உற்பத்தி செய்வதில் இந்தக் கருத்திட்டம் இலக்குக் கொள்கின்றது. ஒரு பயனள்ள மின்சார உற்பத்திக் கலவையை உருவாக்கும் பொருட்டு மின்கல சேமிப்பு வதி அடங்கலாக பிவி, காற்று சக்தி மற்றும் டீசல் வளங்கள் என்பவற்றின் கொள்திறன்கள் அனுகூலப்படுத்தப்பட்டுள்ளன. குறித்த கொள்திறன்கள் பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளன.

| தீவு | டீசல் மின்பிறப்பாக்கிகள் | பிவி முறைமை மின் உற்பத்தி | காற்று சக்தி மின் உற்பத்தி | மின்கலக் களஞ்சிய வசதி |
|---|---|---|---|---|
| நைனாதீவு | 300 கிவொ+500 கிவொ | 700 கிவொ | 200 கிவொ | 1000 கிவொம (550 கிவொ) |
| ஆனலைத்தீவு | 150 கிவொ+300 கிவொ | 300 கிவொ | 80 கிவொ | 550 கிவொம (275 கிவொ) |
| டெல்ப | 300 கிவொ+500 கிவொ | 700 கிவொ | 250 கிவொ | 800 கிவொம (650 கிவொ) |

இந்தக் கருத்திட்டம் நல்ல முறையில் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. டெல்ப∴ தீவு மற்றும் நைனாதீவு ஆகிய தீவுகளில் கம்பி வேலி அமைக்கும் பணி நிகழ்ந்து வருகின்றது. இந்த வேலி அமைக்கும் பணி அனலைத்தீவில் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளது. மேலும், இந்த மூன்று தீவுகளிலும் தாவரங்கள், இடிபாடுகள், நிலகீழ் தடைகள், ஸ்தல ஆய்வுகள் மற்றும் மண் பரிசோதனை முதலிய பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. சிவில் வடிவமைப்பு மீளாய்வு நிறைவு செய்யப்பட்டுள்ளது. மூலப்-பொருட்களின் நிமித்தம் கொள்வனவுக் கட்டளைகள் விடுக்கப்பட்டுள்ளன.





(யாழ்ப்பாணத்திலுள்ள சிறு தீவுகளுக்கான கலப்பு மீளப்புதுப்பிக்கத்தக்க சக்தி மின் உற்பத்தி முறைமை)

### 4.1.9 பூர்வாங்கக் கட்டத்திலுள்ள தேசிய கருத்திட்டங்கள்

464 மெ.வொ. ஒன்றிணைந்த சக்தி உற்பத்திக் கொள்திறனுடைய நான்கு புதிய காற்று சக்தி மற்றும் சூரிய சக்தி மின் உற்பத்திக் கருத்திட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன: அவையாவன 114 மெ.வொ. கராச்சி காற்று சக்தி மின் உற்பத்திக் கருத்திட்டம், 200 மெ.வொ. மேற்கு மாந்தை காற்று சக்தி மின் உற்பத்திக் கருத்திட்டம், 50 மெ.வொ. துணுக்கை சூரிய சக்தி மின் உற்பத்திக் கருத்திட்டம் மற்றும் 100 மெ.வொ. தெதுருஓயா மிதக்கும் சூரிய சக்தி மின் உற்பத்திக் கருத்திட்டம் என்பனவாகும். இந்தக் கருத்திட்டங்கள் தற்பொழுது அபிவிருத்தியின் பூர்வாங்கக் கட்டங்களிலுள்ளன. இவை மொத்தம் 1,169 கிவொம மின்சாரத்தை உற்பத்தி செய்யும் எதிர்பார்க்கப்படுகின்றன. இந்த புதிய 464 மெ.வொ. காற்று சக்தி மற்றும் சூரிய சக்தி மின் உற்பத்திக் கருத்திட்டங்கள் வருடாந்தம் 1,169 கிவொம மின்சாரத்தை உற்பத்தி செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றன. மேலும், இந்தக் கருத்திட்டங்கள், வருடாந்தம் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு பயன்படுத்தப்படும் கனிய எண்ணெய்களின் நுகர்வை 4,676 மில்லியன் லீற்றர்களால் குறைத்து அண்ணளவாக 56 பில்லியன் ரூபா நிதியை சேமிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றன. இந்தக் காற்று சக்தி மின் உற்பத்திக் கருத்திட்டத்தின் செயற்படுத்துகை 828,480 டொன் அளவான காபனை குறைக்கவும் பங்களிப்பு செய்யும்.

கராச்சி காற்று-சூரிய சக்தி கலப்பு சக்தி உற்பத்திப் பேட்டையின் நிமித்தம் ஒரு முற்சாத்தியவள ஆய்வு நிறைவு செய்யப்பட்டுள்ளது. வனப் பாதுகாப்புத் திணைக்களத்துடன் இணைந்து ஒரு கூட்டு ஸ்தல விஜயமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அடைவிடங்கள் தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இனங்காணப்பட்டுள்ள

ஸ்தலங்களை மேலும் அபிவிருத்தி செய்வது தொடர்பான பேச்சுவார்த்தைகள் வனப் பாதுகாப்புத் திணைக்களத்துடனும் மற்றும் USAID அமைப்புடனும் இடம்பெற்று வருகின்றன. கருத்திட்டத்திற்கான ஆரம்ப அங்கீகாரத்தை வனப் பாதுகாப்புத் திணைக்களம் வழங்கியுள்ளது. அதனையடுத்து அங்கீகாரத்திற்கான ஒரு விண்ணப்பம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவுக்கு (மாஒகு) சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.





(கராச்சி காற்று-சூரிய சக்தி கலப்பு சக்தி உற்பத்திப் பேட்டை)

துணுக்கை சூரிய சக்தி மின் உற்பத்திக் கருத்திட்டத்தை பொறுத்தவரையில், ஒரு ஸ்தல விஜயம் வனப் பாதுகாப்புத் திணைக்களத்துடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டது. தொழில்நுட்ப மதிப்பீட்டிற்கான உரிய தகவல்கள் சேகரிப்பு நிகழ்ந்து வருகின்றது. மேலும் புதிய தளக்குறிப்புத் திட்டமிடுகை, அமைவிட மாற்றங்கள் மற்றும் பேச்சுவார்த்தைகள் என்பன வனப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வனப் பாதுகாப்புத் திணைக்களம் கருத்திட்டத்தை வழங்கவுள்ளது.

மாந்தை மேற்கு காற்று சக்தி மின் உற்பத்திக் கருத்திட்டத்தின் நிமித்தம் ஒரு கூட்டு ஸ்தல விஜயம் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் நிறைவு செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது, காணி சம்பந்தமான தரவுகள் சேகரிப்பு அடங்கலாக தொழில்நுட்ப மதிப்பீட்டிற்கான உரிய தகவல்கள் சேகரிப்பு பணிகள் நிகழ்ந்து வருகின்றன. காற்று டேர்பைன்களின் நிமித்தம் மிகப்பொருத்தமான ஸ்தலங்களை இனங்காணும் பொருட்டு தற்பொழுது ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 4.2 கேள்விசார் முகாமைத்துவ செயற்பாடுகள்

4.2.1 2007 இன் 35 ஆம் இலக்க இநிசஅச சட்டத்தின் 35 (ஈ) மற்றும் (உ) ஆகிய வாசகங்களில் விவரிக்கப்பட்டுள்ள ஒழுங்குறுத்துகை ஏற்பாடுகளுக்கு இணங்க, உபகரணங்களுக்கு சக்தி வினைத் திறன் முத்திரையிடும் நிகழ்ச்சித்திட்டம் இநிசஅச மூலம் செயற்படுத்தப்பட்டன. தற்பொழுது இந்தக் கருத்திட்டம் பல வகையான உபகரணங்களையும் சாதனங்களையும் அடையாளப்படுத்தியுள்ளது. குளிரூட்டிகளுக்கான இலங்கை நியமத்தின் திருத்தங்கள் தற்பொழுது நிறைவு செய்யப்பட்டுள்ளன. குளிரூட்டிகளுக்கான ஒழுங்குவிதி வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடும் பொருட்டு தயாரிக்கப் பட்டுள்ளன. இதேநேரம் இந்த நோக்கத்தின் நிமித்தம் நகல் ஒழுங்குவிதி ஏற்கனவே தயாரிக்கப் பட்டுள்ளன. A/C பரிசோதனை ஆய்வுகூடத்தைத் தாபிக்கும் பணி நிறைவு செய்யப்பட்டுள்ளது. குறித்த ஆய்வுகூடம் உத்தியோகபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது. அதன் செயற்பாடும் மற்றும் பராமரிப்பும் பற்றிய ஸ்தலப் பயிற்சி ஆய்வுகூட ஊழியர்களுக்கு வழங்கப்பட்டது. மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களுக்கான நகல் நியமம் தயாரித்து நிறைவு செய்யப்பட்டுள்ளது. ஒரு மோட்டார் பரிசோதனை ஆய்வுகூடத்திற்கான தொழில்நுட்பத் தகவுதிறன்களைத் தயாரிக்கும் பணி தற்பொழுது USAID உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களை பரிசோதிப்பதற்காக 10 கிவொ கொள்திறன்கள் கொண்டவொரு

பரிசோதனை ஆய்வுகூடத்தை NERDC இல் தாபிக்கும் பொருட்டு ஒரு முற்சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. LED மின்குமிழ்களுக்கான நகல் ஒழுங்குவிதிகள் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்படவுள்ளன. இதேநேரம் இந்த நோக்கத்தின் நிமித்தம் நகல் ஒழுங்குவிதி ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும், LED மின்குமிழ்களுக்கான தன்னார்வ சக்தி முத்திரையிடும் நிகழ்ச்சித்திட்டம் தற்பொழுது செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இது தவிர, சோறு சமைக்கும் அடுப்புகளுக்கான நகல் நியமமும் தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது. NERDC இல் தண்ணீர் பம்பிகளுக்கான பரிசோதனை ஆய்வுகூடத்தை நிர்மாணிக்கும் பணி நிறைவு செய்யப்பட்டுள்ளது. நியமப் பரிசோதனைகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொலைக்காட்சிப்பெட்டிகளுக்கான நகல் நியமமும் தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது. சந்தையிலுள்ள உற்பத்திகளின் சக்தி செயல்திறனை பரிசோதிப்பதற்கு தகவுதிறன்களை தாபிப்பது அவசியமாகும். நிறுத்திவைக்கக்கூடிய மின் விசிறிகள் தொடர்பான நகல் நியமம் தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது. நியமப் பரிசோதனைகள் மொரட்டுவப் பல்கலைக்கழகத்தின் எந்திரப் பொறியியல் பிரிவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எரிவாயு அடுப்புகளுக்கான நகல் நியமம் தற்பொழுது தயாரிக்கப்பட்டு வருகின்றது. சலவை இயந்திரங்கள், மின்சாரத்தில் தண்ணீர் சூடாக்கும் உபகரணங்கள் மற்றும் மின்சார சமையல் அடுப்புகள் என்பவற்றுக்கான நகல் நியமங்களைத் தயாரிக்கும் பணி நிகழ்ந்து வருகின்றது. மேலும் USAID உதவியுடன் இணையத்தள போட்டலையும் மற்றும் QR குறியீடுகளையும் பயன்படுத்தி உபகரணங்களுக்கு சக்தி முத்திரையிடும் தளத்தை டிஜிட்டல்மயப்படுத்தும் பொருட்டு, இணையத் தளப் போட்டலுக்கான கட்டமைப்பும் முடிவுசெய்யப்பட்டு அந்த இணையத்தளப் போட்டலின் அபிவிருத்தி தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது





(ADB முன்னோடி கருத்திட்டம் தொடர்பான பிராந்திய பயிற்சிபட்டறை)

4.2.2 கட்டிடங்களின் சக்தி செயல்திறனை மேம்படுத்துவது நாட்டின் நிலையான சக்தி அபிவிருத்தி மூலோபாயத்தின் ஒரு முக்கியமான அம்சமாகும். 2007 இன் 35 ஆம் இலக்க இநிசஅச சட்டத்தின் (எ) பிரிவில் விவரிக்கப்பட்டுள்ள ஒழுங்குறுத்துகை ஏற்பாடுகளுக்கு இணங்க சக்தி வினைத்திறன் கட்டிட விதிக்கோவை (EEBC) இநிசஅச மூலம் வெளியிடப்பட்டது. இந்த EEBC கட்டிடங்களில் நுகரப்படும் சக்தியைக் குறைப்பது பற்றி நிர்மாணக் கைத்தொழில் துறையிலுள்ள தொழில் தரப்புகளுக்கு வழிகாட்டுகின்றது. திருத்திய EEBC 2021 ஆம் ஆண்டில் வெளிடப்பட்டது. அதன் செயற்படுத்துகைக்கு வசதியளிக்கும் பொருட்டு பல ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கட்டிடத் துறையிலுள்ள தொழில்வல்லுநர்களுக்கான ஒரு பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை நடத்துதல், கட்டி உந்து மென்பாகத்தில் கவனம் செலுத்தும் பொறியியலாளர்களுக்கும் கட்டடக்கலைஞர்களுக்கும் தனியான ஒரு நிகழ்ச்சித்திட்டத்தை நடத்துதல் இவற்றில் உள்ளடங்குகின்றது. இந்த இரண்டு நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் USAID உதவியது. மேலும், 5,000மீ² ஐ விடவும் அதிகமான ஒரு நிலப்பரப்பை உடைய கட்டிடங்களுக்கும் மற்றும் 1,000 kVA இற்கு

அதிகமான மின்சாரத்தைத் தேவைப்படுத்தும் அத்தகைய கட்டிடங்களுக்கும் EEBC ஐ கட்டாயம் பின்பற்ற வேண்டும் என்ற ஒரு ஒழுங்குவிதி வரையப்பட்டு சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. உரிய மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு உரிய கட்டிட அதிகாரிகளிடமிருந்து தேவையான அங்கீகாரங்கள் கிடைத்தன. USAID அது நிதியளிக்க எண்ணும் ஒரு நிறுவனத்திற்கான பெறுகை செயல்முறையை தற்பொழுது மேற்கொண்டு வருகின்றது. அத்துடன் கட்டிட மதிப்பீட்டின் நிமித்தம் அதற்கு கிடைத்த கேள்வி விலைமனுக்களை அது மதிப்பிடும் கட்டத்திலுமுள்ளது.

4.2.3 இலங்கை சக்தி சமநிலை ஆவணம் ஒரு முழுமையான அறிக்கையாகும். இது நாட்டின் சக்தித் துறையின் செயல்திறனை குறித்துக்காட்டுகின்றது. 2021 ஆம் ஆண்டிற்கான அறிக்கை வெளியிடப் பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டிற்கான தரவுகள் சேகரித்தல் பணி நிறைவு செய்யப்பட்டுள்ளது. அது தற்பொழுது தொகுப்புக் கட்டத்திலுள்ளது. 2023 ஆம் ஆண்டிற்கான தரவுகள் சேகரித்தல் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இநிசஅச ஜெட்விங் யால ஹோட்டலில் நடைபெற்ற ISO 50001 கணக்காய்வுகளின் முதலாம் மற்றும் இரண்டாம் கட்ட நிகழ்வுகளில் கலந்துகொண்டது. ISO 50001 பற்றிய ஒரு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் 2024 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 2-3 ஆம் திகதிகளில் நடத்தப்பட்டது.

இநிசஅச ஜெட்விங் யால ஹோட்டலில் நடைபெற்ற ஐளுழு 50001 கணக்காய்வுகளின் முதலாம் மற்றும் இரண்டாம் கட்ட நிகழ்வுகளில் கலந்துகொண்டது. ஐளுழு 50001 பற்றிய ஒரு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் 2024 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 2-3 ஆம் திகதிகளில் நடத்தப்பட்டது.

4.2.4 தபால் திணைக்களத்தின் தபால் தலைமை அலுவலகம், இலங்கை நியமங்கள் மற்றும் கட்டளைகள் நிறுவகம் (இநிகநி) மற்றும் அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனம் (அமகூ) என்பவற்றின் நிமித்தம் நோயெதிர்ப்பு, சக்தி வினைத்திறன் மைய குளிரூட்டல் முறைமைகளை செயற்படுத்தும் விடயத்தில் கவனம் செலுத்திய ஆஅவ முன்னோடிக் கருத்திட்டம் வெற்றிகரமாக நிறைவு செய்யப் பட்டுள்ளது. இந்தப் புதிய தொழில்நுட்பம் பற்றிய அறிவை பரம்பல் செய்வதற்கும் மற்றும் புதிதாக நிறுவிய முறைமைகளை காட்சிப்படுத்துவதற்கும் ஒரு பிராந்திய வேலையரங்கு 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4 ஆம் மற்றும் 5 ஆம் திகதிகளில் நடத்தப்பட்டது. இந்த நிகழ்வு தெற்காசிய, தென்கிழக்கு ஆசிய பிராந்தியங்களின் தொழில்வல்லுநர்களையும், தொழில்நுட்ப நிபுணர்களையும் மற்றும் அரச அதிகாரிகளையும் ஒன்றிணைத்தது.

4.2.5 சக்தி முகாமையாளர்களுக்கும், சக்திக் கணக்காய்வாளர்களுக்கும் மற்றும் சக்தி சேவை வழங்கும் தரப்புகளுக்கும் அங்கீகாரமளித்தல் கைத்தொழில் மற்றும் வணிகம் ஆகிய துறைகளில் சக்தி வினைத்திறனை மேம்படுத்துவதில் இலக்குக்கொள்கின்றது. 2023 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 4 ஆம் திகதி வெளியிடப்பட்ட 2339/09 ஆம் இலக்க சக்தி நியம ஒழுங்குவிதிக்கு இணங்க, வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் சில்லறைக் கம்பனிகள் ஆகியவற்றின் நிமித்தம் 29 சக்தி முகாமையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இநிசஅச மொத்தமாக 291 சக்தி முகாமையாளர்களை நியமித்துள்ளது. மேலும், சக்தித் தரவுகள் பற்றி அறிக்கையிடுதல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் ஆகியவற்றின் நிமித்தம் வசதியளிக்கும் பொருட்டு ஒரு தேசிய சக்தி நியம போட்டலும் தயாரிக்கப் பட்டு ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது. இந்த போட்டலின் ஊடாக கம்பனிகளைப் பதிவுசெய்தலும் மற்றும் தரவுகளை சமர்ப்பித்தலும் தற்பொழுது நிகழ்ந்து வருகின்றன. 800 இற்கும் அதிகமான வசதிகள் பதவு செய்யப்பட்டுள்ளன. அங்கீகாரமளிக்கப்பட்டுள்ள சக்திக் கணக்காய்வாளர்களின் எண்ணிக்கை 25 வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டிற்கு புதிய கம்பனிகளைப் பதிவு செய்தல் மற்றும் சக்தி சேவை கம்பனிகளின் பதிவைப் புதுப்பித்தல் ஆகிய பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. இதனால் குறித்த ஆண்டிற்கு மொத்தம் 31 சக்தி சேவைகளை

(ESCos) பதிவு செய்ய முடிந்துள்ளது. 2025 ஆம் ஆண்டிற்கு ESCo களின் பதிவுகளைப் புதுப்பிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

4.2.6 இலங்கை நியமங்கள் மற்றும் கட்டளைகள் நிறுவனம், அனர்த்த முகாமைத்துவ நிலையம், சிறீ ஜயவர்த்தனப்புரப் பல்கலைக்கழகம், மோதரை இராணுவ முகாம் இல்லம், நாளாந்தாக் கல்லூரி, பிட்டிபன SLT தரவு நிலையம் மற்றும் திக்ஓயா, தெல்தெனிய, ரிக்கில்லகஸ்கட, நாவுல மற்றும் கோன்கஹஹெதர ஆகிய ஆதார வைத்தியசாலைகள் என்பன உள்ளடங்கலாக பல நிறுவனங்களில் சக்திக் கணக்காய்வுகள் நடத்தப்பட்டன. சுற்றாடல் அமைச்சில் சக்திக் கணக்காய்வு மேற்கொள்ளப் பட்டு வருகின்றது. இலங்கைக் கடற்படையின் ஒரு குழு இந்தக் கணக்காய்வுகளுக்கு உதவுகின்றனர். இந்த சக்திக் கணக்காய்வுகளின் ஊடாக வருடாந்தம் அண்ணளவாக 300 மெவொம சக்தியை சேமிக்க முடியும் என மதிப்பிடப்பட்டுள்ளது.






சிறீ ஜயவர்த்தனப்புரப் பல்கலைக்கழகம் மற்றும் நாளாந்தக் கல்லூரி ஆகியவற்றில் நடத்திய சக்திக் கணக்காய்வு

4.2.7 ஒரு முன்னோடிக் கருத்திட்டம் என்ற வகையில், திவுலப்பிட்டிய பிரதேச சபையில் ஒரு வினைத் திறன் வாய்ந்த வீதி மின்குமிழ் முறைமையை 150 W, 50 W மற்றும் 20 W மின்விசையுடைய சக்தி வினைத்திறன் வாய்ந்த வீதி LED மின்குமிழ்களை ஏற்கனவேயிருக்கின்ற சோடியம் வாப்பர், பாதரச மின்குமிழ்கள் மற்றும் இன்கன்டஷென் மின்குமிழ்கள் ஆகிய மின்குமிழ்களுக்கு மீளிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. தற்பொழுது 150 W மற்றும் 50 W LED ஆகிய 250 வீதி மின்குமிழ்கள் வெற்றிகரமாக மீளிடப்பட்டுள்ளன. இரண்டாம் கட்டத்திற்கான கேள்வி ஒப்பந்தம் வழங்கப்பட்டுளளது. கேள்வி ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ள தரப்பு 20 W LED மின்குமிழ்களை விநியோகித்துள்ளது. நிறுவும் பணி திவுலப்பிட்டி பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இன்று வரை, மொத்தம் 1,100 மின்குமிழ்கள் நிறுவப்பட்டுள்ளன.

4.2.8 தற்பொழுது வணிகளவிலான ஹோட்டல்கள், அரசாங்க வசதிகள், வைத்தியசாலைகள் மற்றும் கைத்தொழில் ஸ்தலங்கள் அடங்கலாக பல பிரிவுகளிலும் காணப்படும் கட்டிடங்கள் குளிரூட்டல் முறைமையினால் பயன்படுத்தப்படும் மொத்த சக்தியில் அண்ணளவாக 40% முதல் 80% வீதத்தை நுகர்கின்றன. ஆகையால், அதி குளிரூட்டிகள் பற்றிய முழுமையான ஒரு ஆய்வை நடத்துவதும் மற்றும் ஒரு நீண்டகால சக்தி சேமிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை தயாரிப்பதும் அத்தியாவசியமாகும். இந்தத் தேவைக்குப் பதிலளிக்கும் வகையில், இலங்கையில் தற்பொழுது நிறுவப்பட்டு இயங்கும் அதி குளிரூட்டிகளின் ஒரு பொருட்பதிவேட்டை உருவாக்குவதில் இலக்குக்கொள்ளும் அதி குளிர்-சாதனங்கள் பற்றிய ஒரு ஆய்வை இறிசஅச மேற்கொண்டு வருகின்றது. இந்த ஆய்வு அவற்றின் சக்திப் பாவனை, சக்தி வினைத்திறன் மற்றும் ஏனைய பொருத்தமான தரவுகள் என்பவற்றில் கவனம் செலுத்தும். மேலும், இது ஏற்கனவேயிருக்கின்ற அலகுகளுக்கு அதிக சக்தி வினைத்திறன் வாய்ந்த அதி குளிர்சாதன இயந்திரங்களைக் கொண்டு மீளிடுவதால் உணரக்கூடிய சாத்தியமான சக்தி சேமிப்புகளை மதிப்பிடுவதற்கு எதிர்பார்க்கின்றது.

10 முதல் 15 ஆம் ஆண்டுகளுக்கு அதிக காலம் பழமையான வினைத்திறனற்றதாக இருக்கின்ற அலகுகளின் ஒரு கனிசமான பகுதி அதாவது நாடு முழுதிலும் தற்பொழுது அண்ணளவாக 1,000 அதி குளிரூட்டிகள் நிறுவப்பட்டுள்ளதாகவும் ஆய்வு இனங்கண்டுள்ளது. இந்த வினைத்திறனற்ற இயந்திரங்களை அதிக சக்தி வினைத்திறன் வாய்ந்த அலகுகளினால் மீளிடுவது ஆண்டொன்றுக்கு அண்ணளவாக 70 கிவொம சக்தியை சேமிக்கக்கூடும் எனவும், அதனால் அண்ணளவாக 48,400 டொன்கள் $CO_2$ ஐ குறைக்க முடியும் எனவும் இந்த ஆய்வு கண்டறிந்துள்ளது.

## 5. 2025 ஆம் ஆண்டிற்கு திட்டமிடப்பட்டுள்ள கருத்திட்டங்கள்

பூநகரி, மன்னார், சியம்பலாண்டுவ, கராச்சி, வீரவில், துணுக்கை, மாந்தை மேற்கு மற்றும் தெதுருஓயா ஆகிய கருத் திட்டங்கள் 2025 ஆம் ஆண்டினுள் தொடர்ந்திருக்கும். எமது மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி இலக்குகளை அடையும் பொருட்டு தேவையான கருத்திட்ட அங்கீகாரக் கட்டங்கள், காணி சுவீகரித்தல், சாத்தியவள ஆய்வுகள் மற்றும் சுற்றாடல் தாக்க மதிப்பீடுகள் என்பன மேற்கொள்ளப்படும்.

தேயிலை மற்றும் வைத்தியசாலைத் துறைகளை உள்ளடக்கும் பொருட்டு சக்தி நியமங்களின் தாபிப்பு வியாபிக்கப்படும். இதேநேரம் நிதி மற்றும் சில்லறைப் பிரிவுகளுக்கு ஏற்கனவேயிருக்கின்ற நியமங்கள் மீளாய்வு செய்யப்படும். சுக்தி முகாமையாளர்களின், சக்திக் கணக்காய்வாளர்களின் மற்றும் சக்தி சேவை வழங்கும் தரப்புகளின் நியமனம் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். இதற்கு தேசிய சக்தி நியமப் போட்டலின் ஊடாக சக்தித் தரவுகளை அறிக்கையிடுவதன் மூலம் ஆதரவளிக்கப்படும். மேலும், அதிக தகைமை மட்டங்களை அறிமுகப்படுத்தியும் அதே போல் சக்திக் கணக்காய்வாளர்களையும் மற்றும் சக்தி முகாமையாளர்களையும் ஆளுகின்ற ஒழுங்குவிதிகளை மீளாய்வு செய்தும் சக்திக் கணக்காய்வாளர் நியமனத் திட்டத்தை மறுசீரமைக்க திட்டங்கள் உள்ளன.

மேலும், சக்திக் கணக்காய்வுகளினதும் உசாதுணை சேவைகளினதும் தொடர்ச்சி அவற்றின் சக்திப் பாவனையை அனுகூலப்படுத்துவதில் நிறுவனங்களுக்கு உதவும் பொருட்டு முன்னுரிமைப்படுத்தப்படும். சக்திப் பாதுகாப்பிலும் மற்றும் சக்தி முகாமைத்துவத்திலும் ஒருமுகப்படும் பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் பல கைத்தொழில் மற்றும் வணிக இலக்குக்கொண்டு பேணவுபடும். மேலும், சக்திப் பாதுகாப்பை ஊக்குவிப்பதில் நிறுவனங்களினதும், சக்தி முகாமையாளர்களினதும் மற்றும் சக்தி சேவை வழங்கும் தரப்புகளினதும் பங்களிப்புகளை மதிக்கும் பொருட்டு இலங்கைத் தேசிய சக்தி வினைத்திறன் விருதுகள் வழங்கப்படும்.

இநிசஅச ஒரு உசாதுணை சாதனத்தைப் பயன்படுத்தி ஒரு முற்சாத்தியவள ஆய்வின் ஒரு பாகமாக நான்கு கைத்தொழில் பேட்டைகளின் மூன்றாம் தலைமுறை சாத்தியம் பற்றிய ஒரு துரித மதிப்பீட்டை மேற்கொள்ளும். இது BOI முகாமை செய்யும் கைத்தொழில் பேட்டைகளில் அதிகளவு சக்தியை நுகர்கின்ற சூடாக்கல், குளிராக்கல் மற்றும் மின்சார உற்பத்தி சாத்தியம் முதலியவற்றின் விபரங்களை தரும். அதிகளவு மின்சாரம் நுகரப்படும் இரவு நேரத்தில் பயன்படுத்துவதற்கு பகல் நேரத்தில் உற்பத்தி செய்யப்படும் சூரிய சக்தியைப் பயன்படுத்த உதவும் ஒரேமாதிரியான ஒரு சோடியம் உலோக மின்கலத்தை உருவாக்குவதற்கு கூரைமேல் சூரிய சக்தி பிவி முறைமைக்கான சக்திக் களஞ்சியத்தின் நிமித்தம் வசதியளிக்கும் வகையில் மின்னேற்றக்கூடிய சோடியம் உலோக மின்கலத்திற்கான தொழில் நுட்பத்தின் அபிவிருத்தி பற்றிய ஒரு ஆராய்ச்சிக் கருத்திட்டத்தை மேற்கொள்ள இலங்கை நனோதொழிநுட்ப நிறுவனம்) (SLINTEC) உடன்பட்டுள்ளது. BOI வலயங்கள் அவற்றின் உயிரணுத்திணிவு சக்தியில் அதிகமான சக்தியை நுகர்கின்றன. 2025 ஆம் ஆண்டில் நடத்த திட்டமிடப்பட்டுள்ள உயிரணுத்திணிவு சக்தி நுகர்வு பற்றிய ஆய்வு இந்த அளவுகளினதும் மூலங்களினதும் ஒரு நிலையை சுட்டிக்காட்டும். புதிய தொழில் நுட்பங்களையும் மற்றும் வினைததிறன் வாய்ந்த சக்தி சங்கிலி முறைமைகளையும்

அறிமுகப்படுத்துவதன் ஊடாக சாத்தியத்தை உணர்த்தும் பொருட்டு மீன்பிடித் துறையில் சக்தி வினைத்திறன் மேம்பாடு பற்றிய ஒரு ஆய்வு மேற்கொள்ளப்படும். குறித்த கருத்திட்டத்தின் சக்தி சேமிப்புகளையும் மற்றும் ஏனைய நன்மைகளையும் மதிப்பிடும் பொருட்டு திவுலப்பிட்டிய பிரதேச சபையில் ஒரு வினைத்திறன் வாய்ந்த வீதி ஒளியேற்றல் முறைமையை செயற்படுத்துவது பற்றிய பிற்-கண்காணிப்பு முன்னோடிக் கருத்திட்டம் மேற்கொள்ளப்படும்.

**பின்வரும் செயற்பாடுகள் சக்தி முத்திரையிடும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் (Under the labelling Program) திட்டமிடப்படும்.**

- ஆய்வுகூடம் சாந்த செயற்பாடுகள் மற்றும் தொடர்புடைய விழிப்பூட்டும் முன்னெடுப்புக்கள் என்பவற்றின் நிமித்தம் நிதி உதவியைப் பெற்றுக்கொள்வதை வலியுறுத்தி அதனால் மின்சார மோட்டர்களுக்கான ஒரு தன்னார்வ முத்திரையிடும் திட்டம் இந்த அதிகார சபையினால் முன்னெடுக்கப்படும்.
- இநிசஅச மூலம் சோறு சமைக்கும் அடுப்புகளுக்கான ஒரு பரிசோதனை ஆய்வுகூடம் தாபிக்கப்படும் என்பதுடன் தன்னார்வ சக்தி முத்திரையிடும் நிகழ்ச்சித்திட்டமும் ஆரம்பிக்கப்படும்.
- விநியோகத் தரப்புகளின் விழிப்புணர்வு அதிகரிக்கப்படும். நீர் பம்பிகளுக்கு தன்னார்வ சக்தி முத்திரையிடும் நிகழ்ச்சித்திட்டம் இநிசஅச இன் மூலம் முன்னெடுக்கப்படும்.
- தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கான நகல் நியமம் முடிவு செய்யப்படும். ஆய்வுகூடத்திற்கு தேவையான உபகரணங்கள் பெற்றுக்கொள்ளப்படும்.
- குறித்த நகல் நியமம் முடிவுசெய்யப்பப்-ட்டதையடுத்து நிறுத்திவைக்கக்கூடிய மின்விசிறிகளுக்காக காணப்படும் நியமப் பரிசோதனைகள் நிறைவுசெய்யப்படுதல் வேண்டும். தேவையான பரிசோதனை ஆய்வுகூட உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படுதல் வேண்டும்.
- நகல் நியமம் எரிவாயு அடுப்பகளின் நிமித்தம் நிறைவு செய்வதற்குத் தேவைப்படுத்தப்படும்.
- முழுமையான ஒரு தரவுத்தளம் தயாரிக்கப்படும். மேலும் விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களும் கருத்தரங்குகளும் மேற்கொள்ளப்படும். சக்தி முத்திரைகளுக்காக திறந்துவைப்பதற்கு முன்னர் QR குறியீட்டு இணையத்தள ப்லெட்போம் முன்-கூட்டி இநிசஅச இன் மூலம் பரிசீலிக்கப்படும்.
- கணனிகளுக்கு தேவையான பரிசோதனை ஆய்வுகூட உபகரணங்களை இநிசஅச கொள்வனவு செய்யும்.
- சலவை இயந்திரங்கள், மின்சாரத்தில் இயங்கும் நீர் கொதிக்கவைக்கக்கூடிய சாதனங்கள், மின்சார அடுப்புகள் என்பன தொடர்பான நியமத்தை இநிசஅச நிறைவு செய்ய எதிர்பார்க்கின்றது.
- **இவ் முயற்சிகள் சக்தி வள செயற்திறனை அதிகரிப்பதற்கும் இவ் தொழிற் துறைகளில் நிலையான சக்திவள முகாமைத்துவத்தை ஊக்குவிப்பதற்கும் வடிவமைக்கப்பட்டுள்ளன.**

## 1. அறிமுகம்

### 1.1 இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையினை தாபித்தல்

2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்திச் சட்டத்தினால் 2015 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்குவரும் வகையில் இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை ("பேரவை") தாபிக்கப்பட்டது. பேரவை தற்போது மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் கீழ் செயற்படுகின்றது. சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம்,பேரவைக்குப் பின்வரும் பொறுப்புக்கள் காணப்படுகின்றன.

(அ) பொதுமக்கள், கதிர்வீச்சுத் தொழிலாளர்கள், நோயாளிகள் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்காக உரிமங்களை வழங்குதல், களப்பரிசோதனைகள்,இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு திட்டங்களை செயற்படுத்துவதன் மூலம் அயனாக்கல் கதிர்வீச்சுடன் சம்பந்தப்பட்ட நடைமுறைகள் மற்றும் மூலங்களை ஒழுங்குபடுத்துதல்

(ஆ) கதிர்வீச்சு மூலங்களின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பை உறுதி செய்தல்

(இ) சட்டத்திலுள்ள விதிகள் மற்றும் உரிமங்களிலுள்ள நிபந்தனைகளை மீறியோர்களிற்கு எதிராக அமுலாக்க நடவடிக்கைகளை எடுத்தல்

(ஈ) அணுப் பிரயோகங்கள் தொடர்பிலான பாதுகாப்பு,பராமரிப்பு மற்றும் கண்காணிப்பு மீது இலங்கையால் கைச்சாத்திடப்பட்டுள்ள சர்வதேச உடன்படிக்கைகளின் கீழுள்ள இலங்கையின் பொறுப்பை உறுதிப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்தல்.

## 2. மீளாய்வுக் காலப்பகுதியில் எதிர்கொள்ளப்பட்ட சவால்கள் மற்றும் அத்தகைய சவால்களை எதிர்கொள்ள பின்பற்றப்பட்ட உத்திகள்

2.1 திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளை சரியான நேரத்தில் நிறைவேற்றுவதற்கும், நியாயமான காலக்கெடுவிற்குள் கோரப்பட்ட சில பரிசோதனைகளை மேற்கொள்வதற்கும் போதுமான எண்ணிக்கையிலான விஞ்ஞான உத்தியோகத்தர்கள் மற்றும் நிர்வாக ஊழியர்கள் இல்லாதிருந்தமை பேரவைக்கு சவாலாக இருந்தது. பல ஊழியர்களின் இராஜினாமா மற்றும் ஓய்வு பெற்றிருந்தமை, ஆட்சேர்ப்பு மீதான அரசாங்க கட்டுப்பாடுகள் ஆகியவை இந்த ஊழியர் பற்றாக்குறைக்கு காரணமாக அமைந்திருந்தது. அங்கீகரிக்கப்பட்ட 45 பதவிகள் காணப்பட்ட போதிலும், தற்போது 32 ஊழியர்கள் மட்டுமே பேரவையில் உள்ளனர். இதனால் 13 பதவிநிலைக்கு வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

எவ்வாறாயினும்,மேற்கூறிய தடைகளுக்கு மத்தியிலும் ஊழியர்களின் அர்ப்பணிப்பு, கடமையுணர்வு மற்றும் தளராத ஒத்துழைப்பின் காரணமாக, பேரவையின் ஒழுங்குபடுத்தல் மற்றும் நிர்வாகப் பணிகள் மற்றும் நிறுவனத்தின் செயல்பாட்டு நடவடிக்கைகளை சர்வதேச தரத்திற்கு இணங்க மேம்படுத்துவதற்கும் செயற்படுத்துவதற்கும்பேரவை தனது அதிகபட்ச முயற்சியை மேற்கொண்டுள்ளது.

2.2 2014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்திச் சட்டத்தின்படி 13 விதிகள், கொள்கைகள், ஒழுங்குமுறைகள் மற்றும் நடைமுறைகள் தயாரிக்கப்பட வேண்டுமென பேரவை அடையாளம் கண்டுள்ளது. அத்தகைய ஆவணத்தைத் தயாரிப்பதற்காக பேரவையில் தனிப்பட்ட அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதுன்

அத்தகைய ஆவணத்தை மேற்பார்வை செய்வதற்காக முகாமைத்துவச் சபையின் உறுப்பினர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த செயல்முறை 2023 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் தொடங்கப்பட்டது. அதன்படி, 2024 ஆம் ஆண்டில், மேற்கண்ட விதிகள், ஒழுங்குமுறைகள் போன்றவற்றை உருவாக்கும் பணிகளில் சுமார் 60 சதவீதத்தை ஒழுங்குபடுத்தல் பேரவை முடித்துள்ளது. இந்த ஆண்டு இறுதிக்குள் இந்தப் பணிகளை முடிப்பதற்கு ஒழுங்குபடுத்தல் பேரவை எதிர்பார்க்கிறது. மேலும் தற்போதுள்ள ஊழியர் பற்றாக்குறை இந்தப் பணிகளை உடனடியாக முடிப்பதில் ஒழுங்குபடுத்தல் பேரவைக்கு பெரும் சவாலாக மாறியுள்ளது.

### 3) அபிவிருத்திச் செயற்திட்டங்கள் மற்றும் நிறுவனச் செயற்பாடுகளின் செயல்முன்னேற்றம்

**அட்டவணை 5.1**
**ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகள்**

| இல. | செயற்பாடு | 2024 இற்கான இலக்கு | முன்னேற்றம் |
|---|---|---|---|
| 01. | புதிய மற்றும் புதுப்பித்தல் உரிமங்களை வழங்குதல் (விண்ணப்பங்களின் செயன் முறைப்படுத்தல், நவீனப்படுத் தல்கள் மற்றும் தற்போதுள்ள உரிமங்களின் காலநீடிப்பு உட்பட) | 350 | 129 |
| | அனுமதிப்பத்திரங்களிற்கு காலநீடிப்பை வழங்குதல் | 100 | 135 |
| 02. | புதிய மற்றும் புதுப்பித்தல் உரிமங்களை வழங்குதல் (விண்ணப்பங்களின் செயன் முறைப்படுத்தல், நவீனப்படுத் தல்கள் மற்றும் தற்போதுள்ள உரிமங்களின் காலநீடிப்பு உட்பட) | 4000 | 2324 |
| 03. | அனுமதிப்பத்திரங்களிற்கு காலநீடிப்பை வழங்குதல் | 500 | 196 |
| 04. | புதிய மற்றும் புதுப்பித்தல் உரிமங்களை வழங்குதல் (விண்ணப்பங்களின் செயன் முறைப்படுத்தல், நவீனப்படுத் தல்கள் மற்றும் தற்போதுள்ள உரிமங்களின் காலநீடிப்பு உட்பட) | 480 | 341 |
| 05. | அனுமதிப்பத்திரங்களிற்கு காலநீடிப்பை வழங்குதல் | 80 | 57 |

**அட்டவணை 5.2**
**தேசிய பயிற்சிப் பாடநெறிகள்**

| நிகழ்ச்சித்திட்டம் | அடையப்பட்ட இலக்கு |
|---|---|
| நோயறிதல் எக்ஸ்-ரே வசதிக்கைத்தொழில் மற்றும் மருத்துவ வசதிகளில் பணிபுரியும் "செயற்படுத்துனர் களுக்கான கதிர்வீச்சு பாதுகாப்பு" குறித்த தேசிய பயிற்சி பாடநெறி (T/OPU/M/05) (தொடர்ச்சி) | 20 பங்கேற்பாளர்களுக்கு பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது |
| தேசிய பயிற்சி பாடநெறி வகை III மற்றும்IVகைத்தொழில் வசதிகளில் பணிபுரியும் செயற்படுத்துனர்கள்/பயனர்களுக்கான கதிர்வீச்சு பாதுகாப்பு குறித்த தேசிய பயிற்சி பாடநெறி (T/OPU/I/04) | 15 பங்கேற்பாளர்களுக்கு பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது |
| கதிரியக்க சிகிச்சை/அணு மருத்துவ வசதிகளில் பணிபுரியும் "செயற்படுத்துனர்கள்/பயனர்களுக்கானகதிர்வீச்சு பாதுகாப்பு" குறித்த தேசிய பயிற்சி பாடநெறி (T/OPU/I/04) | 11 பங்கேற்பாளர்களுக்கு பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது |
| வகை I மற்றும்II தொழில்துறை வசதிகளில் பணிபுரியும் "செயற்படுத்துனர்கள்/பயனர்களுக்கான கதிர்வீச்சு பாதுகாப்பு" குறித்த தேசிய பயிற்சி பாடநெறி (T/OPU/I/03) | 17 பங்கேற்பாளர்களுக்கு பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது |
| நோயறிதல் எக்ஸ்ரே வசதிகள் (T/OPU/M/05) மற்றும் பல்/கால்நடை நோயறிதல் எக்ஸ்ரே வசதிகள் (T/OPU/M/06) ஆகியவற்றிலுள்ள "செயற்படுத்துனர்கள்/பயனர்களுக்கான கதிர்வீச்சு பாதுகாப்பு" குறித்த தேசிய பயிற்சி பாடநெறி | 88 பங்கேற்பாளர்களுக்கு பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது |
| SLAERC மற்றும் பிற தொடர்புடைய பங்குதாரர்களுக்காக IAEA உடன் இணைந்து நடத்திய வடிவமைப்பு அடிப்படை அச்சுறுத்தல் (DBT) குறித்த தேசிய பட்டறை | 30 பங்கேற்பாளர்களுக்கு பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது |

**அட்டவணை 5.3**
**பிரமாணங்கள், விதிகள், நடைமுறைகள் மற்றும் வழிகாட்டல்களைத் தயாரித்தல**

| | நிகழ்ச்சித்திட்டம் | அடைவு சதவீதம் |
|---|---|---|
| 1 | கதிர்வீச்சு மூலங்களின் அயனியாக்கும் கதிர்வீச்சு பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு குறித்த வரைவு விதிமுறைகளை இறுதி செய்தல். | 70% |
| 2 | கதிரியக்கக் கழிவு முகாமைத்துவம் குறித்த தேசிய கொள்கையைத் தயாரித்தல் | 80% |
| 3 | அணுசக்தி அல்லது கதிரியக்க அவசரகாலமுகாமைத்துவத் திட்டத்தை செயல்படுத்துதல் | 80% |
| 4 | அணுசக்தி மின் உற்பத்தி நிலையத்தின் செயல்பாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான அணுசக்திச் சட்டத்தைத் தயாரித்தல் | *** முதற்கட்ட வரைவு பூரணப்படுத்தப்பட்டது |
| 5 | தேசிய பொறி செய்யப்பட்ட மூலப் பதிவேட்டைப் பராமரித்தல் | 100% |
| 6 | ஒழுங்குபடுத்தல் பேரவையின் தகவல் முறைமையில் (RAIS) மூலப் பதிவேட்டைப் பராமரித்தல் | 100% |
| 7 | நிகழ்நிலை உரிமம் மற்றும் ஒப்புதல் முறையை அறிமுகப்படுத்துதல் | 90% |
| 8 | IAEA TC திட்டங்களின் கீழ் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகள் மற்றும் பயிற்சிப் பகுதிகள் மூலம் விஞ்ஞான மற்றும் ஏனைய ஊழியர்களுக்கு பயிற்சி அளித்தல் | 100% |
| 9 | ஆர்வமுள்ள தரப்பினர்கள் மற்றும் பொதுமக்களுக்கு தகவலுக்காக அதிகாரப்பூர்வ வலைதளத்தில் உரிமத் தகவல் மற்றும் சேவைகளை வெளியிடுதல் | 100% |

*** தேசிய அணுசக்தி திட்டத்தின் (NPP) செயற்பாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அணுசக்திச் சட்டத்தைத் தயாரித்தல்˙

## 4. நடைபெற்றுவருகின்ற இருதரப்பு நிகழ்ச்சித்திட்டம்

(அ) நாட்டில் பயன்படுத்தப்படுகின்ற உயர் வீரியம் கொண்ட கதிரியக்க மூலங்களுக்கு பாதுகாப்பை வழங்குவதற்காக, அமெரிக்க எரிசக்தித் திணைக்களத்தின் (USDOE) உலகளாவிய பொருள் பாதுகாப்பு (GMS) நிபகழ்ச்சித்திட்டத்தில் பேரவை ஈடுபட்டுள்ளது. மேலும்,GMS திட்டத்தின் தொழில்நுட்ப உதவியுடன், இந்த மூலங்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, அதிக கதிரியக்க மூலங்களைப் பயன்படுத்தும் வசதிகளில் இயற்பியல் பாதுகாப்பு அமைப்புகளை நிறுவுவதற்கும் செயல்படுத்துவதற்கும் பேரவை ஆர்வமுள்ள தரப்பினர்களுடன் இணைந்து செயல்படுகிறது. அதிக வீரியம் கொண்ட கதிரியக்க மூலங்கள் பயன்படுத்தப்படும் 12 வசதிகளில் இயற்பியல் பாதுகாப்பு அமைப்புகளைப் பராமரிப்பதற்கும், 12 உயர் செயல்பாட்டு கதிரியக்க மூல தளங்களில் உள்ள அனைத்து பாதுகாப்பு அமைப்புகளையும் கட்டுகுருந்தை இல் உள்ள STF பயிற்சி கல்லூரியில் அமைந்துள்ள மத்திய கண்காணிப்பு நிலையத்துடன் இணைப்பதற்கும் USDOE ஒரு பராமரிப்பு ஒப்பந்தத்தை அங்கீகரித்தது.

(ஆ) "அணு அல்லது கதிரியக்க அவசரநிலைகளுக்கு தயார்நிலை மற்றும் பதிலை வலுப்படுத்துதல்" எனும் சர்வதேச அணுசக்தி முகமைத்துவ தொழில்நுட்ப ஒத்துழைப்பு திட்டத்தில் பேரவை பங்கேற்கிறது,. இந்த திட்டத்தின் கீழ்,

(இ) விஞ்ஞான ஊழியர்களுக்கு பயிற்சி அளிக்கவும், அவசரகால பதிலளிப்பதற்கும் எதிர்கொள்வதற்குத் தேவையான கருவிகளைப் பெறுவதற்கும், அதற்குத் தேவையான அவசரகால தயார்நிலை மற்றும் பதிலளித்தல் ஆவணங்களைத் தயாரிப்பதற்கான நிபுணர் பணிகளை மேற்கொள்வதற்கும் பேரவை நடவடிக்கை எடுத்துள்ளது.

## 5. 2025 இற்கான எதிர்கால திட்டங்கள்

### 5.1. ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகள்

**அட்டவணை 5.4**
**ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகள்**

| நிகழ்ச்சித்திட்டங்கள் | 2025 இல் மேற்கொள்ளப்படவுள்ள செயற்பாடுகள் |
|---|---|
| 1. பிரமாணங்கள்,ஒழுங்குவிதிகள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளைத் தயாரித்தல் | 1.1. ககதிர்வீச்சு தொழிலாளர்களின் தகுதிகளுக்கான அளவுகோல்கள் குறித்த விதிக்கான ஒப்புதல்களை சட்ட வரைவாளர் துறையிடமிருந்து பெறுதல் மற்றும் சிங்களம் மற்றும் தமிழில் மொழிபெயர்த்தல்.<br>1.2. அஅங்கீகரிக்கப்பட்ட ஆய்வாளர்களால் ஆய்வு நடைமுறையை செயல்படுத்துதல்<br>1.3. அஅமைச்சரவை ஒப்புதல் பெற்ற பிறகு கதிரியக்கக் கழிவு மேலாண்மை குறித்த தேசியக் கொள்கையின் தேவையை செயல்படுத்துதல்.<br>1.4. 22014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்திச் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள தேவைகளின்படி சர்வதேச வழிகாட்டுதல்களின்படி கதிரியக்கப் பொருட்களின் பாதுகாப்பான போக்குவரத்து, பாதுகாப்பு மற்றும் பாதுகாப்புக் கொள்கைகள், அவசரகால விதி மற்றும் அமலாக்க நடைமுறை குறித்த விதியைத் தயாரித்தல் |

| | |
|---|---|
| 2. கதிர்வீச்சு மூலங்கள் மற்றும் கதிர்வீச்சு வசதிகளுக்கான உரிமம் வழங்குதல் மற்றும் ஆய்வு செய்தல் | 2.1. வவழங்க திட்டமிடப்பட்டுள்ள உரிமங்களின் எண்ணிக்கை (புதிய மற்றும் புதுப்பித்தல்) - 560<br>2.2. நடத்த திட்டமிடப்பட்டுள்ள ஆய்வுகளின் எண்ணிக்கை - 500 |
| 3. கதிர்வீச்சு பாதுகாப்பு குறித்த தேசிய பயிற்சி பாடநெறி | 3.1. மருத்துவ மற்றும் தொழில்துறை துறைகளில் உரிமம் பெற்ற வசதிகளின் ஆபரேட்டர்கள் மற்றும் கதிர்வீச்சு பாதுகாப்பு அதிகாரிகளுக்கான தேசிய பயிற்சி படிப்புகளை நடத்துதல் (கதிர்வீச்சு பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் இயந்திரங்களின் ஆபரேட்டர்கள்)<br>3.2. தேசிய அணுசக்தி அல்லது கதிரியக்க அவசர முகாமைத்துவ திட்டத்தின் தேவைகளின்படி நியமிக்கப்பட்ட மறுமொழி குழுக்கள் மற்றும் குழுக்களுக்கான பயிற்சிகளை நடத்துதல் |
| 4. ஒஒப்புதல்களை வழங்குதல் மற்றும் சான்றிதழ்களை வழங்குதல் | 4.1 கதிரியக்க பொருட்கள் மற்றும் கதிர்வீச்சு கருவிகளின் இறக்குமதி.∴ ஏற்றுமதிக்கான ஒப்புதல்களை வழங்குதல். வழங்கப்படும் என மதிப்பிடப்பட்டுள்ள ஒப்புதல்களின் எண்ணிக்கை - 480<br>4.2 உணவு பரிசோதனைக்கான சான்றிதழ்களை வழங்குதல் பபரிசோதிக்கப்பட உள்ள மாதிரிகளின் எண்ணிக்கை - 4000<br>4.3 கதிர்வீச்சு வசதி திட்டங்களுக்கான ஒப்புதல்களை வழங்குதல். வழங்கப்படும் என மதிப்பிடப்பட்டுள்ள ஒப்புதல்களின் எண்ணிக்கை - 80 |
| 5. ஆன்லைன் உரிமம் வழங்குதல் மற்றும் ஒப்புதல் அமைப்பு | தேர்ந்தெடுக்கப்பட்ட வசதிகள் மற்றும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி ஒப்புதல்களுக்கான உரிமத்திற்காக ஆன்லைன் உரிமம் மற்றும் ஒப்புதல் அமைப்பை நிறுவுதல் மற்றும் அதைப் பயன்படுத்துதல். |
| 6. ததரவுத்தளம் மற்றும் மூலப் பதிவேட்டைப் பராமரித்தல் | 6.1. உரிமதாரர்களின் தரவுத்தளத்தை பராமரித்தல், ஆய்வுகள் மற்றும் பிற தொடர்புடைய தகவல்கள்.<br>6.2. தேசிய கதிர்வீச்சு மூலப் பதிவேட்டைப் பராமரித்தல் |
| 7. உரிமம் பெற்ற வசதிகளின் தகவல்களை இணையத்தில் வெளியிடுதல் | சேவைகளைப் பெறுவதற்குப் பொருத்தமான இடங்களை அடையாளம் காண, பொதுத் தகவலுக்காக பேரவையின் வலைதளத்தில் உள்ள அனைத்து உரிமம் பெற்ற வசதிகள் பற்றிய புதுப்பித்த தகவல்கள். |
| 8. அதிக செயல்பாட்டு கதிரியக்கப் பொருட்களின் போக்குவரத்தை அங்கீகரித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் | கோரிக்கையின் பேரில் அதிக செயல்பாட்டு கதிரியக்கப் பொருட்களை கொண்டு செல்வதற்கான ஒப்புதல்களை வழங்குதல் மற்றும் போக்குவரத்தை மேற்பார்வை செய்தல். |

## 5.2. IAEA இன் தொழில்நுட்ப ஒத்துழைப்பு (TC) செயற்திட்ட நடவடிக்கைகளை செயல்படுத்துதல்

IAEAஇன் தொழில்நுட்ப ஒத்துழைப்புத் திட்டம் SRL9013 “அணுசக்தி அல்லது கதிரியக்க அவசரநிலைகளுக்கு தயார்நிலை மற்றும் பதிலளிப்பை வலுப்படுத்துதல்” இன் கீழ் 2022-2023 திட்ட சுழற்சிக்காக நடத்தப்பட்டது. திட்ட சுழற்சியின் போது சில செயல்பாடுகளை முடிக்க முடியாததால், 2025 ஆம் ஆண்டில் இந்த திட்டத்தின் மூலம் பின்வரும் விளைவுகள் நீட்டிக்கப்படும்.

அ. பேரவையிலிருந்து பல அதிகாரிகள், முதலில் பதிலளிக்கும் நிறுவனங்கள் மற்றும் தொழில்நுட்ப அமைப்புகளுக்கு ஒத்துழைப்பு, அறிவியல் வருகைகள் மூலம் பயிற்சி அளித்தல்

ஆ. அவசரகால பயிற்சிகளை நடத்துவதற்கும் உண்மையான அவசரநிலைகளுக்கு பதிலளிப்பதற்கும் தேவையான உபகரணங்களைப் பெறுதல். அளவிடும் உபகரணங்கள், பயிற்சி உபகரணங்கள் மற்றும் மாசு நீக்கும் உபகரணங்கள் இந்த திட்டத்தின் மூலம் பெறப்படும்.

இ. புதிய ஆரம்ப எச்சரிக்கை கண்டறிதல் அமைப்பை நிறுவுதல். இந்த அமைப்பு சர்வதேச கதிர்வீச்சு கண்காணிப்பு தகவல் அமைப்பு (IRMIS) தரவு பகிர்வு தளத்துடன் இணக்கமாக இருக்கும் மற்றும் அணுசக்தி பேரழிவின் போது முன்கூட்டியே எச்சரிக்கையைப் பெற உதவும்.

# அத்தியாயம் 06

# இலங்கை அணு சக்தி அதிகார சபை

## 1. அறிமுகம்

இலங்கை அணு சக்தி சபை (இஅசச) மின்வலு சக்தி அமைச்சின் கீழ் இயங்குகின்ற அரசாங்கத்தின் ஒரு முன்னோடி அணு சக்தி விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுனமாகும். இஅசச சபையின் அதிகார ஆணையானது 2014 இன் 40 ஆம் இலக்க அணு சக்தி சபை சட்டத்தினால் அதற்கு உரித்தளிக்கப்பட்டுள்ளது. இந்த அதிகார ஆணை தேசிய அபிவிருத்தி நோக்கத்தின் நிமித்தம் அணு சக்தி விஞ்ஞானத்தினதும் தொழில்நுட்பத்தினதும் பாவனையை ஊக்குவிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் கிடைத்துள்ளது. இந்த இஅசச சபை ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் (ஆ-அ) சம்பந்தமான பணிகளின் ஊடாக அணு சக்தித் தொழில்நுட்பத்தின் அமைதியான பாவனையை ஊக்குவித்து மேம்படுத்துகின்ற அதே வேளையில் பாதுகாப்பையும் தரத்தையும் உறுதிசெய்து ஒழுங்குறுத்துகை சார் தேவைப்பாடுகளை நிறைவேற்றும் பொருட்டு கதிர்வீச்சு சார்ந்த பாதுகாப்பு சேவைகளை வழங்குகின்றது. அணு சக்தித் தொழில்நுட்பம் பல துறைகளில் பல அளவுகளில் அதன் பிரயோகங்களைக் கொண்டுள்ளது. இலங்கையில் உள்ள மருந்துகள், விவசாயம், கைத்தொழில், சக்தி மற்றும் சுற்றாடல் ஆகிய துறைகளின் அபிவிருத்திற்கு கணிசமான பங்களிப்பை இந்த தொழில்நுட்பத்தினால் வழங்க முடிகின்றது.

மீண்டெழும் மூலதனத்திற்கும் மற்றும் மீண்டெழும் செலவினங்களுக்கும் அரசாங்கத்தின் திரட்டு நிதியத்திலிருந்து இந்த இஅசச இற்கு நிதி கிடைக்கின்றது. மேலும், ஆற்றல்களையும் மற்றும் திறன்களையும் அபிவிருத்தி செய்ய குறிப்பாக சர்வதேச அணு சக்தி முகவர் நிலையத்தில் (சஅசமுநி) அதாவது அதன் தொழில்நுட்பக் கூட்டுறவு (தொகூ) அபிவிருத்திக் கருத் திட்டங்கள், பிராந்திய கூட்டுறவு ஒப்பந்தங்கள் (பிகூஒ) மற்றும் ஒருங்கிணைப்பு ஆராய்ச்சி கருத் திட்டங்கள் என்பவற்றின் ஊடாக தொழில்நுட்ப உதவி கிடைக்கின்றது. இஅசச நாட்டின் சமூகப் பொருளாதார அபிவிருத்திற்கு அணு விஞ்ஞான தொழில்நுட்பத்தின் நன்மைகளை பெற்றுக் கொள்ளும் வகையில் நாட்டில் காணப்படும் பொருத்தமான அக்கறையுடைய தரப்பு நிறுவனங்களுக்கு / அமைப்புகளுக்கு உதவியுள்ளது.

SLAEB முக்கியமாக மூன்று விஞ்ஞான பிரிவுகளையும், அதன் சேவைகள் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான ஆய்வுகூட வசதிகளைக் கொண்ட இரண்டு மையங்களையும் கொண்டுள்ளது. SLAEB ஒரு தலைவரைக் கொண்ட ஒரு வாரியத்தால் நிர்வகிக்கப்படுகிறது. சுகாதாரம், விவசாயம், சுற்றாடல், எரிசக்தி மற்றும் தொழிற்துறை போன்ற துறைகளில் அணுசக்தி தொழில்நுட்பத்தினை அமைதியான முறையில் பயன்படுத்துவதற்கான தனித்துவமான திறன்களையும் திறமைகளையும் SLAEB கொண்டுள்ளது.

## 2. குறித்த காலப்பகுதியில் எதிர்நோக்கிய சவால்களும் அத்தகைய சவால்களை அடையாளப் படுத்த பின்பற்றிய மூலோபாயங்களும்:

| | சவால் | பின்பற்றிய மூலோபாயம் |
|---|---|---|
| 1 | நாட்டில் உள்ள பொருளாதார நெருடிக்கடி நிலையில் நிலைத்திருப்பதற்கு நாடப்படுகின்ற சிறந்த வாய்ப்புக்கள் (உள்நாட்டு அல்லது வெளிநாட்டு) ஊழியர் புறழ்வு குறைந்தமை மற்றும் புதிதாக முகாமைத்துவ உதவியாளர்களை ஆட்சேர்த்துக் கொள்வதற்கு பிரதமர் அலுவலகத்திலிருந்து அங்கீகாரம் கிடையாமை | -நாளாந்த செயற்பாடுகளை அணவும் பொருட்டு NAITA மற்றும் பட்டதாரி பயிலுநர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். ஆனால் எதிர்பார்த்தவாறு அது வெற்றியளிக்கவில்லை.<br>-இது தவிர, வெற்றிடம் நிலவும் பதவிகளின் நிமித்தம் பதில் ஏற்பாட்டு ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன. |
| 2 | உபகரணங்களில் / பொறித் தொகுதிகளில் ஏற்பட்டிருந்த தொழில் நுட்பக் கோளாறுகள் மற்றும் உதிரிப் பாகங்கள், துணைப் பாகங்கள், சேவை வழங்கும் தரப்புகளின் உதவி முதலியவற்றின் பற்றாக்குறையினால் எதிர்நோக்க நேர்ந்த கஷ்டங்கள் . | புதிய உபகரணங்கள், உதிரிப் பாகங்கள் மற்றும் நிபுணத்துவ உதவி என்பவற்றை பெற்றுக் கொள்ளும் பொருட்டு சஅசமுநி போன்ற சர்வதேச நன்கொடை நிறுவனங்களிலிருந்து தொழில் நுட்ப உதவியையும் ஏனைய உதவிகளையும் பெற்றுக் கொள்ளல். |
| 3 | அரசாங்கம் விதிதத வரவு செலவுத் திட்ட மட்டுப்பாடுகள் | ஒட்டுநர் தகைமை வசதி, புதிய பகுப்பாய்வு நுட்பங்கள் (உ-ம்: இரத்தினக்கல் பகுப்பாய்வு) போன்ற வருமானம் ஈட்டும் புதிய சேவைகள் தாபிக்கப்பட்டுள்ளன. |
| 4 | வழமையான பகுப்பாய்வு சேவைகளுக்கு (சபையின் கட்டுப்பாட்டிற்கு அப்பால்) கேள்வி குறைந்திருந்தமை | சேவைகளின் தரம், ஆய்வுகூட சான்று, தர உத்தரவாதம் முதலியவற்றின் ஊடாக பேணப்பட்டுள்ளது. |
| 5 | சஅசமுநி வழங்கும் நன்கொடைகளை பெற்றுக் கொள்ள தேவையான சுங்க விடுவிப்புகளுக்கு விதிக்கப்பட்டிருந்த வரவு செலவுத் திட்ட மட்டுப்பாடுகள் | மின்வலு சக்தி அமைச்சின் (மிவசஅ) இன் கீழுள்ள ஏனைய நிறுவனங்களிலிருந்து நிதியை ஒதுக்கும் வகையில் கருத்திற் கொள்வதற்கான கோரல் சமர்ப்பிக்கப்பட்டது. |
| 6 | பிரதான வாடிக்கையாளரிடமிருந்து (இகாநி இன் லாலன் இறப்பர் [ப்ரைவட் லிமிற்றட்] கிடைக்கும் உற்பத்திகளின் தொடர்ச்சியான விநியோகத்தில் தடங்கல் ஏற்பட்டமை. இஅசச சபைக்கு வருமான நட்டத்தை ஏற்படுத்தியுள்ள மாதாந்த அளவுப் பரிமாணப் பொறுப்புக்கள் தொடர்பாக இஅசச உடன் அவை ஒரு ஒப்பந்தத்திற்கு வராதிருந்தமை | பிரச்சினையின் அடிப்படை காரணத்தை (காரணளங்களை) கண்டறியும் பொருட்டு பிரதான வாடிக்கையாளருடன் நடத்தப்படும் வழமையான கலந்துரையாடல்கள்.<br>காமா கதிர்வீச்சில் அக்கறையை காண்பித்துள்ள ஏனைய சாத்தியமான வாடிக்கையாளர்களின் நிமித்தம் கூட்டங்கள், ஸ்தல விஜயங்கள் முதலியன வழமையாக ஏற்பாடு செய்யப்படுகின்றன. இது தவிர, தொடர்ச்சியாக காமா கதிர்வீச்சுக்கு தேவையான உற்பத்திகளை விநியோகிக்கும் ஆற்றல் உடைய சாத்தியமான வர்த்தகப் பங்காளிகளை நாடும் பொருட்டு இந்திய தூதகருடன் ஒரு கூட்டம் நடத்தப்பட்டது. |

## 3. அடைந்த முன்னேற்றம் / சாதனைகள்:

### 3.1 SLAEB இன் கீழ் இயங்கும் இலங்கை காமா மையம் (SLGC),

பியகம ஏற்றுமதி செயலாக்க மண்டலத்தில் அமைந்துள்ளது. நாட்டில் தொழில்துறைக்கு காமா கதிர்வீச்சு சேவையை வழங்குவதற்காக நிறுவப்பட்ட ஒரே அரசாங்கத்திற்குச் சொந்தமான கதிர்வீச்சு வசதி இதுவாகும். தற்போது, இலங்கையில் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் பயன்படுத்தப்படும் அறுவை சிகிச்சை கையுறைகள் கிருமி நீக்கம் செய்யப்படும் வசதி இதுவாகும். அதோடு, பிற மருத்துவ பொருட்கள், உணவுப் பொருட்கள், பேக்கிங் பொருட்கள் போன்றவை அறுவை சிகிச்சை கையுறைகளுடன் ஒப்பிடும்போது குறைந்த அளவில் கதிர்வீச்சு செய்யப்படுகின்றன. மருத்துவம் மற்றும் உணவுப் பொருட்களுக்கு கதிர்வீச்சு சேவையை வழங்குவதன் மூலம் SLGC 2024 இல் ஈட்டப்பட்ட மொத்த வருமானம் ரூ. மில்லியன் 26.42 ஆகும்.

## 3.2 அழிவில்லாத சோதனைக்கான தேசிய மையம் (NCNDT)

பரிசோதனை சேவைகள் மற்றும் NDT பயிற்சி வழங்கல்: இலங்கையில் மின் உற்பத்திப் பொறித் தொகுதிகளுக்கு NDT சேவையை வழங்குகின்ற ஒரு முதன்னிலை நிறுவனம் இந்த NCBNDT நிலையமாகும். இதன் ஊழியர்கள் மின்சக்தித் துறையில் எந்தவொரு அவசரநிலைமையிலும் பரிசோதனைப் பணிகளைக் கவனிக்க ஆயத்தமாகவுள்ளனர். 2024 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இந்தப் பரிசோதனைப் பிரிவினால் 125 பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- இதற்கு மேலதிகமாக, இந்த நிபதேசநி இலங்கையின் நிரந்தர பரிசோதனைக்கான தேசிய சான்று வழங்கும் சபையின் (NCBNDT) செயற்பாடுகளுக்கும் உதவுகின்றது. இந்த NCBNDT புதிய ISO/IEC 17024 மற்றும் ISO/IEC 9712 ஆகிய பதிப்புகளுக்கு இணங்க தனது வாடிக்கையாளர்கள் திருப்திப்படுமளவுக்கு நம்பகரமான தகுதியான சான்றுபடுத்தல் சேவையை வழங்குகின்றது. மேலும், NDT இல் தனிநபர் சான்றுபடுத்தலுக்கான 2 ஆம் அட்டவணைக்கு இணங்க பலதரப்பு அங்கீகார ஒப்பந்தமான (MRA) நிரந்தர பரிசோதனைக்கான சர்வதேச சபையின் (ICNDT) கீழ் இந்த NCBNDT ஒரு பதிவுபெற்ற தனிநபர் சான்றுபடுத்தல் சபையாக (PCB) விளங்குகின்றது.

- ஒட்டுநர் தகுதி வசதி (WQF): ஒட்டுக் கலையில் ஒட்டும் தொழிலாளர்களை உருவாக்கும் பொருட்டு முழுமையான நோக்கெல்லை என்ற ரீதியில் ஒட்டும் தொழில்நுட்ப வல்லுநர்கள், ஒட்டுத் தொழில் மேற்பார்வையாளர்கள் மற்றும் ஒட்டுத் தொழில் பரிசோதகர்கள் முதிலியோர் போன்ற சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட அத்தகைய தொழில் வல்லுநர்களை உருவாக்கும் பொருட்டு இந்த WQF வசதி தாபிக்கப்பட்டுள்ளது. இலங்கை ஒட்டுத் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கான ஒட்டுநர் செயலாற்றுகை தகைமை (WPQ) சேவையை நடத்தி 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இந்த WQF இன் வணிக செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டது. அதற்கிணங்க, இஅசச இன் நிபதேநி இன் இந்த WQF வசதி 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் இன்று வரை சர்வதேச நியமத்திற்கு அமைய WPQ வசதியின் நிமித்தம் அரச துறையில் முதன்னிலை 'இடைவெளி நிரப்பல் மற்றும் பரிசோதனை நிலையமாக' சேவையை வழங்கி வருகின்றது. மேலும் இந்த WQF வசதி தாபிக்கப்பட்டதையடுத்து ஒவ்வொருக்கும் உதவும் அதே வேளையில், வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கு திறமையான ஒட்டுத் தொழில் வல்லுநர்களை அனுப்பி எமது நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் அந்நிய செலாவணியை சம்பாதிப்பதற்கான ஒரு வாய்ப்பும் காணப்படுகின்றது. ஒட்டுத் தொழில் துறையில் ஒரு இடைவெளி நிரப்பும் மற்றும் பரிசோதனை நிலையத்தைத் தாபிப்பதற்கு இஅசச மற்றும் KOLEX TECH (PVT) LTD நிறுவனம் ஆகியவற்றுக்கு இடையில் செய்து கொள்ளப்பட்டுள்ள கூட்டு ஒப்பந்தமும் மற்றும் ஒட்டுத் தொழில் வல்லுநர்களுக்கு தேசிய வாழ்க்கைத்தொழில் தகைமையை (NVQ) வழங்குவதற்கான 'முன்கூட்டிய கற்கை விண்ணப்பங்களை அங்கீகரிக்கும் செயல்முறை (RPL)' தொடர்பாக இஅசச, மூன்றாம் மற்றும் வாழ்க்கைத்தொழில் ஆணைக்குழு (TVEC) ஆகியவற்றுக்கு இடையில் செய்து கொள்ளப் பட்டுள்ள ஒப்பந்தமும் வெற்றிகரமாக தொடரப்படுகின்றன. **2024 ஆம் ஆண்டு காலப் பகுதியில், அமெரிக்க எந்திரப் பொறியியலாளர்கள் சங்கத்தின் கொதிகலன்கள் மற்றும் அழுத்த பாத்திரங்கள் பற்றிய விதிக்கோவையின் பிரிவு IX இற்கு இணங்க தகுதி பெற்ற மொத்த ஒட்டுநர்களின் எண்ணிக்கை 165. NVQ தகுதி பெற்ற ஒட்டுநர்களின் மொத்த எண்ணிக்கை 29**. WQF வசதி ISO சான்றிளித்தல் திட்டத்திற்கு இணங்க தனது நோக்கெல்லையை விஸ்தரிக்கவும் விரும்புகின்றது.

**WQF சேவைகள் அடங்கலாக எல்லா னுேவு சேவைகளின் மூலம் ஈட்டப்பட்டுள்ள மொத்த வருமானம் 26.68 மில்லியன் ரூபா.**

### 3.3 உயிர் விஞ்ஞானப் பிரிவின் அணு சக்திப் பகுப்பாய்வுப் பரிசேதனை (NAT) சேவை

நாட்டில் ஒழுங்குறுத்துகைத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு கதிர்வீச்சு மாசடைதலை தவிர்க்கும் வகையில், இறக்குமதி செய்யப்படும் பால்மாவுவை பரிசோதனைக்கு உட்படுத்தும் பணி காமா ஸ்பெக்ட்ரோஸ்கொப்பி ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்படுகின்றது. நாட்டிற்கு கிடைக்கும் மாதிரிகளிலிருந்து சுகாதார அமைச்சு - சுஅ சேகரிக்கும் (துறைமுகத்தில் உணவுப் பரிசோதகர் பரிசோதிக்கும்) மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு அந்தப் பகுப்பாய்வு அறிக்கைகள் இலங்கை அணு சக்தி ஒழுங்குறுத்துகை சபையின் (இஅசஒச) ஊடாக சுகாதார அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன. கதிர்வீச்சு அளவு நாட்டில் அனுமதிக்கக்கூடிய கதிர்வீச்சு அளவை விடவும் அதிகமாகவிருந்தால் அப்போது (இஅசஒச இன் ஒழுங்குவிதிகளின் பிரகாரம்) கப்பல்சரக்குகள் அவற்றின் உற்பத்தி நாடுகளுக்கு திருப்பியனுப்பப்படுகின்றன.

2024 ஆம் ஆண்டு காலப் பகுதியில், இறக்குமதி செய்யப்பட்டிருந்த 2389 பால் மாவு மாதிரிகளும் மற்றும் ஏற்றுமதி செய்யப்பட்டிருந்த 105 தேயிலை மாதிரிகளும் மற்றும் ஏனைய உற்பத்திகளும் காமா ஸ்பெக்ட்ரோமெட்ரியை பயன்படுத்தி கதிர்வீச்சு அளவீடுகளின் நிமித்தம் பரிசோதிக்கப் பட்டன. 126மாதிரிகள் விரிவான கதிர்வீச்சு அளவீடுகளின் நிமித்தம் பரிசோதிக்கப்பட்டன. மண், கனிய தொல்பொருள் மாதிரிகளும், இரத்தினக் கற்கள் மற்றும் உலோகம் முதலியனவும் அடங்கிய பல அளவுகளிலான 66 மாதிரிகள் எக்ஸ்-ரே ப்ளோரெஷென்ஸ் ஸ்பெக்ட்ரோமெட்ரியைப் பயன்படுத்தி பல மூலப்பொருள் உள்ளடக்கத்தின் நிமித்தம் பகுப்பாய்வு செய்யப்பட்டன. 53 கழிவு நீர் மாதிரிகளும் மொத்த அல்பா∴ பீட்டா அளவீடுகளின் நிமித்தம் பரிசோதிக்கப்பட்டன.

காமா ஸ்பெட்ரோமெட்ரி ஆய்வுகூடம் 2006 ஆம் ஆண்டு முதல் பரிசோதனை ஆய்வுகூடங்களின் நிமித்தம் ISO IEC 17025:2017 சர்வதேச சான்றிதழுக்கு இணங்க தரமான முகாமைத்துவ முறைமையை (QMS) பேணி வந்துள்ளது. ISO IEC 17025:2017 சர்வதேச சான்றிதழுக்கு இணங்க மொத்த அல்பா∴ பீட்டா ஆய்வுகூடத்திற்கு பரிசோதனை ஆய்வுகூடங்களின் நிமித்தம் 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13 ஆம் திகதி சானிறிழ் கிடைத்தது. 1-வது கண்காணிப்பு மதிப்பீடு 2024 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 26 ஆம் திகதி வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டது.

**2024 ஆம் ஆண்டு காலப்பகுதியில் NAT ஈட்டியுள்ள வருமானம் 40.39 மில்லியன் ரூபாவாகும்.**

### 3.4 கதிர்வீச்சுப் பாதுகாப்பு, பாதுகாப்பு மற்றும் அணு சக்திப் பாதுகாப்பு சேவைகள்

பொதுமக்களினதும், கதிர்வீச்சுத் தொழிலில் ஈடுபடுகின்ற தொழிலாளர்களினதும் பாதுகாப்புக்கும் மற்றும் அயனாக்கல் கதிர்வீச்சுக்கு தேவையற்ற விதத்தில் பாதிக்கப்படும் சுற்றாடலினதும் பாதுகாப்புக்கும் தேவையான ஒழுங்குறுத்துகைத் தேவைப்பாடுகளை நிறைவேற்றும் பொருட்டு நாட்டிற்கு கதிர்வீச்சுப் பாதுகாப்புக்கும் மற்றும் அணு சக்திப் பாதுகாப்புக்கும் இந்த சேவை தொழில்நுட்ப மற்றும் விஞ்ஞான ரீதியிலான உதவிகளை வழங்குகின்றது. சுகாதார மற்றும் கைத்தொழில் துறைகளில் பணியாற்றும் பணியாளர்களினதும் மற்றும் துணை நியம டொசிமெட்ரி ஆய்வுகூடத்தில் கதிர்வீச்சு அளவீட்டு உபகரணங்களுக்கான அளவீட்டு சேவைகளில் ஈடுபடுகின்ற பணியாளர்களினதும் பாதுகாப்புக்கான தனியாள் கண்காணிப்பு சேவைகள் நாட்டிற்கான கட்டாய சேவைகளாக காணப்படுகின்றன. நாட்டில் கதிர்விச்சுப் பாதுகாப்பு மற்றும் கதிரியக்க வளங்களின் பாதுகாப்பு ஆகியவற்றின் அடிப்படையில், கதிர்வீச்சுத் தொழிலில் ஈடுபடும் தொழிலலாளர்கள் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (முப்-படைகள் மற்றும்

பொலிஸ்) முதலியோருக்கு வழமையாக விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

**2024 ஆம் ஆண்டில் அனைத்து கதிர்வீச்சு பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப சேவைகளால் ஈட்டப்பட்ட மொத்த வருமானம் ரூ. 17.8 மில்லியன்.**

### 3.5 இலங்கையில் மின்சார உற்பத்திக்கான அணுசக்தி ஆய்வு மற்றும் திட்டமிடல் நிகழ்ச்சிகள்

அணுசக்தியைப் பயன்படுத்தி மின்சார உற்பத்திக்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்கான விரிவான ஆய்வுக்கு SLAEB தேவையான முயற்சிகளை எடுத்துள்ளது. இந்த முயற்சி சர்வதேச அணுசக்தி முகவர் (IAEA) அடையாளம் கண்டுள்ள 19 அணுசக்தி உட்கட்டமைப்பு பிரச்சினைகளை நிவர்த்தி செய்கிறது. 2024 பிப்ரவரி 12மற்றும் 2024 மார்ச் 4 ஆகிய திகதிகளில் அமைச்சரவையின் ஒப்புதலைத் தொடர்ந்து, இலங்கைக்கான அணுசக்தித் திட்டத்தைச் செயற்படுத்தும் அமைப்பை (NEPIO) நிறுவுவதற்கு வலுசக்தி அமைச்சு (MOE) தலைமை தாங்குகிறது. பரந்த அளவிலான பங்குதாரர் ஈடுபாட்டை உறுதி செய்வதற்காக, வலுவான அணுசக்தி திட்டத்தை நிறுவுவதற்கு பொருத்தமான முக்கியமான பகுதிகளை உள்ளடக்கிய பல்வேறு பணிக்குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இது அந்தந்த கவனம் செலுத்தும் துறைகளில் நிபுணத்துவம், அறிவு மற்றும் பரிந்துரைகளை வழங்குவதன் மூலம் இலங்கையின் அணுசக்தி திட்டத்தை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்கு பங்களிப்பதே இவ் பணிக்குழுக்களின் நோக்கமாகும்.

**இவ் அமைச்சரவை ஒப்புதலில், பின்வரும் பரிந்துரைகள் செய்யப்படடுள்ளன:**

- அணுசக்தியிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்வது குறித்த இலங்கை அரசின் மூலோபாய மற்றும் தொலைநோக்கு தீர்மானத்தை ஒரு கொள்கையாக வழங்குதல்.
- இலங்கையில் உள்ள தொழில்நுட்ப, பொருளாதார, சமூக, சுற்றாடல் மற்றும் சட்ட நிலைமைகளுக்கு இணங்க அணு மின் நிலையங்களை உற்பத்தி செய்யும் பொருத்தமான நாடுகளின் அரசு நிறுவனங்களிடமிருந்து இலங்கை அரசாங்கத்தின் நிலையான பெறுகை முறையின்படி ஆர்வ வெளிப்பாடுகளை (நுழுஐ) கோருவதற்கு இந்த நிறுவனங்கள் அணு எரிபொருள் சுழற்சி விருப்பங்கள் மற்றும் கதிரியக்கக் கழிவு முகாமைத்துவ விருப்பங்கள் உட்பட ஒருங்கிணைந்த தீர்வை வழங்க முடியும்.
- தற்போது செயற்படுத்தப்படும் 2014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க அணுசக்திச் சட்டத்திற்குப் பதிலாக, அணுசக்தியிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யும் செயல்முறை தொடர்பான புதுப்பிக்கப்பட்ட விதிகளுடன் கூடிய புதிய சட்டத்தை அங்கீகரிப்பதன் மூலம் சட்டக் கட்டமைப்பைத் தயாரித்தல்.
- ஆர்வங்களிற்கான வெளிப்பாடுகளை (EOI) அழைப்பதற்கான ஆவணத்தைத் தயாரிப்பதற்காக, முதலீடு மற்றும் அணுசக்தி உலைகளை கொள்வனவு செய்வதற்கான திட்டக் குழு (PC) நியமிக்கப்பட்டுள்ளது. நகல் EOI ஐ மதிப்பாய்வு செய்வதற்காக PC இன் முதல் கூட்டம் 2024.08.07 ஆம் திகதி நடைபெற்றது. திட்டப் பணிகள் திருப்திகரமாக நடைபெற்று வருகின்றன.

### 3.6. நிர்மாணித்தல், சொந்தமாக்கல் மற்றும் இயக்குதல் (BOO) அடிப்படையில் இலங்கையில் சைக்லொட்ரோன் மைய கதிர்வீச்சு மருந்து உற்பத்தி பாதுகாப்பு வசதியைத் தாபித்தல்

ஒரு கதிர்வீச்சு மருந்தான ப்லோரோ டி-ஒக்ஸி குளுகோஸ் (18F-FDG) என்றழைக்கப்படும் மருந்து புற்றுநோயைக் கண்டறியும் பொருட்டு PET மற்றும் CT ஆகிய பரிசோதனைகளின் நிமித்தம் பயன்படுத்தப்படுகின்றது. சைக்லோட்ரோன் என்றழைக்கப்படும் ஒரு விஷேட உபகரணம் இந்த மருந்தை உற்பத்தி செய்ய பயன்படுத்தப்படுகின்றது. தேவையான

வசதிகள் இலங்கையில் இல்லாததால் இந்தக் கதிர்வீச்சு மருந்து இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றது. அதன் கதிர்வீச்சு அழியும் தன்மை காரணமாக, இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் போது அந்த மருந்தின் வலிமை ஏறக்குறைய 97% வீத அளவினால் இழக்கப்படுகின்றது. SLAEB இன் ஈடுபாட்டின் விளைவாக, வலுசக்தி அமைச்சு அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பிக்க முடிவு செய்யப்பட்டது. அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பேரம்பேசும் குழு (CANC) மூலம் ஆர்வத்தை வெளிப்படுத்தும் செயல்முறையை அழைப்பதன் மூலம் இலங்கையில் சைக்ளோட்ரான் அடிப்படையிலான ரேடியோ.்.பார்மாசூட்டிகல் உற்பத்தி வசதியை நிறுவுவதற்கு தனியார் முதலீட்டாளர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

தேர்ந்தெடுக்கப்பட்ட முதலீட்டாளரான Access International Pvt Ltd, சுகாதார அமைச்சு மற்றும் SLAEB ஆகியவற்றுடன் ஒரு கூட்டு முயற்சி நிறுவனத்தை நிறுவுவதற்கு 2024-04-01 ஆம் திகதி அமைச்சரவை ஒப்புதல் பெறப்பட்டது. இறுதி ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டு, கௌரவ சட்டமா அதிபரின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. 2024 செப்டம்பரில் கூட்டு முயற்சியை நிறுவி, 2024 செப்டம்பரில் இந்த வசதிக்கான அடித்தளத்தை அமைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வசதி கூட்டு முயற்சி நிறுவனத்தால் நிர்மாணித்தல், உரிமைப்படுத்துதல் மற்றும் செயறபடுத்துதல் அடிப்படையில் 2026 ஆம் ஆண்டின் கடைசி காலாண்டில் இலங்கை மருத்துவமனைகளுக்கு உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ரேடியோ/பார்மாசூட்டிகல்களை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த திட்டத்திற்கான தொழில்நுட்ப உதவி சர்வதேச அணுசக்தி நிறுவனம் (IAEA) மூலம் பெறப்பட்டுள்ளது.

### 3.7. அணு அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் குறித்த கல்வித் திட்டம் (NST):

- இந்தத் திட்டம் முதன்மையாக இடைநிலை மற்றும் உயர்நிலைக் கல்வியை இலக்காகக் கொண்டுள்ளது. இதை ஆதரிக்கும் வகையில், அறிவியல் மற்றும் பௌதீகவியல் ஆசிரியர்களுக்கு பயிற்சியாளர் பயிற்சி (TOT) திட்டங்கள் நடத்தப்படுகின்றன, இது பாடசாலை பாடத்திட்டத்தில் NST-ஐ ஒருங்கிணைப்பதை ஊக்குவிக்கிறது.
- சர்வதேச அணு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அகாடமி (INSTA) 2024 ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானிய ஆணையம் மூலம் அரசுப் பல்கலைக்கழகங்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது, இது பல்வேறு NST துறைகளில் சர்வதேச அளவிலான கல்வியாளர் பயிற்சிக்கான அணுகலை வழங்குகிறது.
- முதல் சர்வதேச அணு அறிவியல் ஒலிம்பியாட் (2024) SLAEB ஆல் ஒருங்கிணைக்கப்பட்டு ஆதரிக்கப்பட்டது. ஆகஸ்ட் 2024 முதல் தேதி பிலிப்பைன்சில் நடைபெற்ற முதல் சர்வதேச அணு அறிவியல் ஒலிம்பியாட் போட்டியில் மூன்று மாணவர்கள் பங்கேற்றனர். அவர்களால் ஒரு தங்கப் பதக்கத்தையும் இரண்டு வெள்ளிப் பதக்கங்களையும் வெல்ல முடிந்துள்ளது.
- நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், விருந்தினர் சொற்பொழிவுகள், கண்காட்சிகள், வருகைகள், கூட்டங்கள் போன்றவற்றின் எண்ணிக்கை – 20
- வெளியிடப்பட்ட இலத்திரனில் பத்திரிகைகள் (e magazines) எண்ணிக்கை: 2

### 3.8 ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி இல் அடைந்த சாதனைகள்

- சட்டத்தினால் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளவாறு, இஅசச மக்களின் தற்போதைய வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்கும், இயற்கை வளங்களை முகாமை செய்வதற்கும், சுற்றாடலையும் விவசாயத்தையும் பாதுகாப்பதற்கும், உணவுப் பாதுகாப்பைப் பேணுவதற்கும், நாட்டின் கதிர்வீச்சு செயலாக்கலையும், கதிர்வீச்சுப் பாதுகாப்பையும் பேணுவதற்கும், நாட்டின் தேசிய அபிவிருத்திக்

குறிக்கோள்களை அடைவதற்கும் என அணு சக்தி விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் தொடர்பான ஆ-அ பணிகளில் ஈடுபடுகின்றது. மேற்குறித்த சேவைகளுக்கும் மற்றும் சஅசமுநி தொழில்நுட்ப கூட்டுறவு நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளுக்கும் உரிய தொழில் நுட்பத் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு இஅசச இல் தனித்துவமான விஷேட ஆய்வுகூட வசதிகள் காணப்படுகின்றன. இந்த சபையில் தகுதியும், திறனும், அர்ப்பணிப்பும் உடைய அணு சக்தி விஞ்ஞானிகளும் உள்ளனர்.

**அ.** ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி கருத்திட்டங்களின் இறுதி அறிக்கைகளை சமர்ப்பித்தல்

- **சிலோன் தேயிலையின்' ஆரம்பத் தோற்ற புவி–இரசாயனவியல் உறுதிப்படுத்தல் பற்றிய முன்னோடிக் கருத் திட்டம்:** இந்தக் கருத்திட்டம் சர்வதேச அணு சக்தி முகவர் நிலையத்தின் (சஅசமுநி) உதவியில் இலங்கை அணு சக்தி சபை (இஅசச), இலங்கைத் தேயிலை சபை (இதேச) மற்றும் இலங்கைத் தேயிலை ஆராய்ச்சி நிறுவகம் (இதேஆநி) ஆகியவற்றுக்கு இடையில் ஒரு முற்-றரப்பு ஒப்பந்தத்தின் கீழ் செயற்படுத்தப்பட்டது. சுருக்கமான முடிவு: புவி-இரசாயனவியல் தடயம் சிலோன் தேயிலையின் ஆரம்பத் தோற்றத்தை உறுதிப்படுத்தலாம் என குறித்த முன்னோடி கருத்திட்டம் வெற்றிகரமாக செய்து காண்பித்தது.

- **FTIR-ATR பகுப்பாய்வைப் பயன்படுத்தி துள் பால்மாவில் அடங்கியுள்ள லார்ட் கலப்படத்தை கண்டறிவதற்கான ஒரு நுண்ணாய்வு முறையியலைத் தயாரித்தல்:**

அ. இந்தக் கருத் திட்டம் நுகர்வோர் விவகாரங்கள் அதிகார சபையின் வேண்டுகோளின் பேரில் மேற்கொள்ளப் பட்டது. இந்த ஆய்வு சஅசமுநி CRPSRL 21090 கருத் திட்டத்தின் கீழ் திட்டமிடப்பட்டுள்ள செயற்பாடுகளின் ஒரு பகுதியாகும். சுருக்கமான முடிவு: அந்த மாதிரிகள் இந்த FTIR-ATR ஸ்பெக்ட்ரோஸ்கொபிக் முறையியலுக்கு இணங்க லார்ட் கலப்படமுடையதாக இருக்கவில்லை. ஒரு உறுதிப்படுத்தும் முறையியலாக சாத்தியமான லார்ட் கலப்படங்களை கண்டறிவதற்கான இரசாயன முறையியல்களுக்கு மேலும் ஆய்வுகள் தொடரப்படுதல் வேண்டும். இரண்டு அறிக்கைகளும் 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி இஅசச இற்கு சமர்ப்பிக்கப்பட்டதையடுத்து மேலும் தீர்மானங்களுக்காக பொருத்தமான நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டன.

ஆ. எமது கருத் திட்டங்களிலொன்றுக்கு இலங்கையில் உணவுப் பாதுகாப்பு முன்னேற்றம் என்ற தலைப்பில் விவசாய ஆராய்ச்சியில் சிறப்புக்கான விருது இலங்கை விவசாய ஆராய்ச்சி சபையினால் ஒரு பாராட்டு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. பால்மாவு மற்றும் விலங்கு மைய உற்பத்திகளில் ஆரம்பத் தோற்றத்தைக் கண்டறிதல், கலப்படத்தைக் கண்டறிதல் மற்றும் தரத்தை உறுதிப்படுத்தல் என்பவற்றிறுக்கான ஒன்றிணைந்த அணுகுமுறைகள் என்ற தலைப்பில் ஒரு ஆராய்ச்சிக் கருத்திட்டம் பேராதெனிய பல்கலைக்கழகத்தின் ஒத்துழைப்புடன் நடத்தப்பட்டது. இந்த ஆராய்ச்சிக் குழுவில் பின்வரும் நபர்கள் உறுப்பினர்களாக இருந்தனர்: சி.கே.கே. திஸாநாயக்க, **எம். டீ. கல்பகே,** பீ. ஆர். பெர்னாந்து, ஆர். சுந்திராஜித், ஆர். டிஸ். துயபலங்கே, என். பீ. கருனாரத்ன,கே. எம். பிந்துஹேவா. இஅசச பேராதெனிய பல்கலைக்கழகம். வீடியோ ஆவணம் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

இ. இந்த சபையின் பதவியணியின் ஒருவரான சிரேஷ்ட விஞ்ஞான அதிகாரி சகீலா ப்ரியதர்ஷினி என்பவர் சீன விஞ்ஞான

கலாசாலையின் புவியியல் மற்றும் புவிப் பௌதீகவியல் நிறுவகத்தில் தனது புவியியல் பொறியியல் கலாநிதிப் பட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளார். இந்தக் கலாநிதிப் பட்டத்தின் செல்லுபடியாகும் காலம்: 2024 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 30 ஆம் திகதி. கட்டுரைத் தலைப்பு: இலங்கையில் CKDu நோய்க்கு மிக சாத்தியமான காரணியாக விளங்கும் ஆழம் குறைந்த நிலகீழ் நீரில் காணப்படும் மெக்னீசியம் மற்றும் ப்லோரைட்டு ஆகியவற்றின் இணைந்த தாக்கம்.

ஈ. மொனராகல் மாவட்டத்திலுள்ள நிலகீழ் வளங்களின் செயற்கை முறையான மறுமாற்றத்தின் பயன்தகுதன்மையை மதிப்பிடுவதற்கும் மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள மலலஓயா ஆற்றுப்படுக்கைப் பகுதியிலுள்ள நிலகீழ் நீரின் மறுமாற்ற நிலைமைகளை மதிப்பிடுவதற்கும் ஐசோடொப்புத் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. நீர் வளங்கள் சபை மற்றும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை ஆகியன முறையே இந்தக் கருத் திட்டங்களுக்கு ஒத்துழைக்கின்றன.

உ. 2024 ஆம் அண்டில் இலங்கையிலுள்ள காலாச்சார மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மற்றும் நாட்டில் ப்ளாஸ்டிக் கழிவுகளைக் குறைக்கும் வகையில் கைத்தொழில் பொருட்களின் உற்பத்திற்கு பொலிமெட்ரிக் கழிவுகளை மீள்சுழற்சிப்படுத்தி மீளப்பாவிப்பதற்கும் மற்றும் வாழ்வாதாரங்களின் பாதுகாப்புக்கு நீர் முறைமைகளிலுள்ள நோயெதிர்ப்பு அமொக்ஸிலின் மாசடைவதை குறைப்பதற்கும் உரிய முறையியல்களை தாரிக்ன கதிர்வீச்சு செயல்முறை நுட்பங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

ஊ. நாட்டில் நீரைப் போத்தலில் அடைக்கும் / பொதியிடும் கைத்தொழிலில் நீர் வளங்களுக்கு பயன்படுத்தப்படுகின்ற ஒரு ஐசோடொப்பு தடயத்தை கண்டறிந்து பெற்றுக்கொள்ளும் பொருட்டு ஒரு ஆராய்ச்சிக் கருத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

எ. ஐசோடொப்பு நுட்பங்களையும் மற்றும் விவசாய முறையியல்களையும் இணைத்து பயன்படுத்தி விவசாயப் பயிர்களில் நீரின் வினைத்திறனான பாவனையை மதிப்பிடுவதற்கான திறன்கள் வளர்க்கப்படுகின்றன. பூர்வாங்க அடிப்படையான ஆய்வுகள் நீர்ப்பாசன நீரைப் பாதுகாக்கும் பொருட்டு ஐசோடொப்புத் தரவுகளைப் பயன்படுத்துவதில் வெற்றிகரமான தன்மையை சுட்டிக் காட்டின.

ஏ. அணு சக்தி நுட்பங்களைப் பயன்படுத்தி நில அழிவைக் குறைத்து பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் பொருட்டு மண்ணினதும் நீரினதும் தரத்தை மதிப்பிட்டு மேம்படுத்துவது தொடர்பாக ஒரு கூட்டொத்துழைப்புக் கருத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

ஐ 15 எண்ணிக்கைக்கும் அதிகமான மாணவர்கள் (பட்டதாரி மாணவர்கள், உள்ளகப் பயிலுநர்கள் மற்றும் பட்டப்பின்படிப்புப் பட்டதாரிகள்) தமது கைத்தொழில் பயிற்சிகளை அல்லது பட்டதாரி மாணவர் ஆராய்ச்சிக் கருத் திட்டங்களை எமது விஞ்ஞுதனிகளின் மேற்பார்வையின் கீழ் இந்தக் காலப் பகுதியில் நிறைவு செய்தனர்.

### 3.9 அணு விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பம் (NST கல்வி நிகழ்ச்சித் திட்டம்):

சர்வதேச அணு விஞ்ஞான தொழில்நுட்ப கலாசாலையின் (INSTA) புதிதாக ஆரம்பிக்கப் பட்டுள்ள சஅசமுநி முன்னெடுப்புத்திட்டம் பல NST துறைகளில் சர்வதேச மட்டப் போதகர் பயிற்சிக்கான பிரவேசத்தை வழங்கி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஊடாக 2024 ஆம் ஆண்டு காலப் பகுதியில் அரச பல்கலைக்கழகங்களில் அறிமுகப்படுத்தப்பட்டது. இலங்கை அணு சக்தி சபை 2025-2026 ஆம் ஆண்டிற்கான

IAEA/INSTA நெறிப்படுத்தல் குழுவின் ஒரு உறுப்பினர் தரப்பாக நியமிக்கப்பட்டது.

முதலாவது சர்வதேச அணு சக்தி விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டி (2024) இஅசச ஆல் ஒருங்கிணைக்கப்பட்டு ஆதரவளிக்கப்பட்டது. 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஆரம்பப் பகுதியில் பிலிபைனில் நடைபெற்ற முதலாவது சர்வதேச அணு சக்தி விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் மூன்று மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர். இலங்கையைப் பிரதிநிதிப்படுத்தி அதில் பங்குபற்றியவர்களால் ஒரு தங்கப் பதக்கத்தையும் மற்றும் இரண்டு வெள்ளி பதக்கங்களையும் வென்றெடுக்க முடிந்தது.

மேல் மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் உ.த. பௌதீகவியல் பாடத்தைக் கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கு ஒரு திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் இஅசச சபையால் நடத்தப்பட்டது. பாடசாலை மாணவர்களுக்கான வசதி விஜயமும் ஏற்பாடு செய்யப்பட்டது.

## 4. 2025 ஆம் ஆண்டின் எதிர்காலத் திட்டங்கள்

### அ. மின் உற்பத்திற்கான அணு சக்தி ஆய்வு மற்றும் திட்டமிடல் நிகழ்ச்சித் திட்டம்

- **அணு சக்தி நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்தும் நிறுவனத்தை (NEPIO) மீளத்தாபித்தல்-** நெறிப்படுத்தல் குழு, கருத்திட்ட முகாமைத்துவப் பிரிவு (கமுபி), 09 செயல் குழுக்கள் (சஅசமுநி மைல்கல் அணுகுமுறைக்கு இணங்க 19 பிரச்சினை விடயங்களை அடையாளப் படுத்தல்.

- நன்கு-தாபிப்புப்பெற்ற பொருத்-தமான அணு சக்தி வணிகத் தரப்புகளிடமிருந்து விருப்ப வெளிப்பத்தலை அழைத்தல்(EOI)

  அமைச்சரவை நியமிக்கும் பேச்சுவார்த்தைக் குழுவுக்கு (CANC)- EOI ஆவணத்தை சமர்ப்பித்து அதனை மீளாய்வு செய்வதற்கு 14 உறுப்பினர்களை உள்ளடக்கி நியமிக்கப் பட்டுள்ள கருத் திட்டக் குழு - தகவலுக்கான கோரல் (RFI), தகுதிற்கான கோரல் (RFQ), பிரேரணைகளுக்கான கோரல் (RFP)

- மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான புதிய அணு சக்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு வழிவகுக்கப் பொருத்தமானவாறு 2014 இன் 40 ஆம் இலக்க அணு சக்தி சபை சட்டத்திற்கு பிரதியீடாக **ஒரு புதிய அணு சக்தி சட்டத்தை** சட்டமாக்குதல் (ஒரு சட்டமூலமாக இலங்கைப் பாராளுமன்றத்தில் ஆற்றுப்படுத்தல், கௌரவ சட்டமா அதிபரினதும் சட்ட வரைஞரினதும் இணக்கப்பாட்டுடன் ஒரு சட்டமாக ஆக்குதல்)

- **சஅசமுநி உதவிய ஒன்றிணைந்த அணு சக்தி உட்கட்டமைப்பு வசதி மீளாய்வு** (INIR) **செயற்பணியை முன்னேற்றல்–** 26 சிபாரிசுகள் மற்றும் 6 யோசனைகள் (தற்பொழுது ஓரளவு தயாரிக்கப்பட்டுள்ள 10 சிபாரிசுகள் மற்றும் 03 யோசனைகள்)

- சஅசமுநி உதவிய தேசிய வேலையரங்குகளை 2025 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நடத்துதல்

- இலங்கையில் எதிர்கால அணு சக்தி நிறுவுகைகளுக்கான ஸ்தல ஆய்வு, ஸ்தல தெரிவு செயல்முறை மற்றும் ஸ்தல பண்பியல்கள் முதலிய பணிகளை நிறைவு செய்தல்

- அணு சக்திக் கல்வி மற்றும் பயிற்சி வசதியைத் தாபித்தல்

- பொருத்தமான மனித வளங்களை உள்ளடக்கி இஅசச இன் நிறுவனக் கட்டமைப்பினுள் அணு சக்தித் திட்டமிடல் பிரிவைத் தாபித்தல்

### ஆ. NCNDT இல் காணப்படும் ஒட்டுநர் தகுதி வசதியை வியாபித்தல்

இந்த NCNDT இல் தாபிக்கப்பட்டுள்ள

ஒட்டுநர் செயலாற்றுகை தகுதி (WPQ) சேவை தேசிய ரீதியில் முக்கியமான ஒரு சேவையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த சேவை சர்வதேச தொழில் சந்தைக்கு தகுதிபெறும் ஒட்டுநர்களின் மூலம் வெளிநாட்டு ஒதுக்கங்களை வலுப்படுத்துவதற்கு உதவுகின்றது. WPQ வசதி சேவைகளை தேசிய ரீதியில் வியாபிக்கும் பொருட்டு,'ஒட்டு தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு NVQ தகுதி சான்றிதழை வழங்குவதற்கான முன்கூட்டிய கற்றல் அங்கீகார (RPL) செயல்முறை' தொடர்பாக இஅசச இற்கும் மூன்றாம்நிலைக் கல்வி மற்றும் வாழ்க்கைத் தொழில் கல்வி ஆணைக்குழுவுக்கும் (TVEC) இடையில் 2023 ஆம் ஆண்டு மே மாதத்தில் ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. இது தவிர, வெளிநாட்டுத் தொழில் சந்தையில் சான்றுபெற்ற ஒட்டு தொழில் வல்லுநர்களுக்கான கேள்வியைப் பூர்த்தி செய்வதற்கும் மற்றும் NCNDT இல் ஒரு நிரப்பு மற்றும் பரீட்சை நிலையத்தைத் தாபித்து புதிய ஒட்டுப் பொறித்தொகுதிகள் அடங்கலாக வசதிகளை வியாபிக்கும் பொருட்டு ஒரு தனியார் முதலீட்டுத் தரப்பான கொலெக்ஸ் டெக் (ப்ரைவட்) லிமிற்றட் நிறுவனத்துடனும் ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. இந்த கொலெக்ஸ் டெக் (ப்ரைவட்) லிமிற்றட் நிறுவனத்துடனான கூட்டொத்துழைப்பு சார்ந்த பணி 2025 ஆம் ஆண்டு தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

**இ. வருமானம் ஈட்டும் நிமித்தம் வழமையான சேவைகளை வியாபித்தல்**

**அ. ISO IEC 17025:2017தர நியமத்தை அனுசரித்து அணு சக்திப் பகுப்பாய்வுப் பரிசோதனை சேவைகளை வழங்குதல்–**

அ. சக்திப் பகுப்பாய்வுப் பரிசோதனை சேவை தற்பொழுது இஅசச சபைக்கு பிராதன வருமானம் ஈட்டும் ஒரு மூலமாக விளங்குகின்றது. வாடிக்கையாளர் தளத்தை மேம்படுத்துவதற்கும் மற்றும் சேவைகள் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆ. சுகாதார மற்றும் கைத்தொழில் பிரிவுகளில் பணியாற்றுகின்ற கதிர்வீச்சுப் பணியாளர்களின் பாதுகாப்புக்கான **தனியாள் கண்காணிப்பு சேவை**

இ. கைத்தொழில் சேவைகளுக்கான **நிரந்தரப் பரிசோதனை சேவைகள்**

ஈ. அரசாங்க வைத்தியசாலைகளுக்கு தேவையான அறுவை சிகிச்சைக் கையுறைகளின் மொத்த அளவையும் தொற்றுநீக்குவதற்கான **காமா கதிர்வீச்சு சேவை.** சர்வதேச அணு சக்தி சபையின் நிபுணர்களின் உதவியைப் பெற்று, பல கைத்தொழில்களில் காமா கதிர்வீச்சுப் பிரயோகம் பற்றி உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கும், ஏற்றுமதியாளர்களுக்கும் மற்றும் இறக்குமதியாளர்களுக்கும், கொள்கை ஆக்குநர்களுக்கும், தொழில்நுட்பத் தரப்புகளுக்கும் ஒரு வாடிக்கையாளர் மைய விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டம்/ வேலையரங்குகள் ஏற்பாடு செய்யப் படும்.

**உ. அணு சக்தி விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் (NST) பற்றிய கல்வி நிகழ்ச்சித் திட்டம்:** இலங்கையில் இரண்டாம்நிலைப் பாடவிதானத்தை மறுசீரமைப்பதற்கான தேசிய முயற்சிகளின் பாகமாக, கல்வி அமைச்சு அணு விஞ்ஞானத்தையும் மற்றும் தொழில்நுட்பத்தையும் (NST) தரம் 11 மாணவர்களுக்கு ஒரு தெரிவு மொடியூலாக அறிமுகப்படுத்தும். சஅசமுநி இன் சர்வதேச அணு சக்தி விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப கலாசாலை (INSTA) உறுப்பு நிறுவனங்களுடன் இணைந்த NST போதகர்களுக்கு சர்வதேச பயிற்சி வாய்ப்புக்கள் கிடைக்கும். 2025 ஆம் ஆண்டில் அணு சக்தி தொழில்நுட்ப கல்வி செயற்பாடுகளில் (ANENT) சஅசமுநி ஆசிய வலையமைப்பில் பங்கேற்பதற்கு தேவையான நடவடிக்கைகளை இஅசச மேற்கொள்ளும்.

## ஈ 2025 ஆம் ஆண்டில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி கருத் திட்டங்களின் இலக்குகள்

அ. சஅசமுநி இன் உதவியுடன் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் / கருத் திட்டங்கள் நடத்தப்படுகின்றன. இங்கு குறிப்பிடப்பட்டுள்ளவை 2025 ஆம் ஆண்டிற்கான முக்கிய கவனம் செலுத்த வேண்டிய பிரிவுகளாகும்: அவையாவன சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் மதிப்பீடுகள், உணவுப் பாதுகாப்பு மற்றும் விவசாயம், கைத்தொழில் மேம்பாடுகள் மற்றும் செயல்முறை மேம்பாடு, மூலப்பொருள் அபிவிருத்தி, ஐசோடொப்பு தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி பயிர்களுக்கான நீர் பயன்தகு தன்மையை அனுகூலமாக்கல், விவசாய விடயப் பிரிவுகளில் மண்ணரிப்பு மற்றும் நீர் மாசடைவு ஆய்வுகள், கடல் சூழலில் மைக்ரோபிளாஸ்டிக் பழுதடைதல், வித்தியாசமான பின்னணி கதிர்வீச்சு அளவுகளில் வெளிவாரி அளவு மதிப்பீடு, கருவிசாதன அபிவிருத்தி மற்றும் நிர்மாணம், கதிர்வீச்சுப் பாதுகாப்பு, அணு சக்திப் பாதுகாப்பு மற்றும் அதிகமானவை ஆகும்.

ஆ. நிலகீழ் நீர் வளங்களின் அ அழிவுக்கான காரணங்களையும் மற்றும் பாதிப்புக்குள்ளாகக்கூடிய வலயங்களையும், சாத்தியமான நிலகீழ் நீர் மீளேற்றப் பிரிவுகள் முதலிய அம்சங்களையும் கண்டறியும் பொருட்டு மொனராகல் மாவட்டத்தில் முழுமையான ஒரு நிலகீா் நீர் ஆய்வுக்கான இந்திய-இலங்கை கூட்டு இரு-தரப்பு S-T நிகழ்ச்சித் திட்டத்தின் நிமித்தம் (2024 ஆண்டிற்கான பிரேரணையை அழைத்தல்) ஒரு கருத்திட்டப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அங்கீகாரம் வழங்கப்பட்டால், இந்திய திருச்சராப்பள்ளி தமிழ்நாடு புவியல் தேசிய கல்லூரியின் PGk மற்றும் ஆராய்ச்சித் திணைக்களத்தின் (தன்னாட்சி) கூட்டொத்துழைப்பில் 2025 ஆம் ஆண்டு மேற்குறித்த கருத்திட்டத்தை செயற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இ. 'சிலோன் தேயிலை' கருத்திட்டத்தின் இரண்டாம் கட்ட செயற்படுத்துகை: வணிக சான்றுபடுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்துவதற்கு தரவுத்தளத்தை வலுப்படுத்தி மாதிரியின் போதிய தன்மையை செவ்வைபார்த்தல்.

ஈ. மேலும், நீர் வளங்கள் சபையுடன் இணைந்த ஒரு கூட்டொத்துழைப்பு ஆய்வு 2024 ஆம் ஆண்டு 4-வது காலாண்டில் ஆரம்பிக்கப்பட்டு அனுராதபுர மாவட்டத்தில் இயற்கை நீரூற்றுக்களின் ஆரம்ப தோற்றங்களை கண்டறியும் பொருட்டு 2025 ஆம் ஆண்டில் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

# வரையறுக்கப்பட்ட இலங்கை நிலக்கரி (தனியார்) நிறுவனம்

## 1. அறிமுகம்

வரையறுக்கப்பட்ட இலங்கை நிலக்கரி (தனியார்) நிறுவனம் (LCC) முற்றிலும் அரசுக்கு சொந்தமான வணிக நிறுவனமாகும். இந்த நிறுவனம் நுரைச்சோலை லக்விஜய அனல்மின் நிலையத்திற்கு (LVPP) நிலக்கரியை இறக்குமதி செய்வதற்கும் வழங்குவதற்கும் மட்டுமே அமைக்கப்பட்டுள்ளது. இது இலங்கை மின்சார சபையின் (CEB) கீழ் இயங்குகிறது. எமது பங்குதாரர்கள் பின்வருபவர்களாவர்.

| | | |
|---|---|---|
| 1. | இலங்கை மின்சார சபை | 60% |
| 2. | திரைசேரி | 20% |
| 3. | இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் | 10% |
| 4 | இலங்கை துறைமுக அதிகாரசபை | 10% |

LCC ஆனது 2.25 மில்லியன் டொன் நிலக்கரியை ஆண்டுதோறும் நுரைச்சோலை அனல்மின் நிலையத்திற்கு வழங்குகிறது. மேற்கு கடற்கரையில் பருவமழை காரணமாக, செப்டம்பர் முதல் அடுத்த ஆண்டு ஏப்ரல் வரை ஏழு மாதங்களுக்கு நிலக்கரி விநியோகம் மட்டுப்படுத்தப்படுகின்றது. இருப்பினும், தேசிய மின் கட்டமைப்பிற்கு நிலக்கரியை வழங்குவதற்காக இந்த ஆலை ஆண்டு முழுவதும் இயங்கும். எனவே, நிலக்கரியை சேமித்து வைப்பது அவசியமாகும்.

நிலக்கரி விநியோகத்தின் கொள்முதல் மற்றும் செயல்பாடு காரணமாக, நிலக்கரி விநியோகம் எப்போதும் இரண்டு நாட்காட்டி ஆண்டுகள் முழுவதும் செய்யப்பட்டுள்ளது. அதன்படி, கொள்முதல் மற்றும் செயல்பாட்டுத் திட்டம் பெறப்பட்ட மற்றும் நிலக்கரி தேவைகளை பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இருப்பினும், இரண்டு அட்டவணைகளும் வருடாந்திர நிலக்கரி தேவையைப் பொறுத்தது, இது ஒவ்வொரு ஆண்டும் ஜூன் அல்லது ஜூலை மாதங்களில் அனல் மின் நிலைய முகாமையாளரால் அறிவிக்கப்படுகிறது.

நிலக்கரி தரையிறக்கம் / கப்பல் செயல்பாடுகள் மற்றும் நிலக்கரி காப்பீடு ஆகியவற்றிற்கு இலங்கை நிலக்கரி நிறுவனம் பொறுப்பேற்க வேண்டும். அமைச்சரவை தீர்மானத்தின் அடிப்படையில், 2024-2025 ஆம் ஆண்டுக்கான நிலக்கரி தரையிறக்கம் / கப்பல் செயல்பாடு CSC ஆல் இயக்கப்படும்.

இதற்கு மேலதிகமாக, நிலக்கரி பரிசீலனை செய்வதற்காக இலங்கை நிலக்கரி நிறுவனம், இலங்கை மின்சார சபை மற்றும் சேவை வழங்குநருக்கு இடையில் முத்தரப்பு ஒப்பந்தம் ஒன்று உள்ளது. சேவை வழங்குநர் சர்வதேச போட்டி முறைமை ஏலம் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர்.

## 2. LCC 2024 இன் செயல்பாடு

நாட்டின் தற்போதைய நிதி மற்றும் பொருளாதார சவால்களால் வழங்கலை நிர்வகிப்பதற்கான கடினமான முயற்சிகள் இருந்தபோதிலும், புதிய நிலக்கரி பருவத்தின் தொடக்கமான 2024 செப்டம்பர் 10 ஆம் திகதி வரை LVPP நிலக்கரி தேவையினை 100% பாதுகாக்க எம்மால் முடிந்தது.

## 3. 2024–2025 வருடத்திற்கான வேலைத்திட்டங்கள்

### அ. நிலக்கரி வழங்கல் 2024–2025

2024-2025 பருவத்திற்கான 2,259,000.00 மெட்ரிக் டொன் ±10% தேவையான நிலக்கரி 38 கப்பல்களால் வழங்கப்படும். முன்மொழிவு LCC/23/PROP/1 இன் கீழ் ஒன்பது கப்பல்களையும், எஞ்சிய 29 கப்பல்களையும் பெற ஒரு புதிய நீண்ட கால டெண்டர் LCC/24/TT/1 செயல்படுத்தப்பட்டது. ஆறு ஏலதாரர்களினால்

ஏலங்கள் சமர்ப்பிக்கப்பட்டதுடன், மேலும் 3 பேர் மட்டுமே விலைமனுக்கோரலுகிணங்க ஏலங்களை சமர்ப்பித்தனர். இதற்கிடையில், LCC / 23 / PROP /1 இன் வழங்குனரால் POTENCIA L.L.C-FZ இந்த பருவத்தின் நிலக்கரி வழங்களுக்கான முன்மொழிவு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் தயாரிக்கப்பட்ட ஏல ஆவணங்கள் மற்றும் இந்த முன்மொழிவை, நிலையான அமைச்சரவை கொள்முதல் குழு மற்றும் சுங்கவரி அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டது. அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு அதன் ஒப்புதலுக்காக, POTENCIA L.L.C-FZ க்கு 2,259,000.00 MT ±10% விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது, இதில் கப்பல் கட்டணம் USD 30 இலிருந்து 27 ஆக USD 3 இனால் குறைக்கப்பட்டுள்ளது.

**Table 7.1**
**2024–2025 ஆம் ஆண்டிற்கான நிலக்கரி வழங்கள் அட்டவணை**

| விநியோக பாதை | அளவு MT - 10% | ஏற்றுமதிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| முன்மொழிவு LCC/23/PROP/1 | 540,000 | 09 |
| புதிய முன்மொழிவு LCC/23/PROP/1 | 1,740,000 | 29 |
| 2024-25 வருடத்திற்கான லக்விஜய ஆலைக்கான கோரல் | 2,259,000 | 38 |

### ஆ. LVPP கப்பல் நிலையத்திற்கு நிலக்கரி போக்குவரத்து (பொருட்கள் போக்குவரத்து

**I நிலக்கரியை ஏற்றும் துறைமுகத்திலிருந்து புத்தளம் நங்கூரமிடத்திற்கு கொண்டு செல்வது**

2024 செப்டம்பர் நடுப்பகுதியில் இருந்து இலங்கை மின்சார சபைக்கு தேவையான அளவைப் பெற்றுக்கொள்வதற்காக LCC நிலக்கரிக்கான ஏலம் மற்றும் இடத்திற்கான ஏலங்கள் கோரப்படும்.

**II. தாய்க் கப்பலில் இருந்து கப்பல் நடவடிக்கை வரை மற்றும் ஜெட்டியில் இருந்து கப்பல் நடவடிக்கை**

2021/22 மற்றும் 2022/23 ஆண்டுகளுக்கு இலங்கை கப்பல் கூட்டுறவு கப்பல் போக்குவரத்து கட்டணம் மற்றும் கப்பல் செயல்பாட்டை வழங்குகிறது. மேலும், அவர்கள் ஒரு ஏலத்தின் மூலம் ஒரு துணை ஒப்பந்ததாரரான ஸ்ரீஜி சிப்பிங் இந்தியாவை தேர்வு செய்துள்ளார்கள். அமைச்சரவையின் ஒப்புதலின் பேரில், 2024-2025 ஆம் ஆண்டுக்கான துணை ஒப்பந்ததாரராக ஸ்ரீஜி சிப்பிங் இந்தியா தேர்வு செய்யப்பட்டுள்ளது.

**III. நிலக்கரி போக்குவரத்துக்கான கடல் காப்பீடு**

இலங்கை காப்பீட்டு ஒழுங்குமுறை ஆணையகத்தின் (IRCSL) கீழ் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களிடமிருந்து மனுக்கள் கோரப்படுவதன் மூலம் பொருட்களுக்கான காப்பீட்டு பாதுகாப்பு உள்நாட்டில் செய்யப்படும். பீபல்ஸ் காப்பீட்டு நிறுவனம் மற்றும் பெயார்பெஸ்ட் காப்பீட்டு நிறுவனம் இரண்டு காலாண்டுகளான 2023/24 மற்றும் 2024/25 ஆம் ஆண்டுகளுக்கான காப்பீட்டு இணைப்புகளை வழங்கியது. அதன்படி, 2024/25 ஆண்டு முடிவில் உடன்படிக்கை முடிவடைகிறது.

IV. சுயாதீன நிலக்கரி ஆய்வு நிறுவனம் நிலக்கரியின் எடையை அளவிடுவதற்காக, இறங்கும் துறைமுகத்தில் நிலக்கரியின் மாதிரி மற்றும் பகுப்பாய்வு முழுமையாக அங்கீகரிக்கப்பட்ட சுயாதீன நிலக்கரி ஆய்வு நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகிறது. இது LCC, CEB மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட சுயாதீன நிலக்கரி ஆய்வாளர்கள் இடையே ஒரு முத்தரப்பு ஒப்பந்தம் ஆகும். மாதம் 2025 வரை நிலக்கரி ஆய்வு, COTECNA Inspection India விற்கு வழங்கப்பட்டுள்ளது.

## இ. 2024–2025 ஆண்டிற்கான கான நிலக்கரி கொடுப்பனவு பொறிமுறை

2024-2025 ஆண்டிற்கான கொடுப்பனவுகள் இன்னும் நிறைவடையவில்லை. நிதி தேவைகளின் சுருக்கம் பின்வருமாறு **2024–2025 ஆண்டிற்கான நிதி தேவைகளின் சராம்சம்**

**அட்டவணை 7.2**
**2024–2025 ஆண்டிற்கான நிதி தேவைகளின் சராம்சம்**

| கேள்விமனு | ஏற்றுமதிகளின் எண்ணிக்கை | நிதி தேவைகள் | |
|---|---|---|---|
| | | USD (மில்லியன்) | LKR (பில்லியன்) |
| முன்மொழிவு LCC/23/PROP/1 | 9 | 69 | 21 |
| முன்மொழிவு LCC/23/PROP/1 | 29 | 221 | 69 |
| தேவையான முழு நிதி | 38 | 290 | 90 |

**அட்டவணை 7.3**
**2024–2025 வருடத்திற்கான கொடுப்பனவு முறை சாராம்சம்**

| வழங்கல் முறை | கொடுப்பனவு விதிமுறைகள் |
|---|---|
| முன்மொழிவு 38 கப்பற்தொகுதிகளுக்கான LCC/2/PROP/1 | மெற்றிக் தொன் ஒன்றிற்கான தந்தி பரிமாற்ற (TT) விதிமுறைகள். CFR விதிமுறைகளின்படி, ஒவ்வொரு கப்பற்தொகுதிக்கும் RCI, ரஷ்ய வாராந்த சுட்டெண் விலை 1.123 இன் பெருக்கல் காரணி (MF) ஆக இறுதி விலையாக இருக்கும். |

# ஸ்ரீ லங்கா எனர்ஜிஸ் (பிரைவேட்) லிமிடெட்

## 1. அறிமுகம்

ஸ்ரீ லங்கா எனர்ஜிஸ் (பிரைவேட்) லிமிடெட் என்பது 2011 இல் இணைக்கப்பட்ட ஒரு நிறுவனமாகும், இது இலங்கை மின்சார சபைக்கு 100% உரித்தான உப நிறுவனமாக செயற்படுகிறது. SLE மீள புதுப்பிக்கத்தக்க சக்தி அபிவிருத்தி மற்றைய நோக்கங்களான தொடர்புடைய பரிமாற்ற சொத்து மேம்பாடு, மனிதவள வள ஒதுக்கீடுகள் மற்றும் CEB f;F தேவைகளை பெறுகைக்ள ஆகியவற்றில் பிரதான கவனம் செலுத்துகிறது.

## 2. இக் காலப்பகுதியில் எதிர்கொள்ளப்பட்ட சவால்கள் மற்றும் இவ் சவால்களை நிவர்த்தி செய்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

அ) பல திட்டங்கள் அல்லது செயற்பாடுகளுக்கு பல சட்டங்கள், ஒழுங்குவிதிமுறைகள் மற்றும் அனுமதிகளுடன் இணங்குவது தேவைப்படுகிறது, இது சுற்றாடல் அதிகார சபை மற்றும் பிற உள்நாட்டு ஒழுங்குபடுத்தல் அதிகார சபையிடமிருந்து ஒப்புதல்களைப் பெறுவது போன்ற சிக்கலான மற்றும் நேரத்தை விரையமாக்கும் செயல்முறையாகவும் இருக்கின்றன.
உ-ம் : சீதாவாக்கை நீர் மின் நிலையத்திற்கு நீர்ப்பாசனத் திணைக்களத்திடமிருந்து ஒப்புதலை பெறுதல் ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ளது, மேலும் இது LOI போன்ற பிற ஒப்புதல்களையும் பெறுவதிலும் காலதாமதத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆ) உள்நாட்டு அதிகாரசபை சட்டங்கள் மற்றும் நில பயன்பாட்டு விதிமுறைகள் மிகவும் சிக்கலானவை மற்றும் அதைச் சமாளிக்க திட்டங்களின் நோக்கத்தில் மாறுபாடுகள் அல்லது மாற்றங்கள் தேவைப்படலாம், மேலும் இது ஒப்புதல் செயல்முறையை சவாலானதாகவும் தாமதப்படுத்தவும் வழிவகுக்கிறது.
உ-ம் : சீதாவாக்கை நீர் மின் நிலையம் / கல்கமுவ A1 மீளசுழற்சி திட்டம்

இ) அதிக வட்டி விகிதங்கள் மற்றும் கடன்களுக்கு சலுகை விகிதங்கள் கிடைக்காததால் நிதிகளுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்வது சவால் மிக்கதாக உள்ளது.

ஈ) சில ஒப்புதல்களுக்கான நீண்ட மதிப்பாய்வு செயல்முறைகள் பல கட்ட மதிப்பாய்வை உள்ளடக்கியதாக உள்ளதோ்மு இது நேர விரையத்தையும் மற்றும் விலை உயர்வையும் ஏற்படுத்துவனவாக உள்ளன.

உ) தனிப்பட்ட நலன்களைக் கொண்ட பொதுக் குழுக்களால் ஏற்படும் ஆட்சேபனைகள் திட்டவட்டமான தேவையற்ற தாமதங்களை உருவாக்குகின்றன.

## 3. ஏற்றுக்கொள்ளப்பட்ட மூலோபாயங்கள்

I. இந்த சவால்களை எதிர்கொள்வதற்கு, பெரும்பாலும் தொடர்புடைய அதிகாரிகளுடன் நெருக்கமாக பணியாற்றுவது அவசியம், எனவே விவாதங்களை நிறைவேற்ற குழுக்கள் நியமக்கப்பட்டுள்ளது.

II. குழு கூட்டங்களை ஆராய்ந்ததன் மூலம், திட்டம் அல்லது செயற்பாடுகளை தொடருவதற்கான ஆதரவை பலப்படுத்துல் வகையில் வினைத்திறன் மிக்க தொடர்பாடல் மற்றும் மக்கள் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

III. குறித்த தரப்பினருடன் Green

Bond கலந்துரையாடல்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

IV. பிரச்சாரத்திற்காக சில சந்தைப்ப:டுத்தல் முறைகள் உபயோகிப்பட்டுள்ளது. உ-ம்: சூரியசக்தி திட்டம்

V. மீள புதுப்பிக்கத்தக்க சக்தி மற்றும் மீள்சுழற்சி திட்டங்களை விரைவாக செயற்படுத்துவதற்கு வசதியாக, உயர் மட்ட சட்ட உருவாக்கத்தில் சட்டங்களை மறுபரிசீலனை செய்வதற்கு அனுமதி அவசியம் என்று நிறுவனம் நம்புகிறது.

**4. 2024 ஆம் ஆண்டின் அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்றங்கள்**

**4.1 கும்பல்கமுவ மினி நீர் மின் நிலையம்**
சமனலவேவா நீர்த்தேக்கத்திலிருந்து 20 ஆண்டுகளுக்கு மேலாக கசியும் நீரைப் பயன்படுத்தி **கும்பல்கமுவ மினி நீர் மின் நிலையம்** Sri Lanka Energies (Pvt) நிறுவனத்தல் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

1.2 மெகாவாட் Francis Turbine ஐ கும்பல்கமுவ மினி நீர் மின் நிலையத்துடன் இணைக்கும் பணிகள் 2016.02.16 ஆம் திகதி பூர்த்திசெய்யப்பட்டுள்ளதுடன் இது தற்போது தேசிய வலையமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.





| மின்சார நிலைய சாராம்சம் (ஜனவரி-டிசம்பர் 2024) | | |
|---|---|---|
| நிறுவப்பட்ட திறன் | 1.3 | MW |
| மின்சார உற்பத்தி (ஜனவரி-டிசம்பர்) 2024 | 6.99 | GWH |
| மேலதிக மின்சார உற்த்தி | | GWH |
| மேலதிக வருமானம (ஜனவரி-டிசம்பர்) 2024 | 71.4 | ரூ. மில்லியன் |
| செயற்பாட்டு காலம் | 8 வருடங்கள் மற்றும் 10 மாதங்கள் | |

**4.2 CEB க்குத் தேவையான மனிதவளத்தை நிர்வகித்தல்**

தாய் நிறுவனத்தின் வேண்டுகோளின் பேரில், இந்த நிறுவனம் 128 பயிற்சிபெற்ற மற்றும் பயிற்சிபெறாத மனித சேவைகளை CEB க்கு வழங்குகிறது.

ஆரம்பத்தில் இந்த நிறுவனம் CEB க்கு கிட்டத்தட்ட 3000 மனிதவள சேவைகளைக் வழங்கியுள்ளது.



**4.3 மீட்டர் உறை உற்பத்தி ஆலை**

இலங்கை மின்சார சபை மற்றும் லங்கா மின்சார நிறுவனம் (பிரைவேட்) லிமிடெட் ஆகியவற்றின் பாலி கார்பனேட் மீட்டர் உறைகளின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, பாலி கார்பனேட் (PC) ஒற்றை கட்ட மீட்டர் உறை உற்பத்தி தொழிற்சாலையின் நிர்மாணப் பணிகள் 2016 செப்டம்பர் 05ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

நிர்மாணம் மற்றும் இயந்திர நிறுவலை பூர்த்திசெய்து, தொழிற்சாலை , 2017 செப்டம்பர் 05 ஆம் திகதி திறக்கப்பட்டது. இவ் தொழிற்சாலையால் வருடாந்த தேவையான 250,000 மீட்டர் உறைகள் தயாரிக்கப்பட்டு இலங்கை மின்சார வசபை மற்றும் லங்கா

மின்சார நிறுவனம் (பிரைவேட்) லிமிடெட் ஆகியவற்றிற்கு வழங்கப்படுகின்றன.

இவ் தொழிற்சாலை தற்போது CEB மற்றும் LECO இன் முழுமையான மீட்டர் உறை தேவையையும் பூர்த்தி செய்யும் திறனுடன் இயக்கி வருகிறது, மேலும் 2024 ஜனவரி முதல் டிசம்பர் வரை 188,985 யூனிட் மீட்டர் உறைகளை அனுப்பியுள்ளதுடன், இது கேள்வியின் வீழ்ச்சியை காட்டுவதாக உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.



### 4.4 தெதுருஓயா மினி நீர் மின் நிலையம்



கட்டுவன்னாவ பகுதியில் உள்ள தெதுரு ஓயா நீர்த்தேக்கத்தில் இருந்து நீர்ப்பாசனத்திற்கு நீர் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் 1.3 மெகாவாட் மின் உற்பத்தி நிலையம் ஜனவரி 2021 இல் வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட:டுள்ளது. மேலும், Kaplan Turbine உடன் கூடிய ஜெனரேட்டர் ஆண்டுக்கு ரூ. 90 மில்லியன் மதிப்புள்ள மின்சாரத்தை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

| மின்சார நிலைய சாராம்சம் (ஜனவரி-டிசம்பர் 2024) | | |
|---|---|---|
| நிறுவப்பட்ட திறன் | 1.3 | MW |
| மின்சார உற்பத்தி (ஜனவரி-டிசம்பர்) 2024 | 4.9 | GWH |
| மேலதிக வருமானம(ஜனவரி-டிசம்பர்) 2024 | 90.3 | ரூ. மில்லியன் |
| செயற்பாட்டு காலம் | 4 வருடங்கள் | வருடங்கள் |

### 4.5 பயோமெட் மினி நீர் மின் நிலையம்

இது நுவரெலியா மாவட்டத்தில் உள்ள வலப்பேனையில் உள்ள ஹல்கரன் ஓயாவில் உள்ள 900 கிலோவாட் மின் உற்பத்தி நிலையமாகும், இந்த மின்சார நிலையம் 2023 டிசம்பர் 01, ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்டது. பிரான்சிஸ் டர்பைனுடன் கூடிய ஜெனரேட்டர் ஆண்டுக்கு ரூ. 15 மில்லியன் பெறுமதியான மின்சாரத்தை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



| மின்சார நிலைய சாராம்சம் (ஜனவரி - டிசம்பர் 2024) | | |
|---|---|---|
| நிறுவப்பட்ட திறன் | 900 | KW |
| மின்சார உற்பத்தி (ஜனவரி-டிசம்பர்) 2024 | 0.69 | GWH |
| மேலதிக வருமானம (ஜனவரி-டிசம்பர்) 2024 | 12.8 | ரூ. மில்லியன் |
| செயற்பாட்டு காலம் | 1வருடம் | வருடங்கள் |

### 4.6 சூரிய மின் சக்தி EPC ஒப்பந்ததாரராக SLE

நிறுவனத்தின் வணிக எல்லையை விரிவுபடுத்துவதற்கு 2024 ஆகஸ்ட் முதல் இலங்கை அரசு நிறுவனங்களுக்கான சூரிய சக்திக்கான EPC ஒப்பந்ததாரராகச்

**ரதவென - 5kW**



**ஹொரண - 50kW**



**கல்பத – 260 kW**



செயற்படுவதற்கு அமைச்சரவை ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

பசுமை சக்தி வளத்தின் திட்டமாக அபிவிருத்திசெய்வதற்கு இணையாக, நாடு முழுவதும் கூரையின் மேல் சூரிய சக்தி தகடுகளை நிறுவும் பணியில் SLE ஈடுபட்டுள்ளது.

கலந்துரையாடல்கள் மற்றும் விளம்பரங்களின் விளைவாக, கீழே குறிப்பிடப்பட்டுள்ள வாடிக்கையாளர்கள் தற்போது கூரையின் மேல் சூரிய சக்தி தகடுகளை நிறுவுவதற்கு SLE உடன் உள்ளனர், மேலும் நிறுவனம் கூரையின் மேல் பொருத்தும் சூரிய சக்தி தகடுகளை சந்தைப்படுத்தும் தொடர்ச்சியான செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளது.

**அட்டவணை 8.1**
**சூரியசக்தி நுீஊ கருத்திட்டம்**

| S/N | ஆமைவிடம்ஃதிட்டம் | திறன் (kW) |
|---|---|---|
| 1 | நாத்தாண்டியா பிரதேச சபை | 130 |
| 2 | கல்பிட்டி பிரதேச சபை | 520 |
| 3 | கடுவெல நகராட்சி மன்றம் | 355 |
| 4 | மாத்தளை பிரதேச சபை கட்டிடம் | 50 |
| 5 | கலிகமுவ மீட்டர் உறை உற்பத்தி ஆலை | 180 |
| 6 | மெட்டல் மிக்ஸ் (பிரைவேட்) லிமிடெட் | 260 |
| 7 | கல்கமுவ பிரதேச சபை | 950 |

## 5. 2025 ஆம் ஆண்டின் எதிர்காலத் திட்டங்கள்

### 5.1 அலுமமினியம் மீள்சுழற்சி திட்டம்

CEB வரலாற்றில் முதல் முறையாக, CEB இன் அகற்றப்பட்ட அனைத்து AAC களையும் மீள்சுழற்சி செய்து புதிய Areal Bundle Cables (ABC) ஆக மீண்டும் பயன்படுத்த முடிவு செய்யப்பட்டது. இவ் இலக்கை நிறைவேற்றும் வகையில், SLE ஒரு அலுமினிய மீள்சுழற்சி ஆலையை நிறுவி செயற்படுத்தும் பணியை மேற்கொண்டுள்ளது. உற்பத்தியின் போது, செயற்பாட்டு செலவினம் CEB ஆல் SLE க்கு செலுத்தப்படுகிறது மற்றும் நிறுவப்பட்ட விலை நிர்ணய சூத்திரத்தின் மூலம் மீண்டும் உற்பத்தி செய்யப்பட்ட கேபிள்களை மீளவும் கொள்வனவு செய்கின்றது.

அத்தகைய மீள்சுழற்சி வசதியை நிறுவுவதற்கான அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்ததன் பின்னர், SLE 2024 ஏப்ரல் இல் தொழிற்சாலையை நிர்மாணிப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது தேவையான இயந்திரங்களை கொள்வனவு செய்வது உட்பட மொத்த திட்ட நிர்மாண பணிகளில் 80% க்கும் அதிகமானவை பூர்த்திசெய்யப்பட்டுள்ளன.




தற்போதைய சூழலில் இவ் மீள்சுழற்சி திட்டம் சுற்றாடலுக்கு மிக உயர்ந்த மதிப்பை வழங்குகிறது மற்றும் ஆண்டுதோறும் USD 4 மில்லியன் க்குமேல் சேமிக்கிறது. மேலும், செய்யப்பட்ட கணக்கீடுகளின்படி, இந்த திட்டத்தின் வெளியீடு இலங்கை மின்சார சபையின் வருடாந்த அலுமினிய தேவையில் மூன்றில் ஒரு பங்கை வழங்குகிறது.

முன்மொழியப்பட்ட உற்பத்தி ஆலை விரைவில் கல்கமுவாவில் செயல்பாட்டுக்கு வர உள்ளது.





தற்போது 3500 தொன் அலுமினிய கழிவுகள் சேகரிக்கப்பட்டு கல்கமுவ தொழிற்சாலை வளாகத்தில் சேமிக்கப்பட்டுள்ளன. மேலும், CEB கிளைகளிலிருந்து SCRAP அலுமினியத்தை சேகரிக்கும் செயல்முறையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.





## 5.2 சீதாவாக்கை மினி நீர் மின்சார திட்டங்கள்

சீதாவாக்கை நீர்மின்சாரத் திட்டம், குளம் போன்ற நீர்த்தேக்க விருப்பத்தைக் கொண்ட இரண்டு அடுக்கு மினி நீர்மின்சார நிலையங்களாக மாற்றப்பட்டு, ஒவ்வொன்றும் 7 மெகாவாட் திறன் கொண்டதாக உள்ளன. எதிர்பார்க்கப்படும் வருடாந்ம மின்சாரத் திறன் சுமார் 40 GWh ஆகும். சீதாவாக்கை திட்டத்திற்கான அடிக்கல் நாட்டு விழா , 2024 ஏப்ரல் 04 ஆம் திகதி நடைபெற்றதுடன் விரைவில் இதற்கான நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆவணத்தின் தொடக்கத்தில் விளக்கப்பட்டுள்ளபடி ஒப்புதல் செயல்முறைகள் மூலம் அடிப்படை தாமதம் ஏற்பட்டுள்ளன.

இதுவரையிலான திட்ட முன்னேற்றம் வருமாறு;

- மின் இயந்திர உபகரணங்களுக்கான கேள்விமனுக் கோரல்கள் கோரப்பட்டு இறுதி செய்யப்பட்டுள்ளன.
- நில அளவீடு மற்றும் நிர்மாண வரைபடங்களபூாத்தியடைந்துள்ளன.
- இரண்டு நில வாகனங்கள், JCB மற்றும் ஒரு செயின் 70PA பெறுகைகள் காலாவதியாகியுள்ளன மற்றும் மீண்டும் கோரப்பட்டுளளது
- LOI நிறுவப்படும்
- PPA நிறுவப்படும்

## 5.3 செயற்பாட்டில் உள்ள திட்டங்கள்

| | |
|---|---|
| மேல் சமனலவேவா : | 700கி.வ |
| வாகன்டேல் மினி ஹைட்ரோ : | 4.6 மெகாவட் |
| பிராட்லேண்ட்ஸ் மினி ஹைட்ரோ : | 2.0 மெகாவட் |
| விக்டோரியா மினி ஹைட்ரோ : | 1.0 மெகாவட் |

# அத்தியாயம் 09
# எல்.ரி.எல் ஹோல்டிங்ஸ் லிமிட்டெட் (LTLH)

## 1. நிறுவனம் பற்றிய சுருக்கமான அறிமுகம்:

LTL ஹோல்டிங்ஸ் லிமிடெட்டு நிறுவனம் (LTLH), முன்னர் "லங்கா ட்ரான்ஸ்/ போர்மர்ஸ் லிமிடெட்டு நிறுவனம்" என அழைக்கப்பட்டது. இது இலங்கை மின்சார சபைக்கும் (இமிச) ஏனைய மூன்று நிறுவனங்களுக்கும் இடையிலான ஒரு பொது தனியார்-பங்காளித்துவ அமைப்பாக காணப்படுகின்றது.இந்த நிறுவனத்தின் உரிமை LTL குழுவினதும் வெஸ்ட் கோஸ்ட் பவர் (ப்ரைவட்) லிமிற்றட்டு நிறுவனத்தினதும் (WCPL) ஊழியர்களிடம் உள்ளது. தற்போதைய பங்காளித்துவத்தின் அடிப்படையில், இமிசசார்பாக 35% வீதத்தையும், WCPL நிறுவனம் சார்பாக 28% வீதத்தையும் இது பிரதிபலிக்கும் அதே வேளையில் LTL குழுவின் ஊழியர்களை பிரதிநிதிப்படுத்துகின்ற இரண்டு (02) நிறுவனங்கள் சார்பாக எஞ்சிய 37% வீதத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. இந்த நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்டுள்ள அலுவலகம் இலக்கம் 77, பார்க் வீதி, கொழும்பு 02என்ற முகவரியில் அமைந்துள்ளது. இந்த நிறுவனம் கடந்த நான்கு தசாப்தங்களாக தனதுபங்காளித்துவ பயணத்தில் ஒரு வலுவான, ஆரோக்கியமான, நிலையான அபிவிருத்தியை அடைந்து, இலங்கையின் மின் பொறியியல் துறையில் ஒரு முதன்னிலை நிறுவனமாக மாறியுள்ளது. **LTLH 'பொறியியலினாலும் மற்றும் அறிவியலினாலும் நிலையான தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதன் மூலமாக வாழ்வை வளப்படுத்துகின்றோம்' என்ற நோக்கில் செயற்படுகின்றது. மேலும் வாடிக்கையாளர்களில் கவனம் செலுத்துதல், புத்தாக்கத்திற்கான ஆர்வம், தரம், நேர்மை மற்றும் ஒருமைப்பாடு என்பன எமது முக்கிய விழுமியங்களாகும்.** 1980 ஆம் ஆண்டின் முற்-பகுதியில் மின் விநியோக மின்மாற்றிகளின் உற்பத்தியுடன் தனது வணிகம் சார்ந்தசெயற்பாடுகளை ஆரம்பித்தஇந்த நிறுவனம்மின்சார உற்பத்தி, மின்சார உட்கட்டமைப்பு வசதிகள்அபிவிருத்தி மற்றும் ஹொட் டினப் கல்வனிசிங் போன்றவற்றில் தனது வணிகத்தை இலங்கையில் பன்முகப்படுத்தியிருந்தது. இவ்வாறு பன்முகப்படுத்திய காரணத்தினால் இலங்கையில் மின்சக்தி துறை பொறியியல் பணிகளின் ஒட்டுமொத்த பெறுமான சங்கிலி முறைமையையும் இது உள்ளடங்கியிருந்தது. இலங்கையிலும் அதே போல் பங்களாதேஷம், தான்ஷானியா, உகண்டா, கென்யா, எதியோப்பியா, கானா, ஓமான், இந்தியா, நேபாளம், ஜோர்தான், மியான்மார், மாலத்தீவுகள் மற்றும் ஆஸ்திரேலியாபோன்ற வெளிநாடுகளிலும் மின் உற்பத்தி நிலையங்களில் முதலீடு செய்தும் பொறியியல், பெறுகை மற்றும் நிர்மாண (EPC) ஒப்பந்தங்களையும் சிவில் பொறியியல் உட்கட்டமைப்பு வசதிகள் சார்ந்த செயற்பாடுகளையும்மேற்கொண்டும் இந்த நிறுவனம் வெற்றியடைந்துள்ளது.

LTL ஹோல்டிங்ஸ் லிமிற்றட்டு நிறுவனம் தனது துணை நிறுவனங்கள் மற்றும் இணைந்த கம்பனிகள் ஆகியவற்றின் ஊடாக தேசிய க்றிட்டு மின்சார முறைமைக்கு 520 மெ.வொ. இற்கும் அதிகமான மின்சாரத்தை வழங்குகின்ற இலங்கையின் மிகப்பெரிய சுயாதீன மின் உற்பத்தி நிறுவனமாக விளங்குகின்றது. மின்வலு சக்தி அமைச்சு மற்றும் இமிச ஆகியன 350 மெ.வொ. LNG இல்இயக்கக்கூடிய ஒன்றிணைந்த சுழற்சி மின் உற்பத்தி பொறித்தொகுதியை நிர்மாணிக்க 2021 ஆம் ஆண்டில் ஒப்பந்தத்தை துணை நிறுவனமான லக்தனவி லிமிடெட்டு நிறுவனத்திற்கு வழங்கியது. கருத்திட்டத்தின் நிமித்தம்தாபிக்கப்பட்டுள்ள விஷேட நோக்க வாகன (SPV) நிறுவனமான சபோதனவி லிமிற்றட்டு நிறுவனம் இமிச உடனான PPA, CPC உடனான FSA, இலங்கை அரசாங்கத்துடனான, IA மற்றும் BOI

உடனான BOI ஒப்பந்தம் போன்ற சகல கருத்திட்ட ஒப்பந்தங்களிலும் ஏற்கனவே கையெழுத்திட்டுள்ளது. இந்த மின் உற்பத்தி பொறித்தொகுதி கருத்திட்டத்தின் முதலாம் கட்டம் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டு2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாத்த்தில் திறந்த சுழற்சி வணிக செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. இது தேசிய கிறிட்டு மின்சார முறைமையில்212 மெ.வொ. மின்சாரத்திற்கு பங்களிப்பு செய்கின்றது. ஒன்றிணைந்த சுழற்சி வணிக செயற்பாடுகளை2025 ஆம் ஆண்டுதொடக்கத்தில் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.இது இமிச இன் தேசிய கிறிட்டு மின்சார முறைமைக்கு மொத்தம் 350மெ.வொ. மின்சாரத்தை சேர்க்குகின்றது.

LTL ஹோல்டிங்ஸ் லிமிற்றட்டு நிறுவனம் இரண்டாவது 350 மெ.வொ. LTL ஒருங்கிணைந்த கெரவலபிட்டிய சுழற்சி மின் உற்பத்தி பொறித்தொகுதிற்கான அபிலாஷை கடிதம் (LOI) தனக்கு கிடைத்ததால் BOOT அடிப்படையில் கருத்திட்ட ஒப்பந்தங்களை நிறைவேற்றுதல் மற்றும் சுற்றாடல்,பொறியியல், நிதிமற்றும் ஏனைய பூர்வாங்க கருத்திட்ட அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுத்தல் நிமித்தம் PPA மற்றும் ஏனைய கருத் திட்டங்களுக்கான ஒப்பந்தங்கள் தொடர்பாக மின்வலு சக்தி அமைச்சு மற்றும் இமிச ஆகியவற்றுடன் விரிவான பேச்சுவார்த்தைகளிலும் மற்றும் கலந்துரையாடல்களிலும் ஈடுபட்டுள்ளது.

இந்த கம்பனி பின்வரும் ஏனைய விருதுகள் உள்ளடங்கலாக ஆசிய பிராந்தியத்தில் சிறந்த சுயாதீன மின் உற்பத்தி



தரப்புகளுக்கான (IPP) மதிப்புமிக்க தங்க விருதை அதிவிஷேட செயலாற்றுகையின் நிமித்தம் பெற்று பல ஆண்டுகளாக தனது பொறியியல் சிறப்பை பேணி வருகின்றது:

- சர்வதேச பாதுகாப்பு விருதை வென்றமை - பிரித்தானிய பாதுகாப்பு சபையின் நன்மதிப்பு விருது - 2021
- பங்காளதேஷ நாட்டு விருதை வென்றமை - பிரித்தானிய பாதுகாப்பு சபை - 2021
- ஆண்டிற்கான புத்தாக்க மின்சக்தி தொழில்நுட்ப விருதை வென்றமை - பங்காளதேஷம் வழங்கிய ஆசிய பிராந்திய மின்சக்தி விருதுகள் - 2021
- இலங்கை பொறியியலாளர் நிறுவகத்தின் பொறியியல் சிறப்பு விருதை வென்றமை - 2018

**2. எதிர்நோக்கிய சவால்களும் அத்தகைய சவால்களை அடையாளப்படுத்த / வெற்றிகொள்ள பின்பற்றிய மூலோபாயத்திட்டங்களும்:**

**350மெ.வொ. சபோதனவி RLNG மின் உற்பத்தி பொறித்தொகுதி நிர்மாணம்**

(அ) நிதி நெருக்கடியினால் ஏற்பட்டிருந்த நிர்ப்பந்தசூழ்நிலைக்கு நாடு தள்ளப்பட்டிருந்த காலகட்டத்திலும், இந்த கம்பனி நாட்டில் ஏற்படும் ஏதாவது மின்சார பற்றாக்குறையை தவிர்க்கும் நோக்கில் குறித்த கருத்திட்டத்தை முன்கூட்டியே நிறைவு செய்வதன் தேசிய முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு தனக்கு சொந்தமாக கிடைக்கக்கூடிய நிதிகளை பயன்படுத்தி மின்வலு சக்தி அமைச்சும் இமிச சபையும் வழங்கிய தார்மீக ஆதரவையும் உதவியையும் கொண்டு குறித்த மின் உற்பத்தி பொறித்தொகுதியின் முன்னேற்றத்தை தொடர்ந்து பேணியது. மின்சார கட்டண திருத்தத்திற்காக PPA இற்கு தேவையான திருத்தத்தை கூட்டிணைத்து ஒழுங்குறுத்திய இமிச சபைக்கான கோரலை நியாயப் படுத்துவதற்கான எமது SLFM பிரகடனத்தை கருத்திற்கொண்டு

எதிர்வரும் கட்டண திருத்தத்திற்கு இமிச வழங்கியிருந்த அங்கீகாரத்தையடுத்து நல்லெண்ணத்துடன் இந்த கம்பனி நிர்மாண பணிகளை தொடர்ந்து மேற்கொண்டது.

(ஆ) ஆசிய அபிவிருத்தி வங்கி (ஆஅவ) மற்றும் ஏனைய வெளிநாட்டு நிதி நிறுவனங்கள் ஆகியவற்றுடன் பேசித்தீர்த்த உண்மையான கருத்திட்ட கடன் இலங்கையின் தேய்ந்த பேரண்டப் பொருளாதார நிலைமை மற்றும் அதன் கடன் தரப்படுத்தல் நிலை ஆகிய காரணங்களினால் இடைநிறுத்தப்பட்டிருந்த நிலைமையிலும்கூட இந்த கம்பனி 44.5 பில்லியன் ரூபா பெறுமதியான ஒரு கருத்திட்ட கடனை பெற்றுக் கொள்வதற்காக 9 உள்நாட்டு வங்கிகளுடன் சுமுகமான பேச்சுவார்த்தைகளை வெற்றிகரமாக நடத்தி உரிய ஒப்பந்தத்தை ஏற்கனவே செய்துள்ளது. கருத்திட்டத்திற்கான நிதி 2024 ஆம் ஆண்டு திசம்பர் மாதத்தில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## 3. கருத்திட்டங்களின் முன்னேற்றமும் மற்றும் செயற்பாடுகள்

- மின் உற்பத்தி பொறித்தொகுதிகளின் இயக்கச்செயற்பாடுகளும் பராமரிப்பும்

### 3.1. 300மெ.வொ. ஒன்றிணைந்த சுழற்சி கெரவலபிட்டிய யுகதனவி மின் உற்பத்தி பொறித் தொகுதி





| நிறுவுகை | இலங்கை கெரவலபிட்டிய யுகதனவி மின் உற்பத்தி பொறித்தொகுதி |
|---|---|
| மின் உற்பத்தி பொறித்தொகுதியின் மொத்த மின் உற்பத்தி கொள்திறன் | 300 மெ.வொ. ஒன்றிணைந்த HFO அனல் மின் உற்பத்தி பொறித்தொகுதி |
| என்ஜின் மாதிரி | GT - சட்டகம் 9நு, ST SC5 |
| ஓல்டெர்னேட்டர் வகை | GE 9A5 |
| அமைப்பு | 2:2:1 |
| இயந்திரத்தின் உற்பத்தி வெளியீடு | ஒவ்வொன்றும் 100 மெ.வொ. |
| இயந்திரங்களின் எண்ணிக்கை | 2 GTs மற்றும் 1 ST |
| PPA காலப்பகுதி | 2010ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து 25 ஆண்டுகள் |

300மெ.வொ. யுகதனவி ஒன்றிணைந்த சுழற்சி மின் உற்பத்தி பொறித்தொகுதியின்14-வது ஒப்பந்த ஆண்டு 2024 ஆம் ஆண்டு மே மாதம் 9ஆம் திகதி நிறைவடைந்தது. 84.15% கிடைப்புத்தன்மை அடையப்பட்டது. 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01ஆம் திகதிமுதல் ஒற்றோபர் மாதம்31 வரையிலான மின்சார விற்பனை 653.57ஜவொம என்ற அளவில் இருந்தது. மின் உற்பத்தி பொறித்தொகுதி மீளாய்வு ஆண்டு காலப்பகுதியில் 193 நாட்கள் இயங்கியது. 2024 ஆம் ஆண்டிற்கான வருடாந்தகிடைப்புத்தன்மையானது இலக்கு 70% வீதம் என்ற அடிப்படையில் அமைந்துள்ளது.

ST பாரிய சோதனையிடுகை மற்றும் GT02 அனல் எரிவாயு மார்க்க சோதனையிடுகை ஆகிய சோதனையிடுகைகளுக்காக திட்டமிடப்பட்டிருந்தமின் உற்பத்தி

பொறித்தொகுதி செயலிழப்பு ஆய்வு 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 1ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்டது. மேலும் திட்டமிடப்பட்டிருந்த ஆய்வுகளும், அளவுத்திருத்தங்களும் மற்றும் மோட்டார்களின் PM களும் மற்றும் BOPs மின் உற்பத்தி பொறித்தொகுதி தொடர்பான கருவிமயமாக்கலும் பல்வேறு பராமரிப்பு செயற்பாடுகள் அடங்கலாக செயலிழப்பிற்கு இணையாக மேற்கொள்ளப்பட்டன.

### 3.2. கெரவலப்பிட்டிய சொபாதனவி 350 மெவொ RLNG இணைந்த சுழற்சி மின் உற்பத்திப் பொறித்தொகுதி

கருத்திட்டத்தின் வேலை ஓரளவான உயரத்திற்கு துரிதப்படுத்தப்பட்டது. கருத்திட்டத்தின் பணி அநேகமாக 85% வீதம் நிறைவு செய்யப்பட்டுள்ளது. கருத்திட்டத்தின் முதலாம் கட்டம் அதாவது திறந்த சுழற்சி மின் உற்பத்தி பொறித்தொகுதியின் வணிக இக்கச்செயற்பாடுகள் 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு இமிச இன் தேசிய கிறிட்டு மின்சார முறைமைக்கு 212மெ.வொ. மின்சாரம் விநியோகிக்கப்பட்டது. இந்த கம்பனி 2025 ஆம் ஆண்டு ஆரம்ப பகுதியில் குறித்த ஒன்றிணைந்த சுழற்சி மின் உற்பத்தி பொறித்தொகுதியின் வணிக இயக்கச்செயற்பாட்டு இலக்கை அடையவதற்கு எதிர்பார்க்கின்றது.

கீழே குறித்துக்காட்டப்பட்டுள்ளவை ஸ்தலத்தில் உள்ள நிர்மாண பணிகளின் முன்னேற்ற அளவுகளையும் மற்றும் நிகழ்ந்துள்ள பாரிய நிகழ்வுகளையும் சுட்டிக்காட்டுகின்ற ஒரு சில புகைப்படங்களாகும்.









(திரவ இயற்கை வாயு மின்சார நிலையம் ஆரம்பம் - கெரவலபிட்டிய)

| | |
|---|---|
| நிறுவுகை | இலங்கை கெரவலபிட்டிய சொபாதனவி மின் உற்பத்தி பொறித்தொகுதி |
| மின் உற்பத்தி பொறித்தொகுதியின் மொத்த மின் உற்பத்தி கொள்திறன் | 350மெ.வொ. LNG எரிவாயுவில் இயங்கும் ஒன்றிணைந்த சுழற்சி மின் உற்பத்தி பொறித்தொகுதி |
| என்ஜின் மாதிரி | GT – SG5 1200A; SST 3000 |
| ஓல்டெர்னேட்டர் வகை | GT – SG5 4000F; SST 100A |
| அமைப்பு | 1:1:1 |
| இயந்திரத்தின் உற்பத்தி வெளியீடு | GT – 220 MW + ST – 130MW = 350 மெ.வொ. |
| இயந்திரங்களின் எண்ணிக்கை | 1 GT மற்றும் 1 ST |
| கருத்திட்ட ஒப்பந்தங்கள் | 2021 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 19 ஆம் திகதி ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. அதனையடுத்து உண்மையான PPA இற்கு உரிய திருத்தத்திலும் கைச்சாத்திடப்பட்டது. |

| | |
|---|---|
| PPA காலப்பகுதி | திறந்த சுழற்சி மின் உற்பத்தி பொறித்தொகுதிக்கு 2024 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திலிருந்தும் மற்றும் ஒன்றிணைந்த சுழற்சி மின் உற்பத்தி பொறித்தொகுதிற்கு 2025 ஆம் ஆண்டு ஆரம்ப பகுதியிலிருந்தும் 20 ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டுள்ளது. |

### 3.2.1. கருத்திட்டத்தின் தற்போதைய நிலையும் விஷேட நிகழ்வுகளும்

தற்பொழுது நாட்டின் வங்கரோத்து நெருக்கடி நிலை ஓரளவுக்கு தணிந்துள்ளது. வங்கிகள் USD தேவைப்பாடுகளுக்கு உதவ காத்திருக்கின்றன. லக்தனவி ஏற்கனவே ஒப்புரவான பகிர்ந்தளிப்பில் தனது மட்டுப்பாடுகளை விஞ்சி தனது தொழிற்படு மூலதன கடன் நிரல்களில் பெரும்பகுதியை பயன்படுத்தியுள்ளது. எனவகருத்திட்ட கடனுக்கு ஒப்பந்தம் செய்துள்ள சொபாதனவி அடுத்த ஆறு மாத காலப்பகுதியில் இரு தவணை கடனை பெற்றுக்கொள்வதில் உறுதியாகவுள்ளது. நிதி சார்ந்த மூடுகையும் ஏற்கனவே அடையப் பட்டுள்ளது. அதன்படி இமிச சபைக்கு உரியவாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

வங்கிகள் அட்டவணையில் அங்கீகரித்துள்ள குறித்த கருத்திட்ட கடன் தொகை 44.5பில்லியன் ரூபா என கீழே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

| வங்கியின் பெயர் | குறிப்பு | தொகை பில்லியன் ரூபாவில் |
|---|---|---|
| ஹற்றன் நெஷனல் வங்கி, சம்பத் வங்கி, வர்த்தக வங்கி, இலங்கை வங்கி, மக்கள் வங்கி, னேடீவங்கி | **ஒவ்வொன்றும் 6 பில்லியன் ரூபா** | 36.0 |
| நேஷன் ட்ரஸ்ட்டு வங்கி | | 5.0 |
| கார்கில்ஸ் வங்கி | | 2.5 |
| தேசிய சேமிப்பு வங்கி | | 1.0 |
| மொத்தம் | | 44.5 |

ஒன்றிணைந்த சுழற்சி மின் உற்பத்தி கட்டத்திற்கு விரிவான பொறியியல் செயற்பாடுகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. நிறைவு கட்டத்திலுள்ள ST துணை மாதிரி, நீராவி டேர்பைன் (ST) SEE மின்மாற்றி, ST PCC, குளிர் நீர் குழாய் ஆதாரங்கள், ளுவு புஉஊடீ, நீர் சுத்திகரிப்பு பொறித்தொகுதி மற்றும் கலப்பு படலம் என்பவற்றுடன் தொடர்புடை அத்திவார வரைபுகள் அடங்கலாக எல்லா வடிவமைப்புகளும் வரைபுகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

### 3.3. பங்காளதேஷ நொட்டோரே ராஜ் லங்கா மின் உற்பத்தி பொறித்தொகுதி (RLPP)

| | |
|---|---|
| நிறுவுகை | பங்காளதேஷ நொட்டோரே ராஜ் லங்கா மின் உற்பத்தி பொறித்தொகுதி |
| மின் உபற்பத்தி பொறித்தொகுதியின் மொத்த உற்பத்தி கொள்திறன் | 52.2 MW |
| என்ஜின் மாதிரி | W20V32 |
| PPA யுகாலம் | 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து 15ஆண்டுகள் |



2024 ஆம் ஆண்டிற்கான (2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஒற்றோபர் மாதம் வரை) RLPP இன் மின்சார விற்பனை 10.122கிவொம அளவில் இருந்தது. குறித்த காலப்பகுதிற்கு ஒரு சராசரி மின் உற்பத்தி பொறித்தொகுதி காரணி 2.65% வீதமாக இருந்தது. 99.85% வீத கிடைப்புத்தன்மை அடையப்பட்டது. 2024 ஆம் ஆண்டிற்கான வருடாந்த கிடைப்புத்தன்மை இலக்கு 90% வீதத்திற்கு அதிகமான அடிப்படையில் இருந்துள்ளது. இதுவே இலங்கைக்கு வெளியால் இலங்கைக்கு சொந்தமான முதலாவது அனல் மின் உற்பத்தி பொறித்தொகுதி.

### 3.4. பங்காளதேஷ கொமிலா லக்தனவி பங்காள மின் உற்பத்தி பொறித்தொகுதி (LBPP)

| | |
|---|---|
| நிறுவுகை | பங்காளதேஷ கொமிலா லக்தனவி பங்காள மின் உற்பத்தி பொறித்தொகுதி |
| மின் உபற்பத்தி பொறித்தொகுதியின் மொத்த உற்பத்தி கொள்திறன் | 52.2 MW |
| என்ஜின் மாதிரி | W20V32 |
| PPA காலம் | 2024 ஆம் ஆண்டு திசம்பர் மாதத்திலிருந்து 15ஆண்டுகள் |



2024 ஆம் ஆண்டிற்கு அதாவது 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஒற்றோபர் மாதம் வரை பங்காள லக்தனவி மின் உற்பத்தி பொறித்தொகுதியின் மின்சார விற்பனை 147.183கிவொம அளவில் இருந்தது. குறித்த காலப்பகுதிற்கு ஒரு சராசரி மின் உற்பத்தி பொறித்தொகுதி காரணி 39.25% வீதமாக இருந்தது. 88.96% வீத கிடைப்புத்தன்மை அடையப்பட்டது. 2024 ஆம் ஆண்டிற்கான வருடாந்த கிடைப்புத்தன்மை இலக்கு 90% வீதத்திற்கு அதிகமான அடிப்படையில் இருந்துள்ளது.

### 3.5. பெகனி லங்கா மின் உற்பத்தி பொறித்தொகுதி – பங்காளதேஷ பெகனி

| | |
|---|---|
| நிறுவுகை | பெகனி லங்கா மின் உற்பத்தி பொறித்தொகுதி - பங்காளதேஷ பெகனி |
| மின் உபற்பத்தி பொறித்தொகுதியின் மொத்த உற்பத்தி கொள்திறன் | 114 MW |
| என்ஜின் மாதிரி | MW 18V50 மற்று ஒரு W20V32 |
| PPA காலம் | 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து 15 ஆண்டுகள் |

2024 ஆம் ஆண்டிற்கு அதாவது 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஒற்றோபர் மாதம் 31 ஆம் திகதிவரை பெகனி லங்கா மின் உற்பத்தி பொறித்தொகுதியின் மின்சார விற்பனை 345.879 கிவொம அளவில் இருந்தது. குறித்த காலப்பகுதிற்கு ஒரு சராசரி மின் உற்பத்தி பொறித்தொகுதி காரணி 41.45% வீதமாக இருந்தது. 91.37% வீத கிடைப்புத்தன்மை அடையப்பட்டது. 2024 ஆம் ஆண்டிற்கான வருடாந்த கிடைப்புத்தன்மை இலக்கு 90% வீதத்திற்கு அதிகமான அடிப்படையில் இருந்துள்ளது.

### 3.6. நுரைச்சோலை பவன்தனவி மின் உற்பத்தி பொறித்தொகுதி

| | |
|---|---|
| நிறுவுகை | நுரைச்சோலை இளந்தையடி பவன்தனவி காற்று சக்தி மின் உற்பத்தி பொறித்தொகுதி |
| மின் உபற்பத்தி பொறித்தொகுதியின் மொத்த உற்பத்தி கொள்திறன் | 9.8 MW |
| என்ஜின் மாதிரி | G58 |
| PPA காலம் | 2012ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திலிருந்து 20 ஆண்டுகள் |

2024 ஆம் ஆண்டிற்கு அதாவது 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஒற்றோபர் மாதம் 31 ஆம் திகதி வரை பவன்தனவி



மின் உற்பத்தி பொறித்தொகுதியின் மின்சார விற்பனை 18.94கிவொம அளவில் இருந்தது. அடைந்த மின் உற்பத்தி பொறித்தொகுதி காரணி 91.37% வீத வீதமான இருந்தது. 2024 ஆம் ஆண்டிற்கான வருடாந்த கிடைப்புத்தன்மை இலக்கு 95% வீத அடிப்படையில் இருந்துள்ளது. இந்த மின் உற்பத்தி பொறித்தொகுதி மீளாய்வு ஆண்டு காலப்பகுதியில் வழமையான பராமரிப்பு சேவைக்கு உட்பட்டு இருந்தது.



### 3.7. பெலிஹுல் ஒயா நிவிந்து சிறிய நீர்வலு மின் உற்பத்தி பொறித்தொகுதி

| | |
|---|---|
| நிறுவுகை | பெலிஹுல் ஒயா நிவிந்து சிறிய நீர்வலு மின் உற்பத்தி பொறித்தொகுதி |
| மின் உபற்பத்தி பொறித்தொகுதியின் மொத்த உற்பத்தி கொள்திறன் | 2.2 MW |
| என்ஜின் மாதிரி | ஹொரைசென்டெல் டேர்போ இம்பால்ஸ் |
| PPA காலம் | 2003ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து 15 ஆண்டுகள்<br>1-வது வழங்கப்பட்டிருந்த நீடிப்பு 19.5.22இல் காலாவதியாகியது<br>2-வது வழங்கப்பட்டிருந்த நீடிப்பு 2038.12.31 ஆம் திகதி வரை செல்லுபடியாகும் |

2024 ஆம் ஆண்டிற்கு ஒற்றோபர் மாதம் 31 ஆம் திகதி வரை நிவிந்து மின் உற்பத்தி பொறித்தொகுதியின் மின்சார விற்பனை 6.78 கிவொம அளவில் இருந்தது. அடைந்த மின் உற்பத்தி பொறித்தொகுதி காரணி 43% வீத வீதமான இருந்தது. 2024 ஆம் ஆண்டிற்கான வருடாந்த கிடைப்புத்தன்மை இலக்கு 95மூவீத அடிப்படையில் இருந்துள்ளது. ீயு 2038 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.



### 3.8. அசுபினி எல்ல சிறிய நீர்வலு மின் உற்பத்தி பொறித்தொகுதி

| | |
|---|---|
| நிறுவுகை | அறநாயக்க அசுபினி எல்ல சிறிய நீர்வலு மின் உற்பத்தி பொறித்தொகுதி |
| மின் உபற்பத்தி பொறித்தொகுதியின் மொத்த உற்பத்தி கொள்திறன் | 4 MW |
| என்ஜின் மாதிரி | ஹொரைசென்டெல் பெல்டென் |
| PPA காலம் | 2005ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து 15 ஆண்டுகள்<br>1-வது வழங்கப்பட்டிருந்த நீடிப்பு 2025.10.30 ஆம் திகதி வரை செல்லுபடியாகும் |

2022 ஆம் ஆண்டிற்கு ஒற்றோபர் மாதம் 31 ஆம் திகதி வரை அசுபினி எல்ல சிறிய நீர்வலுமின் உற்பத்தி பொறித்தொகுதியின் மின்சார விற்பனை 13.68 கிவொம அளவில் இருந்தது. அடைந்த மின் உற்பத்தி பொறித்தொகுதி காரணி 47.5% வீத வீதமான இருந்தது. 2024 ஆம் ஆண்டிற்கான வருடாந்த கிடைப்புத்தன்மை இலக்கு 95% வீத அடிப்படையில் இருந்துள்ளது. PPA 2038 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.



### 3.9. நேபாளம் 10மெ.வொ. மக்கரிகாட் நீர்வலு மின் உற்பத்தி (தனியார்) நிறுவனம்

| | |
|---|---|
| அமைவிடம் | பாகர் கிழக்கு நேபாளதர்ச்சுலா மாவட்ட க்ஹன்டேஷ்வரி மற்றும் குஜார் செமிலிய ஆற்று கிளை நதி ஒன்றான மக்காரி காட் நீர் மூலம் |
| மின் உபற்பத்தி பொறித்தொகுதியின் மொத்த உற்பத்தி கொள்திறன் | 10 MW |
| டேர்பைன் வகை | ஹொரைசென்டெல் 2 ஜெட் பெல்டென் |
| நீர்வலு | மழை நீரும் பனியும் நிறைந்த வற்றாத அருவி |
| PPA காலம் | 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து 30 ஆண்டுகள் |

மின் உற்பத்தி பொறித்தொகுதியின் வணிக செயற்பாடு 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11 ஆம் திகதி முதல் செயல்வலுப்பெறும் வகையில் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டிற்கு ஒற்றோபர் மாதம் 31 ஆம் திகதி வரை இந்த மின் உற்பத்தி பொறித்தொகுதியின் மின்சார விற்பனை 47.0 கிவொம அளவில் இருந்தது. COD இல் இருந்து அடைந்த மின் உற்பத்தி பொறித்தொகுதி காரணி 65வீத வீதமான இருந்தது.



### 3.10. 100 மெ.வொ. சியம்லாண்டுவ சூரிய சக்தி உற்பத்தி பேட்டை வசதி

விஷேட நோக்க வாகனத்திற்கான (SPV) ரிவிதனவி (தனியார்) நிறுவனம்சியம்பலாண்டுவ100 மெ.வொ.சூரிய சக்தி ∴போட்டோவோல்டாயிக் பூங்கா வசதியின் அபிவிருத்திற்காக தாபிக்கப்பட்டது. சுமார் 27 கிமீ பரந்து விரிந்துசெல்லும் 132மஏ மின்மாற்றி வசதி கணிசமான முன்னேற்றத்தை அடைந்துள்ளது. சியம்பலாண்டுவையிலும் அதனை சூழவுள்ள பகுதியிலும்220 ஹெக்டேயர் அளவான ஒரு காணியில் இந்த சூரிய சக்தி உற்பத்தி வசதி தாபிக்கப்படும்.

இந்த நிறுவனம் இலங்கை மின்சார சபையுடன் (இமிச) 2024 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம்08 ஆம் திகதி 20 ஆண்டுகள் காலத்திற்கு மின்சார கொள்வனவு ஒப்பந்தத்தை செய்துள்ளது. மின்சார செலுத்துகை வசதியின் அபிவிருத்திற்கான ஒப்பந்தமும்2024ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது. இலங்கை அரசாங்கத்துடன் நடைமுறைப்படுத்தல் ஒப்பந்தமும்2024 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 15 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது. இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபையுடனான (இநிசஅச) காணி குத்தகை ஒப்பந்தத்தை நிறைவேற்றும் விடயம்இன்னும் நிறைவு பெறவில்லை.இந்த நிலத்தை முதலில் அரசாங்க மானியம் மூலம் இநிசஅச சபைக்கு மாற்ற வேண்டும் என்ற விளக்கத்தில்அந்த விடயம் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.சூரிய சக்தி மின் உற்பத்தி பொறித்தொகுதி மற்றும் மின்சார செலுத்துகை வசதி ஆகிய இரண்டிற்குமான பூர்வாங்க பணிகள் நடைபெற்று வருகின்றன.மேலும் சூரிய சக்தி உற்பத்தி பூங்கா மற்றும் மின்சார செலுத்துகை வசதி ஆகிய இரண்டிற்குமானநிர்மாண பணிகளும் துல்லியமாகமேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கருத்திட்டத்திற்கான நிறுவனம் 2024 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆம் திகதிற்கு 1,100 ரூபா தொகையை செலவு செய்துள்ளது. ரிவிதனவியின் பங்குதாரர்களான லக்தனவி லிமிற்றட்டு

நிறுவனம் மற்றும் விண்ட்∴போர்ஸ் லிமிற்றட்டு நிறுவனம் ஆகியவற்றினால் சமமாக நிதியளிக்கப்பட்டது. இது இலங்கையின் முதலாவது பாரியளவான சூரிய சக்தி மின் உற்பத்தி கருத்திட்டமாகும்.மீளப்புதுப்பிக்க த்தகுசக்திற்கானநாட்டின் பரிவர்த்தனையில் குறிப்பிடத்தக்க மைல்கல்லைஇது குறித்துநிற்கின்றது. எதிர்காலத்தில் கரியமில அளவை குறைக்கும் முகமாக இலங்கைக்கு தூய்மையான, சுற்றாடல்நேய மிக உகந்த நிலைபெறுதகு சக்திற்கு பங்களிக்கின்றவாறு, இந்த கருத்திட்டத்தை உரிய காலத்தில் நிறைவு செய்ய நாம் முழுமையாக கடமைப்பட்டுள்ளோம்.

### 3.11. LNG உட்கட்டமைப்பு அபிவிருத்தியும் மின் உற்பத்திற்கான LNG விநியோகமும்

LNG உட்கட்டமைப்பு அபிவிருத்திற்கும் மற்றும் மின் உற்பத்திக்கான LNG விநியோகமும் தொடர்பான கூட்டு முன்மொழிவு 2024ஆம் ஆண்டுமே மாதம் 20 ஆம் திகதிமின்வலு சக்தி அமைச்சுக்கு LTL ஹோல்டிங்ஸ் லிமிற்றட்டு நிறுவனத்தினாலும்இந்திய அரசாங்கத்திற்கு பெருமளவு சொந்தமான பட்டியல்படுத்தப்பட்டுள்ள ஒரு பொது கம்பனியான பெட்ரோநெட் LNG லிமிற்றட்டு நிறுவனத்தினாலும் கூட்டாக சமர்ப்பிக்கப்பட்டது.

2024 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில்கூட்டு முன்மொழிவை தொடரும் பொருட்டுஅங்கீகாரம் வழங்கப்பட்டது. அதன்படி, இந்த முக்கியமான முன்னெடுப்பு தொடர்பில் கூட்டொத்துழைப்பு தேவைப்பாடுகளை பூர்த்தி செய்த பின்னர் LTL ஹோல்டிங்ஸ் லிமிற்றட்டு நிறுவனத்திற்கும் பெட்ரோநெட் LNG லிமிற்றட்டு நிறுவனத்திற்கும் (PLL) இடையில்இடையில் 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம்20 ஆம் திகதி ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் (புஒ) செய்து கொள்ளப்பட்டது.

இந்த கருத்திட்டம் LNG உட்கட்டமைப்பு வசதியைஅபிவிருத்தி செய்வதிலும் மற்றும் ISO கொள்கலன்களைப் பயன்படுத்தி இந்தியாவின் கொச்சியில் இருந்து நம்பகமான தடையற்ற LNG விநியோகத்தை உறுதிசெய்வதிலும் சம்பந்தப்படுகின்றது. தேவையான அனைத்து வகை அனுமதிகளையும் பெற்றதன் பின்னர்18 மாதங்களு க்குள் இந்த கருத்திட்டத்தை நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. சுமூகமான முன்னேற்றத்தை உறுதிசெய்யும் முகமாக PLL, அரசாங்க அதிகாரிகளுக்கும் மற்றும் ஏனைய பங்குதாரர்களுக்கும் இடையில் துல்லியமான ஒத்துழைப்புடன் பூர்வாங்க பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த முன்முயற்சி, இலங்கையின் சக்திப் பரிவர்த்தனையை ஆதரிப்பதில் அதன் பங்கை வலுப்படுத்தும், செலவு குறைந்த மற்றும் நிலையான சக்தி தீர்வுகளை வழங்குவதில் LTL கம்பனியின் அர்ப்பணிப்பை பிரதிபலிக்கின்றது. சஹஸ்தனவி (கெரவலப்பிட்டிய 3-வது கருத்திட்டம்) செயற்படுத்தப்பட்டவுன் மூன்று மின் உற்பத்தி நிலையங்களினதும் (யுகதனவி, சொபாதனவி மற்றும் சஹஸ்தனவி) LNG பயன்பாடு ஒரு ஆண்டில் இமிச சபைக்கு கணிசமான செலவு சேமிப்புகளை பெற்றுத்தரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால் கணிசமானளவு கட்டண குறைப்பின் மூலம் பாரியளவான நிவாரணம் பொது மக்களுக்கு கிடைக்கும்.

### 3.12. மின்மாற்றிகளின் உற்பத்தியும் சந்தைப்படுத்தலும்




(அங்குலான மின்மாற்றி பொறித்தொகுதிமின்சாரத்தை அனுப்பவுள்ள மின்மாற்றிகள்)




**Transformers awaiting dispatch**





(வசதியில் மின்மாற்றி உற்பத்தி கட்டங்கள்)

**வசதி நிலைகள்**

2024.01.01 ஆம் திகதி முதல் 2024.10.31 ஆம் திகதி வரை பதிவாகிய உற்பத்தி தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | 2024 (ஜனவரி முதல் ஒற்றோபர்) எண்ணிக்கை | 2023 (ஜனவரி முதல் ஒற்றோபர்) எண்ணிக்கை | வித்தியாசம் (+)/(-) |
|---|---|---|---|---|
| அ) | இமிச சபைக்கு / லெகோ நிறுவனத்திற்கு விநியோகித்த மின்மாற்றிகள் | 1,945 | 1,749 | (+)196 |
| ஆ) | ஏனைய உள்நாட்டு வாடிக்கையாளர் தரப்புகளுக்கு விநியோகித்த மின்மாற்றிகள் | 55 | 28 | (+) 27 |
| இ) | ஏனைய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படவுள்ள மின்மாற்றிகள் | 439 | - | (+)439 |
| மொத்தம் | | **2,439** | **1,777** | **(+)662** |

கிராமிய மின்மயமாக்கலின் விரிவாக்கத்தினாலும் அதிகரித்து வருகின்ற மின்சாரத்திற்கான கேள்வியினாலும்இமிச சபைக்கான மின்சார பகிர்ந்தளிப்பு மின்மாற்றிகளின் விநியோகம்196 எண்ணிக்கையினால் அதிகரித்துள்ளது.இது மீளாய்வு ஆண்டின் அதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது 11.21% வீத வளர்ச்சியை சுட்டிக்காட்டுகின்றது. இது தவிர, உள்நாட்டு வாடிக்கையாளர் தரப்புகளுக்கான மின்சார பகிர்ந்தளிப்பு மின்மாற்றிகளின் விநியோகம் கடந்த ஆண்டு இதே காலத்துடன் ஒப்பிடுகையில் 27 எண்ணிக்கையினால் அதிகரித்துள்ளது. மேலும், 439 எண்ணிக்கையான மின்மாற்றிகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.சர்வதேச போட்டி கேள்வி மனுவின் ஊடாக ஒரு விருது கிடைத்துள்ளது.

### 3.12.1. ருவண்டாவில் நடைபெற்ற 2024 ஆம் ஆண்டிற்கான ஆபிரிக்க சக்தி கண்காட்சி நிகழ்ச்சியில் பங்கேற்பு

LTL மின்மாற்றிகளையும் எமது தன்ஷ ானியா மின் உற்பத்தி பொறித்தொகுதியின் உற்பத்தி கொள்ளளவுகளையும் பிரதிபலித்து ருவண்டாவில் கிகாலி மாநாட்டு நிலையத்தில் நவம்பர் மாதம் 4ஆம் திகதி முதல் 6ஆம் திகதி வரை நடைபெற்ற 2024 ஆம் ஆண்டிற்கான ஆபிரிக்க சக்தி கண்காட்சியில் LTL இன் மின்மாற்றிகள் வலுவான தாக்கத்தை ஏற்படுத்தின. ஆபிரிக்கா முழுதிலும் உள்ள பல்வேறு வாடிக்கையாளர்களுடன் இணைந்து நாம் இதனை நடத்தினோம். ருவண்டாவின் மின்வலு சக்தி அமைச்சரை சந்தித்தமை முக்கிய ஒரு நிகழ்வாகும். இது சிறந்த மின்மாற்றிகளை விநியோகிப்பதில் எமது அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகின்றது.

### 3.12.2. 2025ஆம் ஆண்டிற்கு திட்டமிடப்பட்டுள்ள மேம்பாடுகள்

- **அழுத்த சோதனைக்கான ISO 17025 நோக்கெல்லை வியாபிப்பு**

அ) அழுத்த சோதனைக்கான ISO 17025 நோக்கெல்லை வியாபிப்பு

- **ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி (ஆ-அ)**

அ) மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி பிரயோகங்களுக்கு 6.8 MVA 800V அடர்த்தியான உப மின் நிலையத்தை உருவாக்குதல்

ஆ) இமிச இன் புதிய தகவுதிறன்களை பூர்த்தி செய்யும் முகமாக உள்நாட்டு வசதிக்கு ஒரே வரை மின்மாற்றிகளை அபிவிருத்தி செய்தல்

இ) ஐரோப்பிய சந்தைப் பிரிவுக்கு உலையெண்ணெய் மின்மாற்றிகளை அபிவிருத்தி செய்தல்

- **செயல்முறை மேம்பாடுகள்**

அ) சான்றுபடுத்துவதற்கான ISO 50001 முன்னெடுப்பு (சக்தி முகாமைத்துவ முறைமை)

ஆ) காபன் குறைப்புக்கு முக்கிய பிரிவுகளை இனங்காணும் பொருட்டு ஒரு ஆரம்ப தேறிய பூஜ்ஜிய வேலைச்சட்டகத்தை தயாரித்து அடிப்படை அளவுகோல்களை தாபித்தல்

- **மக்கள் மேம்பாடுகள்**

அ) மவ ஆவணங்களை டிஜிட்டல்மயப்படுத்துதல்

- **நிர்மாண கருத்திட்டங்கள்**

அ) PID அடுப்பு நிறுவுகை கருத்திட்டம்

ஆ) பாதுகாப்பு உத்தியோகத்தர்களினதும் சாரதிகளினதும் ஓய்வறைகள் கருத்திட்டம்

### 3.12.3. பணிக்கான பெரும் பணிநிலைய சான்றிதழ் - LTL ட்ரான்ஸ்போ/மர்ஸ் (தனியார்) நிறுவனம்

2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரையான காலப்பகுதிற்கு 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டிற்கும் LTL ட்ரான்ஸ்போ/மர்ஸ் (தனியார்) நிறுவனத்திற்கு பணிக்கான பெரும் பணிநிலைய சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. இந்த சான்றிதழ் LTLT நிறுவனத்தினது பணிக்குழுவின் அர்ப்பணிப்புக்கும் மற்றும் நம்பிக்கையும், மதிப்பும், சிறப்பும் வாய்ந்த ஒரு காலாச்சாரத்தை கட்டியெழுப்புவதில் கடுமையான உழைப்புக்கும் ஒரு நற்சான்றாகும்.

### 3.13. சப்புகஸ்கந்த முலாம்பூசி நிர்மாணிக்கும் பொறித்தொகுதி



**3.13.1. முலாம்பூசும் பொறித்தொகுதியின் உற்பத்தி பற்றிய விபரங்கள் – 2024.01.01 ஆம் திகதி முதல் 2024.10.31 ஆம் திகதி வரையான காலப்பகுதிற்கு பதிவாகியுள்ள உற்பத்தி விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.**

| முலாம்பூசும் பொறித்தொகுதியின் உற்பத்தி வெளியீடு | | |
|---|---|---|
| வாடிக்கையாளர் | 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஒற்றோபர் மாதம் வரை | 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஒற்றோபர் மாதம் வரை |
| இமிச | 1,557 | 2,177 |
| ஏற்றுமதி | | |
| உள்நாட்டு | 4,811 | 4,343 |
| மொத்தம் | **6,369** | **6,520** |

| நிர்மாணிக்கும் பொறித்தொகுதியின் உற்பத்தி வெளியீடு | | |
|---|---|---|
| வாடிக்கையாளர் | 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஒற்றோபர் மாதம் வரை | 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஒற்றோபர் மாதம் வரை |
| இமிச | 296 | 712 |
| ஏற்றுமதி | 93 | |
| உள்நாட்டு | 512 | 299 |
| மொத்தம் | **901** | **1,011** |

**3.13.2. அடைந்த சாதனைகள்**

- ஆறு MET மாஸ்ட் கோபுரங்களை வெற்றிகரமாக நிறைவு செய்வதை உள்ளடக்கிய ஆநுவு மாஸ்ட் கருத்திட்டத்திற்கு இலங்கையின் மிக உயரமான மனித வலுவினால் ஆதரவு அளிக்கப்பட்டது. இந்த கருத்திட்டம் இந்த காலப்பகுதியில்இமிச இற்கு ஒப்படைக்கப்பட்டது.

- 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 01 ஆம் திகதியுடன் நேரடி SAP செயற்படுத்தல் பணி வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டது.

- டுவுடு கால்வனைசர்கள் (தனியார்) நிறுவனம்இலங்கையில் கைத்தொழில்கள் அமைச்சும் மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி சபையும் இணைந்து ஏற்பாடு செய்து நடத்திய “2024 ஆம் ஆண்டிற்கான கைத்தொழில் கண்காட்சியில்” ஒரு வெள்ளி அனுசரணை தரப்பாக பங்குபற்றியது.

- IESL ஏற்பாடு நடத்திய “ரெக்னோ 2024” கண்காட்சியில் LTL கால்வனைசர்கள் (தனியார்) நிறுவனம்வெள்ளி ஆதரவாளராக பங்கேற்று நிகழ்வின் கருப்பொருளாக விளங்கிய “செழிப்புக்கான பாதையில்” இணைந்ததற்கான வெள்ளி விருதைப் பெற்றது.

- “உலோகங்களுக்கு துருப்பிடித்தல் எதிர்ப்பு பூச்சுக்கள் வடிவமைத்தல்” என்ற தலைப்பில் IESL எந்திரவியல் பொறியியல் சாசன நிறுவனம் ஏற்பாடு செய்து வெற்றிகரமாக நிறைவு செய்த ஒரு CPD நிகழ்ச்சித்திட்ட விரிவுரைக்கு சமூகமளிக்குமாறு LTL கால்வனைசர்கள் (தனியார்) நிறுவனத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

- ஆபிரிக்க பிராந்தியம் முழுதிலும் புதிய வணிக வாய்ப்புகளை கண்டுகொள்ள ஏப்ரல் மாதத்தில் கானாவுக்கும் சீஷெல்ஸ்ஸுக்கும் ஒரு விஜயம் ஏற்பாடு செய்யப்பட்டது.

**3.13.3. 2025ஆம் ஆண்டிற்கு திட்டமிடப்பட்டுள்ள மேம்பாடுகள்**

1. **ISO 50001:2018 சக்தி முகாமைத்துவ முறைமை செயற்படுத்துகை** - சக்தி வினைத்திறனை மேம்படுத்துவதிலும், சக்திற்கான செலவை குறைப்பதிலும், சர்வதேச சக்தி முகாமைத்துவ நியமங்களுடன் ஒருங்கிணைவதிலும் இலக்காகக்கொண்டு ISO 50001:2018 சான்றிதழ் திட்டத்தை

செயற்படுத்துவதற்கான கட்டமைந்த ஒரு திட்டம் நிறைவேற்றப்படும்.

2. **காபன் பூஜ்ஜிய கருத்திட்டத்தை முன்னெடுத்தல் –** எமது காபன் தடத்தை குறைப்பதிலும் மற்றும் செயற்பாடுகளில் காபன் நடுநிலையை அடைவதை நோக்கி முன்னேறுவதிலும் ஒருமுகப்படுகின்ற சர்வதேச நிலைபெறுதகு இலக்குகள் நிரலுக்கு இணங்க இந்தக் கருத் திட்டம் ஆரம்பிக்கப்படும்.

3. **அங்கீகாரம் பெற்ற ஒரு ஆய்வுகூடத்தை தாபித்தல்**
தரக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கும் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றின் நிமித்தம் உதவுவதற்கும் அங்கீகரிக்கப்பட்டுள்ள நியமங்களை அனுசரிக்கும் நம்பத்தகுந்த சோதனை சேவைகளை வழங்குவதற்கும் அங்கீகாரம் பெற்ற ஆய்வுகூடத்தை அமைப்பதற்கான திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன.

### 3.14. இந்திய, புதுதில்லி ஆசியாட்டிக் இலெக்ட்ரிகெல் என்ட் ஸ்விட்–ஜியர் தனியார் நிறுவனம்

#### 3.14.1. முக்கிய செயலாற்றுகை குறிப்புகளும் திறமுறைத்திட்டங்களும்



LTL ஹோல்டிங்ஸ் லிமிற்றட்டு நிறுவனத்திற்கு முற்றிலும் சொந்தமான துணை நிறுவனமாக விளங்கும்ஆசியாட்டிக் இலெக்ட்ரிகெல் என்ட் ஸ்விட்-ஜியர் தனியார் நிறுவனம்இந்த அறிக்கையிடும் காலத்தில் நிலையான வளர்ச்சியை வெளிப்படுத்தியுள்ளது. உறுதியான நிதி நிலையுடன், 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 2024ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம்வரை பாராட்டத்தக்க INR 1211.73 மில்லியன் விற்பனை வருமானத்தை (ஏற்றுமதி: INR 634.35 மில்லியன்- உள்ளூர்: INR 577.38 மில்லியன்) ஆசியாட்டிக் நிறுவனம்அடைந்தது. இந்த நிறுவனம் நிலையான செயலாற்றுகையை வெளிப்படுத்தும் வகையில், நிலையான செயலாற்றுகையை வெளிப்படுத்திவரிக்கு முன்னர்தேறியஇலாபத்தையும் (NPBT) பேணியுள்ளது. குறிப்பிடத்தக்க வகையில், 2023/24 நிதியாண்டில், ஆசியாட்டிக் நிறுவனம் இதுவரை இல்லாத அளவுக்கு INR 1.236 பில்லியன் (அண்ணளவான14.5 மில்லியன் USD) வருமானத்தை பதிவு செய்துள்ளது.இது வரலாற்றில் ஒரு மைல்கல்லாகும்.

#### 3.14.2. வாடிக்கையாளர் திருப்தியின் ஊடாக வெற்றியை அணுகுதல்

வாடிக்கையாளரின் திருப்தி ஆசியாவின் வணிகத் தத்துவத்தின் இன்றியமையாத ஒன்றாக காணப்படுகின்றது. நிறுவனத்தின் வெற்றி அதன் குழுப்பணியினாலும், அர்ப்பணிப்பினாலும் வாடிக்கையாளர் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் சிறந்து விளங்குவதற்கான இடைவிடாத நாட்டத்தினாலும் உருவாகின்றது. இந்த ஆசியாட்டிக் நிறுவனம் உலகளாவிய தடயத்தை நிலைநாட்டியுள்ளது. உலகெங்கிலும் உள்ள முன்னணி நிறுவனங்களிலிருந்து மதிப்பையும் பெறுகின்றது. இதில் பின்வருவன அடங்கும்:

- **மத்திய கிழக்கு:** DEWA (டுபாய்), AADC/ADEWA (அபூ தாபி), MEW (ஓமான் மற்றும் குவைட்டு), EWA (பஹ்ரான்), கஹ்ரமா (கட்டார்)
- **ஆபிரிக்கா:** எஸ்கொம் (தென் ஆபிரிக்கா), KPLC (கென்யா), EEU (எதியோப்பியா)
- **ஆசியா மற்றும் ஐரோப்பா:** EAC (சைப்ரஸ்), இமிச (இலங்கை)

இந்த நிறுவனம் ஐஇ, உகண்டா, கானா, நேபாளம், பங்காளதேஷம் போன்ற

நாடுகளுக்கும்மற்றும் ஏனைய நாடுகளுக்கும் தனது உற்பத்திகளை ஏற்றுமதி செய்கின்றது. ஆசியாட்டிக் நிறுவனம் ஏனையவற்றுக்கு மத்தியில் JVVNL (ஜெய்ப்பூர்), AVVNL (அஜ்மீர்), JdVVNL (ஜோத்பூர்), BEST (மும்பை), BSES (தில்லி), TPDDL (தில்லி), MPPVVC (மத்திய பிரதேசம்) BESCOM (பங்களூர்), KSEB (கேரலா) அடங்கலாக இந்தியாவின் எல்லா பிரதானமின்சார பகிர்ந்தளிப்பு நிறுவனங்களுக்கும் தனது தயாரிப்புகளை விநியோகிக்கின்றது. மேலும்,இது உள்நாட்டு ஒப்பந்த தரப்புகளுக்கும் மற்றும் நேரடி வாடிக்கையாளர்களுக்கும் நடுத்தர மின்னழுத்த (MV) மின் பலகைகளைவிநியோகித்து அரசாங்க கருத்திட்டங்களுக்கும் மற்றும் தனியார் கருத்திட்டங்களுக்கும் உதவுகின்றது.

### 3.14.3. விஷேட சாதனைகள்

முதன்முறையாக, மீளப்புதுப்பிக்கத்தகு சக்தியில் தனது முகாமைத்துவத்தில் கவனம் செலுத்தி, ஆசியாட்டிக் நிறுவனம் ராஜஸ்தானில் இரண்டு சூரிய சக்தி மின் உற்பத்தி கருத் திட்டங்களுக்கு ஒப்பந்த வழங்கல் கடிதத்தை (LOA) பெற்றுள்ளது. 25 ஆண்டுகளுக்குப் பராமரிக்கப்படும் 8 மெ.வொ. சக்தி உற்பத்தி கொள்திறனுடைய சூரிய மின் பொறித் தொகுதிகளின் முழுமையான வடிவமைப்பும், விநியோகமும், நிறுவுகையும் மற்றும் உத்தியோகபூர்வமாக திறந்துவைத்தலும் இந்தக் கருத்திட்டங்களில் உள்ளடங்கும். மின்சார கொள்வனவு ஒப்பந்தம் (PPA) **2024ஆம் ஆண்டு** திசம்பர் மாதத்திற்குள் நிறைவு செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. **2025 ஆம் ஆண்டு ஜூன்** மாதத்தில்கருத்திட்டப்பணிகள் நிறைவு செய்யப்படும்.

இந்த மைல்கல் முன்னெடுப்புத் திட்டம்சூரிய சக்தி மின் உற்பத்தித் துறையில் ஆசியாட்டிக் நிறுவனத்தின் பிரவேசத்தை குறிக்கின்றது. இந்த கன்னிக் கருத்திட்டத்தின் மூலம்நிறுவனம் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தித்துறையில் ஒரு முக்கியப் பங்காளராக தன்னை நிலைநிறுத்திக் கொள்ளத் தயாராக உள்ளது. காலப்போக்கில் அதன் நிலையானகொள்திறனை அதிகரிக்கும் இலட்சியத்திற்கும் இந்தக் கருத்திட்டங்கள் உதவியாக அமையும்.

### 3.14.4. 2025ஆம் ஆண்டிற்கு முன்மொழியப்பட்டுள்ள திட்டங்கள்

ஆசியாட்டிக் நிறுவனம் பின்வரும் முன்முயற்சிகள் மூலம் விரிவுபடுத்தவும் புதுமைப்படுத்தவும் தயாராகி வருகின்றது.

**அ) உற்பத்தி இலாக்கா விஸ்தரிப்பு**

இந்த நிறுவனம் பின்வரும் உற்பத்திகளை அபிவிருத்தி செய்வதற்கும் வகை சோதனை நடத்துவதற்கும் திட்டமிட்டு வருகின்றது.

- 33 kV VCB கியோஸ்க்ஸ்
- 11 kV நிலத்தில் நிறுத்திவைக்கக்கூடிய ப்ரேக்கர்கள்
- திறந்த வகை LV பகிர்ந்தளிப்பு பலகைகள்

**ஆ) இந்தியாவில் சந்தைப் பிரவேசம்**

முக்கிய மாநிலங்களில் ஒரு வலுவான வணிக வலையமைப்பை மூலோபாய ரீதியாக நிறுவுவதன் மூலம் உள்நாட்டு சந்தையில் அதன் பிரவேசத்தை ஆழப்படுத்துவதற்கு ஆசியாட்டிக் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இந்த முன்னெடுப்பு பிராந்திய விற்பனை முகாமையாளர்களையும் பொறியியலாளர்களையும் நியமிப்பதன் ஊடாகமுழுமை அடையும்.வளர்ச்சியை உந்தச்செய்வதும் வருமானத்தை கணிசமாக அதிகரிப்பதும் இதன் நோக்கமாகும்.

**இ) கார்ப்பரேட் பிராண்டிங்**

SEO, சமூக ஊடக ஈடுபாடுமற்றும்தேசிய/ சர்வதேச கண்காட்சிகளில் பங்கேற்றல் ஆகியவற்றின் ஊடாக பிராண்ட் பிரதிபலிப்பை மேம்படுத்துதல்.

**ஈ) கொள்திறன் விஸ்தரிப்பு**

- தொழிற்சாலையிலுள்ள வெற்று நிலத்தில் மேலதிக நில வசதியை ஏற்படுத்துதல்.
- கொள்திறனை அதிகரிப்பதற்கு புதிய

தொழிற்சாலைகளை குத்தகைக்கு விடுதல்.

- தற்போதுள்ள நில இடவசதியை அனுகூலப்படுத்துதல்.
- உற்பத்தியை அதிகரிப்பதற்கு ஒன்கூடும் நிரல் எண்ணக்கருக்களையும் எடுத்துச்செல் ஒழுங்கையும் செயற்படுத்துதல்.

**உ) சர்வதேச சந்தை விஸ்தரிப்பு**

சர்வதேச வணிகத்தை வலுப்படுத்த **ஆப்பிரிக்க/ஆசிய** சந்தைகளில் கிடைக்கக்கூடிய வாய்ப்புகளை மேலும் ஆராய்தல்.

புத்தாக்கம், வாடிக்கையாளர்கள் மைய செயன்முறைகள், நிலையான வளர்ச்சியில் தெளிவான கவனம் செலுத்துதல் என்பவற்றின் மூலம் மின்சார மற்றும் சுவிட்ஜியர் துறையில் ஆசியாட்டிக் இலெகட்ரிகெல் என்ட் சுவிட்ஜியர் நிறுவனம் தன்னை தொடர்ந்தும் முன்னிலைப்படுத்தி வருகின்றது.

**4. கூட்டிணைந்த சமூகப் பொறுப்புக்களின் கீழுள்ள செயலாற்றுகை**

- மின்னியல்,எந்திரவியல், சிவில் மற்றும் முகாமைத்துவ கணக்காளர்கள் உள்ளடங்கலாக பொறியியல் துறைகளில் பல்கலைக்கழக பட்டதாரிகளுக்கு வேலை சார்ந்த கைத்தொழில் பயிற்சி வசதிகள் வழங்கப்படுகின்றன. தற்போது 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஒற்றோபர் மாதம் வரை 72 பட்டதாரி மாணவர்களுக்கு தேவையான பயிற்சி வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்த பயிற்சியாளர்களுக்கு கிடைக்கும் இடங்களைப் பொறுத்து வேலை வாய்ப்புகள் கருத்திற் கொள்ளப்படுகின்றன.
- நாட்டின் தூரப் பகுதிகளில் அமைந்துள்ள பௌத்த விகாரைகளுக்கு மின்னொளி வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. பல்கலைக்கழகங்களுக்கும் மற்றும் சமூக நலன்புரி சங்கங்களுக்கும் நன்கொடைகள் வழங்கப்பட்டுள்ளன. சமூகப் பொறுப்புணர்வுக்கு தன்னார்வ சேவைகளை வழங்குவதன் மூலம் நிறுவனம் தனது நல்லெண்ணத்தை தொடர்ந்து விரிவுபடுத்தி பகிர்ந்து கொள்கின்றது.
- வணக்கத்திற்குரிய அட்டமஸ்தானாதிபதி பள்ளேகம ஹேமரத்ன நாயக்க தேரர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க LTL ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் துணை நிறுவனமான லக்தனவி லிமிற்றட்டு நிறுவனம், சக்தி சேமிப்பு மற்றும் தேசத்தின் பசுமை எண்ணக்கரு ஆகியவற்றின் நிமித்தம் சமூகப் பொறுப்பின் செயலாக அனுராதபுரம் ஜெய ஸ்ரீ மஹா போதி விகாரைக்குஒரு 130 kW (AC) சூரிய சக்தி PV மின் உற்பத்தி முறைமையை வழங்குவதற்கும் நிறுவுவதற்கும் அனுசரணை வழங்கியது.
- இந்த நிறுவனம், தனது துணை நிறுவனமான லக்தனவி லிமிற்றட்டு கம்பனி மூலம், ஜனாதிபதி செயலகத்தின் வழிகாட்டலில் ஏற்பாடு செய்த கொண்டாட்டத்திற்கு, 2024 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை கங்காராமயா கோவிலில் நடைபெற்ற "2024 புத்த ரஷ்மி தேசிய வெசாக் விழா 2024"விழாவுக்கு பங்களித்துள்ளது.
- பார்முலா பாரத் 2024 பந்தயப் போட்டியான "**Team FalconE**" என்ற போட்டிற்கு தங்க அனுசரணையை நிறுவனம்மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் இயந்திர பொறியியல் பீடத்தின் இளம் பொறியியலாளர்கள் குழுவின் சார்பாக வழங்கியுள்ளது. இந்தியாவின் கோயம்புத்தூர் நகரத்தில் நடைபெற்ற போட்டியில் இளம் பொறியாளர்கள்

குழு 39 போட்டியாளர்களில் 10-வது இடத்தைப் பெற்றுள்ளது.

- LTL ஹோல்டிங்ஸ் நிறுவனம் 1990 சுவ செறிய மன்றத்திற்கு (ஒரு இலாப நோக்கற்ற நிறுவனம்) சமூகப் பொறுப்புணர்வு செயலாக ”ஒரு பிணிவண்டி” நிகழ்ச்சித்திட்டத்திற்கு 15 மில்லியன் ரூபா நிதியை நன்கொடையாக வழங்கியது. சுவ செறிய என்பது இலங்கையில் ஒரு இலவச அவசர பிணிவண்டி சேவையாகும். நன்கொடையாக வழங்கப்படும் நிதி எதிமலைமன்னார் மற்றும் சேருநுவர ஆகிய இடங்களில் அமைந்துள்ள நோயாளர் காவு வண்டிகளின் பராமரிப்பு, மருத்துவ உபகரண பராமரிப்பு, பணியாளர்களுக்கு புத்துணர்வு பயிற்சி மற்றும் பணியாளர் சீருடைகள் போன்றவற்றுக்கு பயன்படுத்தப்படும். LTLH அந்தந்த பகுதிகளில் இத்தகைய சேவையின் முக்கியத்துவத்தையும் தேவையையும் உணர்ந்து இந்த இடங்களை இனங்கண்டுள்ளது.

- **ஆவரகொட்டுவ, வல்லட்டாவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருந்த மக்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன.2024** ஆம் ஆண்டு ஜுன் மாதம் 01 ஆம் திகதி லக்தனவி லிமிற்றட்டு நிறுவனம் அத்தியாவசிய மருந்துகளை கொடுத்து வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருந்த ஆவரகொட்டுவமக்களுக்கு தனது ஆதரவை வழங்கியது. சமூகப் பொறுப்பு மற்றும் சமூக நலன் ஆகியவற்றின் நிமித்தம்எமது தொடர்ச்சியான அர்ப்பணிப்புக்கு இந்த முயற்சி ஒரு சான்றாகும். இந்த முக்கிய பொருட்களை வழங்கி, வெள்ளத்திற்குபின்னர் அந்தப் பகுதிகளில் குடியிருக்கும் மக்கள் எதிர்கொள்ளும் சிரமங்களை போக்குவதை நாம் எமது நோக்கமாகக் கொண்டுள்ளோம்.
- **தொற்றாத நோய் (NCD) மருத்துவ முகாமை நடாத்தப்பட்டது** – லக்தனவி லிமிற்றட்டு நிறுவனம் 2024 ஆம் ஆண்டுஏப்ரல் மாதம் 06 ஆம் மற்றும் 07 ஆம் திகதிகளில் வத்தளை விருதுகொட்டுவையில் தொற்றாத நோய்களுக்கான (NCD) மருத்துவ முகாமை நடத்தியது. மேலும் அந்தப் பகுதியில் வசிக்கும் 200 எண்ணிக்கைக்கும் அதிகமான மக்கள் அவர்களுக்கு தேவையான சிகிச்சைகளை பெற்றனர். கொலஸ்ட்ரால், சர்க்கரை அளவுகள் மற்றும் ஏனைய பிற NCD ஆகியவற்றின் நிமித்தம் சுகாதார சோதனைகள் தொடர்பான அளவுருக்களும்அத்தியாவசிய மருத்துவ வழிகாட்டல்களும் மேற்குறித்த சிகிச்சைகளில் உள்ளடங்கியிருந்தன.




## 5. நிறுவனத்தின் ஒட்டுமொத்த நிதி நிலை

**2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் முதல் ஒற்றோபர் மாதம் வரையிலான முக்கிய நிதி குறிப்புகள் அடங்கலாக நிதியாண்டில் LTL ஹோல்டிங்ஸ் க்ரூப் ஒ/ப கம்பனீஸ் நிறுவனத்தின் செயலாற்றுகை**

2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஒற்றோபர் மாதம் வரையில் ஈட்டிய மொத்த இலாபம்கடந்த ஆண்டு இதே நாள் காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது6மூவீதம் அதிகரித்துள்ளது. வீழ்ச்சியடைந்த அந்நிய செலாவணி நிலைமையும் இலங்கை மத்திய வங்கியின் இறக்குமதிகள் மீதான கட்டுப்பாடுகளும் ஓரளவு தளர்த்தப்பட்டுள்ளன.இந்த நிலைமை இந்த நிறுவனத்தின்செயலாற்றுகையை

மேம்படுத்துவதற்கு கணிசமான அளவிற்கு இறக்குமதியை எளிதாக்கியது.

முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது நிறுவனத்தின் முக்கிய செயற்பாடுகளில் நிதி செயலாற்றுகை தொடர்பான விபரங்கள் சுருக்கமாக கீழே தரப்பட்டுள்ளன:-

### 6. 2025ஆம் ஆண்டிற்கான நிகழ்ச்சித்திட்டங்களும் கருத்திட்டங்களும்

**(அ) மின் உற்பத்தி பொறித்தொகுதி கருத்திட்டங்களின் அபிவிருத்தி – கெரவலபிட்டிய300மெ.வொ. ஒன்றிணைந்த சுழற்சி மின் உற்பத்தி பொறித்தொகுதி RLNG - II**

அட்டவணை 9.1
பாரிய செயற்பாடுகளின் நிதியியல் முன்னேற்றங்கள்

| காலம் | 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01ஆம் திகதி முதல் 2024 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆம் திகதி வரை கலெண்டர் ஆண்டு | 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 2023 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் வரை கலெண்டர் ஆண்டு | 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் திசம்பர் மாதம் வரை |
|---|---|---|---|
| புறழ்வு | (மில்லியன் ரூ.) | (மில்லியன் ரூ.) | (மில்லியன் ரூ.) |
| உற்பத்தி, நானாவித சேவைகள் | 12,048. | 13,906. | 8,480. |
| மின் உற்பத்திகள் | 38,396. | 42,717. | 48,206. |
| மொத்தம் | **50,444.** | **56,623.** | **56,686.** |
| முழு இலாபம் | | | |
| உற்பத்தி, நானாவித சேவைகள் | 9,869. | 4,678. | 2,536. |
| மின் உற்பத்திகள் | 3,277. | 14,552. | 13,521. |
| மொத்தம் | **13,146.** | **19,230.** | **16,057.** |

**பங்குலாபம் – 2023/24**

நிறுவனத்திற்குதனது முதலீடுகளின் மூலம் பங்குலாப வருமானம் கிடைத்தது. மீளாய்வு ஆண்டு காலப்பகுதியில் நிறுவனம் தேவையான அதிக நிதியை ஈட்டியது. கீழ்காணும் அட்டவணையில் தரப்பட்டுள்ள விவரங்களின்படி 877,999,997.00 ரூபா தொகையாக இருந்தது.

| டுவுடுஹோல்டிஹ்ஸ் க்ரூப் நிறுவனம் சம்பாதித்த பங்குலாப வருமானம் பற்றிய விபரம் | |
|---|---|
| கம்பனிகளின் பெயர்கள் | தொகை – இரு |
| LTL கல்வர்னைஷெர்ஸ் (தனியார்) நிறுவனம் | 500,000,000.00. |
| LTL ட்ரான்ஸ்போ.ஃமெர்ஸ் (தனியார்) நிறுவனம் | 300,000,000.00. |
| நிவிந்து (தனியார்) நிறுவனம் | 77,999,997.00. |
| மொத்தம் | **877,999,997.00.** |

மேற்குறித்த மின் உற்பத்தி பொறித்தொகுதி பற்றிய சுருக்கமான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

கேள்வி விலை மனுவை இமிசகோரிய திகதி: 2021 ஜுன் 21

220 மெ.வொ. திறந்த சுழற்சி பொறித்தொகுதி தொடர்பாக திட்டமிடப்பட்டுள்ள COP திகதி: 2026 ஆம் ஆண்டில்

350மெ.வொ. திறந்த மற்றும் மூடிய சுழற்சி பொறித்தொகுதி தொடர்பான திட்டமிடப் பட்டுள்ள COP திகதி: 2027ஆம் ஆண்டில்

சுற்றாடல், பொறியியல், நிதி மற்றும் ஏனைய பிற பூர்வாங்க கருத்திட்ட அபிவிருத்தி செயற்பாடுகளை தொடரும் பொருட்டு, கருத்திட்ட ஒப்பந்தங்களை நிறைவேற்றும் நோக்கத்திற்கான கடிதத்தை

(LOI) லக்தனவி நிறுவனத்திற்கு இமிச வழங்கியுள்ளர். இந்த நிறுவனம் மின்சார கொள்வனவு ஒப்பந்தம் (PPA) தொடர்பாக இமிச உடன் விரிவான பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றது.

**(ஆ)புதிய பங்குகளை விநியோகிப்பதன் மூலம் – பங்குகளின் ஆரம்ப பொது கொடைமுனைவு (IPO) LTL ஹோல்டிங்ஸ் லிமிற்றட்டு நிறுவனத்தின் உரித்துடமைய மறுசீரமைத்தல்**

2022ஆம் ஆண்டு திசம்பர் மாதத்தில் அமைச்சரவை எடுத்த தீர்மானத்திற்கு இணங்க, LTLஹோல்டிங்ஸ் லிமிற்றட்டு நிறுவனத்தின் உரித்துடமையை மறுசீரமைக்கும் விடயம் விரைவில் செயற்படுத்தப்படவுள்ளது.

LTL ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர்கள் சபை, LTL நிர்வாகம் முன்வைத்துள்ள பரிந்துரையின் பேரில், குறிப்பாக கெரவலப்பிட்டிய 300 மெ.வொ. LNG 2 ஒருங்கிணைந்த சுழற்சி மின் உற்பத்தி பொறித்தொகுதி மற்றும் சியம்பலாண்டுவ 100 மெ.வொ. PV சூரிய சக்தி மின் உற்பத்தி பேட்டை ஆகிய தனது புதிய கருத்திட்டங்களுக்கு தேவையான நிதிகளை திரட்டும் நிமித்தம் ரூ. 5.5 மில்லியன் மேலதிக பங்குகளை பங்கு சந்தைக்கு விநியோகித்தது. இந்த கருத்திட்டங்களுடன் தொடர்பானபூர்வாங்க பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

LTL ஹோல்டிங்ஸ் லிமிற்றட்டு நிறுவனம்ஒழுங்குறுத்தும் அங்கீகாரங்களை பெற்று, 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாத்ததில் ஊளுநு இற்கு பட்டியலப்படுத்துகின்ற ஒரு விண்ணப்பத்தை சமர்ப்பித்த போதிலும், சட்டப்பூர்வ தெளிவுபடுத்தல் நிமித்தம் 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இறுதியில்உயர் நீதிமன்றத்திற்கு குறிப்பீடுசெய்யப்பட்டுஅதன் பின்னர் தள்ளுபடி செய்யப்பட்டது. இதனால்IPO செயல்முறை தாமதமாகியது. இந்த செயல்முறையை தொடர்வதற்கு CSE மற்றும் மின்வலு சக்தி அமைச்சு ஆகியவற்றிலிருந்து இப்போது அங்கீகாரம் எதிர்பார்க்கப்படுகின்றது. கவர்ச்சிகரமான சந்தாதாரர்களைக் கண்டறிந்த பின்னர் உத்தியோகபூர்வ வெளியீடு திறக்கப்படும் நேரத்தில் மிகை சந்தா இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**(இ) ஆபிரிக்காவிலுள்ள மின்மாற்றி உற்பத்தி வசதியை விஸ்தரித்தல்**

“LTL தன்ஷானியா ட்ரான்ஸ்போ.ஃமெர்ஸ் (தனியார்) நிறுவனமான” தன்ஷானியாவில் தாமிரத்தை சுத்திகரிக்கும் ஒரு நிறுவனத்தின் ஒத்துழைடப்புடன் ஒரு புதிய நிறுவனம் கூட்டிணைக்கப்பட்டதையடுத்து நிறுவனம் தனது முற்போக்கான திறமுறைத்திட்டத்தில் ஒரு மைல்கல்லை அடைந்துள்ளது. 2025 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் செயற்பாடுகளை ஆரம்பிக்கும் வகையில் இயந்திராதிகளையும் உபகரணங்களையும் நிறுவ ஏற்கனவே பொறியியல் தொழில்நுட்ப ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

LTL ஹோல்டிங்ஸ் நிறுவனம் இது வரை பெற்றுள்ள அனுபவம், கிழக்கு ஆபிரிக்க பிராந்தியத்தில் கேள்வி விலை மனுக்களுக்கான வலுவான மற்றும் வழக்கமான வெற்றிகரமான கேள்வி விலை மனு தாரர் இருப்பதால்ஆப்பிரிக்காவில் தனது நிலையை நிலைநிறுத்துவதற்கான வழிகளைத் திறக்கும் என நம்புகின்றது. எனவே, நிறுவனம், உயர்மட்டப் போட்டியில் பிரவேசித்து, கேள்வி விலை மனுக்களை வென்றெடுப்பதற்கு வாய்ப்புகளை பயன்படுத்த ஒரு திடமான விலை நிர்ணய மூலோபாயத்தை கொண்டுவர உத்தேசித்துள்ளது.இதன் நிமித்தம் குறைந்த விலையில் மின்மாற்றிகளை உற்பத்தி செய்வது அவசியமாகும்.

# அத்தியாயம் 10

# இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

## 1 அறிமுகம்

1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானம் (CPC) பெற்றோலியப் பொருட்களை இறக்குமதி செய்தல், ஏற்றுமதி செய்தல், சுத்திகரித்தல், வழங்கல், விநியோகித்தல் மற்றும் விற்பனை செய்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதோடு இதற்கான சட்ட ஏற்பாடுகளையும் வழங்குகின்றது.

## 2. 2024 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் முன்னேற்றங்கள்

நாட்டிற்குத் தேவையான பெற்றோலியப் பொருட்களின் தேவையில் அதிக சதவீதத்தை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இறக்குமதி செய்து விநியேக்கிக்கின்றது. இதன் கீழ் சுத்திகரிக்கப்பட்ட பொருட்களின் இறக்குமதிகள் அதிக பங்குவகிக்கின்றது. மேலும், சப்புகஸ்கநதை சுத்திகரிப்பு நிலையத்தில் இறக்குமதி செய்யப்படும் மசகு எண்ணெயைச் சுத்திகரிப்பதன் மூலம் உள்நாட்டில் எரிபொருள் உற்பத்தி செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இதற்கிணங்க, 2024 ஆம் ஆண்டிற்கான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளின் முன்னேற்றங்கள் இவ் அத்தியாயத்தில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

### 2.1 இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பெற்றோலிய் பொருட்களின் இறக்குமதிகள்

நாட்டின் பெற்றோலிய பொருட்களின் பிரதான உள்நாட்டு இறக்குமதியாளர் என்ற வகையில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நாட்டின் மொத்தக் கேள்வியில் 68% மான பெற்றோலியப் பொருட்களை இறக்குமதி செய்து விநியோக்கிக்கின்றது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தனியுரிமையாளர் என்ற வகையில் 1969 ஆம் ஆண்டிலிருந்து பெற்றோலியப் பொருட்களை இறக்குமதி செய்தல், சுத்திகரித்தல் மற்றும் மசகு எண்ணெயை வழங்கல் செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதோடு மொத்த உள்நாட்டு பெற்றோலியக் கேள்வியில் 32மூ தத்தை சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரித்து வழங்குகின்றது. இதற்கிணங்க, 2021.01.01 ஆம் திகதி முதல் 2024.12.31 ஆம் திகதி வரை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் இறக்குமதி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்களின் விபரங்கள் கீழே அட்டவணையில் விரிவாக தரப்பட்டுள்ளது.

அட்டவணை 10.1

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் இறக்குமதி செய்யப்பட்ட பெற்றோலியப் பொருட்கள் (2021–2024)

| உற்பத்தி வகை | தொகை (மெ.தொ) ('000) | | | |
|---|---|---|---|---|
| | 2021 | 2022 | 2023 | 2024 |
| 1. சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிப் பொருட்களின் இறக்குமதிகள் | | | | |
| • ஓட்டோ டீசல் | 1,254 | 1,267 | 695 | 547 |
| • சுப்பர் டீசல் | 68 | 128 | 24 | 27 |
| • பெற்றோல் 92 ஒக்டேன் | 893 | 888 | 794 | 586 |
| • பெற்றோல் 95 ஒக்டேன் | 103 | 46 | 28 | 20 |
| • ஜெட் A-1 | 178 | 269 | 168 | 316 |
| • குறை சல்பர் உலை எண்ணெய் (180 CST) | 245 | 124 | 124 | 35 |
| • உயர் சல்பர் உலை எண்ணெய் (180 CST) | 31 | - | - | - |
| • நெப்தா | - | - | 16 | - |
| **மொத்தம்** | **2,772** | **2,723** | **1,849** | **1,531** |
| 2. மசகு எண்ணெய் இறக்குமதி | | | | |
| • மசகு எண்ணெய் | 1,130 | 743 | 1,666 | 1,519 |
| **மொத்த இறக்குமதி** | **3,902** | **3,466** | **3,515** | **3,050** |

மூலம்: இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

ஆண்டு முதல் 2024 டிசம்பர் 31 ஆம் தேதி வரை மற்றும் 2021 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் இறக்குமதி செய்யப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்களின் தொகை முறையே 2,772.000 மெற்றிக் தொன், 2,723,000 மெற்றிக் தொன், 1,849,000 மெற்றிக் தொன் ஆகும். மேலும் 2024 ஆம் ஆண்டில் 1,531,000மெற்றிக் தொன் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டன.

மேலும், கடந்த வருடத்தில் இறக்குமதி செய்யப்பட்ட மசகு எண்ணெய்யோடு ஒப்பிடுமிடத்து, 2021 ஆம் ஆண்டில் 1,130,000 மெற்றிக் தொன், 2022 ஆம் ஆண்டில் 743,000 மெற்றிக் தொன், 2023 ஆம் ஆண்டில் 1,666,000 மெற்றிக் தொன் மற்றும் 2024 ஆம் ஆண்டில் 1,519,000 மெற்றிக் தொன்னும் இறக்குமதி செய்யப்பட்டன.

## 2.2 சப்புகஸ்கந்தை சுத்திகரிப்பு நிலையத்தின் பங்களிப்புக்கள்

சப்புகஸ்கந்தை சுத்திகரிப்பு நிலையத்தின் நாளொன்றுக்கான சுத்திகரிப்புத் திறன் 5,300 மெற்றிக் தொன் ஆவவேதோடு, ஆண்டுக்கு அதிகபட்சமாக 1,934,500 மெற்றிக் தொன் சுத்திகரிப்பு திறனையும் கொண்டுள்ளது. 2024 ஆம் ஆண்டில் 1,528,719 மெற்றிக் தொன மசகு எண்ணெய் சுத்திகரிக்கப்பட்டுள்ளதுடன், இது அதிகபட்ச சுத்திகரிப்பு திறனில் 79% ஆகும்.

சுத்திகரிப்பு நிலையம் 08 பெற்றோலியப் பொருட்களை உள்ளடக்கியதாக மொத்தம் 1,445,529 மெற்றிக் தொன் பெற்றோலியப் பொருட்களை உற்பத்தி செய்துள்ளதுடன் இது மொத்த உள்நாட்டு வழங்கலில் கிட்டத்தட்ட 49% ஆகும். சுத்திகரிப்பு நிலையத்தால் உற்பத்தி செய்யப்பட்ட பெற்றோலியப் பொருட்களில் ஓடோ டீசல்,உலை எண்ணெய், ஜெட் A-1, பெற்றோல் 92

ஒக்டேன் மற்றும் மண்ணெண்ணெய் என்பன பிரதான பெற்றோலியப் பொருட்கள் ஆகும். சப்புகஸ்கந்தை சுத்திகரிப்பு நிலையத்தால் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்களின் விபரங்கள் கீழே உள்ள அட்டவணையில் விரிவாக தரப்பட்டுள்ளது.

**வரைபு 10.1**

**இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் இறக்குமதி செய்யப்பட்ட சுத்திகரித்த பெற்றோலியப் பொருட்கள் (2021–2024)**




**அட்டவணை 10.2**

**சுத்திகரிப்பு நிலையத்தின் எரிபொருள் உற்பத்திகள் (மெற்றிக் தொன்)**

**(2021–2024)**

| ஆண்டு | 2021 | 2022 | 2023 | 2024 |
|---|---|---|---|---|
| **மசகு எண்ணெய் உள்ளீடு** | **1,272,207** | **529,773** | **1,677,033** | **1,528,719** |
| **உற்பத்திகள்** | | | | |
| • பெற்றோல் 92 ஒக்டேன் | 124,092 | 38,666 | 171,186 | 150,566 |
| • ஓட்டோ டீசல் | 370,594 | 128,165 | 505,675 | 443,933 |
| • மண்ணெண்ணெய் | 98,284 | 25,289 | 49,484 | 72,618 |
| • ஜெட் **A-1** | 130,572 | 57,346 | 233,652 | 207,434 |
| • உலை எண்ணெய் 800 சுப்பர் | 359,021 | 87,196 | 379,015 | 345,447 |
| • உலை எண்ணெய் 1500 சுப்பர் | - | 107,001 | 103,111 | - |
| • கப்பலுக்கான உலை எண்ணெய் 800 | - | - | - | 82,000 |
| • நெப்தா | 106,956 | 30,835 | 129,058 | 121,449 |
| • சோல்வன்ட்(SBP) | 3,037 | 2,690 | 1,524 | 1,267 |
| • தாரர் | 6,879 | - | - | - |
| • லங்கா பெற்றோலிய எரிவாயு (LP Gas) | 16,650 | 5,687 | 23,800 | 20,815 |
| **மொத்த வெளியீடு** | **1,216,085** | **482,875** | **1,596,505** | **1,445,529** |

மூலம்: இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

அட்டவணை 10.3

2024 ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்கள் மற்றும் உள்நாட்டில் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்கள்

| உற்பத்திகள் | இறக்குமதி செய்யப்பட்ட பெற்றோலியப் பொருட்களின் தொகை (மெ.தொ) | சுத்திகரிப்பு நிலையம் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட பெற்றோலியப் பொருட்களின் தொகை (மெ.தொ) | மொத்தம் (மெ.தொ) |
|---|---|---|---|
| பெற்றோல் 92 ஒக்டேன் | 585,708 | 150,566 | 736,274 |
| பெற்றோல்95 ஒக்டேன் | 19,540 | - | 19,540 |
| லங்கா ஓட்டோ டீசல் | 507,378 | 443",933 | 951,311 |
| லங்கா சுப்பர் டீசல் | 26,945 | - | 26,945 |
| மண்ணெண்ணெய் | - | 72,618 | 72,618 |
| ஜெட் A-1 | 315,811 | 207,434 | 523,245 |
| உலை எண்ணெய் 800 சுப்பர் | - | 345,447 | 345,447 |
| கப்பலுக்கான உலை எண்ணெய் 800 | - | 82,000 | 82,000 |
| உலை எண்ணெய் 1500 செக் (குறை சல்பர்)) | 35,468 | - | 35,468 |
| நெப்தா | - | 121,449 | 121,449 |
| சோல்வன்ட்(SBP) | - | 1,267 | 1,267 |
| லங்கா பெற்றோலிய எரிவாயு(டூ புயள) | - | 20,815 | 20,815 |
| மொத்தம் | **1,530,853** | **1,445,529** | **2,976,382** |

மூலம்: இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

## 2.3 இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் விற்பனை செய்யப்பட்ட மொத்த பெற்றோலியப் பொருட்கள்

அதிகரித்து வரும் மக்கள்தொகைப் பெருக்கத்திற்கு ஏற்ப, வீட்டுத்துறை மற்றும் வணிகத் துறைகளில் மட்டுமின்றி, மின் உற்பத்தி, போக்குவரத்து, கைத்தொழிற்துறைகள்,மீன்பிடி மற்றும் விவசாயம் ஆகிய துறைகளிலும் எரிபொருள் நுகர்வு அதிகரித்துள்ளது. இதற்கிணங்க, தற்போதுள்ள பெற்றோலியப் பொருட்களுக்கான தேவையை பூர்த்தி செய்வதற்காக, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அனைத்துத் தொழிற்துறைகளிலும் விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பதினைந்து (15) வகையான பெற்றோலியப் பொருட்களை விற்பனை செய்துள்ளது. 2022 – 2024 ஆம் ஆண்டுகளில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் விற்பனைசெய்யப்பட்ட மொத்த எரிபொருள் விற்பனையை தொடர்பான விபரங்கள் அட்டவணை 10.3இல தரப்பட்டுள்ளது. இவ் விவரங்களின்படி, 2024 ஆம் ஆண்டில் பெற்றோல் ஒக்டேன் 92 18%, பெற்றோல் ஒக்டேன் 95 28%, ஓட்டோ டீசல் 18%, சுப்பர் டீசல் 21% ஆகியவற்றின் நுகர்வு குறைந்துள்ளதுடன் லங்கா மண்ணெண்ணெய் 62% மற்றும் ஜெட் A-1 24% ஆக அதிகரித்துள்ளது. மேலும், 2024 ஆம் ஆண்டின் மொத்த எரிபொருள் விற்பனை 3,031,716 மெற்றிக் தொன்னாக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது மொத்த எரிபொருள் விற்பனை 12% மாக குறைவடைந்துள்ளமையை இங்கு காணமுடிகிறது.

**அட்டவணை 10.4**
**மொத்த எரிபொருள் விற்பனை**
**(2022–2024)**

| உற்பத்தி வகைகள் | மொத்த விற்பனை (மெ.தொ) | | |
|---|---|---|---|
| | 2022 | 2023 | 2024 |
| பெற்றோல் 92ஒக்டேன் | 964,844.219 | 982,939.25 | 804,419 |
| பெற்றோல்95 ஒக்டேன் | 55,697.245 | 29,042.01 | 20,893 |
| லங்கா ஓட்டோ டீசல் | 1,475,577.154 | 1,257,303.75 | 1,025,160 |
| லங்கா சுப்பர் டீசல் | 72,474.383 | 29,809.39 | 23,531 |
| லங்கா மண்ணெண்ணெய் | 98,367.966 | 82,724.80 | 134,580 |
| லங்கா கைத்தொழில் மண்ணெண்ணெய | 5,647.035 | 1,828.13 | 4,134 |
| லங்கா இரசாயன நெப்தா | 32,262.861 | 120,093.96 | 101,541 |
| லங்கா உலை எண்ணெய் 800 | - | 12.51 | 6 |
| லங்கா உலை எண்ணெய் 1500 செக் (உயர் சல்பர்) | 198,891.936 | 168,800.54 | 116,652 |
| லங்கா உலை எண்ணெய் 1500 செக் (குறை சல்பர்)) | 103,379.876 | 237,192.23 | 155,816 |
| லங்கா சுப்பர் உலை எண்ணெய் | 54,978.319 | 117,198.22 | 155,857 |
| ஜெட் A-1 | 245,796.923 | 377,456.72 | 468,158 |
| லங்கா சோல்வன்ட்(SBP) | 2,701.635 | 1,362.94 | 1,161 |
| லங்கா பெற்றோலிய எரிவாயு (LP Gas) | 5,556.054 | 23,877.74 | 19,676 |
| லங்கா AV வாயு | 83.871 | 120.67 | 132 |
| மொத்தம் | **3,316,259.48** | **3,429,762.86** | **3,031,716** |

மூலம்: இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

## 2.4 மின்சார உற்பத்தி நிலையங்களிற்கான விற்பனை

மின்சார உற்பத்திக்கான எரிபொருளை வழங்கும் தனியுரிமை நிறுவனமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் செயற்படுவதோடு, இலங்கை மின்சார சபை மற்றும் தனியார் மின் நிலையங்களற்கும் தேவையான எரிபொருளை வழங்குகிறது. 2021-2024 வரையான காலப்பகுதியல் மின்சார உற்பத்தி நிறுவனங்களிற்கு விற்பனை செய்த எரிபொருளின் விபரங்களை அட்டவணை 10.5 காட்டுகிறது. இதற்கிணங்க, 2024 ஆம் ஆண்டில் 579,309 லீற்றர் எரிபொருள் மின்சார உற்பத்தி நிறுவனங்களிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதன் படி 2023 ஆம் ஆண்டோடு ஒப்பிடுமிடத்து 2024 ஆம் ஆண்டில் 24% ஆக குறைவடைந்துள்ளது.

**அட்டவணை 10.5**
**மின்சார உற்பத்திக்காக விற்பனை செய்யப்பட்ட எரிபொருட்கள்**
**(2021–2024)**

| | இலங்கை மின்சார சபை (லீற்றர் '000') | | | | சுதந்திரமான மின்சார உற்பத்தியாளர் (லீற்றா '000') | | | மொத்தம் (லீற்றா'000') |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஆண்டு | லங்கா ஓட்டோ டீசல் | நெப்தா | உலை எண்ணெய் | லங்கா சுப்பர் டீசல் | லங்கா ஓட்டோ டீசல | உலை எண்ணெய் | லங்கா சுப்பர் டீசல | |
| **2021** | 50,259 | 15,407 | 217,481 | - | 69,782 | 256,860 | - | 609,789 |
| **2022** | 86,769 | 46,781 | 181,103 | 12,147 | 115,205 | 123,369 | 5,678 | 571,051 |
| **2023** | 102,877 | 174,136 | 228,885 | - | 3,175 | 256,580 | - | 765,653 |
| **2024** | 44,647 | 147,251 | 206,467 | - | 16,609 | 164,335 | - | 579,309 |

மூலம்: இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

## 2.5 விமான எரிபொருள் விற்பனை (ஜெட் A-1)

இலங்கையில் விமான எரிபொருளின் தனியுரிமை வழங்குனர் என்ற வகையில், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தேசிய பொருளாதாரத்தில் பிரதான இடத்தை வகிக்கின்றது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விமான எரிபொருள் பிரிவு, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் (BIA), மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் (MRIA), இரத்மலானை விமான நிலையம் மற்றும் பலாலி விமான நிலையம் ஆகிய நான்கு விமான நிலையங்களுக்கும் அதன் சேவைகளை வழங்குகின்றது.

2024 ஆம் ஆண்டில், மொத்த விமான எரிபொருள் விற்பனை 468,158 மெற்றிக் தொன்னாக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் நாளொன்றுக்கான சராசரியாக கேள்வி 1,283 மெற்றிக் தொன் ஆகும். 2023 ஆம் அண்டுடன் ஒப்பிடும்போது, 2024 இல் விமான எரிபொருள் நுகர்வு 24மூ அதிகரித்துள்ளது. 2021-2024 ஆம் ஆண்டு வரை விமான எரிபொருள் விற்பனை தொடர்பான விவரங்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 10.6**
**ஜெட் A–1 விற்பனைகள்**
**(2021–2024)**

| ஆண்டு | தொகை (மெ.தொ) |
|---|---|
| 2021 | 223,854 |
| 2022 | 245,838 |
| 2023 | 377,608 |
| 2024 | 468,158 |

மூலம்: இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

வரைபு 10.2
ஜெட் A–1 விற்பனை (2021 – 2024)
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்




## 2.6 உராய்வுநீக்கி எண்ணெய் விற்பனை

தொழிற்துறை துறையில் உராய்வுநீக்கி எண்ணெய் தொழிற்துறை மிகவும் போட்டித்தன்மை வாய்ந்த மற்றும் மூலோபாய வணிகங்களில் ஒன்றாக விளங்குகின்றது. இலங்கை பெற்றேராலியக் கூட்டுத்தாபனம் தனது உற்பத்திகளை "Ceypetco" என்ற வர்த்தக குறியீட்டின் கீழ் விற்பனை செய்யப்படுவதுடன் இவர்களின் உற்பத்திகள் சர்வதேச தரங்களுக்கு நிகராக உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

2021 முதல் 2024 ஆம் ஆண்டு வரை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் விற்பனை செய்யப்பட்ட உராய்வுநீக்கி எண்ணெயின் விபரங்கள் கீழே உள்ள வரைபடம் 10.6 இல் விபரமாக தரப்பட்டுள்ளது. தரவுகளின் படி, முன்னைய ஆண்டுகளில் உராய்வுநீக்கி எண்ணெய் விற்பனையில் குறிப்பிடத்தக்களவான வீழ்ச்சி காணப்பட்டபோதும், 2024 ஆம் ஆண்டில் உராய்வுநீக்கி எண்ணெயின் விற்பனை மீளெழுச்சி பெறத் தொடங்கியுள்ளது.

அட்டவணை 10.7
உராய்வு நீக்கி எண்ணெய் விற்பனைகள்
(2021–2024)

| ஆண்டு | தொகை (கி.லீ) |
|---|---|
| 2021 | 3,809 |
| 2022 | 901 |
| 2023 | 1,310 |
| 2024 | 1,532 |

**Source:** *Ceylon Petroleum Corporation*

## 2.7 விவசாய– இரசாயனப் பொருட்களின் விற்பனை

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஐந்து தசாப்தங்களாக விவசாய- இரசாயனப் பொருட்களின் வாத்தகத்தில் ஈடுபட்டுள்ளது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சந்தையில் அரச முகவராக செயற்பட்டு விலையை நிர்ணகிப்பதுடன், போட்டி நிறுவனங்களிடமிருந்து விவசாயிகளை சுரண்டல்களில் இருந்து பாதுகாத்து விவசாய- இரசாயனப் பொருட்களுக்கான

சிறந்த நியாயமான விலையை வழங்குகின்றது. 2024 ஆம் ஆண்டில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ரூ.795 மில்லியன் பெறுமதியான விவசாய-இரசாயனப் பொருட்களை விற்பனை செய்துள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விவசாயப் பிரிவு, 2024 ஆம் ஆண்டிற்கான பட்டய தொழில்வாண்மை முகாமையாளாகள் நிறுவனத்தால் வழங்கப்பட்ட முகாமையாளர்களின் சிறந்த முகாமைத்துவ நடைமுறைகள் விருதை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.




(சிறந்த முகாமைத்துவ நடைமுறைகளுக்கான விருது)

### 2.8 உட்கட்டுமான அபிவிருத்தி செயற்பாடுகளின் முன்னேற்றங்கள்

- **எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மின்சார வாகனங்களுக்கான மின்னேற்றல் நிலையங்களை தாபித்தல்**

தற்போது மின்சார வாகனங்களின் பயன்பாடு அதிகரித்து வருவதால், மின்னேற்றல் நிலையங்களை தாபிபபதற்கான் அவசியத் தன்மை அடையாளம் காணப்பட்டுள்ளது. ஆரம்ப கட்டமாக, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் உரித்தான பத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மின்னேற்றல் நிலையங்களை நிறுவுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படடுள்ளது. இதற்கான மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூ.50 மில்லியன் ஆவதோடு, இவ் மின்னேற்றல் நிலையங்களை நிறுவுவதற்கு நடவடிக்கைகள் செயற்பாட்டு நிலையில் உள்ளன. மேலும், 2025 ஆம் அண்டில் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அருகாமையில் புதிய மின்னேற்றல் நிலையங்களை நிறுவுவதற்கு ரூ.100 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



(சிறந்த முகாமைத்துவ நடைமுறைகளுக்கான விருது)
(மின்சார வாகனங்களுக்கான மின்னேற்றல் நிலையம்)

- **சப்புகஸ்பந்தை சுத்திகரிப்பு நிலையத்தை மறுசீரமைத்தல்**

சட்டப்பூர்வ தேவைகளைப் பூர்த்தி செய்யும் அதே வேளையில், சுத்திகரிப்பு நிலையத்தின் பாதுகாப்பான, வினைத்திறன்மிக்க மற்றும் நம்பகமான செயற்பாட்டை உறுதி செய்வதற்காக, சுத்திகரிப்பு நிலையத்தின் பிரதான மறுசீரமைப்பு பணிகளை ஒவ்வொரு இரண்டு முதல் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை மேற்கொளவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு முனனர் பெப்ரவரி/மார்ச் 2021 இல் பிரதான மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு 2024 யூலை வரையான 3 வருடங்களிற்கு மேலாக சுத்திகரிப்பு நிலையம் செயற்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இதனால், 2024 யூலை 15 ஆம் திகதி சுத்திகரிப்பு நிலையத்தின் பிரதான மறுசீரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 2024 ஆகஸ்ட் 23 ஆம் திகதி பூத்தியடைந்துள்ளதுடன் இதற்கான மொத்த செலவினம் ரூ.1,640 மில்லியன் ஆகும்.

சுத்திகரிப்பு நிலையத்தின் வழக்கமான பெரிய பணிநிறுத்த காலம் 35 நாட்கள் ஆகும். எவ்வாறாயினும், முன்னைய பணிநிறுத்த ஆய்வு பரிந்துரைகளின்படி, இவ் பணிநிறுத்தத்தின் போது, மசகு எண்ணெய் டிஸ்டில்லர் சார்ஜ் ஹீட்டர்

01F1 இல் பிரதான பழுதுபார்க்கும் நடவடிக்கைகள் மற்றும் பிளாட்ஃபார்மர் உலை(Platformer furnace) 03F1 இன் சுருள் மாற்றீடு செய்தல் (செல் 2 மற்றும் செல் 3) ஆகியன மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு கணிசமான காலம் தேவைப்பட்டதனால், மேற்கூறப்பட்ட செயற்பாடுகளுடன் தொடர்புடைய தொழில்நுட்ப சிக்கலான தன்மை காரணமாக பணிநிறுத்தம் காலத்தை 40 நாட்களாக நீட்டிப்பதற்கான தேவையேற்பட்டது.

சுத்திகரிப்பு நிலையத்திற்குள் வளங்கள் கிடைக்காத சில சேவைகள் வெளியாட்கள் மூலம் மேற்கொள்ளப்படட்டுள்ளதுடன், இவை தவிர பிரதான பராமரிப்புப் பணிகள் உளளக ஊழியர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ் பராமரிப்பு பணிகளில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சுமார் 860 நிரந்தர ஊழியர்களுடன் சுமார் 264 பகுதியளவில் பயற்சி பெற்ற வாடகைக்கு பணிக்கமர்த்தப்பட்ட ஊழியர்கள் மற்றும் பயற்சி பெறாத ஊழியர்களும் பங்கேற்றுள்ளனர். பிரதான பராமரிப்புப் பணிகள் வெற்றிகரமாக பூரத்தியடைந்ததன் பின்னர், சுத்திகரிப்பு நிலையம் அதன் வழமையான சுத்திகரிக்கும் திறனான நாளொன்றுக்கு 5300 மெற்றிக் தொன் என்ற வகையில் இயங்குவதோடு, அடுத்த 3 ஆண்டுகளுக்கு நாட்டிற்கு நம்பகமான தொடர்ச்சியான எரிபொருள் விநியோகத்தையும் உறுதி செய்வதாக அமைந்துள்ளது.



(சுத்திகரிப்பு நிலைய புனருத்தாபனம்)

**2025 ஆம் ஆண்டுக்கான இலக்கு**

- ஜெட் A-1 குழாய் மற்றும் களஞ்சியத் தாங்கி திட்ட நிர்மாணப் பணிகளை ஆரம்பித்தல்
- திருகோணமலையிலுள்ள 24 தாங்கிகளை அபிவிருத்தி திட்டத்தின் முதலாம் கட்டத்தின் இரண்டாவது படிநிலையை ஆரம்பித்தல்
- நாடுபூராகவுமுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மின்சார வாகனங்களுக்கான மின்னேற்றல் நிலையங்களை தாபிப்பதற்கு ஊக்குவித்தல்
- எதிர்காலத்தில் நிகர பூஜ்ஜிய காபன் இலக்குகளை அடைய புதைபடிவ எரிபொருட்களுக்கான மாற்றீடாக பசுமை ஹைட்ரஜன், பசுமை அம்மோனியா, உயிரியல் எரிபொருட்கள், சூரிய சக்தி போன்ற மாற்று சக்தி வள எரிபொருள் தொழில்நுட்பங்களைப் தொடர்பான ஆய்வு மற்றும் திறன் விருத்தி

# அத்தியாயம் 11

# வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம்

## 1. அறிமுகம்

வரையறுக்கப்பட்ட இலங்கைப் பெற்றோலியக் களஞ்சிய முனையம் 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் கம்பனிச் சட்டம் பிரிவு 2(1)ன் கீழ் தாபிக்கப்பட்டு 1987ம் ஆண்டு 23 ஆம் கம்பனிச் சட்டத்தின் கீழ் அரச கூட்டுத்தாபனமாகவோ அல்லது அரசுடமை வியாபாரமாவோ மாற்றப்பட்டு புதிய கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதோடு 2003 ஒக்டோபர் 13 ஆம் திகதிய 1310/8 ஆம் இலக்கத்தினை உடைய அதி விசேட அரசாங்க வர்த்தமானியில் மேலும் விபரிக்கப்பட்ட எரிபொருள் முனையங்கள், களஞ்சிய வசதிகள், குழாய் இணைப்பு மற்றும் பௌசர் தொகுதி ஆகிவற்றை உள்ளடக்குகின்ற பொதுப் பயன்பாட்டாளர் வசதிகளை வழங்கும் நிறுவனமாகவும் உள்ளது. இந் நிறுவனம் பங்குரிமை மூலதனத்தின் 2/3 பங்கை உரிமையாக் கொள்கின்ற இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் துணை நிறுவனமாவதுடன் மீதி லங்கா இந்தியன் ஒயில் கம்பனிக்கு உரித்தானதாகும்.

இலங்கையில் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களை களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகச் செயற்பாடுகளை போட்டி மற்றும் வினைத்திறனுடன் மேற்கொண்டு வருகின்றது. மேலும், இவ் புதிய கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வரையறுக்கப்பட்ட இலங்கைப் பெற்றோலியக் களஞ்சிய முனையம் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் கீழ் இணைந்த நிறுவனமாக நிறுவப்பட்டுள்ளது.

இலங்கையில் கீழ்நிலை பெற்றோலியப் பொருட்களைக் கையாளுவதை நிர்வகிப்பதற்கான அதிநவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் மொத்தமாக பெற்றோலியப் பொருட்களை களஞ்சியப்ப:டுத்தல் மற்றும் விநியோகித்தல் செயற்பாடுகளில் CPSTL ஈடுபட்டுள்ளது. மேலும், ஆரோக்கியமான மற்றும் போட்டித்தன்மை வாய்ந்த எரிபொருள் களஞ்சியம் மற்றும் விநியோகத்தை உருவாக்குவதன் மூலம் இலங்கையின் அபிவிருத்திப் பயணத்தை ஆதரிப்பதற்கான எங்கள் உறுதிப்பாட்டை நிரூபிக்கும் வகையில், எங்கள் பங்குதாரர்களின் மதிப்பு மிக்க முன்மொழிவுகளை தொடர்ந்து மேம்படுத்தி வருகிறது.

## 2. 2024 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்யப்பட்ட பணிகளின் முன்னேற்றங்கள்

வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம் பெற்றோலியப் பொருட்களை களஞ்சியப்படுத்தி விநியோகிப்பதோடு, உயர் தரமான எரிபொருளை பாதுகாப்பான முறையில் தொடர்ச்சியாக வழங்குவதிலும் பிரதான பங்கு வகிக்கின்றது. மேலும், வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையத்தால் பெற்றோலியப் பொருட்களை களஞ்சியப்படுத்தி விநியோகிப்பது தொடர்பான முன்னேற்றங்களை இவ் அத்தியாயத்தில் விபரமாக தரப்பட்டுள்ளது.

### 2.1. எரிபொருள் களஞ்சியம்

வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம், இரண்டு பிரதான முனையங்களான கொலன்னாவை, முத்துராஜவெல மற்றும் 11 பிரதாந்திய மொத்தக் களஞ்சியசாலைகளில் களஞ்சிய செயற்பாடுகளை முன்னெடுத்துவருகிறது. இதற்கிணங்க,

கொலன்னாவை முனையத்தில் 224,649 மெற்றிக் தொன்னையும், முத்துராஜவெல முனையத்தில் 202,358 மெற்றிக் தொன்னையும் மற்றும் பிராந்திய ரீதியாக உள்ள 11

மொத்தக் களஞ்சியங்களில் 13,140 மெற்றிக் தொனனையும் ஆக மொத்தம் 440,147 மெற்றிக் தொன் கொள்ளளவு கொண்ட எரிபொருள் களஞ்சிய வசதிகளை பராமரித்து வருகின்றது. இதற்கிணங்க, 2024 ஆம் ஆண்டில் இரண்டு பிரதான முனையங்கள் மற்றும் பதினொரு பிராந்திய மொத்தக் களஞ்சியசாலைகள் ஊடாக எரிபொருட்களை களஞ்சியப்படுத்துவதில் செயற்திறன் மிக்க பங்களிப்பைச் செய்துள்ளது. மேலும், இவ் கஞ்சியசாலைகளின் களஞ்சித் திறன்களின் விபரங்கள் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது

**அட்டவணை 11.1**
**மொத்த எரிபொருள் களஞ்சியத் திறன்**

| உற்பத்தி வகைகள் | களஞ்சியத் திறன் (மெ.தொ) | | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | கொலன்னாவை முனையம் | முத்துராஜவல முனையம் | பிராந்திய மொத்த களஞ்சிய நிலையம் | |
| நெப்தா | 11,996 | - | - | 11,996 |
| பெற்றோல்95 ஒக்டேன் | 23,197 | - | - | 23,197 |
| பெற்றோல் 92ஒக்டேன் | 59,321 | 83,857 | 3,346 | 146,524 |
| மண்ணெண்ணெய் | 9,813 | - | 680 | 10,493 |
| ஜெட் யு-1 | 9,484 | - | - | 9,484 |
| ஓட்டோ டீசல் | 46,074 | 118,501 | 9,114 | 173,689 |
| சுப்பர் டீசல் | 18,319 | - | - | 18,319 |
| உலை எண்ணெய் | 44,575 | - | - | 44,575 |
| சோல்வன்ட | 341 | - | - | 341 |
| கைத்தொழில் மண்ணெண்ணெய் | 1,529 | - | - | 1,529 |
| மொத்தம் | **224,649** | **202,358** | **13,140** | **440,147** |

மூலம்: வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம்

## 2.2 எரிபொருள் விநியோகம்

2024 ஆம் ஆண்டில் எரிபொருள் விநியோகத்தில் ஐந்து எரிபொருள் விநியோக முகவர்கள் ஈடுபடுட ஆரம்பித்துள்ளனர், மேலும் வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம் இவ் ஐந்து முகவர்களுக்கும் அவர்களின் தேவைகளுக்கு ஏற்ப எரிபொருளை விநியோகிக்கின்றது. வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையத்தின் இரண்டு பிரதான முனையங்களான கொலன்னாவ மற்றும் முத்துராஜவெல மற்றும் பிராந்திய மொத்த களஞ்சிய நிலையங்களிலிருந்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா இந்தியன் ஒயில் கம்பெனி, சினோபெக் எனர்ஜி லங்கா (பிரைவேட்) லிமிடெட், ஆர். எம். பார்க் (பிரைவேட்) லிமிடெட் மற்றும் யுனைடெட் பெற்றோலியம் (பிரைவேட்) லிமிடெட் ஆகியவற்றிற்கு எரிபொருள் வநியோகிக்கப்படுகின்றன. அட்டவணை 11.2, 2024 செப்ரெம்பர் வரை இவ் நிறுவனங்களுக்கு விநியோகிக்கப்பட்ட எரிபொருளின் முன்னேற்றத்தை விபரமாகக் காட்டுகிறது.

இதற்கிணங்க, 2024 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட எரிபொருளின் மொதத்தத் தொகை 4,178,575 கிலோ லீற்றராக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு 3,159,547 கிலோ லீற்றர், லங்கா இந்தியன் ஒயில் கம்பனிக்கு 318,331 கிலோ லீற்றர், சினோபெக் எனர்ஜி லங்கா (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தற்கு 439,422 கிலோ லீற்றர், ஆர்.எம். பார்க்

(பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்திற்கு 218,493 கிலோ லீற்றர் மற்றும் யுனைடெட் பெற்றோலியம் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தற்கு 42,781 கிலோ லீற்றர் எரிபொருளும் விநியோகிகப்பட்டுள்ளது. இதற்கிணங்க, இவ் எரிபொருள் மொத்த விநியோகத்தில் 76% லங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கும் மீதி 24% லங்கா இந்தியன் ஒயில் கம்பனி, சினோபெக் எனர்ஜி லங்கா (பிரைவேட்) லிமிடெட், ஆர். எம். பார்க் (பிரைவேட்) லிமிடெட் மற்றும் யுனைடெட் பெற்றோலியம் (பிரைவேட்) லிமிடெட் ஆகியவற்றுக்கும் உரித்தானதாகக் காணப்படுகிறது.

**அட்டவணை 11.2**
**2024 ஆம் ஆண்டின் எரிபொருள் விநியோக முன்னேற்றங்கள்**

| உற்பத்தி வகைகள் | தோகை (கி.லீ) | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | CPC | LIOC | SINOPEC | R.M.PARK | UNITED PETROLEUM | மொத்தம் |
| உலை எண்ணெய் | 339,256 | - | - | - | - | 339,256 |
| ஜெட் A-1 | 557,515 | - | - | - | - | 557,515 |
| லங்கா ஓட்டோ டீசல் | 1,074,364 | 142,085 | 208,401 | 98,630 | 17,371 | 1,540,852 |
| லங்கா சுப்பர் டீசல் | 27,813 | 3,887 | 6,966 | 4,679 | 832 | 44,178 |
| நெப்தா | 197,241 | - | - | - | - | 197,241 |
| பெற்றோல் 92ஒக்டேன் | 935,908 | 160,109 | 218,092 | 111,137 | 23,701 | 1,448,947 |
| பெற்றோல்95 ஒக்டேன் | 27,449 | 12,250 | 5,963 | 4,046 | 878 | 50,586 |
| **மொத்தம்** | **3,159,547** | **318,331** | **439,422** | **218,493** | **42,781** | **4,178,575** |

மூலம்: வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம்

**வரைபு 11.1**
**எரிபொருள் விநியோக முன்னேற்றங்கள் –2024**




மூலம்: வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம்

## 2.3 எரிபொருள் விநியோகம் தொடர்பான வசதிகளை மேம்படுத்துதல்.

தொடர்ச்சியான எரிபொருள் விநியோகத்தை உறுதி செய்வதற்காக புதிய தரநிலைகள் மற்றும் தொழில்நுட்பத்திற்கு ஏற்ப எரிபொருள் விநியோகம் தொடர்பான வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் களஞ்சியப்படுத்தும் நிறுவனமாக வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம் அடையாளம் காணப்பட்டுள்ளது. இதற்கிணங்க, தற்போதுள்ள உட்கட் வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையத்தால் மேற்கொண்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றம் பின்வருமாறு.

- **கொலன்னாவையில் ஆறு (06) களஞ்சியத் தாங்கிகளை நிர்மாணித்தல் மற்றும் செயற்படுத்துதல்**

மொத்தக் கொள்ளளவு 64,000 $m^3$ உள்ள 06 தாங்கிகளை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் ரூ.2286.8 மில்லியன் பெறுமதியில் வரி நீங்கலாக 2019.10.24 ஆம் திகதி வழங்கப்பட்டது. இவ் ஒப்பந்தக்காரரின் அசமந்த செயற்பாடுகள் காரணமாக இவ் ஒப்பந்தம் 2022.01.19 ஆம் திகதி இரத்துச்செய்யப்பட்டது. இவ் ஒப்பந்தம் இடைநிறுத்தப்பட்டபோது இத் திட்டத்தின் மொத்த முன்னேற்றம் 18% மாகக் காணப்பட்டது. இத் திட்டத்தை மீள செயற்படுத்துவதற்கு ரூ.3374 மில்லியன் (வரி நீங்கலாக) தேவையென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன், இதற்கான பொருத்தமான ஒப்பந்தக்காரரை தெரிவுசெய்வதற்கு அமைச்சரவை அமைச்சர்களின் ஒப்புதலுடன் கேள்வி மனு கோரப்பட்டுள்ளது. சமர்ப்பிக்கப்பட்ட கேள்வி மனுக்கள் மதிப்பீட்டு நிலையில் உள்ளதுடன் இவ் ஒப்பந்தம் 2025 பெப்ரவரி மாதமளவில் வழங்கப்படுமென் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கான எதிர்பார்க்கப்பட்ட காலம் 24 மாதங்களாகும்.

- **கொலன்னாவ முனையத்தில் இருந்து கொழும்பு துறைமுகம் வரை 18 அங்குல விட்டம் கொண்ட புதிய குழாய்த் தொகுதியை நிர்மாணித்தல்**

கொழும்பு துறைமுகத்திலிருந்து கொலன்னாவை முனையத்திற்கு எரிபொருளை கொண்டு செல்லும் குழாய் அமைப்பு மிகவும் பழமையானதும் மற்றும் பழுதடைந்தும் உள்ளர். எனவே எரிபொருள் பரிமாற்றத்தை வினைத்திறனுடன் மேற்கொள்வதற்காக 18 அங்குல விட்டம் கொண்ட குழாய் அமைப்பை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டது. இதற்கான, பெறுகை செயற்பாடுகள் தேசிய திட்டமிடல் திணை க்களம் மற்றும் அமைச்சரவை அமைச்சர்களின் ஒப்புதலுடனும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன் மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் ரூ.2,853 மில்லியன்(வரி நீங்கலாக) ஆவதோடு இத் திட்டத்தின் காலம் 18 மாதங்களாகும்.

- **மாகல்லவில் உள்ள பிராந்திய மொத்த களஞ்சியசாலையில் தீயணைப்பதற்குத் தேவையான நீரை களஞ்சியப்படுத்துவதற்கான திறனை அதிகரித்தல் மற்றும் மின்பிறப்பாக்கிக்கான அறையை நிர்மாணித்தல்**

மாகல்லவில் உள்ள பிராந்திய மொத்த களஞ்சியசாலையில் தீயணைப்பதற்குத் தேவையான நீரை களஞ்சியப்படுத்துவதற்கு 110,000 $m^3$ கொள்ளளவுள்ள தாங்கியை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நீரின் களஞ்சியத் திறன் 90,000 $m^3$ இல் இருந்து 200,000 $m^3$ ஆக அதிகரிக்கப்படும். இதற்கான மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூ.12 மில்லியன் ஆகும்.

- **கொலன்னாவையில் உள்ள 6 வலயங்களில் துணை குழாய் அமைப்பு முறையை நிர்மாணித்தல்**

வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம் 07 வலயங்களில் அதிக திறன் கொண்ட புதிய பம்பிகளை நிறுவி எரிபொருள் நிரப்பும் கையாளுகையை அதிகரிக்கும் அதேவேளை எரிபொருள் நிரப்பும் கையாளுகை திறன்களை அதிகரிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக, கொலன்னாவையில் உள்ள 6 வலயங்களில் நிறுவப்பட்டுள்ள நவீன பம்மி நிலையங்களை இணைக்கும் குழாய்களுக்கு தேவையான துணை முறைகள் மற்றும் இது தொடர்பான வசதிகளுக்கான முறைகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இதற்கான மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூ. 76 மில்லியன் (வரி நீங்கலாக) ஆகும்.

- **தற்போதுள்ள காங்கேசன்துறை பிராந்திய தொகை களஞ்சிய நிலையத்தை இடமாற்றம் செய்தல்**

காங்கேசன்துறையில் அமைந்துள்ள பிராந்திய தொகை களஞ்சிய நிலையமானது, வட மாகாணத்திற்கு எரிபொருள் விநியோகிப்பதில் பிரதான பங்கு வகிக்கின்றது. இவ் களஞ்சிய நிலையமானது சீமெந்துக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான காணியில் அமைந்துள்ளதுடன் தற்போது இது பாவினையில் இல்லாதுள்ளது. பின்னர், இவ் பிராந்திய தொகை களஞ்சிய நிலையமானது வரையறுக்கப்பட்ட இலங்பை பெற்றோலியகளஞ்சிய முனையத்திற்கு உரித்தான காணியில் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் மொத்த கொள்ளளவுத் திறன் 540,000 லீற்றர் ஆகும். இதனை நிர்மாணிப்பதற்கான மதிப்பீடு செய்யப்பட்ட தொகை ரூ.170 மில்லியன்( வரி நீங்கலாக) ஆவதோடு இதன் நிர்மாணப் பணிகள் மூன்று கட்டங்களாக முன்னெடுக்கப்படுகின்றன. இதன் நிர்மாணப் பணிகள் 2025 ஜனவரி மாதத்தில் பூாத்தியடையுமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

### 2.4 இலங்கையின் பட்டய நிறுவன தொழில்வாண்மை முகாமையாளர்களுக்கான– (CPM) விருதுகள்

- சிறுந்த பெறுபேறுக்கான சிறந்த முகாமையாளர்களுக்கான நடைமுறை நிறுவன விருது 2024 — மின்சக்தி மற்றும் வலுசக்தி
- பிரிவின் வெற்றியாளருக்கான சிறந்த முகாமையாளர்களுக்கான நடைமுறை நிறுவன விருது 2024 (போக்குவரத்து, கப்பல் மற்றும் கையாளுகை)
- அங்கீகார சான்றிதழுக்கான சிறந்த முகாமையாளர்களுக்கான நடைமுறை நிறுவன விருது 2024 (அரச மற்றும் அரை அரசங்கம்)

## 3. 2025 ஆம் ஆண்டின் இலக்குகள்

- தொழில், சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் முகாமைத்துவ அமைப்பு (OHSEMS) முறையையும் செயற்படுத்துதல்

  – ISO 14000 சுற்றாடல் முகாமைத்துவ அமைப்புகள் அங்கீகாரத்தையும் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு முகாமைத்துவ அமைப்பு தரநிலையையும் (OHSAS) பெற்றுக்கொள்ளுதல்

- விநியோகச் செலவினங்க-ளைகுறைத்தல் மற்றும் பெற்றோலியப் பொருட்களுக்கான போக்குவரத்தை மேம்படுத்துதல்

  – பெற்றோலியப் பொருட்களின் மொத்தமாக கொண்டு செல்வதற்கான போக்குவரத்து விற்பனையாளர்களைத் தேர்ந்தெடுக்க பொது கேள்விமனு நடைமுறையைப் பின்பற்றுதல்

- காங்கேசன்துறைக்கு புகையிரத போக்குவரத்தை நடைமுறைப்படுத்துதல்
- மொத்தமாக பெற்றோலியப் பொருட்களை கொண்டு செல்வதற்கான புகையிர கொள்கலன் போக்குவரத்தை அதிகரித்தல்

- எரிபொருள் நிரப்பும் வசதிகளை விருத்தி செய்தல்

  - வலயம் 07 இல் எரிபொருள் நிரப்பும் கையாளுகை வசதிகளை நிர்மாணித்தல்
  - வலயம் 07 இல் விமான எரிபொருள் கையாளுகை வசதிகளை மேம்படுத்துதல்

# அத்தியாயம் 12

# இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபை

## 1 அறிமுகம்

2021 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் படி, இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபை (PDASL) தாபிக்கப்பட்டுள்ளதுடன், இந் நிறுவனம், இலங்கையில் அனைத்து பெற்றோலியம் மற்றும் இயற்கை வாயு ஆய்வுகள், அபிவிருத்திகள் மற்றும் உற்பத்தி செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தல் மற்றும் முகாமைத்துவம் செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனமாக உள்ளது. ,லங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபை (PDASL) கனிய வள எண்ணெய் மற்றும் வாயு ஆய்வுகள் மற்றும் உற்பத்திகளை முன்னெடுக்கும் போதுசர்வதேச தரத்திற்கு ஒப்பான நடைமுறைகள் மற்றும் சிறந்த சுகாதார, பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் நியமங்களை கடைப்பிடிப்பதை உறுதிசெய்வதோடு இலங்கையின் சமூக –பொருளாதார அபிவிருத்தி மற்றும் சக்தி வள பாதுகாப்பிற்கும் பங்களிப்பு செய்தல் வேண்டும். இது முன்னர் இருந்த நிறுவனமான பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி செயலகத்தின் (PRDS) பணிகளை முன்னெடுக்கின்றது.

**நோக்கங்கள்**

- வளர்ச்சி மற்றும் வினைத்திறனைத் தூண்டுவதற்காக, ஆய்வு மற்றும் உற்பத்தி இரண்டையும் உள்ளடக்கிய மேல்நிலை பெற்றோலிய செயற்பாடுகளை அதிகரித்தல்.
- தேசிய பெற்றோலிய தரவு களஞ்சியத்திற்குள் தரவுகளின் அளவை அதிகரித்து அதன் தரத்தை மேம்படுத்துதல், விரிவான மற்றும் நம்பகமான தகவல் தரவுத்தளத்தை உறுதி செய்தல்.
- மேல்நிலை பெற்றோலிய செயற்பாடுகள், நிலையான தன்மையை ஊக்குவித்தல், வெளிப்படைத்தன்மை மற்றும் தொழிற்துறை தரநிலைகளைப் பின்பற்றுதல் ஆகியவற்றை முறையாக பேணுவதற்கான முறையான கட்டமைப்பை நிறுவுதல்
- பெற்றோலிய செயற்பாடுகளின் தொடர்ச்சியான கட்டங்களில் தேசிய சமூக-பொருளாதார நன்மைகளை மேம்படுத்துதல் மற்றும் வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் பொருளாதாரத்தில் நேர்மறையான தாக்கத்தை வளர்த்தல்
- சுற்றாடல் மாசடைதலை தடுப்பதற்கும், பெற்றோலிய செயற்பாடுகளுடன் தொடர்புடைய சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் (HSE) அபாயங்களைக் குறைப்பதற்கும், சுற்றாடல் அமைப்புகள் மற்றும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள தனிநபர்கள் இருவரின் நல்வாழ்விற்கும் முன்னுரிமை அளித்து, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைச் செயற்படுத்துதல்.

## 2. 2024 ஆம் ஆண்டில் இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபையால் (PDASL) முன்னெடுக்கப்பட்ட திட்டங்கள் செயற்பாட்டு முனேற்றங்களின் சாராம்சம்

### 2.1 திட்டங்களின் முன்னேற்றங்கள்

- **பல வாடிக்கையாளர் நில அதிர்வு தரவுகளை கையகப்படுத்தல், செயற்படுத்துதல், சந்தைப்படுத்தல் மற்றும் அனுமதிப்பத்திரம் வழங்குதல் ஒப்பந்தத்தை GoSL ஊடாக நான்கு சேவை உடன்படிக்கைகளுடன் Schlumberger Holdings II Limited நிறுவனத்தின் துணை நிறுவனமான Eastern Eco DMCC ஒப்பந்தக்காரருடன் முன்னெடுத்தல்.**

இப் பணி முதன்மையாக “பல வாடிக்கையாளர்” அடிப்படையில் பெற்றோலியத் தரவுகளை சேகரித்து, சந்தைப்படுத்துவதற்கும் அனுமதிப்பத்திரம் பெற்று-க்கொள்வதற்கும் ஆரம்பிக்கப்பட-டுள்ளதுடன், இது இலங்கை, அரசாங்கத்திற்கு எந்தவித செலவினமும் இல்லாது இலங்கையை சுற்றியுள்ள தெரிசெய்யப்பட்ட கடற்பகுதியில் 2D மற்றும் 3D நில அதிர்வு திட்டங்கள் உள்ளடங்கலாக பல தரவுகளை கையகப்படுத்தல் திட்டங்களை ஆரம்பிப்பதற்கும் உறுதுணையாய் அமைகின்றது. பெற்றோலிய முறைகளை மெருகேற்றுதல், புதிய தரவுகளின் விளக்கம், மரபுத் தரவுகளை மறு செயலாக்கம் செய்தல் மற்றும் தற்போதுள்ள புவி தொழில்நுட்ப தரவுத்தளத்தை மேலும் இற்றைப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றுக்கான ஏற்பாடுகளும் 2018 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இற்றைவரை, 13,080 கிமீ நீளமான பகுதியில் 2D நில அதிர்வு தரவுகளை செயற்படுத்துவதற்கும் மற்றும் மீள் செயற்படுத்துவதற்கும் இவ் நான்கு சேவை உடன்படிக்கைகளுக்கு இவ் நிறுவனத்தால் USD 18 மில்லியன் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

அவர்களின் 2024 முன்னேற்ற அறிக்கை அறிக்கையின் அடிப்படையில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள சர்வதேச நிகழ்வுகளில் இலங்கை செயற்படுத்தப்பட்ட மற்றும் மீள் செயற்படுத்தப்பட்ட தரவை சந்தைப்படுத்துவதையும் ஊக்குவிப்பதையும் அவர்கள் தொடர்ந்து முன்னெடுப்பதற்கு முடிந்துள்ளதனை அறியக்கூடியதாக உள்ளது.

- India Energy Week February 2024
- Offshore Technology Conference (OTC) Asia 2024 – February /March 2024
- EAGE 2024, Norway – June 2024
- IMAGE Houston 2024 – Aug 2024
- APGCE KL 2024 – Nov 2024
- SEAPEX Singapore-Dec 2024

இந்த முயற்சிகளுக்கு அப்பால், குறிப்பாக மலேசியாவில் APGCE மற்றும் சிங்கப்பூரில் SEAPEX போன்ற சர்வதேச மாநாடுகளில் மட்டுமல்லாது Schlumberger நிறுவனத்தின் தொழில்நுட்ப மற்றும் சந்தைப்படுத்தல் குழுக்கள் 2024 ஆம் ஆண்டில உலகளவில் ஏராளமான சாத்தியமான முதலீட்டாளர்களுடன் செயற்திறனுடனும் செயற்பட்டுள்ளனர். அவர்கள் இலங்கையில் ஆய்வுகளை மேற்கொள்வதற்கு ஆர்வமுள்ள முதலீட்டாளர்களுக்கு தரவுகள் தொடர்பான அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு காத்திருக்கின்றனர்.

- **பல–வாடிக்கையாளர் வான்வழி ஈர்ப்பு மற்றும் காந்த தரவு கையகப்படுத்தல், செயற்படுத்துதுல், சந்தைப்படுத்தல் மற்றும் அனுமதிப்பத்திரம் வழங்குதல் போன்ற செயற்பாடுகளுக்காக டீநடடபநழ நுவெநசிசளைநள டுஅைவைநன நிறுவனத்துடன் ஒப்பந்தத்தில் ஈடுபடுதல்**

2019 ஆம் ஆண்டில் வான்வழி ஈர்ப்பு மற்றும் காந்த தரவு கையகப்படுத்தல், செயற்படுத்துதுல், சந்தைப்படுத்தல் மற்றும் அனுமதிப்பத்திரம் வழங்குவது தொடர்பாக் இலங்கை அரசாங்கமும் Bellgeo Enterprises Limited நிறுவனமும் 10 வருட பல-வாடிக்கையாளர் உடன்படிக்கையில் ஈடுபட்டுள்ளனர். 2021 ஆம் ஆண்டில் மன்னார் மற்றும் காவேரி கடற் படுகையில் தெரிவு செய்யப்பட்ட துண்டங்கள் உள்ளடங்கலாக 14,000 கி.மீ பரப்பளவில் தரவுகளை கையகப்படுத்தல் மற்றும் செயற்படுத்துதுல்

செயற்பாடுகள் வெற்றிகரமாக பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. Bellgeo நிறுவனம் இலங்கை அரசாங்கத்திற்கு எதுவித செலவினமும் ஏற்படாத வகையில் கிட்டதட்ட USD 927,000 ஐ முதலீடு செய்துள்ளது. இவர்கள் தற்போது பெற்றுக்கொண்ட தரவுகளை சந்தைப்படுத்துவதற்கு, இலங்கையில் ஆய்வுகளை மேற்கொள்வதற்கு ஆர்வமுள்ள முதலீட்டாளர்களுக்கு தரவுகள் தொடர்பான அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு காத்திருக்கின்றனர்.

## 2.2 செயற்பாட்டு முன்னேற்றங்கள்

- **ஒழுங்குவிதிகள் பூர்த்திசெய்யப்பட்டு பிரசுரித்தல்**

2023 ஆம் ஆண்டிலிருந்து பாரியளவில் மறுசீரமைப்புக்களை பூர்த்திசெய்துள்ளதுடன், இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபை (PDASL) கடற்பகுதியில் பெற்றோலியப் பொருட்கள் மற்றும் வாயு தொடர்பான ஆய்வுகளை முன்னெடுப்பதற்கான நிலையான ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பான பின்வரும் மூன்று பிரதான ஒழுங்குவிதிமுறைகளை 2024 ஆம் ஆண்டின் முற்பகுதியில் இறுதிப்படுத்தி வாத்தமானியில் பிரசுரிக்கப்பட்டள்ளது.

- ➢ 2024 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் (தேடிக் கண்டறிகை மற்றும் அபிவிருத்தித் துண்டு நிலப்படம்) ஒழுங்குவிதிகள் 2024.03.05 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்டுள்ளது
- ➢ 2024 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் (தரவுகளுக்கு உரிமமளித்தல்) ஒழுங்குவிதிகள் 2024.03.05 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்டுள்ளது
- ➢ 2024 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் (கூட்டாய்வு உடன்படிக்கைகள்) ஒழுங்குவிதிகள் 2024.07.15 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்டுள்ளது

- **இலங்கையின் புதிய பெற்றோலிய வளங்கள் ஆய்வு மற்றும் அபிவிருத்தி துண்ட வரைபடத்தை பிரசுரித்தல்**

2024 ஆம் அண்டின் 1 ஆம் இலக்க பெற்றோலிய வளங்கள் (ஆய்வு மற்றும் அபிவிருத்தி துண்ட வரைபடம்) ஒழுங்குவிதிகளின் திருத்தங்கள் பூர்த்திசெய்யப்பட்டு, இற்றைப்படுத்தப்பட்ட 15×15 கிமீ பரப்பளவுள்ள கொண்ட 918 துண்டங்களைக் கொண்ட பெற்றோலிய வளங்கள் ஆய்வு மற்றும் அபிவிருத்தி துண்ட வரைபடம் இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபையின் (PDASL) அலோசனையுடன் இலங்கை நிலஅளவைத் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் இது அதிகாரபூர்வமாக 2024.03.14 ஆம் திகதியிடப்பட்ட வாத்தமானியில் பிரசுரிக்கப்பட்டள்ளது.

- **கூட்டாய்வு திட்டத்தின் ஊடாக கடற்பகுதியில் ஆய்வுகளை முன்னெடுத்தல்**

2024.07.10 ஆம் திகதியிடப்பட்ட (24/1242/621/065 ஆம் இலக்கமிடப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனம்) அமைச்சரவைத் தீர்மானத்திற்கிணங்க, இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபை (PDASL) கூட்டாய்விற்காக ஆர்வ முன்மொழிவுகளை கோருவதற்குத் தேவையான ஆவணங்களில் தொடர்ச்சியாக திருத்தங்களை மேற்கொண்டு வருகிறது.

- **இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபையின் (PDASL) ஊழியர்கள் மற்றும் அவர்களின் செயற்பாடுகள் – இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபையின் (PDASL) ஆளணியை அதிகரித்தல்**

## வரைபடம் 12.1
## இலங்கையின் பெற்றோலிய வளங்கள் ஆய்வு மற்றும் அபிவிருத்தி துண்ட வரைபடம்



இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபை (PDASL) 2024.05.01 ஆம் திகதியிலிருந்து வரையறுக்கப்பட்ட ஆளணியுடன் இயங்கி வருகிறது. அதாவது, ஆறு நிரந்தர ஊழியர்கள் (மூன்று நிறைவேற்று தர உத்தியோகத்தர், இரண்டு உதவியாளர் மற்றும் ஒரு சாரதி) என்பனவாகும். மேலும், மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சிலிருந்து இரண்டு அபிவருத்தி உத்தியோகத்தர்களும் மற்றும் இரண்டு பதில் உத்தியோகத்தர்களும் (பணிப்பாளர் நாயகம் மற்றும் பணிப்பளர்(நிதி)) இங்கு கடமையில் ஈடுபட்டுள்ளனர். இவ் வரையறுக்கப்பட்ட உத்தியோகத்தர்களால் நிறுவனத்தின் செயற்பாடுகள் பாரியளவில் பாதிப்படைந்துள்ளது. இதனால், இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபை (PDASL) அவசரமாக தேவைப்படும் பதவிநிலைகளுக்கு ஆட்களை சோத்துக்கொள்வதற்கான ஒப்புதலைப் பெற்றுக்கொள்வதற்கான வேலைகளை முன்னெடுத்துள்ளதுடன், 2023 ஆம் ஆண்டில் இதற்கான விண்ணப்பங்கள் போரப்பட்டு பொருத்தமான விண்ணப்பதாரிகளும் குறும்பட்டியலிடப்பட்டுள்ளனர். நிறுவனத்தின் தொடர்ச்சியான செயற்பாடுகளை உறுதிப்படுத்துமுகமாக இவ் ஆளணி பதவிநிலைக்கு தேவையான உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு முகாமைத்துவ சேவை திணைக்களம் மற்றும் அரச முயற்சிகள் திணைக்களத்திடமிருந்து மிக விரைவாக ஒப்புதலை பெற்றுக்கொள்வது மிகவும் அவசியமானதாகும்.

## 3. 2025 ஆம் ஆண்டிற்கான நிறுவனத்தின் இலக்குகள்

- தெரிவுசெய்யப்பட்ட கடற்கரைக்கு அப்பாலுள்ள கடற்பகுதியில் உள்ள துண்டப்பகுதியில் புதிய பெற்றோலியம் மற்றும் இயற்கைவாயுவிற்கான வாய்ப்புகளை அடையாளம் காண்பதற்கு அல்லது ஏற்கனவே உள்ள கண்டுபிடிப்புகளை மதிப்பிடுவதற்காக, சாத்தியமான கூட்டு ஆய்வு பங்குதாரர்களுடன் குறைந்தபட்சம் இரண்டு கூட்டு ஆய்வு உடன்படிக்கைகளில் ஈடுபடுதல்.
- தற்போதுள்ள இயற்கைவாயு கண்டுபிடிப்புகளை, குறிப்பாக டொராடோ (Dorado), ஆரம்பகால உற்பத்தி மற்றும் சாத்தியமான கீழ்நிலை வாயு பயன்பாட்டு விருப்பங்களுடன் இணைந்த வேறு ஏதேனும் கூடுதல் ஹைட்ரோகாபன் வாய்ப்புகளை இலக்காகக் கொண்டு, மூலோபாய ரீதியாக அபிவிருத்தி செய்வதற்கான முதலீட்டாளரை கண்டறிதல்.
- எதிர்கால ஆய்வு நடவடிக்கை தேவைகள் மற்றும் முதலீட்டாளகளின் நலன்கள் ஆகியவற்றின் அடிப்படையில். 2D மற்றும் 3D பல- வாடிக்கையாளர் நில அதிர்வு தரவுகளை கையகப்படுத்தல் திட்டங்களை முன்னெடுத்தல்,
- கைத்தொழிற்துறை நிபுணர்களின் உதவியுடன், மேல்நிலை பெற்றோலியத் தொழிற்துறைக்கான தேசியக் கொள்கையை உருவாக்குதல்.
- கடற்பகுதியில் ஆய்வுத் துண்டங்களை விற்பனை செய்வதற்கு குறைந்தபட்சம் உள்நாட்டு மற்றும் சர்வதேச முதலீட்டாளரகளுக்கான ஊக்குவிப்புத் திட்டங்களை செயற்படுத்துதல்
- உலகளாவிய சமூக ஊடக தரநிலைகள் மற்றும் போக்குகளுக்கேற்ப மறுசீரமைத்து, இலங்கையின் மேல்நிலை முதலீட்டு வாய்ப்புகள் தொடர்பான தகவல்களைத் தேடும் முதலீட்டாளர்களுக்கான நம்பிக்கை மிகுந்த ஒரேயொரு தளமாக இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபையின் (PDASL) இணையத்தளத்தை இற்றைப்படுத்தல்.